அரவிந்தர் போற்றிய அருந்தமிழ்ச் சான்றோர்

கபிலன் பதிப்பகம்



இரா. மீனாட்சி

சேதுபதி



அரவிந்தர் போற்றிய அருந்தமிழ்ச் சான்றோர்

இரா.மீனாட்சி
சேதுபதி

கபிலன் பதிப்பகம்
12, 7ஆவது குறுக்குத்தெரு
பாரதிநகர்
புதுச்சேரி–605 008
e mail : kapilanpub@yahoo.co.in

நூலின் பெயர் : அரவிந்தர் போற்றிய அருந்தமிழ்ச் சான்றோர்
Aravindhar potriya arunthamizh chandror
By R.Meenakshi, Sethupathi

உரிமை - பதிவு

முதற்பதிப்பு - டிசம்பர் 2007

ஆசிரியர்கள் : இரா.மீனாட்சி, சேதுபதி ©

பக்கங்கள் : 192

விலை : **120/-**

அச்சிட்டோர் : சூர்யா பிரிண்டர்ஸ் சொலூசன்ஸ்
சிவகாசி

வடிவமைப்பு : சொ. அருணன்
9442379558

வெளியீடு : **கபிலன் பதிப்பகம்**
12, 7ஆவது குறுக்குத் தெரு,
பாரதிநகர்
புதுச்சேரி - 605 008
e.mail : kapilapub@yahoo.co.in

We record our gratitude to the caretakers of the Archives and the Trustees of Sri Aurobindo Ashram, Puducherry.

பதிப்புரை

காலத்தால் நிகழும் எதுவும் அந்தக் காலத்தோடு முடிந்து விடுவதில்லை. காலம் கடந்து நிலைத்து நின்றும் உடனியங்கியும் வழிகாட்டும் ஆற்றல் மானுடப் பணிகளுக்கு உண்டு. அதனைத் தாங்கிச் செல்லும் இயக்கத்திற்கு வரலாறு என்று பெயர். எழுத்துகளின் ஊடாகப் பயணம் செய்துவரும் வரலாறுகளின் சுவடுகள் தேடி நடத்தும் பயணங்கள் பொருள்பொதிந்தவை. அப்படியானதொரு பயணத்தின் பதிவுதான் இந்த நூல்.

இந்திய வரலாற்றின் சிறப்புமிகு பக்கங்களைத் தமது எழுத்தாலும் செயலாலும் நிறைத்த சான்றோர்களை நினைவு கூர்ந்து கொண்டாடும் காலம் இது.

மகான் ஸ்ரீ அரவிந்தரின் 135 ஆவது ஆண்டு நிறைவு, மகாகவி பாரதியாரின் 125 ஆவது ஆண்டு நிறைவு, இவர்கள் கூடிக் கனவு கண்ட இந்திய சுதந்திரத்தின் 60ஆம் ஆண்டு மணிவிழா எனக் காலம் கூடிக் கொண்டாடும் வாய்ப்பைக் கொடுத்திருக்கும் இந்தத் தருணத்தில், நன்றியோடு இவர்களை நினைவு கூர்வதோடு முடிந்து விடுவதில்லை நமது பணிகள்.

ஆதலால், ஆன்மிக உலகின் அர்த்தமிகு இயக்கமான அரவிந்தர் தமது தென்னிந்திய வருகைக்குப் பின்னர் கண்டுணர்ந்து தெளிந்த ஆன்மிக உணர்வுகளுக்கு உந்து சக்தியாகத் திகழ்ந்த அருந்தமிழ்ச் சான்றோர்களை இனிது நினைவுகூரும் பதிவுகளை ஒரு வேள்வியாகக் கருதித் தேடித் தொகுத்திருக்கிறார்கள் இந்நூலின் ஆசிரியர்கள்.

இதற்கு முன்னோட்டமாக, பாரதியன்பர்களும், அரவிந்த நேயர்களுக்கும் அளித்த கொடைகள் பற்பல. அந்த வரிசையில் தகுந்த சான்றுகளின்மீது கட்டமைக்கப் பெற்றிருக்கின்றது இந்நூல்.

இதன்நிறைவுப் பகுதியில் அதற்கான தரவுகள் விரிவான முறையில் தரப் பெற்றிருக்கின்றன. இது மேலும் இத்துறையின் ஆய்வுகளுக்கு வழிவகுக்கும் என நம்பலாம்.

மகாகவிபாரதியாரின் துணையோடு மகான் ஸ்ரீ அரவிந்தர் தமிழ் கற்றதன் விழுமிய பயனாய்ச் செம்மொழியாகிய நம் தமிழுக்குக் கிட்டிய சிறப்பின் அடையாளங்கள் இன்னும் தேடித் தொகுக்கத் தக்கவை. அதன் முன்னோட்டம் இந்நூல் எனலாம்.

வேதபுரமாம் புதுச்சேரியினின்று வெளிவரும் இந்நூலை, அனைவர்க்கும் பயனுறத் தரும் பேறு எமக்கு வாய்த்திருப்பதில் மகிழ்வே.

'எல்லோரும் அமரநிலை எய்தும் நன்முறையை, இந்தியா உலகிற்கு அளிக்கும்' என்று கட்டியம் மொழிந்த மகாகவி பாரதியாரின் 125ஆவது பிறந்த நாளையும், மகான் ஸ்ரீஅரவிந்தரின் மகாசமாதி நாளையும் முன்வைத்து நடக்கும் ஆரோவில் தமிழ் மரபு மையத்தின் பன்னாட்டுக் கருத்தரங்கில் இந்நூல் வெளியிடப் பெறுவதும் திருவருட்பயன் என்றே கருதுகின்றோம்.

ஏற்றுப்போற்றும் வாசக அன்பர்களுக்கும், இந்நூல் வெளிவரப் பல்லாற்றானும் துணைநின்ற அன்பு நெஞ்சங்களும் எமது நன்றி எப்போதும் உரியது.

இரா.மீனாட்சி

தமிழ்ப்புதுக்கவிதையுலகில் மூத்த பெண்கவிஞராக விளங்கும் இரா.மீனாட்சி, ஸ்ரீஅரவிந்த அன்னையின் கனவு பூமியான ஆரோவில் நகரத்தில் வசித்துவருபவர். சர்வதேச நகரமாகிய ஆரோவில்லில், தமிழ், இலக்கிய, கல்வி மற்றும் சமூகப்பணிகள் பல புரிந்துவரும் இவர், ஆரோவில், இளைஞர்கள் கல்வி மையம், சேவா, (தொழிலாளர் நிர்வாகிகள் இணைப்புப் பாலம்), தமிழ் மரபு மையம் (பாரத் நிவாஸ் இந்திய அவை) ஆகியவற்றின் நிறுவனர் மற்றும் இயக்குநராக இருந்து பணியாற்றி வருகிறார்.

சி.சு.செல்லப்பாவின் *எழுத்து* இதழ் தொடங்கி *குமுதம் தீராநதி* வரை தொடர்ந்து எழுதிவரும் இவர் தந்த கவிதைத்தொகுப்புநூல்கள், 'நெருஞ்சி', 'சுடுபூக்கள்', 'தீபாவளிப் பகல்', 'மறுபயணம்' (ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இருமொழிகளிலும்) 'மீனாட்சி கவிதைகள்', 'வாசனைப்புல்', 'உதய நகரிலிருந்து' ஆகியனவாகும்.

இவர், தம் படைப்புகளுக்காக, *'கவிஞர் சிற்பி விருது', 'தேவமகள்அறக்கட்டளை'* மற்றும் *'கலைமாமணி கல்லாடனார் இலக்கிய விருது'* உள்ளிட்ட இலக்கிய விருதுகளைப் பெற்றுள்ளார். மேலும், ஜெர்மன் நாட்டில், சிறந்த கிராமப்புற இளைஞர் பணிக்காக *'ஜெர்மன் டாக்டர் ஹேயின்ரிச் விருது'* மற்றும் *'சென்னை சுந்தர்ஜா அறக்கட்டளையின் சிறந்த பல்நோக்குக் கல்விச் சிந்தனையாளர் விருது'* ஆகியவற்றையும் பெற்றிருக்கிறார். அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் மற்றும் இந்தோனேஷியா உள்ளிட்ட கீழ்த்திசை நாடுகளுக்குச் சென்று பலமுறை கவிதை வாசிப்பு நிகழ்வுகளில் பங்கேற்றிருக்கும் இவர் இந்தியக் கலாச்சாரம் பற்றிய வகுப்புகளை வருகைதரு பேராசிரியராக இருந்து நடத்தி வருகின்றார். 1995ஆம் ஆண்டு ஐ.நா.சபையின் பொன்விழாவையொட்டி நட்புக்குழு, நியூயார்க்கில் ஆரோவில்லிற்கு வழங்கிய சிறப்புப் பரிசினை அதன் பிரதிநிதியாகப் பெற்றுக் கொண்ட இவர், 2003ஆம் ஆண்டு யுனெஸ்கோ பாரீசில் ஆரோவில் சர்வதேச நகர வளர்ச்சி பற்றிய நிகழ்வில் தமிழ்க் கலாச்சாரப் பிரதிநிதியாகப் பங்கேற்றும் இருக்கிறார். இவர், ஆரோவில் கிராமச் செய்திமடலின் ஆசிரியருமாவார்.

சேதுபதி

18 ஆண்டுகளாக வெளிவந்துகொண்டிருக்கும் தொடரும் இதழின் ஆசிரியர் குழுவில் ஒருவரான சேதுபதி, *'கனவுப்பிரதேசங்களில்', 'குடைமறந்தநாளின்மழை', 'வனந்தேடி அலையும் சிறுமி', 'சீதாயணம்', 'சாம்பலுக்குப்பின்னும் சில கனல்கள்'* முதலான கவிதைத்தொகுப்புகளையும், *'பாரதியாரின் விநாயகர் வழிபாடு', 'ஆதலினால் அன்புசெய்வீர்', 'சுற்றுச் சூழல் கல்வியும் நமது கடமைகளும்', 'வாழ்க்கைக்கணக்கு', 'சொற்பொழிவாளர் பாரதியார்', 'கல்வியும் குழந்தைகளும்'* முதலான ஆய்வு நூல்களையும், பாரதியார் வாழ்வியலை விளக்கும் *'என்றும் இருப்பேன்', 'வைகையில் வெள்ளம் வரும்'* ஆகிய கவிதை நாடக நூல்களையும், *'பாரி வேட்டை'* எனும் சிறுகதைத் தொகுதியையும், *'மாணவர்களுக்குப் பாரதியார் கவிதைகள்', 'வாழ்வியல் நோக்கில் சமயமும் சமுதாயமும்', 'உள்ளுக்குள் ஒரு நதி'* முதலிய தொகுப்பு நூல்களையும், இரண்டு குழந்தை இலக்கிய நூல்களையும் தமிழுக்குத் தந்துள்ளார்.

பாரதஸ்டேட் வங்கியின் சிறந்த புதுக்கவிதைக்கான முதற்பரிசு, தமிழக அரசின் குறள்பீடப்பாராட்டிதழ், ஜோதி விநாயகம் நினைவுப்பரிசு, திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கப் பொற்கிழிச்சிறப்புப் பரிசு, இவற்றோடு *இசைஞானி இளையராஜா இலக்கிய விருது* உள்ளிட்ட சிறப்புகளைப் பெற்ற இவர் புதுச்சேரி பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரியின் தமிழ் விரிவுரையாளர்.

இவர்கள் இணைந்து வழங்கிய, *மகாகவிபாரதியார் கவிதைகளில் புதுச்சேரி* என்னும் தொகுப்பு நூலை அடுத்து வருகிறது இந்நூல்.

பொருளடக்கம்

வேதபுரத்திலிருந்து... 7

1. புதுச்சேரி வருகைக்குமுன் அரவிந்தர் வாழ்வு ஓர் அறிமுகம் 9

2. அரவிந்தரும் பாரதியாரும் 13

3. அரவிந்தர் போற்றிய அருந்தமிழ்க் கலைகள் 57

4. அரவிந்தரும் அருந்தமிழ்மொழியும் 63

5. அரவிந்தர் போற்றிய திருவள்ளுவர் 74

6. அரவிந்தர் போற்றிய ஒளவையார் 82

7. அரவிந்தர் போற்றிய ஆழ்வார்கள் 88

8. அரவிந்தர் போற்றிய நம்மாழ்வார் 95

9. அரவிந்தர் போற்றிய ஆண்டாள் 106

10 அரவிந்தர் போற்றிய குலசேகராழ்வார் 116

11. அரவிந்தர் போற்றிய கம்பர் 119

12. ஆழ்வார்பாடல்களின்
ஆங்கில மொழிபெயர்ப்பு – சில சர்ச்சைகள் 123

13. அரவிந்தரும் வ.உ.சிதம்பரனாரும் 131

14. அரவிந்தர் போற்றிய அன்பர்கள் 154

பின்னிணைப்புகள் 171

கருவிநூற்பட்டியல் 186

வேதபுரத்திலிருந்து...

காலம், வெளி ஆகியவற்றின் ஊடே பயணம் செய்யும் மானுட வாழ்வின் முக்கிய நிகழ்வுகளைப் பதிவு செய்தவண்ணம் வரலாறும் தமது பயணத்தைத் தொடர்கிறது; தமக்குள்ளே, பல புதிர்களைப் பொதிந்து வைத்துக் கொண்டும் விடுவித்துக் கொண்டும்...

எழுதுகோலைத் திறவுகோலாக்கி அதன் மர்ம வாசல்களைத் திறக்கும் நூல்களின் வழியே புதிய வெளிச்சம் பரவுகின்றது. உண்மைகள் தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன. இந்த நூலும் அந்த வரிசையில்...

நதியென விரையும் வரலாற்றின் துளிகள் ஒவ்வொன்றிலும் கடல் அடங்கியதுபோல, மலையென நிலைகொள்ளும் வரலாற்றின் சிறுமணல் துகளுள் பிரபஞ்சமே அடங்கியிருப்பது போல பெயர்களுக்குள் ஒடுங்கிய மாமனிதர்கள் பலராவர். தொட்டால் துலங்கும் பல அற்புத நிகழ்வுகள்...

'எந்தரோ மகானு பாவலு' என்று தியாகராஜ சுவாமிகள் பாடியது போல, எத்தனையெத்தனையோ மகான்களும் மகாகவிகளும் தோன்றி தத்தம் காலத்தில் மானுடகுலத்தின் மேன்மைக்கான ஞானப்பயிரினைச் செழுமையாக்கி வளர்த்திருக்கிறார்கள்.

வாழையடி வாழையென வந்த அந்தத் திருக்கூட்ட மரபில் 135 ஆண்டுகளுக்கு முன்னர் வங்காளத்தில் தோன்றி, யோக நெறியில் உலகம் உய்ய வேதபுரியாகிய புதுவை நகரில் வந்து, நிலை கொண்டிருப்பவர் அரவிந்தர். அவர் சொல்கிறார்;

> "புராதன இந்தியா மடிந்து விடவுமில்லை. தனது இறுதி வாக்கைக் கூறிவிடவுமில்லை. அவள் வாழ்கிறாள். அவள் தனக்கும் மனித இனங்களுக்கும் செய்யவேண்டிய பணி இன்னும் உள்ளது. இந்தியாவே உலக நாடுகளுக்கெல்லாம் குரு. மனித ஆன்மாவின் ஆழ்ந்த நோய்களுக்கு மருத்துவம் செய்பவள். அவளே மீண்டும் இவ்வுலக வாழ்விற்குப் புதிய வடிவம் கொடுக்கவும், மனித ஆன்மாவின் சாந்தியை மீண்டும் பெற்றுக் கொடுக்கவும் போகிறாள்.
>
> மேலும், இந்தியாவின் ஊழ் எழுந்து இந்தியா முழுவதையும் தனது ஒளியினால் மூழ்கடிக்கும். அவ்ஒளி பொங்கி ஆசியா முழுவதும், உலகம் முழுவதும் பரவும்."

அந்த ஞானப்பேரொளியின் மூல ஊற்றுக்களாக, தத்தம் மொழிகளில் கவிதைகள் யாத்த சான்றோர்களை முறைப்படி போற்றும் அரவிந்தர் அருந்தமிழ்ச் சான்றோர்களை, பாரதியின் தோழமையோடு போற்றி மகிழ்கிறார்.

ஒத்த மனப்பாங்குடன் பத்திரிகைத் தமிழில் அரவிந்தரைத் தென்னகத் திற்கு அறிமுகப்படுத்திய பாரதியார் முன்னரே வந்து தங்கி, பின்னர்

அரவிந்தர் முதலான அனைவரையும் வரவேற்று வாழ்விக்க வேதபுரி, ஞான புரியாயிற்று. வரலாறு ஆங்கில உளவு ஒற்றர்களாய் வேவு பார்க்க மீறி நடந்த இயக்கமாய், அவர்கள் வளர்ந்தார்கள்.

நிலவும் விண்மீன்களும் சாட்சியங்களாக, வேதம் பயின்றனர்; உபநிடதம் ஆய்ந்தனர்; கூடவே, வள்ளுவரும், ஔவையாரும், ஆழ்வார்களும், நாயன்மார்களும், கம்பரும் தத்தம் ஞானப்பாக்களோடு மீட்டுருவெய்தினர். வேதநுட்பம் நன்கு விளங்கிடத் தூய தமிழைத் துணைக் கொண்ட அரவிந்தர் அருந்தமிழ்ச் சான்றோர்களையும் ஆங்கிலப் படைப்புகளில் புகழ்ந்து போற்றினார். கூடவே தமிழாய் நிலைத்தார் மகாகவி பாரதியார்.

உலகு தழுவிய மானுட மேன்மைக்கு மொழியும், இனமும், காலமும் துணை செய்வன என்பதைத் தம் காலத்தில் நிறுவிக் காட்டிய அந்த மகானைப் பற்றியும், மகாகவி பற்றியும் தனித்தும் இணைத்தும் கண்டு காட்ட வேண்டிய வரலாற்றுத் தேவைகள் இன்னும் இருக்கின்றன.

அரவிந்தர் 135, பாரதி 125, இந்திய விடுதலை 60 என காலம் நடத்தும் வரலாற்று வைபவத்தில் நாம் கண்டுகொள்ள வேண்டியவை ஏராளம். அதனை, **'மகான் ஸ்ரீஅரவிந்தரும் மகாகவி பாரதியாரும்'** என்று விரிவான நிலையில் இனிவருங்காலத்தில் தனிநூலாகக் கொணர எண்ணம்.

வேதபுரக் கடற்கரை இவர்களின் வேட்கையைப் போலவே ஓங்கி ஒலிக்கிறது. வரம்பு கட்டி நகரும் பாரதி அரவிந்த வாழ்வுக்கிடையில் துலக்க -முறும் நிகழ்வுகளைத் தேடியபோது கிடைத்தவை மிகுதி. இந்த நூலில் தந்தவை குறைவு. குறிப்புகளுடனான இணைப்புரையோடு பலரது பதிவுகளையே அதிகம் கொண்டிருக்கும் இந்த நூல் இன்னும் ஆய்வுக்கான களங்களை முன் விரிக்கிறது.

ஸ்ரீஅரவிந்தர், ஸ்ரீஅன்னை ஆகியோரின் வரலாற்றுப் பதிவுகளைப் பொன்னேபோல் போற்றிப் பேணிக்காக்கும் புதுச்சேரி ஸ்ரீஅரவிந்த ஆசிரம ஆவணக் காப்பகத்திற்கும், புதுச்சேரி ஸ்ரீ அரபிந்தோ ஆசிரம நிர்வாகத் திற்கும், நன்றி மலர்கள் காணிக்கை; மகாகவி பாரதியார் அருங்காட்சியக நூலகத்திற்கும்.

இந்நூல் தொடர்பாக ஆக்கபூர்வமான கருத்துகளை வழங்கி ஊக்கப் படுத்திய கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும், நூலுருவாகத் துணைநின்ற அன்புச் சகோதரர்கள் ஜி.வரதராஜன், ந.அர்த்தநாரி, சொ. அருணன் ஆகியோருக்கும், வெளியிடும் கபிலன் பதிப்பகத்தார்க்கும், வாசக உள்ளங்களுக்கும் எமது நன்றி, எப்போதும்.

வணக்கத்துடன்

இரா. மீனாட்சி

சேதுபதி



புதுச்சேரி வருகைக்குமுன் அரவிந்தர் வாழ்வு ஓர் அறிமுகம்

“ஆன்மபரிசோதனையின் மாபெரும் தொழிற்கூடம் இந்தியாவே, இங்குதான் ஒவ்வொரு தலைமுறையிலும் ஆயிரக் கணக்கான மகான்கள் தோன்றியுள்ளனர். அவர்கள் ஆராவார மேதுமின்றி தங்களுடைய அந்தராத்மத் தொழிற் கூடத்திலே வேலை செய்து, தங்கள் ஞானத்தைப் பூரணப்படுத்தி, தங்கள் பரிசோதனைகளின் பயனைச் சில சீடர்களுக்கு அளித்துவிட்டு, அதோடு திருப்தியடைந்து, வேலையைப் பூர்த்தி செய்யும் பணியை மற்றவர்களுக்கு விட்டுச் சென்றுள்ளனர்”.[1]

அந்தப்பணியைத் தத்தம் காலத்தில் வாழையடி வாழையென வந்து நிறைவேற்றப் பிறந்த அருளாளர்களுள் ஒருவர் அரவிந்தர். தமக்கு முன்னர் வாழ்ந்த அருளாளர்களின் அடிச்சுவட்டில் தடம்பதித்துத் தம்காலத்தில் முன்னேகி இந்திய ஆன்மிக வரலாற்றில் நிலைத்து நிற்கும் அரவிந்தர் புதுச்சேரியில் தங்கிய காலத்தில் அவர் போற்றி மகிழ்ந்த அருந்தமிழ்ச் சான்றோர்கள் குறித்து அறியமுயலும் இந்நூலுள் அவரது வாழ்வியல் பற்றிச் சற்றே முன்னுரைப்பது இன்றியமையாதது.

அரவிந்தரின் பிறப்பும் வளர்ப்பும்

இந்திய வரலாற்றில் ஆகஸ்ட் 15 குறிப்பிடத்தக்கதொரு நாளாகும். நாடு விடுதலை பெற்ற நாள் என்பதோடு, இந்திய

சமயவுலகில் மறுமலர்ச்சி கொணர்ந்த பகவான் ஸ்ரீஇராம கிருஷ்ணர் மகாசமாதியான நாளும், கன்னிமேரி விண்ணேற்பு நாளும் ஆகும். அதே தினத்தில், 1872-ஆம் ஆண்டு, (ொ)கல்(ா) கத்தாவில் அதிகாலை 4.30 மணியளவில் ஸ்ரீ அரவிந்தர் பிறந்தார். சிவில் மருத்துவ அதிகாரியான டாக்டர் கிருஷ்ண தனகோஷ், ஸ்வர்ணலதாதேவி தம்பதியர்க்கு, மூன்றாவது புதல்வராகத் தோன்றியவர் அரவிந்தர்.

'தாய்நாட்டின் மரபுப்படிதான் வாழ்க்கை' என்பதான தமது மாமனாரின் கருத்துக்கு மாறுபட்ட அரவிந்தரின் தந்தையார் தமது புதல்வர்களை முழுக்கவும் ஐரோப்பிய பாணியிலேயே வளர்க்க வேண்டும் என்று விரும்பினார். அதனால் ஆங்கிலமும், இந்துஸ் தானியும் அரவிந்தருக்குக் குழந்தைப் பருவத்திலிருந்தே பேசும் மொழிகளாயின.

அரவிந்தர் கற்ற கல்வி

1877இல் அயர்லாந்து தேசத்தைச்சார்ந்த கன்னித்துறவிகளால் டார்ஜிலிங்கில் நடத்தப்பெற்ற லோரட்டோ கான்வென்ட் பள்ளியிலும், 1879முதல் 1884வரை இங்கிலாந்தில் மான்செஸ்டர் பள்ளியிலும் தம் அண்ணன்களோடு சேர்ந்து கல்வி பெற்றார், அரவிந்தர்.

'தனது குழந்தைகள் எந்தவொரு இந்தியனோடும் தொடர்பு கொள்ளக் கூடாது, அவர்கள்மீது இந்தியவாடையே அடிக்கக் கூடாது' என்ற கட்டுப்பாட்டுக்குத் தந்தையால் நிர்ப்பந்திக்கப் பட்டார் அரவிந்தர். அண்ணன்மார்கள் பள்ளிக்குச் சென்று படிக்க நேர்ந்த அக்காலத்தில், அவர்கள் தங்கியிருந்த இல்லத்தினராகிய டிரெவெட் தம்பதியரிடம் வரலாறு, கணிதம், ஃபிரெஞ்ச் ஆகியவற்றை நன்கு கற்றுக்கொண்டார், அவர். கூடவே, தன்னிச்சையாய், அவர்கள் இல்லத்தில் இருந்த பைபிளையும், ஷேக்ஸ்பியர், ஷெல்லி, கீட்ஸ் போன்றோரின் நூல்களையும் படித்ததோடு, ஃபாக்ஸ் என்னும் ஒரு குடும்பப் பத்திரிகையில் சில கவிதைகளையும் எழுதியிருக்கிறார்.[2]

பின்னர் 1884ஆம் ஆண்டு செப்டம்பரில் செயிண்ட்பால்ஸ் பள்ளியில் கல்வி கற்க இலண்டன் சென்றனர். அங்குக் கல்வியில் சிறந்து விளங்கிய அரவிந்தர் அங்குள்ள இலக்கியச்சங்கத்தில் முனைப்புடன் பங்கேற்றார். பள்ளிக்கல்வியோடு, ஆங்கிலக்

கவிதை, கற்பனைக் கதை, ஃபிரெஞ்சு இலக்கியம் போன்றவற்றையும், பண்டைக்கால - மத்தியக்கால நவீன வரலாறு, இத்தாலியம், ஜெர்மன், ஸ்பானிஷ் ஆகிய மொழிகளையும் கற்றுக் கொள்ளத்தொடங்கினார். அப்போதும் கவிதைகள் எழுதுவதைக் கைக்கொண்டிருந்தார். 1890 ஜூலை வரை நீடித்த இக்கல்வியை அடுத்து, 1890 அக்டோபரில் கேம்பிரிட்ஜ் கிங்ஸ் கல்லூரியில் அடியெடுத்து வைத்தார் அரவிந்தர். மூன்றாண்டுகளில் பெற வேண்டிய பி.ஏ.பட்டத்தைத் தமது அறிவுத்திறத்தால் இரண்டாண்டுகளிலேயே பெற்ற அவர், 1890இல் ஐ.சி.எஸ் படிப்பிற்குத் தேர்ச்சிபெற்றதோடு, மருத்துவத்தேர்விலும் தம்மைத் தகுதிப் படுத்திக் கொண்டார். தமது குடும்பத்தாரின் கனவான ஐ.சி.எஸ்.ஸில் சேர்வதற்குத் தகுதியானவராகத் தாம் இருந்தபோதிலும் அதில் நாட்டமற்றவராக அரவிந்தர் இருந்தார். அதற்கான ஒரு தேர்வான, குதிரையேற்றப் பயிற்சியில் பங்கேற்காமலேயே தவிர்த்தார்.

விளையும் பயிர்...

இக்காலக்கட்டங்களில், பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் குரூரமான இதயமற்ற தன்மை குறித்து மிகவும் மனக்கசப்புடன் அவரது தந்தையார் கடிதங்கள் எழுதியதோடு, அவற்றுடன் செய்தித் தாள்களையும் கத்திரித்து இணைத்திருந்தார். இவை அரவிந்தரின் மனத்தில் இந்திய அடிமைத்தனத்திற்கு எதிராகப் போராடும் எண்ணத்தைத் தூண்டி வளர்த்துக்கொண்டிருந்தன. கேம்பிரிட்ஜில் இந்திய மஜ்லிஸ் (Indian Majlies) என்ற சங்கத்தின் உறுப்பின ராகவும், பின்னர் செயலராகவும் பணியாற்றிய அரவிந்தர் பல புரட்சிகரமான சொற்பொழிவுகளை நிகழ்த்தியிருக்கிறார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான இலண்டன் இந்தியர்களின் இரகசியக் கூட்டங்களிலும் பங்கேற்றிருக்கின்றார். இதற்கிடையில், பரோடா மன்னர் இலண்டனில் இருந்த சமயம் அவரது அறிமுகம் அரவிந்தருக்குக் கிட்டியது. அதன் காரணமாக, இந்தியாவில் பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்த நிலையில் தாய்நாட்டிற்குத் திரும்பினார் அரவிந்தர்.

அவர் வருவதாயிருந்த கப்பல் போர்ச்சுகல் அருகே மூழ்கி விட்டதான தகவல் வெளி வந்திருந்த தந்தியைக் கண்ணுற்ற அவரது தந்தையார் காலமாகிவிட்டார். ஆனால், என்ன காரணத்தாலோ அதில் பயணம் செய்யாமல் அதற்குப் பதிலாக, வேறொரு கப்பலில் பயணம் செய்த அரவிந்தர், கடும்புயல் கடந்து

1893, பிப்ரவரியில் தாயகத்தில் தாள் பதித்தார். பிற்காலத்தில் எத்தனையோ பணிகள் புரியவேண்டியிருக்கும்போது இந்திய அன்னை விடுவாளா என்ன?

தாயகம் திரும்பிய அரவிந்தர்

சுமார் 14 ஆண்டுகால வெளிநாட்டுவாழ்வை முடித்துக்கொண்டு அரவிந்தர் இந்தியாவில் வந்திறங்கியவுடன் அப்போதைய மனஉணர்வைத் தம் சீடர் ஒருவருக்குப் பின்வருமாறு எழுதுகிறார். ‘பம்பாய் அபோலாபந்தர் மண்ணில் அடியெடுத்து வைத்தது முதல், ஆத்மானுபவங்கள் அடைய ஆரம்பித்தேன். இவை உலக வாழ்விற்குப் புறம்பாய் இல்லாமல் அவற்றுடன் உள்ளார்ந்த முடிவற்ற பிடிப்புடன் இருந்தன. முடிவற்ற பரம்பொருள் பௌதிக வெளியில் பரந்திருப்பது போன்றும், யாவற்றிலும் உள்ளுறையும் பரம்பொருள் பௌதிகப் பொருள்களிலும், ஜீவன்களிலும் தெளிவாக வசிப்பது போன்றும் அனுபவங்கள் உண்டாயின. அதேசமயத்தில் நான் பௌதிக உலகின் படிமங்களில் செல்வாக்கு களுடன் நுழைந்து பௌதிகப் படிமத்தில் அவற்றின் விளைவு களைக் கொணர்வதாக உணர்ந்தேன்’.

‘பின்னர் 1893ஆம் ஆண்டு பிப்ரவரி 8ஆம் நாள் பரோடா சமஸ்தானத்தில் பணியேற்ற அரவிந்தர், 1907ஆம் ஆண்டு ஜுன், 18 வரை வேலையில் இருந்திருக்கவேண்டும்’. ஆனால், இடையில் சிலமாதங்கள் விடுப்பெடுத்துக் கொண்டு அரசியல் பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்.[3]

அரவிந்தரின் ஆரம்பக் காலப்பணிகள்

முதலில், பரோடா மன்னரின் சொற்பொழிவுகளைத் தயார் செய்து கொடுப்பது, அவருக்காகக் கடிதங்கள் எழுதுவது, முக்கிய ஆவணங்களைத் தொகுத்துச் சுருக்கி எழுதுவது, முக்கிய ஒப்பந்தங்கள் தயாரித்துக் கொடுப்பது போன்ற பணிகளைச் சமஸ்தானத்தில் செய்துவந்த அரவிந்தர், பின்னர், 1900இல் பரோடாக் கல்லூரியில் ஆங்கிலப்பேராசிரியராகப் பணிமாற்றம் பெற்றார். பகுதிநேரம் ஃபிரெஞ்சு ஆசிரியராகவும் இருந்திருக் கிறார். 1901இல் இவருக்கும், ஸ்ரீபூபால் சந்திரபாஸுவின் மகள் மிருணாளினிக்கும் திருமணம் நிகழ்ந்தேறுகிறது. 1904-இல் தாம் பணியாற்றிய கல்லூரியின் துணை முதல்வரும் ஆனார்.

அரவிந்தரின் படிப்பும் படைப்பும்

இக்காலக்கட்டத்தில் அரவிந்தர் சமஸ்கிருதம், மராத்தி, குஜராத்தி, வங்காளம் முதலிய மொழிகளைக் கற்றுக்கொள்ளத் தொடங்கினார். மதுசூதனன், பங்கிம் சந்திரர் போன்றோரின் கவிதைகளோடு, உபநிடதங்கள், கீதை, இராமாயணம், மகா பாரதம் முதலியவற்றையும், காளிதாசன், பவபூதி போன்றோரின் நூல்களையும் படிக்கத் தொடங்கினார். 'இவையெல்லாம் இயல்பாக இந்தியப் பண்பாடு, வாழ்க்கை முறை, உணர்ச்சிப் பாங்கு இவற்றிடமிருந்த கவர்ச்சியாலும், இந்தியப்பண்பாட்டின் இவ்வெல்லா அம்சங்களுக்கும் முதன்மை தருபவரே இந்தியர் என்பதாலும் ஏற்பட்டன'[4] என்பது அரவிந்தரின் கருத்து.

படிப்பதில் அளவற்ற ஆர்வம் உடைய அரவிந்தர், புத்தகங்கள் கிடைத்தவுடனேயே அவசரமாகப் படிக்க ஆரம்பித்துவிடுவார். இதற்கென, பம்பாயில் உள்ள இரு புத்தகக்கடைகளில் அவ்வப்போது வெளியாகும் அனைத்துத் துறை சார்ந்த நூல்களையும் தமக்கு அனுப்பி வைக்கும்படி நிலையான ஒப்பந்தம் செய்திருந்தார். தமது ஊதியத்தின் பெரும்பகுதியை இதற்கெனச் செலவிடுவது அவர் வழக்கமாயிருந்திருக்கிறது.

1883ஆம் ஆண்டு ஆகஸ்ட் தொடங்கி, இந்துபிரகாஷ் என்னும் பூனா வார இதழுக்குப் 'பழமைக்குப் புதிய விளக்குகள்'(New Lamps for Old) என்ற தலைப்பில் தொடர் கட்டுரைகளை எழுதினார். இத்தொடரின் தலைப்பானது சூசகமானதும் உருவகமானதுமாகும். முன்னுரை முடித்ததும் அடுத்த கட்டுரை, தொடரும். 'இதில் வெளியிடப்பட்ட கருத்துகள் சாதாரணமாக எல்லா அரசியல்வாதிகளாலும் வெளியிடப்படுவன அல்ல. இதனாலேயே இவை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை...' என்று முன்னுரை எழுதிற்று அப்பத்திரிகை. அப்போது அரவிந்தருக்கு வயது 21. கடுமையான விமர்சனங்கள் தாங்கிவந்த அத்தொடர், பலரது கண்டனங்களையும் எதிர்ப்பையும் பெற்றது. பின்னர் அப்பத்திரிகையாளர்களுக்காக அரசியல் விமர்சனத்தைக் குறைத்துக்கொண்டு தத்துவங்கள் பற்றிக் கூடுதலாக எழுதலானார்.

இதற்கிடையில், 1895இல் ஐரோப்பியத் தாக்கத்தோடும், இந்தியப் பண்பாட்டின் வெளிப்பாட்டோடும், அரவிந்தர் எழுதிய 'மிர்டில்லே வுக்கு உரிய கவிதைகளும், பிற கவிதைகளும்' என்ற

கவிதைத் தொகுப்பு நூல் வெளிவந்தது. 'ஊர்வசி', 'காதலும் மரணமும்' ஆகிய பெருங்கவிதைகள் பரோடாவில் எழுதப்பெற்றன. இந்த நாட்களில்தான் அரவிந்தருக்கு, 'சாவித்ரி' பற்றிய அகக்காட்சிகள் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன.

1899இல் வங்கமொழி பயிற்றுவிக்கும் தினேந்திரகுமார் ராய் என்ற இளம் வங்காளியிடம் அரவிந்தர் வங்கமொழி கற்றுக் கொண்டார். இக்காலக் கட்டத்தில் நாட்டின் சீர்திருத்த முயற்சிகளில் ஈடுபடுவதில் ஆர்வம் காட்டினார் அரவிந்தர்.

ஏற்கெனவே இரகசிய இயக்கங்களுடன் தொடர்புடைய அரவிந்தர், பாரின் இரகசியச்சங்கத்திலும் சேர்ந்தார். ஒரு கையில் கத்தியும், மறு கையில் கீதையையும் எடுத்துக்கொண்டு, "என்னுடலில் உயிருள்ளளவும், இந்தியா விடுதலையடையு மளவும், நான் இந்தப் புரட்சி வேலையை மேற்கொண்டு நடத்துவேன். எப்பொழுதாகிலும் ஒரு சிறு வார்த்தையோ, அல்லது சங்கத்தின் ஒரு நிகழ்ச்சியோ வெளியிட்டாலும் ஏதாவது ஒரு வழியில் இதற்கு ஊறு நேரக் காரணமாயிருந்தாலும், எனது உயிரை அர்ப்பணிக்கிறேன்"[5] என்று உறுதி மேற்கொண்டார்.

1902இல் இச்சங்கத்தைப்பற்றியும், இதன்நோக்கங்கள் பற்றியும் பிறருக்கு எடுத்துச்சொல்ல வங்கம் சென்றார். இதே ஆண்டில் அகமதாபாத்தில் நடந்த காங்கிரஸில் கலந்துகொண்டார். அங்கு, திலகர் இவரைத் தனித்து அழைத்துச்சென்று இவரிடம் ஒரு மணிநேரம் பேசியிருக்கிறார். அப்பேச்சில், சீர்திருத்த இயக்கம் (Reformist Movement) பற்றிய தமது வெறுப்பைக் கூறிய திலகர், தாம் மகாராஷ்டிரத்தில் செயல்படப்போகும் முறையை விளக்கி யிருக்கிறார். பின்னர் 1903இல் அரவிந்தர், 'விட்டுக் கொடாமை' (No Compromise) எனும் தலைப்பில், சிறுநூலொன்று எழுதினார். புரட்சி இயக்கத்தினரால் இரகசியமாக அச்சிடப்பட்டது இந்நூல்.

பின்னர், 1904இல் பம்பாயில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிலும், 1905இல் வாரணாசியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிலும் கலந்து கொண்டார். இக்காலக் கட்டங்களில், பரோடா சமஸ்தானப்பணியில் இருந்ததால், அரவிந்தரின் அரசியல்பணிகள் திரைமறைவுப் பணிகளாகவே அமைந்தன எனலாம்.

அரவிந்தரின் அரசியல் நுழைவு

1905இல் வங்கப் பிரிவினை நடந்தேறியது. இதுசமயம், 1905 நவம்பர் 9ஆம் நாள் கல்கத்தாவில் நடைபெற்ற கூட்டமொன்றில், சுபோதமல்லிக் என்பார் ஒரு பிரிட்டிஷ் அரசுக்குக் கட்டுப்படாத, சுதந்திரமான கல்வியை வழங்கும் தேசியக் கலாசாலை தொடங்க விரும்புவதைத் தெரிவித்தார். அதற்குப் பரோடாவிலிருந்து அரவிந்தர் வந்துவிடவேண்டும் என்பது அவரது நிபந்தனை. அதனை ஏற்ற அரவிந்தர், பரோடாப் பணியை விட்டு விலகி, கல்கத்தா வந்தார். இப்படியாக அவரது வெளிப்படையான அரசியல் நுழைவு அமைந்தது.[6]

1906 பிப்ரவரி 14இல் பாரிஸால் காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்றார். சட்ட விரோதமான கூட்டம் என்று அரசு விடுத்த பிரகடனத்தை எதிர்த்து, விபின் சந்திர பால், பி.சி.சட்டர்ஜி போன்றோருடன் ஊர்வலம் நடத்தினார். அப்போது நடந்த தடியடியில் பலர் காயமுற்றனர். இதனையடுத்து, விபின் சந்திர பாலுடன் இணைந்து வங்கம் முழுவதும் அரசியல் பயணம் மேற்கொண்டார். அப்போது பெரிய அளவில் நடத்தப்பெற்ற கூட்டங்களில் பங்கேற்றார்.

இக்காலக்கட்டத்தில், 1906 மார்ச் மாதம், பாரினின் யோசனையின் பேரில் 'யுகத்தின் மாற்றம்' (ஜுகாந்தர்) என்ற வங்காளி வாரஇதழ் தொடங்கப் பெற்றது. இவ்விதழை நிர்வகித்து வந்ததோடு, பலமுக்கியக் கட்டுரைகளையும் அரவிந்தர் எழுதி வந்தார்.

1906ஆகஸ்ட்டில் அரவிந்தர் கல்கத்தாவிலுள்ள நேஷனல் கல்லூரியில் (தற்போது ஜாதவ்பூர் பல்கலைக்கழகம்) அதன் முதல்வராகப் பணியேற்றார். இதேகாலத்தில், 1906 ஆகஸ்ட் மாதம் 6ஆம் நாள், விபின்சந்திரபால் 'வந்தே மாதரம்' என்னும் செய்தியேட்டைத் தொடங்கினார். தம்பெயர் வெளியிடப்படா விட்டாலும் அதன் ஆசிரியராகவே அரவிந்தர் செயல்பட்டார்.

முற்றிலும் தீவிரமாக, எழுத்து, பேச்சு, செயல் என்று இயங்கிய அரவிந்தரின் முனைப்பில் மக்கள் விழிப்புணர்வு பெற்றனர். அதுசமயம் கல்கத்தாவில் நடைபெற்ற தாதாபாய் நௌரோஜி தலைமையிலான காங்கிரஸ் மாநாட்டில் அரவிந்தர் தம் நண்பர்களோடு பங்கேற்றார்.

1907ஆம் ஆண்டு ஜுலை 24இல் அரவிந்தர்மீதும், விபின் சந்திரபால் மீதும் ராஜதுரோகம் கொண்ட ஒரு கட்டுரை வெளியிட்டதன் காரணமாக ஆங்கில அரசு குற்றம் சாட்டியது. அது நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இவ்விதழின் ஆசிரியர் யார்? என்று அரசு கேட்ட போது அதனைக் கூற மறுத்த விபின்பால் நீதிமன்றத்தை அவமதித்ததற்காக ஆறு மாதச் சிறைத்தண்டனை பெற்றார். இதன் காரணமாக அரவிந்தர்தாம் ஆசிரியர் என்பதை நிறுவமுடியாததால் அவரை விடுதலை செய்ய வேண்டியதாயிற்று.

பின்னர் 1907ஆம் ஆண்டு நவம்பரில் மிதுனபுரியில் நடந்த வங்கப் பிரதேசக் கருத்தரங்கிலும், ஹூக்ளியில் நடந்த மாநாட்டிலும் அரவிந்தர் பங்கேற்றுத் தலைமை தாங்கினார். டிசம்பர் 26இல் நடைபெற்ற சூரத் காங்கிரசிலும் கலந்து கொண்டார். பூசலும் அடிதடியுமாக நிகழ்ந்த அம்மாநாட்டைப் பற்றி, எங்கள் ‘காங்கிரஸ் யாத்திரை’ (Our Congress Tour) எனும் தலைப்பில் விரிவானதொரு கட்டுரையினை மார்ச் 1908 இந்தியா இதழில் பாரதியார் எழுதியிருக்கிறார்.

மிதவாதம், தீவிரவாதமென இரண்டுபட்ட இவ்வியக்கத்தில் தீவிரத்தின் பக்கம் தீவிரம் காட்டியவர் அரவிந்தர்.

புரட்சியாளர் அரவிந்தர்

அரவிந்தருக்கு, கல்கத்தாவில் வடபகுதியில் மணிக்தலா தோட்டம் (Manik tola Garden) இருந்தது. அது புரட்சியாளர்களின் பண்ணையாகத் திகழ்ந்தது. புரட்சிகர இலக்கியங்கள், கீதை ஆகியன படிப்பது, தியானம் பழகுதல், வெடிகுண்டுத் தயாரிப்புப் பரிசோதனைகள் முதலியன அங்கு நிகழ்ந்து வந்தன. பொதுவாய் வன்முறையில் உடன்பாடில்லாத விடுதலை வீரர்கள், ஆங்கில அடக்குமுறையின் காரணமாக ஆயுதம் தாங்கிய புரட்சியை மேற்கொள்ளத் தொடங்கினர்.

இதுசமயம், கிங்ஸ்போர்டு என்னும் நீதிபதி, சுசில்ஸென் என்னும் 15 வயது நிரம்பிய சிறுவனுக்குக் கொடியமுறையில் கசையடி கொடுக்கும் தண்டனையை விதித்தான். நினைவிழந்து இறக்கும்நிலையில் இருந்த அச்சிறுவனின் நிலை புரட்சியாளர் களின் கோபத்தைத் தூண்டியது. உடன் எதிர்க்கத் தொடங்கினர். குதிராம்போஸ், பிரபுல்லசகி என்ற இரு சிறுவர்கள் இதற்குப்

பதிலடி கொடுக்கத் தொடங்கினர். இதனை அறிந்து கொண்ட அந்நீதிபதி, தம்மை முஸஃபுரிக்கு மாற்றிக்கொண்டுபோனான். விடாது அவனைத் தொடர்ந்தனர், இச்சிறுவர்கள்.

1908ஆம்ஆண்டு ஏப்ரல் 30அன்று ஒரு விடுதியிலிருந்து குதிரை வண்டியில் அந்நீதிபதி வருவதாய் நினைத்து, அதன்மீது குதிராம்போஸ் வெடிகுண்டினை வீசினான். ஆனால், அதில் அந்நீதிபதி இல்லை. மாறாக, அவ்வண்டியில் இருந்த - இதற்கு எவ்விதத்திலும் தொடர்பில்லாத - கென்னடி எனும் பெண்ணும் அவள் மகளும் கொல்லப்பட்டனர். பிரபுல்லசகி நிகழ்விடத்திலே இறக்க, குதிராம்போஸ், பின்னர் ஆங்கில அரசால் தூக்கில் இடப்பட்டான்.

இதனைத் தொடர்ந்து, ஆங்கில அரசு புரட்சியாளர்களை வேட்டையாடத் தொடங்கியது. 1908ஆம் ஆண்டு மே 2ஆம் நாள் இத்தோட்டம் சோதனை இடப்பட்டது. பாரினும் அவருடன் இருந்தவர்களும் கைதுசெய்யப்பட்டனர். மிகுதியான வெடி குண்டுகளும், ஆயுதங்களும் தோண்டியெடுக்கப்பட்டன.

அரவிந்தர் கைதானார்

நெடுநாட்களாய் வாய்ப்பை எதிர்பார்த்திருந்த ஆங்கில அரசு இத்தாக்குதலில் நேரடித் தொடர்பில்லாத அரவிந்தரைக் கைது செய்யப் பெரு முயற்சி எடுத்தது. தோட்டம் முற்றுகையிடப்பட்ட மறுநாள் மே 3அன்று அதிகாலையில் கிரே தெருவில் உள்ள அரவிந்தரின் இல்லத்தை முற்றுகையிட்ட காவலர்கள் அரவிந்தரைக் கைது செய்தார்கள். அவரது கடிதங்கள், எழுத்துகள் அனைத்தும் எடுத்துச் செல்லப்பட்டன.

அலிப்பூர்சிறையில் 1908 மே5இல் விசாரணைக்கைதியாக அடைக்கப்பட்டார். இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டோர், 49பேர். சாட்சிகள் 206பேர். ஆவணக்குறிப்புகள் 400. வெடி குண்டுகள், சுழல்துப்பாக்கிகள், வெடிமருந்து, வெடி தூண்டிகள் (Detonators), மின்தடை உருக்குக் கம்பிகள் (Fues). நச்சு அமிலங்கள் போன்றவை கொண்ட 5,000 காட்சிப் பொருள்கள் (Exhibits) நீதிமன்றத்தினர் முன் வைக்கப்பட்டன. குற்றஞ் சாட்டப்பட்டவருள் ஒருவரான நரேந்திர கோஸ்வாமி அப்ரூவராக மாறியதால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரைக் கொன்ற கனைலால் தத் சிறையிலிடப்பட்டுத் தூக்கில் இடப்பட்டார்[7]

சிறைக்கைதி அரவிந்தர்

அரவிந்தர் சிறையிடப்பட்ட அறைமுழுவதும் போலீசார் துப்பாக்கியும் கையுமாகக் காவல்காத்திருந்தனர். அரவிந்தரைக் குற்றவாளியென்று நிறுவ எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அரவிந்தர் சார்பாக சித்தரஞ்சன் தாஸ் வாதிட்டார். நீதிபதியும், அரவிந்தருடன் கேம்பிரிட்ஜ் கிங்ஸ் கல்லூரியின் உடன்பயின்றவருமான பீச்கிராட் தமது தீர்ப்புரையின் முதல் பகுதியில், "இப்போது நான் இங்குக் குற்றஞ்சாட்டப் பட்டவருள் முக்கியமானவராகக் கருதப்படும் அரவிந்தகோஷின் வழக்கிற்கு வருகிறேன். இவரைக் குற்றவாளியென நிரூபிக்கவே அரசாங்கத் தரப்பு அக்கறை கொண்டுள்ளது. அவர் மட்டும் இவ்வழக்கில் பிணைக்கப்பட்டிராவிட்டால், இவ்வழக்கு எப்பொழுதோ முடிந்திருக்கும் என்பதில் ஐயமில்லை"[8] என்று குறிப்பிட்டதைக் கொண்டு பார்க்கும்போதுதான் ஆங்கில அரசு எத்துணை தூரம் அரவிந்தரைக்கண்டு அஞ்சியிருந்தது என்பது புலனாகும்.

இவ்விசாரணையின்போதுதான், முக்கியச்சான்றுகளாகக் காட்டப்பட்ட, அரவிந்தர் தமது மனைவிக்கு எழுதிய புகழ்பெற்ற அந்த மூன்று கடிதங்கள் உலகுக்குத் தெரிய வந்தன. இக்கடிதங் களுள் இரண்டினை அந்த நாட்களில் தமிழில் மொழியாக்கம் செய்து பாரதியார் தமது பத்திரிகையில் வெளியிட்டிருக்கின்றார். சித்தரஞ்சன்தாஸின் வாதத்தினாலும், அதுசமயம் நாட்டு நலனில் அக்கறை கொண்ட பத்திரிகைகள் மூலமாகவும் அரவிந்தரின் பணியும் புகழும் உலகம் அறிந்தன எனலாம்.

கடைசியாக, "நரேன்பக்ஷி தொடங்கி, அரவிந்தகோஷ் முதலானவர்கள் 121, 121ஏ, 122 சட்டப்பிரிவுகளின்படி குற்றமற்ற வர்கள்" என உறுதியாகி, மொத்தத்தில் குற்றம் சாட்டப் பட்டவர்கள் அனைவரும் 123ஆம் பிரிவின்கீழ்க் குற்றமற்றவர்கள்[9] என்று விடுதலைபெற்றனர்.

தவச்சாலையான சிறைச்சாலை

பரோடாவில் தொடங்கிய யோகப்பயிற்சியானது அரவிந்தருடைய வாழ்வில் நிலைகொள்ளத்தொடங்கியது சிறைவாசத்தின்போது எனலாம். 1903ஆம் ஆண்டு ஏப்ரலில் காஷ்மீர் பயணம் மேற்கொண்டபோது சங்கராச்சாரியார் மலையில் (இப்போது தாகத்-இ-சுலேமான் என்பது அதன் பெயர்) அத்வைத உணர்வு உள்வாங்கப்பெற்றார்.

1904ஆம் ஆண்டு அவரது பிரணாயாமப்பயிற்சி தொடங்குகின்றது. தொடர்படிப்பு, இடைவிடாச் சிந்தனை, எழுத்து, இயக்கம் என்ற நிலைகளில் அவரது பூரணயோகத் தேடல் விரிந்து கொண்டே வந்தது. 1907ஆம் ஆண்டு டிசம்பரில் பாரின் உதவியோடு விஷ்ணு பாஸ்கர்லேலே என்னும் யோகியைச் சந்தித்தார். மூன்றுதினங்கள் அவருடன் ஒரு சிறிய அறையில் தியானம் புரிந்தார். 1908இல் அவரது தியானத்தின்போது, பூரண அமைதியை உணர்ந்தார். 1908-ஆம் ஆண்டு ஜனவரியில் பம்பாய்க்குச் சென்றிருந்த போது பூரண அமைதியான பிரம்ம உணர்வில் முற்றிலும் மூழ்கியிருந்தார். இதன் தொடர்ச்சியே போல், அவரது சிறைவாசம் தொடர் தியான நிலைக்குப் பெரிதும் உதவியது எனலாம். சிறையில், தான் தரிசித்த அருளுணர்வை உத்தர்பாராச் சொற்பொழிவில் விளக்கமாய் விவரிக்கிறார். நெடுநாட்களாய்த் தனியறைக்குள் அடைக்கப்பட்டுக் கிடந்த அரவிந்தரைத் தமிழில் பின்வருமாறு தருகின்றார் பாரதியார்.



“அவர் (இறைவன்) சிறைக்காவலாளிகளின் நெஞ்சங்களை என் வசமாகத் திருப்பிவிட்டார். அக்காவலாளிகள் தங்கள் மேலதிகாரியாகிய ஆங்கிலேயரிடம் போய் என் பொருட்டு மன்றாடினார்கள். “அரவிந்த பாபு ஏகாந்தமாய் அறையில் மிகவும் கஷ்டப்படுகிறார். அவரை வெளியே சில சமயம் நடந்து வரும் படிக்கேனும் செய்யலாகாதா?” என்று அவனிடம் கேட்டார்கள். அவனும் இணங்கிவிட்டான். அந்த ஏற்பாட்டின்படி நான் வெளியே சுற்றி வர இடமுண்டாயிற்று. அப்போது ஈசனுடைய வலிமை என்னுள் புகுந்தது. நான் எங்கும் வாசுதேவனைக் கண்டேன். ஒரு மரத்தடியே நடந்து சென்றேன். அங்கே வாசுதேவன் - ஸ்ரீகிருஷ்ணன் நின்று எனக்கு நிழல் கொடுக்கக் கண்டேன். எனது சிறையின் கதவைப் பார்த்தேன். அதிலும் வாசுதேவனைக் கண்டேன். நாராயணனைக் கண்டேன். நான் படுத்திருக்கும்போது நாராயணன் என்னைத் தனது கைகளால் ஆதரித்துக் காத்தான். அவனது புயங்களினிடையிலே நானிருப்பது

கண்டேன். எனது தந்தை, எனது காந்தன், என்னைத் தன் கையால் கட்டிக்காப்பதைத் தெளிந்து கொண்டேன். இதுதான் அவன் எனக்குக் கற்பித்த முதற்பாடம். சிறையிலிருந்த கைதிகளை யெல்லாம் பார்த்தேன். அவர்களெல்லாம் நாராயணனே என்பது கண்டேன். திருடர்கள், கொலையாளிகள், மோசக்காரர்கள். எல்லாரும் வாசுதேவனே. குற்றத்தின் பொருட்டுச் சிறையுண் டிருந்த திருடர்களும் கொள்ளைக்காரர்களும் எனக்கு நாராயணனாகத் தென்பட்டார்கள்''[10] என்பது அரவிந்தர்தம் அனுபவம்.

ஆகவே, 'சிறைக்குள் பிறந்த கிருஷ்ணனே இப்போது சிறைக்குள் இருந்த ஸ்ரீஅரவிந்தருக்குத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டான் ' என்று மனோஜ்தாஸ் குறிப்பிடுவது மெய்தான்.[11] இதேபோல் சிறையில் சுவாமி விவேகானந்தரின் உட்குரலைக் கேட்ட அனுபவத்தையும் அரவிந்தர் பின்னர்ப் பதிவு செய்கின்றார். அரசியலில் தீவிர வேகம் கொண்ட அரவிந்தரின் ஆன்மிக உணர்வு சிறை வாசத்தின்போது, அவரை யோகி யாக்கிவிட்டது.

அரவிந்தர் "சிறையிலிருந்து வெளிவந்தபோது, அடக்கு முறையானது வங்காளத்தில் புரட்சியார்வத்தின் கூர்முனை மழுங்கிவிட்டது. ஆனால், பாரதத்தின் விரிவான காட்சியில் இரண்டுவிஷயங்கள் ஏற்கெனவே சாதிக்கப்பட்டாய்விட்டன. பூரணசுதந்திரம் என்பது மக்களுக்கு இனியும் மிகமிகத் தொலைவில் அடையக்கூடிய ஒரு கனவாக, கற்பனை லோகமாக இல்லை. பிரச்னை எப்படி எப்போது என்பதேயாம். இனியும் என்ன என்பதில்லை. பிரிட்டிஷாரின் பக்கத்தில் அவர்களுடைய முதல் அதிர்ச்சியானது, உண்மை நிலையின் தாமத மதிப்பீட்டுக்கு மெல்ல மெல்ல இடங்கொடுத்தது. முற்றும் உணர்ந்து கொள்ள முடியாமல் படிப்படியாக விட்டுக் கொடுக்கும் வழிமுறை மேலோங்கியது. வந்தேமாதரம் நின்றுவிட்டது. ஸ்ரீஅரவிந்தர் இப்போது கர்மயோகி என ஆங்கில மொழியிலும், தருமம் என வங்காளி மொழியிலும் இரண்டு வாரப் பத்திரிகைகளை வெளியிட ஆரம்பித்தார். இவை முற்றிலும் அரசியல் பத்திரிகைகளாக விளங்கவில்லை. அரசியல் தன் உண்மையான இயல்பைப்பெறும் மனிதனிடமுள்ள ஆழ்ந்த உள்ளுயிருக்கு வேண்டுகோள் விடுத்தன. அருச்சுனன் குருக்ஷேத்திரப்போரில் பங்குகொண்டதன் தனிச் சிறப்பை அவன் கர்மயோகத்தைச் சுயானுபூதியாக அடைந்த

தனால் தான் பெற்றான். ஒப்பீட்டு முறையில் பார்த்தால் இந்தியா பெரும்பாலும் அமைதியாகவே இருந்தது. ஆயினும், ஸ்ரீஅரவிந்தரை, காலமின்றிச் சுதந்திரமாக விட்டுவைப்பது அரசாங்கத்திற்கு ஆபத்தாகவே இருந்தது. இந்தியா முழுதிலுமே அவரே ஆபத்து மிக்க மனிதர் என ராஜப்பிரதானியான மிண்ட்டோ பிரபு, இந்திய மந்திரியான மார்லி பிரபுவுக்கு எழுதினார். மிண்ட்டோ ஸ்ரீஅரவிந்தரை நாடு கடத்த விரும்பினார். ஆனால் மார்லிபிரபு அதற்கு எளிதில் இணங்க விரும்பவில்லை.

ஸ்ரீஅரவிந்தர் கொஞ்சகாலமாகத் தம் செயல்களைச் சிந்திப்பதன் மூலமாகவோ, திட்டங்கள் போடுவதன் மூலமாகவோ ஒழுங்கு செய்யவில்லை. மேலிருந்து வந்த வழித் துணையையே அவர் நம்பியிருந்தார். ஸ்ரீஅரவிந்தரை நாடு கடத்துவது உசிதமா என்பது பற்றி அரசாங்கம் மும்முரமாக விவாதித்து வந்ததை ஸ்ரீஅரவிந்தர் அறிந்தாராயினும் அவர் கவலைப்படவில்லை. 1910 ஆம் ஆண்டில் ஒருநாள் மாலை அவர் திடுமெனக் கல்கத்தாவுக்குச் சிறிது தூரத்திலிருந்த, பிரெஞ்சு ஆட்சிக்குட்பட்ட தனியிடமான, சந்திரநாகூருக்குச் செல்லுமாறு, ஒரு ஆதேசம் (கட்டளை) பெற்றார். அவர் அதுபற்றிச் சிந்திக்கவோ, விவாதிக்கவோ இல்லை. உடனே, கட்டளையின் படி செய்து அடுத்தநாள் காலை சந்திரநாகூரில் இருந்தார். சில வாரங்களுக்குப் பின் அவர் கேட்ட குரலொன்று புதுச்சேரிக்கு வழி காட்டியது".[12]

புதுவையில் அரவிந்தர்

புண்ணியபூமியான வங்கத்திற்கும் தமிழகத்திற்கும் தொடர்ந்து தொடர்புகள் இருந்துவந்ததை வரலாறறியும். சுவாமி விவேகாநந்தர் முதலாப் பல ஆன்மிக, இலக்கிய, அறிவியல் அறிஞர்களை, சுபாஷ் சந்திர போஸ் உள்ளிட்ட அரசியல் தலைவர்களை இந்தியாவில் முதலில் உணர்ந்து போற்றிய பெருமை தென்னிந்தியாவிற்குக் குறிப்பாகத் தமிழகத்திற்குத் தமிழ் மக்களுக்கு உண்டு.

இடைவிடாத ஞானத்தேடலுடன், தேசபக்தியுடையவர்களாய், உலக நலன் போற்றுகின்ற தென்னிந்தியர்களுக்கு இதற்கான வாய்ப்புகள் எத்திசைத்தெனினும், யாவரே காட்டினும் மற்று அவை தழுவி ஏற்றுப் போற்றும் பண்பு இயல்பிலேயே இருந்தது. அதனை முன்கூட்டி உணர்ந்து உரைக்கும் மகான்களும் தமிழகத்தில் இருந்தனர். இப்பண்பும் சிறப்பும் புதுச்சேரிப் பூமிக்கும் இருந்தது.

அரவிந்தர் வருகையை முன் அறிவித்த மகான்



அரவிந்தர் புதுச்சேரி வருவதற்குப் பலவருடங்களுக்கு முன்பே, ஸ்ரீவாசுதேவர் எனும் நாகை சுவாமியாகிய தென்னிந்திய யோகி ஸ்ரீஅரவிந்தரின் வருகையை அறிவித்திருந்தார். தாம் சீக்கிரத்திலேயே உடலை நீக்கப் போவதாக அறிந்த இந்த யோகி, தமது சிடர்களைத் தம்மை வந்துபார்க்குமாறு அழைத்தார். கடையத்தில் ஜமீன் தாராக இருந்த கே.வி.ஆர். ஐயங்கார், அவரை, "இனி எதிர்காலத்தில் நான் யாரிடமிருந்து ஆன்மீக விளக்கம் பெறுவது?" எனக் கேட்டார். 'வடக்கேயிருந்து வரப்போகும் ஒரு பெரிய யோகியிடமிருந்து' எனக் குரு பதிலளித்தார். மேலும் அவர், 'இந்த யோகி தென்னாட்டில் சரணடைவாரெ'ன்றும், 'வருவதற்குமுன் மூன்று செய்திகளை அறிவிப்பார்' என்றும் கூறினார். ஸ்ரீஅரவிந்தர் தமது வாழ்வின் மூன்று முக்கிய விருப்பங்களை, அல்லது ஸ்ரீஅரவிந்தரே கூறிக் கொண்டபடி மூன்று உந்துணர்வுகளைப் பற்றித் தம் மனைவி மிருணாளினி தேவிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.[13] அதனைக் கொண்டு அந்த மகான் அரவிந்தரே எனத் தெளிந்து, அவர் புதுவைக்கு வந்திருக்கிறாரா என்று தெரிந்து கொள்ள, அவர் வ.ரா. வை அனுப்பியதும் அவர் பாரதியாரைச் சந்தித்து அவர்மூலம் அரவிந்தரைத் தரிசித்ததும் பற்றி வ.ரா. தமது மகாகவி பாரதியார் என்னும் நூலில் விரிவாக விளக்குகிறார்.

அரவிந்தரின் தென்னக வருகையை முன்னுணர்ந்து சுட்டிய நாகப்பட்டினம் ஜபதா யோகியாரின் சீடர் கே.வி.ஆர். ஐயங்கார், கொடியாலம் ரங்கசாமி ஐயங்கார் ஆவார். தொடக்கநிலையில் ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் உதவிய கொடியாலம் ரங்கசாமி ஐயங்காரை அரவிந்தர்பால் ஆற்றுப்படுத்தியதோடு, அவர்தம் உதவியாளராக வந்த வ.ரா.வையும் ஆட்கொண்டது பாரதியாரின் பத்திரிகைத்தமிழ் எனலாம். இந்தவகையில் எல்லாநிலைகளிலும், அரவிந்தருக்குத் தகுந்த வரவேற்பும், உதவிகளும் அளித்துக் காத்தவர் பாரதியார் என்பது குறிப்பிடத்தக்கது.



நாகை முனிவரின் சீடர்குழாம்
(வலதுபுறம் நிற்பவர் கொடியாலம் ரங்கசாமி ஐயங்கார்)

இத்தோடு மட்டுமல்லாமல் அரவிந்தரைப் புதுச்சேரிக்கு வரவழைத்ததோடு, புதுச்சேரியில் தாம் இருந்த காலத்தில், பல ஆண்டுகள் அரவிந்தருக்கு உதவியும், அவரது இலக்கிய ஆன்மிக, யோகப் பணிகளில் உடனின்று ஒத்துழைப்பும் நல்கியவர் பாரதியார்.

அதனால் தமிழுக்கும், தமிழர்க்கும் கிடைத்தன பலவாகும். அதேபோல் அரவிந்தருக்குக் கிட்டியனவும் அதிகமாகும். இவ்வாறு கொண்டும் கொடுத்தும் தத்தம் வாழ்வோடு இந்திய ஞானப் பயிர் வளர்க்கவும் இவர்கள் செய்த அறப்பணிகள் அதிகம்.

இனி பாரதியார் அரவிந்தர் உறவுநிலை மற்றும் இயக்கம் குறித்துப் பின்வருமாறு விரிவுறக் காணலாம்.

சான்றெண் விளக்கம்

1. அரவிந்தர், இந்தியாவின் ஆன்மா, ப.1.
2. நவஜாதா, (தமிழில்-மிர்ர சங்கர நாராயணன், பக்.4-5.
3. மேலது, ப.12.
4. மேலது, ப.15.
5. மேலது, ப.21.
6. மனோஜ்தாஸ், ஸ்ரீஅரவிந்தர்,ப.42.
7. மேலது, ப.29.
8. மேலது, ப.30.
9. மேலது, ப.32)
10. சீனி. விசுவநாதன்,(தொ.ஆ) கால வரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள் -4, ப.775.
11. மனோஜ்தாஸ், ஸ்ரீஅரவிந்தர், ப.50.
12. மேலது, பக்.5-54.
13. நவஜாதா, (தமிழில் மிரா சங்கர நாராயணன்), ஸ்ரீ அரவிந்தர், ப.54.
14. ப.கோதண்ட ராமன், புதுவையில் பாரதியார், பக்.38-39.



அரவிந்தரும் பாரதியாரும்

இந்திய வரலாற்றின் மகத்தான காலக்கட்டங்களுள் குறிப்பிடத்தக்கது, அரவிந்தர் பாரதியார் காலமாகும். ஓராயிரமாண்டு பாரதமாதா தவமிருந்து பெற்ற நவமணிகள் இவர்கள்; வாராது வந்த மாமணிகள். ஒரு கணத்தில் யுகம் பண்ணப் பிறந்தவர்கள். இருப்பதுபோல் இருந்து நடப்பதுபோல் நடந்து, வாழ்வது போல் வாழ்ந்து உலகை வாழ்வித்துக் கொண்டிருக்கும் அமரர்கள்தாம், அவர்கள்.

ஞானபூமி இந்தியா என்றால், அதில் வேதபுரம் புதுச்சேரி. விடுதலை வேள்வியில் தலைநின்ற பலரும் புறச்சிறைகளில் அடைபட்டுக்கிடந்த காலத்தில், அகச் சிறையாம் அன்னை மணி வயிறு போல அமைந்து அடைக்கலம் கொடுத்த புண்ணிய பூமி, புதுச்சேரி. புறச் சிறையிருந்து புறப்பட்டு வந்த பலரும் வந்து தரிசிக்க விரும்பிய திருத்தலம் புதுச்சேரி. இதற்கெல்லாம் மூல முதற்காரணம் பாரதியார். அவர்தாம் முன் வந்து தங்கினார்; சுய சோதனைக்குத் தன்னை ஆட்படுத்திக் கொண்டார். அதன் பின்னர், மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியார், அரவிந்தர், வ.வே.சு.ஐயர், வ.உ. சிதம்பரனார் போன்ற தலைவர்களும், நாகசாமி, வ.ரா., போன்ற தொண்டர்களும் புதுவைக்கு வரக் காரணமாகி நின்றார்.

அத்தோடு புதுவை மண்ணில்தான் தமது கவிதாமண்டலத்தை நிறுவி, அதில் சுப்புரத்தினத்தை (பின்னர், பாரதிதாசன்) தலைமைக் கவியாக்குகின்றார். ரா. கனகலிங்கனாரும், இன்னோரன்ன சான்றோர்களும் இவர் வசம் ஆன வரலாறு, பெரிது. அவற்றுள் அரவிந்தருக்குத் தமிழோடு, அருந்தமிழ்ச் சான்றோர் பலரையும் அறிமுகம் செய்துவைத்த அருள்தலம் இப்புதுவை என்பது இங்கு விளக்கவேண்டிய செய்தியாகும். அதுகுறித்து இங்குக் காணலாம்.

அரவிந்தர் பாரதியார் நட்பு

பாரதியார் அரவிந்தர் நட்பானது அவர்களது புதுவை வாசத்தின் முன்பிருந்தே இருந்திருக்கின்றது என்பதற்கு ஏராளமான சான்றுகள் கிடைக்கின்றன.

பாரதியார் புதுச்சேரிக்கு வருவதற்கு முன்பே, சென்னையில் இருந்த காலத்தில் இருந்தே அரவிந்தருடன் தொடர்பு கொண்டிருந்திருக்கிறார். சான்றாக, விபின் சந்திரபாலர் கருத்துகளை விளக்கி, இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் கூட்டங்கள் நடத்தக்கோரியும், நிதியுதவிகோரியும் அரவிந்தர் 1908 பிப்ரவரியில் பலருக்குத் தந்திகள் அனுப்பியிருந்தபோது, தமிழகத்தில் இடம் பெற்ற முதல் பெயர் பாரதியாருடையதாகும். அதனைத் தொடர்ந்து வ.உ. சிதம்பரனாருக்கும், கொடியாலம் ராமஸ்வாமி ஐயருக்கும் அத்தந்திகள் வந்தன. (காண்க பின்னிணைப்பு -1)

சூரத் மாநாட்டில் அரவிந்தரும் பாரதியாரும்

அதன்பின்னர், சூரத் மாநாட்டில் பங்கேற்ற பாரதியார் அதனைப்பற்றிய பயணக் கட்டுரையில், "24,25தேதிகளில் எங்களுடைய சுதேசிய சங்கம் (நாஷனலிஸ்ட் கான்பரன்ஸ்) நடைபெற்றது. இரண்டுதினங்களிலும் ஸ்ரீஅரவிந்தகோஷ் (வந்தேமாதரம் பத்திராதிபர்) அக்கிராசனம் வகித்தார்" என்றும், கலகம் நடந்தபிறகு, "27ஆம் தேதி, அன்றுமாலையும், மறுநாளும் புதிய கட்சியார் நகர மத்தியிலே தமது கூட்டங்கள் கூடினார்கள். புதிய கட்சியார் மட்டுமேயல்லாது, பொதுப்படையாகக் கல்கத்தா காங்கிரஸ் தீர்மானங்களை அங்கீகாரம் செய்யும் பிரதிநிதிகள் எல்லோரும் சேர்ந்து பாபு அரவிந்தகோஷின் அக்கிராசனத்தின்கீழ் ஓர் பெருஞ்சங்கம் நடத்தினார்கள்"[1]. (மார்ச் 1908) என்றும் பதிவு செய்கிறார். இது தொடர்பான செய்திகளை வ.உ.சிதம்பரனாரும் தமது கட்டுரையில் குறிப்பிடுகின்றார். இந்நூலுள் 'அரவிந்தரும், வ.உ.சிதம்பரனாரும்' என்னும் தலைப்பில் அது விவரிக்கப் பெறுகின்றது.

இருபிளவான காங்கிரசுக்குள் சமாதானம் மேற்கொள்ளுதல் தொடர்பான இந்தியா கட்டுரையில் (18.04.1908) 'பழைய கட்சியாருடன் முரண்பட்ட கருத்துகளை விட்டுக்கொடுக்கும், நாசகரமான சமாதானத்தை ஸ்ரீதிலகர், விபின்சந்திரர், அரவிந்தகோஷ் முதலிய புதியகட்சித்தலைவர்கள் விரும்பமாட்டார்கள்'[2] என்று எழுதுகிறார்.

31.10.1908 இந்தியா இதழில், 'வந்தேமாதரம்' இதழ் ஸ்ரீஅரவிந்தர் பற்றி எழுதிய கட்டுர்ரையைத் தமிழில் தந்ததோடு, 24.10.1908 இந்தியா நாளிதழில் அரவிந்தர் பற்றி மிஸ்டர் நெவின்ஸன் என்பவர் எழுதியதையும் பதிவு செய்கின்றார்.

அரவிந்தர் கைதானது குறித்து, பாரதியார்

"பெங்காளத்தில் சில வாலிபர்கள் கொலைப் பிரயத்தனங்கள் செய்தார்களென்றால், அந்தக் குழந்தைகளின் மனது அத்தனை தூரம் பற்றியெரிந்திருக்கவேண்டுமானால், அதற்கு யார் முகாந்திரமாயிருந்தார்களென்பதையும் கவனிக்க வேண்டும். மிட்னபூர், பாரிஸால் முதலிய இடங்களில் நடந்த கொடுமை களினால் அச்சிறுவர் புத்தி கொதித்துப் போய் விட்டது. அதற்காகக் "கழுவிற்கேற்ற கோமுட்டி" என்ற கதைபோல ஓர் ரிஷியைக் காட்டிலும் சுத்தமும், ஒரு ஸ்திரீயைக் காட்டிலும் சரீர துர்ப்பலமும் உடையவராகிய அரவிந்தகோஷைப் பிடித்து வைத்திருக் கிறார்கள்"[3] என்று இந்தியா, 19.12.1908 இதழில் எழுதுகிறார் பாரதியார்.

அலிப்பூர் வழக்கு நடந்த காலத்திலிருந்து அதன் போக்குகளைப் பற்றி உடனுக்குடன் தமிழில் தருவதில் பாரதியார் தலைநின்றார். தமது பத்திரிகைகளில் அதுதொடர்பான தகவல் களையும் உணர்ச்சி பூர்வமான நடையில் எழுதித் தமிழர்க்கு உணர்த்தினார். இக்காலக் கட்டத்தில் புதுவையைத் தஞ்சம் அடைந்த பாரதியார் அங்கிருந்துகொண்டு தொடர்ந்த இந்தியா இதழ்களிலும் அரவிந்தர் பற்றி எழுதத்தொடங்கினார்.

பாரதியார் நோக்கில் அரவிந்தர் விடுதலையான செய்தி

அலிப்பூர் வழக்கு விசாரணை நடந்தபோது, ஸ்ரீ(சித்தரஞ்சன்) தாஸ் நிகழ்த்திய வாதத்தை உரையாக, இந்தியா 10.04.1909 இதழில் வெளியிடுகிறார். பின்னர் அரவிந்தர் விடுதலையான செய்தியைச் சிறப்பாகப் பின்வருமாறு தந்திருக்கிறார்.

"அரவிந்தன் என்ற ஞானச் சுடரை - அரவிந்தன் என்ற தர்ம சூரியனை - அநீதியாகக் குற்றம் சுமத்துதல் என்ற இராகு வந்து மறைத்திருந்தது. விழுங்கி விடலாமென்பது அந்தப் போலீஸ் பாம்பின் எண்ணம். சூரியனை விழுங்கப் பாம்பால் முடியுமா? சிறிதுகாலம் மூடியிருந்து பின் தானே அகன்று போய்விட்டது" என்ற கருத்துடன் ஒரு கருத்துப்படத்தையும், அரவிந்தர் மகிமை

என்னும் தலைப்பில், இந்தியா 15.05.1909ல் பாரதியார் வெளியிட்டிருக்கிறார். இது குறித்து பாரதி ஆய்வாளர் சினி.விசுவநாதன் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

அரவிந்தரைத் தொடர்ந்த பாரதியாரின் பத்திரிகைத் தமிழ்

"அரவிந்தரைப் போற்றி மகிழ்ந்த பாரதி, இந்தியா பத்திரிகை 1909 மே 22ஆம் தேதியிட்ட இதழில் அம்மஹானின் வாழ்க்கைச் சரித்திரச் சுருக்கத்தை எழுதி வெளியிட்டார். மற்றும் அரவிந்தர் பற்றிய செய்திகளை எல்லாம் முறைப்படத் தம்முடைய இந்தியா பத்திரிகையில் பிரசுரம் செய்து. அம்மஹானுடைய மகிமையைத் தமிழ்உலகம் அறியும்படி செய்தார். சொல்லப்போனால்,அலிப்பூர் வழக்குவிவரம், அரவிந்தர் மனைவிக்கு எழுதிய கடிதங்கள், சொற்பொழிவுகள் ஆகியவற்றை எல்லாம் தொடர்ந்தாற் போல் வெளியிட்டு, அரவிந்தர் பேரில் தாம்கொண்டிருந்த பெருமதிப்பைக் காட்டிக் கொண்டவர் பாரதி"[4] என்பது அக்குறிப்பு.

பெருநெருக்கடிக்கிடையில் ஆங்கிலேயர் அறியாமல் புதுவை வந்து குடியேறிய பாரதியாருக்கு அந்நிய ஒற்றர்கள் தந்த இடர்பாடுகள் பலவாகும். அவற்றுக்கு மத்தியிலும் தமது நண்பர்களின் துணையொடு, இந்தியா, விஜயா.சூர்யோதயம் ஆகிய பத்திரிகைகளோடு, அரவிந்தரின் கர்மயோகின் என்ற ஆங்கிலவாரப் பத்திரிகையைத் தழுவித் தமிழில் தேசபக்த, ஆன்மிக இதழாகக் கர்மயோகி என்னும் பத்திரிகையைத் தொடங்கினார் பாரதியார். சொல்லப்போனால், நண்பர்களின் முழுஒத்துழைப் புடன் ஆசிரியராக மட்டுமேயல்லாமல், கர்மயோகியின் சொந்தக்காரர் (உரிமையாளர்) ஆகவும் பாரதி ஆனார்.[5]

"இனிய, தெளிய, தமிழ் நடையில் பிரசுரமாகும் மாதாந்திரப் பத்ரிகை. கல்கத்தாவில் ஸ்ரீமான் அரவிந்தகோஷ் கர்மயோகின் என்ற பத்ரிகையில் எழுதும் உபந்யாஸங்களும், குறிப்புகளும் இதில் அனைவருக்கும் பொருள் விளங்கும்படி எளிய நடையில் மொழிபெயர்த்துக் கொடுக்கப்படும்" என்றும், "விஷயதானஞ் செய்வோர் ஸ்ரீ ஸி.சுப்பிரமணிய பாரதி" என்றும் 'கர்மயோகி' என்னும் தமிழ்ப் பத்திரிகைக்கான விளம்பரத்தினை 'விஜயா' இதழில் பாரதியார் வெளியிட்டிருக்கின்றார். அதில் 'ஏழை மாணாக்கர்களுக்குக் குறைந்த சந்தா' என்று குறிப்பிட்டிருப்பதும் இங்குச் சுட்டத்தக்கது. ஆ.ரா.வேங்கடாசலபதி தொகுத்த விஜயா

கட்டுரைகள் நூலில் இடம்பெறும் அவ்விளம்பரம் பின்னிணைப்பில் தரப்பெற்றுள்ளது. (காண்க. பின்னிணைப்பு -2)

அதன்பின்னர் பாரதியார், 'பெங்காளி' பத்திரிகையின் ஆசிரியர் பணி, மெட்ரோ பாலிடன் நகரக் கல்லூரி முதல்வர் பணி, ஆகிய "இரண்டு உத்தியோகங்களும் தமக்கு வேண்டியதில்லை என்று அரவிந்தபாபு மறுத்து விட்டது கேட்டு மகிழ்ச்சியடைகின்றோம். அவர் தனியே ஒரு தினசரி பத்திரிகை நடத்தப்போவதாக வதந்தி" என்று, 'அரைக்கினும் சந்தனம் தன் மணம் மாறாது'[6] என்று துணைத்தலைப்பிட்டு 'ஸ்ரீஅரவிந்தகோஷ்' எனும் செய்தியை, இந்தியா, *29.05.1909* இதழில் எழுதுகிறார்.

பின்னர் வட இந்தியப் பகுதியில் அரவிந்தர் ஆற்றிய சொற்பொழிவுகளைத் தமது பத்திரிகைத்தமிழில் தொடர்ந்து அதததற்குரிய தலைப்புகள் தந்து வெளியிடுகிறார்.

இதற்கிடையில், இந்தியா *18.09.1909* இதழில் 'ஸ்ரீமான் அரவிந்த கோஷுடன் ஸம்பாஷணை' என்னும் தலைப்பில், சில தினங்களின் முன்பு கல்கத்தா சென்று வந்த தம் பத்திரிகை பிரதிநிதிக்கு அரவிந்தர் அளித்த பேட்டியைத் தமது அற்புதமான முன்னுரையோடு பதிவு செய்த பாரதியார், பின்னர் புதுவையில் தொடங்கிய விஜயா இதழிலும் அதனை மறுபிரசுரம் செய்திருக்கிறார்.

பாரதியார் மேற்கொண்ட முயற்சிகள்

இந்தநிலையில் சொந்தமண்ணைவிட்டு அரவிந்தர் வெளியேறப் போகிறார் என்பதை அறிந்த பாரதியார் அவரைப் புதுச்சேரிக்கு அழைத்து வருவதில் முன்னின்றார். அதற்காக அவர் மேற் கொண்ட முயற்சிகள் பலவாகும்.

பாரதியார்– கப்பல்தலைவர் சந்திப்பு

பாரதியார், தமது நண்பர் மதுசூதனனுடன், கப்பல் ஏஜண்ட்டைத் துணைக்கொண்டு, எம்.எம்.எஸ்.எஸ். தூப்ளே கப்பல் நிறுவனத்தை அணுகி, அதன் தலைவரை, புதுவைக்கு வந்த கப்பலுக்கே சென்று சந்தித்தார். அரவிந்தகோஷ் மாறுவேடத்தில் இரவில் வந்து கப்பலில் ஏறி வருவார். கொழும்புக்கு வந்ததும் பயணக்கப்பலின் தொடர்ச்சியான நீராவிக் கப்பலிலோ, அல்லது தனிப்படகிலோ ஏற்றி அவரைப் புதுவைக்கு அனுப்பி வைக்க இயலுமா? என்று வினவினார். முதலில் அதனை மறுத்த கப்பல்


தலைவர் பின்னர், கொழும்பிற்குச் சென்றபின் அதற்கான சாத்தியக் கூறுகளைக் கண்டறிந்து ஆவன செய்வதாகக் கூறினார். (காண்க பின்னிணைப்பு -3)

அரவிந்தரின் புதுச்சேரி வருகை

இந்தியவிடுதலைப்போராட்ட வீரராகப் புறப்பட்ட அரவிந்தர் மகான் அரவிந்தர் என்னும் பெருமையெய்துதற்காக, அகத்திய மாமுனி தவம்புரிந்த, வேதபுரியாகிய புதுச்சேரிக்கு 1910ஆம் ஆண்டு, ஏப்ரல் 4ஆம் நாள் மாலை 4 மணியளவில் வந்துசேர்ந்தார்.

துறைமுகம் சென்று வரவேற்றார் பாரதியார்

அரவிந்தர் புதுவையில் வந்திறங்கியபோது, 'அவரைத் துறைமுகத்தில் சென்று பாரதியாரும், ஸ்ரீநிவாசாச்சாரியாரும் இன்னோரன்ன நண்பர்களும் வரவேற்றனர்' என்று ப.கோதண்ட ராமன் குறிப்பிடுகின்றார்.



அரவிந்தர் தங்கியிருந்த சங்கரஞ்செட்டியார் இல்லம்

புதுவையில் சங்கரஞ்செட்டியார் இல்லத்தில் (இது சுவாமி விவேகானந்தர் புதுவை வருகையின்போது தங்கிய புனித இடம் என்பதும் குறிப்பிடத்தக்கது) அரவிந்தர் தங்கியிருந்தது முதலே பிரிட்டிஷ் ஒற்றர்கள் கண்காணித்திருக்கின்றனர். அவரது உதவிக்கு வந்த இரு வங்காள இளைஞர்கள் ஒரு சத்திரத்தில் தங்கியிருந்து, மாலையில் சாதுக்கள் போல் வேடமணிந்து பாரதியார் இல்லத்திற்கு வருவார்கள். பின்னர், அவர்கள் அங்கு தங்களின் வேடத்தை மாற்றிக்கொண்டு பாரதியாரால் அரவிந்தர்

இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பெறுவார்கள். பின்னர் இரவு பதினொரு மணியளவில் பணிமுடித்துத் திரும்புவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள் என்று ஆங்கிலேய உளவுத்துறை ஒற்றர்களின் நாட்குறிப்பு பதிவு செய்திருக்கிறது. (காண்க பின்னிணைப்பு - 4)

புரட்சியாளர்களின் புதுவை வருகைக்குப் பாரதியாரே முன்னோடி

"அதுவரையிலும் கடன்பட்டு அல்லது குற்றஞ்சாட்டப்பட்டுத் தம்மிடம் அடைக்கலம் புகுபவரைக் காப்பாற்றி வந்தது புதுவை. அதனிடம் சரண்புகும் அரசியல்வாதிகளைப் பிரிட்டிஷ் சர்க்கார் ஒன்றும் செய்யமுடியாது என்ற விஷயம் பாரதியார் அங்கு சென்று வசிக்க ஆரம்பித்ததிலிருந்துதான் இந்தியா முழுமைக்கும் தெரிய ஆரம்பித்தது. என்னதான் புரட்சிகர நோக்கங் கொண்டவ ரானாலும், அஹிம்சாவழியில் நடக்கும் எந்தத்தீவிரவாதியும் அங்கு வசிக்கலாம் என்ற விஷயம் பாரதியாரால்தான் உறுதியாக்கப் பட்டது. அரவிந்த கோஷ் முதலியோர் வந்து நிர்ப்பயமாக அங்கு வசிக்க ஆரம்பித்ததற்கும் பாரதியாரே காரணம் எனலாம்"[7] என்கிறார் செல்லம்மாள் பாரதி.

"ஸ்ரீஅரவிந்தர் புதுவை வந்ததும் அவர் தங்குவதற்கு ஒரு வீடு கூடயில்லை. பாரதியாரே தம் நண்பரான சங்கரன்செட்டியாரிடம் சொல்லி அவர் வீட்டில் அரவிந்தர் தங்க இடம் செய்து கொடுத்தார். தமக்கு உடுக்கை யில்லாமல் வேஷ்டி கொண்டுவா என்று என்னிடம் கேட்ட பாரதியார் என்னிடம் பல முறை அம்பீ, பாபுவுக்கு(அரவிந்தரைப் பக்தியுடனும், அன்புடனும் பாரதியார் அழைப்பது இப்படித்தான்) இருக்க இடமில்லை. உடுக்கத் துணியுமில்லை. உண்ண உணவுமில்லை. நம் தெற்குத் தேசத்தை நாடிவந்த அதிதியை விட்டுவிடுவதா? இது தர்மமா? போய் ஒரு வேஷ்டி கொண்டுவா. எனக்காக அல்ல. பாபுவுக்குக் கொடுக்க வேண்டும். ஏக வஸ்திரத்தைத் தவிர அவர் உடுத்துவது வேறொன்று மில்லை என்று கேட்டுவாங்கிக் கொண்டுபோய் அரவிந்தருக்குக் கொடுத்திருக்கிறார்"[8] என்கின்றார் ஸ்ரீவி.எஸ்.குஞ்சிதபாதம். இவர் குவளைக் கண்ணனின் கல்லூரித்தோழர்.

அரவிந்தர் – பாரதியார் அன்றாடச் சந்திப்புகள்

அரவிந்தர் - பாரதியார் சந்திப்புக் குறித்து, பாரதியாரின் நண்பர்களும், பாரதியன்பர்களும் பலவிதங்களில், பல கோணங்களில் பதிவு செய்திருக்கின்றார்கள். அவர்களுள், பாரதியார் துணைவியார் செல்லம்மாள் பாரதி எழுதுவது குறிப்பிடத்தக்கது.

செல்லம்மாள் பாரதி குறிப்பு

"பாரதியார் தினந்தோறும் சாப்பாடு இல்லாமல் போனாலும் பொறுத்திருப்பார். ஆனால், அரவிந்தரைக் காணாமல் இருக்க மாட்டார்"[9] என்று செல்லம்மாள் பாரதி குறிப்பிடுவதும் உண்மை.

சகுந்தலா பாரதி குறிப்புரை

அவ்வாறு, 'அரவிந்தரின் வீட்டிற்குத் தொடர்ந்து சென்று வரும் பாரதியார், அரவிந்தரிடம் நெடுநேரம் உரையாடுவார். பாரதியார் ஆங்கிலம், வடமொழி, இந்தி, உருது, பிரஞ்சு, வங்காளி, ஜெர்மன், இலத்தின் போன்ற மொழிகளையும் அறிந்திருந்தார்'[10] என்று பாரதியார் மகள் சகுந்தலா பாரதி குறிப்பிடுகின்றார்.

வ.ரா.வின் வரலாற்றுப் பார்வையில்

"அரவிந்தரின் சம்பாஷணையால் பாரதியாரின் ஊக்கமும் உள்வலியும் வளர்ந்தன. பாரதியாரின் பேச்சினால் அரவிந்தர் மகிழ்ச்சியடைந்தார்... பாரதியார்- அரவிந்தர் சம்பாஷணையில் நவரசங்களும் ததும்பும். ஒழுகும். கவிதை, சரித்திரம், தத்துவம், அனுபவம், கற்பனை, ஹாஸ்யம், குறுக்கு வெட்டு, விஸ்தாரம், உண்மையை வெளிப்படுத்தும் ஆவல், அபரிமிதமான இலக்கியச் சுவை, எல்லை இல்லாத உடல்பூரிப்பு--எல்லாம் சம்பாஷணை யினிடையே இடைவிடாது நர்த்தனம் செய்யும். அந்தக் காலத்திலே குறுக்கெழுத்து நான் பழகிக் கொள்ளவில்லையே என்று வருந்துகிறேன்.."[11] என்று வ.ரா. குறிப்பிடுகின்றார். இவரை அரவிந்தருக்கு அறிமுகம் செய்து வைத்தவரே பாரதியார்தாம்.

அந்த அனுபவத்தையும் வ.ரா. பின்வருமாறு எழுதுகிறார். "ஒரு மூலையில், ஒதுக்குப்புறத்தில் அரவிந்தர் தன்னந்தனியே உட்கார்ந்து கொண்டிருந்தார். அரவிந்தரை நமஸ்கரித்துவிட்டு நாங்களும் உட்கார்ந்தோம். பேச்சை யாரும் தொடங்கவில்லை. பாரதியார் சட்டென்று எனக்குத் துணை புரிந்தார். தமிழ்நாட்டுத் தேசபக்தன் என்று என்னை பாரதியார் அரவிந்தருக்கு அறிமுகம் செய்துவைத்தார். சர்க்காருக்கு மனுப் பண்ணிக்கொள்ள அவருக்குத் தெரியுமல்லவா? என்று அங்கிருந்த வங்காளி இளைஞர்களில் ஒருவன் சொல்லிவிட்டுச் சிரித்தான். பாரதியாரைத்தவிர மற்றெல்லாரும் சிரித்தார்கள். நான் அசட்டுச் சிரிப்புச் சிரித்தேன். பாரதியாரின் முகத்தில் ஈ ஆடவில்லை. "அடிமைகளிலே, வங்காளி உயர்த்தி, தமிழன் தாழ்த்தியா?" என்று

அவர் படீரென்று போட்டார். தலை நிமிர்ந்து கொள்வதற்கு எனக்குத் தைரியம் உண்டாயிற்று''[12]

அரவிந்தர் தவிர்த்து உடனிருந்த வங்காளியர் சிலருக்குத் தமிழர் என்றால் இளப்பமான எண்ணமிருந்தது உண்மை என்பதை, பாரதியார் - அரவிந்தருடனான உரையாடல் பொழுதுகளில் உடனிருந்த பாரதியன்பர்கள் குறித்திருக்கிறார்கள்.

பாவேந்தர் பார்வையில்

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 1949ல் நடைபெற்ற பாரதிவிழா பற்றிய செய்தியானது 'மாலைமணி' (8.9.1949) இதழில் வெளிவந்ததைத் தனது 'பாட்டுப்பறவைகள்' என்னும் நூலில் தந்திருக்கின்றார் பாரதிதாசனின் புதல்வர் மன்னர்மன்னன். அதில் பாரதிதாசனின் உரை பின் வருமாறு அமைகின்றது.

"நான் பாரதியாரைப்பற்றிச் சொல்கிறேன். 1908ல்தான் பாரதியார் புதுச்சேரிக்கு வந்தார். இன்னும் வ.வெ.சு.அய்யர். திருவல்லிக்கேணி சீனிவாசாச்சாரியார், அரவிந்தகோஷ் முதலியோரும் வந்தனர். இவர்களுக் கெல்லாம் சுதேசிகள் என்று பெயர். அரவிந்தர் - வ.ரா.- முதலியோர் ஒரு குழு. பாரதி - நான் முதலியோர் ஒரு குழு. சீனிவாசாச்சாரியார் எதிலும் இருப்பார். மூன்று குழுக்களும் வெவ்வேறாக இருந்தன. அரவிந்தர் முதலியோர் - தமிழ் என்று ஒருமொழி இருப்பதையோ, அதைப் பற்றி நினைப்பதையோ அறியாதவர்... அரவிந்தர் ஆங்கிலத்தில் (Arya) பத்திரிகையை ஆரம்பித்தார். ஆனால், பாரதியோ தமிழில் இந்தியா பத்திரிகையை ஆரம்பித்தார். தமிழை பாரதி இப்படிப் போற்றினார். அங்கே அரவிந்தர் குழுவிலே என்ன சங்கதி வங்காளம் சிறப்புமொழி, அடுத்தாற் போல் தெரிவது ஆங்கிலம் தான்''[13] என்பது அவர் குறிப்பு. இதன் அடிப்படையிலேயே பாரதியார் வரலாறு குறித்த திரைச் சித்திரக் காட்சிகளையும் அவர் வடிவமைத்திருக்கிறார்.

இப்படி இவர்கள் மூன்று துணைக்குழுக்களாக இருந்த போதிலும் சுதேசிகள் தேசவிசுவாசிகள் என்பதுதான் சிறந்த பதிவு.

மற்றும் ஒன்று. அரவிந்தர் சிறுவயதுமுதலே இங்கிலாந்து சென்று தமது கல்வியைத் தொடங்கியவர். ஆங்கிலமும், பிற ஐரோப்பிய மொழிகளும் பயின்ற அரவிந்தர் இளைஞராக நாடு திரும்பிய பின்னரே வங்காளம் பயின்றார் என்பதும், பலருடனும் உறவு

கொள்ள ஆங்கிலமே உதவும் என்பதாலும் அரவிந்தர் ஆங்கிலத்தைக் கைக்கொண்டாரே ஒழிய, மற்றபடி பாரதியார் - அரவிந்தரிடையே தாய்மொழி பற்றிய சிந்தனைகளும், இந்திய ஒருமை உணர்வும் கொழுந்து விட்டெரிந்து கொண்டுதான் இருந்தன என்பதை மறந்துவிடக்கூடாது. அரவிந்தர் புதுவைக்கு வருமுன்பே தமிழ் கற்றுக் கொள்ள எடுத்துக் கொண்ட முயற்சிகள் பற்றியும், புதுவைக்கு வந்த பின்னர் பாரதியாருடன் இணைந்து தமிழ் பயின்று தமிழ்ப்படைப்புகள் குறித்து விவாதித்து எழுதிய, மொழிபெயர்த்த படைப்புகள் பற்றி அரவிந்தரும் தமிழும் என்கின்ற தலைப்பில் இந்நூலுள் விரிவுறக் காணலாம்.

பாரதியன்பர் நாகசாமியின் பதிவில்

தமிழ் மற்றும் தமிழர்கள் குறித்து அக்காலத்தில் அரவிந்தரும் அவருடனிருந்த வங்காள நண்பர்களும் கொண்டிருந்த கருத்தாக்கம் பற்றிப் பாரதியார் உடனிருந்த நாகசாமி என்னும் அன்பர் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

"அந்த நாளில் புதுவையிலிருந்த தேசபக்தர்கள் தினந்தோறும் பெரும்பாலும் மாலைவேளைகளில் ஸ்ரீஅரவிந்தர் வாசஸ் தலத்திற்குச் சென்று அவருடன் பல விஷயங்களைப் பற்றி உரையாடுவது வழக்கம். அவ்வாறு நடந்து வந்தபொழுது ஒருநாள் ஒரு வங்காளி வாலிபன், தன் அறியாமையால், யோசனையின்றி, துடுக்காய், 'தமிழர்கள் வங்காளிக்குத் தாழ்ந்தவர்களே 'என்று சொல்லிவிட்டான்.

அவ்வளவுதான்! வந்துவிட்டது ஆவேசம், பாரதியாருக்கு. உதடுகள் துடித்தன. கண்களில் நெருப்புப் பொறிகள் பறந்தன. மனம் கொதித்தது. வாய் பேசக் குழறிற்று. இருந்தாலும், அந்தக் கணமே பாரதியார் குழறிக்கொண்டே அந்தத் துடுக்கான வங்காளியைப் பார்த்து, "உமக்கு முதலில் தமிழ்பாஷை தெரியாது. தமிழனோடு நீர் நெருங்கிப் பழகினவருமில்லை. தமிழ் நாட்டிலுள்ள ஆலயங்களையோ, கோபுரங்களையோ மற்றும் சிறந்த கட்டடங்களையோ நீர் பார்த்தவருமில்லை. தமிழர் எங்கெல்லாம் உயர்ந்த உத்தியோகங்களில் இருக்கிறார்கள் என்பதும் உமக்குத் தெரியாது. ஆங்கில பாஷையிலும், தேசாபிமானத்திலும், வழக்கறிஞர்துறையிலும், பௌதிக ரசாயன சாஸ்திரங்களிலும், கணிதத்திலும் மற்றும் எல்லாத் துறைகளிலுமே தமிழர்கள் எவ்வித மேதாவிகளாய் இருந்திருக்கிறார்கள் என்பதும் உமக்குத் தெரியாது. தமிழ் நாட்டுச் சரித்திரம் எவ்வளவு

சிறப்புற்றது என்பதும் உமக்குத் தெரியாது. தலை சிறந்த தேச பக்தர்களைச் சிறைப்படுத்தி வைத்த திருநெல்வேலி மாவட்டக் கலெக்டர் ஆஷ்துரையைச் சமீபத்தில் சுட்டுக் கொன்று பழி தீர்த்தவன் தமிழன் என்பது உமக்குத் தெரியாது. நம்முடன் அமர்ந்திருக்கும் அரவிந்தருக்குப் புகலிடம் கொடுத்து அவரது பொருளாதாரச் சிரமத்தைப் போக்கினது தமிழ்நாடல்லவா? இவ்வித மேம்பாட்டுடன் இருக்கும் தமிழர்கள் உங்களுக்கு மேல் என்றே சொல்லலாம். அல்லது சமம் என்றே உறுதியாய்ச் சொல்கிறேன் நான்'' என்று மேசையின்மேல் கையால் ஓங்கி அடித்து மழை போல் பொழிந்து நிறுத்தினார். அதன்பிறகுதான் அவருக்குக் கொஞ்சம் கோபம் தணிந்து, நிதானம் ஏற்பட்டது."[14]

அரவிந்தரின் நிலைப்பாடு

இந்நிகழ்வு அனைத்தையும் உற்று நோக்கிக் கொண்டிருந்த அரவிந்தர் நிலைப்பாடு இங்குக் கவனத்திற்குரியது. அதனையும் நாகசாமி பின்வருமாறு பதிவு செய்கின்றார்.

"பாரதியார் கூறிய யாவற்றையும் உன்னிப்பாய்க் கேட்டிருந்த அரவிந்தர் புன்சிரிப்புடன், இனிய குரலில், உடனே, "பாரதி சொன்னவை யாவும் உண்மைதான். நான் அவற்றை மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்கிறேன்'' என்று மெதுவாய், அழுத்தத்துடன் சொன்னார். கொஞ்சமும் யோசியாது பேசியதற்கு அந்த வாலிபனையும் அரவிந்தர் எச்சரித்தார். தமிழர்கள் தாழ்ந்தவர்கள் என்று துடுக்காய்ச் சொன்ன வங்காளி வாலிபன் முகம் கறுத்துப் போயிற்று. கண்களில் நீர் ததும்பியது. எதுவும் பேசாது அப்படியே உட்கார்ந்துவிட்டான். தான் சொன்னது தவறு என்று உணர்ந்தமை அவன் முகத்தில் நன்றாய்த் தெரிந்தது."[15]

அந்த நேரத்தில் அமைதி ஏற்படுவதற்காக அரவிந்தர் சொன்ன சமாளிப்புத்தொடர்கள் இல்லை அவை என்பதையும், அவர் தமிழ் பற்றியும், தமிழர் பற்றியும், தமிழர்தம் கலை, இலக்கியங்கள், சமய ஒழுங்குகள் பற்றியும் அளவுகடந்த மதிப்பும், நம்பிக்கையும் கொண்டிருந்தார் என்பதையும் அவர்தம் எழுத்தோவியங்கள் உலகிற்கு உணர்த்தியிருக்கின்றன. அவை குறித்துப் பின்னர் விரிவுறக் காணலாம். இதெல்லாம் ஸ்ரீஅரவிந்தர் புதுவை வந்த புதிதில் ஏற்பட்ட நிகழ்வுகளாயிருக்கூடும். அதன் பின்னர் அரவிந்தர் - பாரதியார் பதிவுகளில் இடம்பெறும் நிகழ்வுகள் குறிப்புகள் பற்றி இங்குக் காணலாம்.

அரவிந்தர் பிறந்தநாள் கொண்டாட்டம்

புதுவையில் அரவிந்தர் வசித்த நாட்களில் அவரது பிறந்தநாளைச் சிறப்பாகக் கொண்டாடியிருக்கின்றனர், அவரது நண்பர்கள். அது பற்றிப் பல அன்பர்கள் பதிவு செய்திருக்கின்றார்கள். அவற்றில் பாரதியாருக்கு முக்கியப்பங்கு இருந்திருக்கின்றது. அரவிந்தருக்குப் பிடித்தமான தமிழ்ச்சமையல், குறிப்பாக, சாம்பார், அப்பளம் ஆகியவற்றைப் பாரதியாரின் துணைவியார் செல்லம்மாள் பாரதி தமது இல்லத்திலிருந்து அனுப்பவும் செய்திருக்கின்றார்.

சகுந்தலா பாரதி குறிப்பில்

"ஸ்ரீஅரவிந்தரது பிறந்த நாட்கொண்டாட்டம் வந்தால் எங்களுக்கு அது விடுமுறை நாள். அன்று முழுவதும் அவரது வீட்டிலேயே தங்குவோம். இரவு பெரிய விருந்து நடக்கும். நம் நாட்டுச் சமையல் வகையெல்லாம் என் தாயார் தான் செய்தனுப்புவார்"[16] என்று குறிப்பிடும் சகுந்தலா பாரதி, இன்னும் பல தகவல்களையும் தருகின்றார்.

"ஸ்ரீஅரவிந்தர் சாம்பாரும், அப்பளமும் மிக்க பிரியத்துடன் சாப்பிடுவார். என் தந்தையார் வேதம் படிப்பதற்காகச் சில நாட்கள் ஸ்ரீஅரவிந்தரின் மாளிகைக்குப் போவார். இரவில் வீடு திரும்ப மாட்டார். சில சமயம் காலை ஆறு மணி வரை படித்துக்கொண்டிருப்பார்களாம். அதனால், ஸ்ரீ அரவிந்தரின் சிஷ்யர்கள் வந்து சாம்பாரும் அப்பளமும் மட்டும் வாங்கிப் போவார்கள்."[17]

ஒரு திருமண இல்லத்திற்குரிய சிறப்புகளோடு நடந்த அவர்தம் பிறந்த நாள் விழாப் பற்றிய வருணனையை அமிர்தா என்னும் அமுதன் விரிவாக உரைக்கின்றார். அதில் அரவிந்தரைச் சந்தித்த பொழுதையும் அதுசமயம் பாரதியார் மற்றும் வ.வே.சு.ஐயர் உள்ளிட்ட அன்பர்கள் நெடுநேரம் தங்கிப் பேசியிருந்த சூழலையும் விவரிக்கின்றார்.[18]

காவல்துறைக்குறிப்பில்

அரவிந்தரின் 40ஆவது பிறந்த நாள்விழாக்குறித்த பதிவினை அப்போதைய ஆங்கில அரசின் ஒற்றர்கள் குறித்துவைத்துள்ளனர். கல்கத்தா ஆவணங்களில் இடம்பெறும் அவ்வாராந்திர அறிக்கையின் தமிழ் மொழிபெயர்ப்பு பின்வருமாறு.

வாராந்திர அறிக்கை

"பாண்டிச்சேரி- அரவிந்தகோஷின் 40ஆவது பிறந்தநாள் அவரது இல்லத்தில் ஆகஸ்ட் 15இல் கொண்டாடப்பட்டதாகத் தெரிகிறது. அந்தக் கூட்டத்தில், பாரீஸிலும், இலண்டனிலும் இருந்து கொண்டு அரசுக்கு எதிராகச் சதிச்செயல்களில் ஈடுபட்ட வி.டி.சாவர்க்காரின் வலக்கரமாகச் செயல்பட்ட வி.வி.எஸ்.ஐயர், அரசுக்கு எதிரான பிரச்சார இலக்கியங்கள் படைப்பதில் பிரபலமான எழுத்தாளரும், ஆஷ்துரை கொலை வழக்கில் தேடப்பட்டவருமான சி.சுப்பிர மணிய பாரதியும், இன்னும் சில புரட்சியாளர்களும் இருந்தனர்.

அந்த நிகழ்ச்சியின்போது, 1.வங்காளிகளின் புரட்சி இயக்கத்துக்குக் காவல் தெய்வமாகிய காளி, 2. இந்திய உருவமாக வடிவமைக்கப்பட்ட பாரத மாதா, 3. திலகர். 4-5 முசாபூரில், 1908ஆம் ஆண்டு கென்னடி தம்பதியரைக் குண்டுவீசிக் கொன்ற குதிராம்போஸ், பிரபுல்லசகி ஆகிய இரு வங்காளிகள் ஆகியோரின் ஐந்து படங்களுக்கு மலர்மாலைகள் சூட்டி யிருந்தனர்.

அரவிந்தகோஷ் பாண்டிச்சேரிக்கு வந்ததிலிருந்து வி.வி.எஸ். ஐயர் போன்ற அபாயகரமான கும்பல்களுடன் நெருக்கமான தொடர்பு வைத்திருக்கிறார்.

இதன் ஆங்கில மூலம் பின்னிணைப்பில் தரப்பெற்றுள்ளது. (காண்க. பின்னிணைப்பு-5)

இவற்றுக்கான ஆதாரங்கள் வேறு யாருடைய குறிப்புக ளிலிருந்தும் கிடைக்கவில்லை.

அந்தப்பாடல் எங்கே?

அவ்வாறான சூழலில் அரவிந்தரின் பிறந்தநாளை ஒட்டி பாரதியார் தமிழில் ஒரு பாடல் எழுதிப்பாடினார் என்று பலரும் குறித்துள்ளனர். "ஆகஸ்ட் 15 ஆம் தேதி அரவிந்தர் பிறந்த தினமாகும். அன்னாரின் ஒரு பிறந்த தினத்தில், பாரதியார்தமிழில் ஒரு வாழ்த்துப் பாடல் எழுதிப்பாடினார். பின்னர் அதை அரவிந்தருக்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூறினார். அதைக் கேட்டு அரவிந்தர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்"[19] என்னும் செய்தி பரவலாகச் சுட்டப்பெறுகின்றது. ஆனபோதும் அப்பாடல் கிடைத்திலது. அது பாடப்பெற்ற காலம், உடனிருந்தோர் நினைவுக்குறிப்பு ஆகியவற்றோடு இனிவரும் காலத்தில் தேடக் கிடைக்கவும் கூடும். ஆனால், அரவிந்தப்பாம்பு எனும்

பெயரில் பாரதியார் கவிதைத்தொகுதிகளில் இடம் பெற்றுள்ள பாடல் பாரதியார் எழுதிய பாடல் அன்று. அது பாரதிதாசனால் எழுதப் பெற்ற பாடலாகும். (இந்நூலாசிரியர்களால் தொகுக்கப் பெற்ற **மகாகவிபாரதியார் கவிதைகளில் புதுச்சேரி** என்னும் தொகுப்பு நூலில் அக்கவிதை தவறுதலாக இடம் பெற்றுவிட்டது. இத்தவற்றினைச் சுட்டிக் காட்டிய கவிஞர் சிற்பி பாலசுப்பிர மணியம் அவர்களுக்கு நன்றியோடு, இனிவரும் பதிப்புகளில் அது தவிர்க்கப்பெறும்)

பாரதியாரைப்பற்றி அரவிந்தரின் ஒரே ஒரு குறிப்பு

அரவிந்தரைப்பற்றி பாரதியார் பலவிடங்களில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், பாரதியாரைப்பற்றிய அரவிந்தரின் எழுத்து மூலமான ஒரே ஒரு குறிப்புத்தான் கிடைத்துள்ளது என்பது பலரது கருத்து. அக்குறிப்பானது, சந்திர நாகூர் மோதிலால்ராய் எனும் தமது நண்பருக்கு அரவிந்தர் 1912 ஜுலை 3இல் எழுதிய கடிதத்தில் இடம்பெறுகின்றது.

“இங்குள்ள நிலை என்னவென்றால், எங்களிடத்தில் 1½ ரூபாய் தான் கையில் உள்ளது. ஸ்ரீநிவாசாவிடமும் பணம் இல்லை. பாரதியாரைப் பற்றிச் சொல்வதானால் எதுவுமே இல்லாமல் வாழ்க்கையை ஓட்டுகிறார். ஒரு மாதத்திற்கு என்பது சொல்ல முடியாத பொருள் தேவைதான். புதுச்சேரியில் ஒரேயொருவரைத் தான் கேட்கலாம். அவரும் தற்சமயம் இங்கு இல்லை. தென்னாட்டிற்குச் சென்றுள்ள என் தூதுவரும் இன்னும் திரும்பவில்லை. சென்ற முறை அவர் இங்கு வந்தபோது மாதத்தில் எப்படியும் ஆயிரம் ரூபாய் கிடைக்குமாறும், அதற்குரிய நிரந்தர ஏற்பாடுகள் செய்வதாகவும் உறுதியளித்திருந்தார். ஆனால் இதற்கு முன்னிருந்தவர்கள் சொல்லிச் சென்ற உறுதிகளைப்போல இதுவும் நிறைவேற்ற முடியாமல் போயிருக்கலாம். பணம் வாங்கி வரத்தான் அவரை அனுப்பினோம். மூன்று நாட்களுக்கு முன்னரேயே திரும்பிவந்திருக்க வேண்டும். ஆனால் இதுவரை வந்து சேரவில்லை. அப்படியே அவர் திரும்பி வந்தாலும் கொண்டு வரும் பணம் போதுமா, தேவையான அளவு கொண்டு வருவாரா என்பது தெரியவில்லை. ஐயமில்லை, இறைவன் நிச்சயமாக ஏற்பாடு செய்வார். ஆனால் இறைவனுக்கு ஒரு கெட்ட பழக்கம் என்னவென்றால், கடைசிநிமிடம் வரை அருளக் காத்திருத்தல். என் வேண்டுதல் என்னவென்றால், பாரதியாரைப் போல் ஒன்றும் இல்லாத நிலையிலும் எப்படி வாழமுடிகிறது என்பதைக் கற்றுக்

கொள்ளச் செய்யாமலிருக்க வேண்டும் என்பதுதான்...''[20] இக்கடிதத்தின் ஆங்கில மூலம், முழுவதுமாகப் பின்னிணைப்பில் தரப் பெற்றுள்ளது. (காண்க. பின்னிணைப்பு-6).

பாரதியன்பர்களின் பதிவுகளில்

மேற்காணும் கடிதத்தில், ஸ்ரீநிவாசா என்று குறிப்பிடப் பெறுபவர் மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியாராவார். பாரதியாரின் வறுமையில் செம்மையைச் சுட்டிக்காட்டிய அரவிந்தர், பாரதியாரின் அறிவாற்றலை, படைப்பாற்றலை எழுத்து மூலம் சுட்டிக் காட்டவில்லை என்றாலும் வாய்மொழிமூலம் கூறியதாகச் செவிவழிச் செய்தி பேசப்படுகின்றது. பாரதியாரின் பொன் வால்நரி, (The Fox with a Golden Tail) யின் அங்கத நடைச் சிறப்பை நண்பர்களிடம் அரவிந்தர் பாராட்டியதாகக் கூறப்படுகின்றது.

ரா.அ.பத்மநாபன் குறிப்பில்

பாரதியார், தமது படைப்புகளை அரவிந்தரிடம் காட்டுவதை, படித்துக் காட்டுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். 1914இல் பாரதியார் எழுதிய (The Fox with a Golden Tail) பொன்வால்நரி என்ற ஆங்கிலக் கட்டுக் கதைப் புத்தகம் புதுவையில் வெளியாயிற்று. “இதை அச்சில் வெளியிடுமுன் கையெழுத்துப் பிரதியை பாரதியார் அரவிந்தருக்குப் படித்துக் காட்டினார்... அரவிந்தரும் அதைக் கேட்கக் கேட்க விடா நகைப்படைந்ததுடன், தம்முடன் ஆசிரமத்திலிருந்த இளம் வித்வான்களையும் அழைத்து, “பாரதியார் எவ்வளவு அருமையான இங்கிலீஷில் ஒரு அதிசயமான கட்டுக்கதையை எழுதியிருக்கிறார். அதை அவரே படித்துக் காட்டும்போது நீங்கள் கவனிக்காமலும் கேட்காமலும் பேசிக் கொண்டிருக்கிறீர்களே?'' என்று சொன்னாராம்”[21] என்று ரா.அ.பத்மநாபன் குறிப்பிடுகின்றார்.

அதேபோல், சம்பந்தம் என்பார் தமது **புதுவையில் பாரதி** என்னும் நூலில்,“அரவிந்தருக்கும் கண்ணன்பாட்டை பாரதியார் பாடிக் காண்பித் திருக்கின்றார். அவருக்குப் பாரதியார் முன்பே தமிழ் கற்றுக் கொடுத் திருந்ததால் ஒருவாறு அதன் ரசனையை உணர்ந்தார். அவருக்குத் தெரியாத, புரியாத இடங்களைப் பாரதியாரே வங்காளியில் மொழிபெயர்த்துச் சொல்லி அரவிந்தரை இன்புறச் செய்தார்”[22] என்று குறிப்பிடுகின்றார். எனினும் இதற்கான சான்றுகள் ஏதும் இல்லை.

இருப்பினும் இக்கருத்திற்குத் துணைசெய்வதாக அமையும்

செய்திகளையும், ஒரு நிகழ்வையும் நினைவுகூர்கின்றார் பாரதியார் தம் புதல்வி தங்கம்மாள்பாரதி.

தங்கம்மாள் பாரதி பதிவில்...

"தினமும் தந்தையார் தாம் புதிதாகப் புனைந்த பாடல்களை முதலில் தாயாரிடம் படித்துக் காண்பிப்பார். பின்பு, அவரது அருந்தோழர்களான ஐயர், ஸ்ரீநிவாசாசாரியார், அரவிந்தர் முதலியோரிடம் படித்துக் காட்டுவார். தமது கொள்கைகளைப் பிறரிடம் சொல்லி, அவர்கள் அதை எப்படி ரஸிக்கிறார்கள் என்பதை அறிந்த பின்பே, அவர் மனம் சமாதானப்படும்.

"சக்தி சக்தியென்று சொல்லு- கெட்ட
சஞ்சலங்கள் யாவினையும் வெல்லு
சக்தி சக்தி சக்தியென்று சொல்லு- இவள்
சந்நிதியிலே தொழுது நில்லு" (சக்தி)

என்ற சக்திப்பாட்டை ஆவேசத்தோடு பாடுவதை ஸ்ரீ வ.வே.சு.அய்யரின் செல்லக்குழந்தை கிருஷ்ணமூர்த்தி ரொம்பக் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தான். குழந்தைக்கு அப்போது மூன்று வயதுதான் இருக்கும். "நான் பாடட்டுமா, மாமா?" என்று மழலை மொழியில் கேட்டான். அக்குழந்தை. "சரி" என்றார்கள். பையனுக்கு "ச" வராது. அதற்குப் பதில் "க" தான் வரும். "சக்தி"யைக் "கத்தி" என்று நினைத்துக் கொண்டான். கத்தி அவனுக்கு நன்றாய்த் தெரிந்த சாமானும் கூட. "கத்தி கத்தி கத்தி யென்று சொல்லு" என்றான். அரவிந்தர் கூடச் சிரித்து விட்டார். பையன் கையையும் காலையும் ஆட்டிக் கொண்டு வீராவேசத்துடன் பாடுவதைப் பார்த்து, "வீர குலத்தில் பிறந்த குழந்தையல்லவா, பேஷ்" என்று தட்டிக்கொடுத்தார் தந்தை".[23]

அரவிந்தர் பாராட்டிய பாரதியாரின் மொழிபெயர்ப்புத்திறம்

பாரதியார்அரவிந்தரோடு இணைந்து வேதம் படிக்கத் தொடங்கிய காலக்கட்டங்களில் அவற்றை மொழிபெயர்த்துத் தமிழில் பல வகைகளில் தந்திருக்கின்றார். அவற்றுள் ஒன்று, பதஞ்சலியோக சூத்திரம். சமஸ்கிருதத்திலிருந்து அதனை ஆங்கிலத்தில் ஏற்கெனவே சுவாமி விவேகானந்தர் மொழி பெயர்த்திருக்கின்றார். ஆயினும், "மூலத்திற்கும் விவேகானந்த ருடைய மொழிபெயர்ப்புக்கும் சில இடங்களில் முரண் இருக்கிறது என்பது பாரதியாரின் எண்ணம். மூலத்திலிருந்தே அவர் யோக சூத்திரத்தைத் தமிழில் தர்மஜா செய்து, பகுதி பகுதியாகக்

கர்மயோகி பத்திரிகையில் வெளியிட்டார்.... பாரதியார் மொழி பெயர்த்தது நிரம்ப நன்றாயிருக்கிறதென்று அரவிந்தர் முதலிய பெரியார்கள் சொன்னது எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது" [24] என்கின்றார் வ.ரா.

ஆங்கில ஒற்றர்கள் பதிவில் அரவிந்தர்–பாரதியார்

மேலும், புதுச்சேரியில் ஆங்கிலேய ஒற்றர்களின் கண் காணிப்பில் பாரதியார், அரவிந்தர், ஸ்ரீநிவாசாச்சாரியார், பின்னர் வந்துசேர்ந்த வ.வே.சு.ஐயர் போன்றோர் பட்ட துயரங்கள் பலவாகும். அப்போதைய சூழலில் அவர்களை நிழல்போல் கண்காணித்து அவர்களைப்பற்றிய தகவல்களைத் தமது தலைமை அலுவலகங்களுக்கு அனுப்பியிருக்கின்றனர். அடிப்படைச் செலவுக்குக்கூட ஒரு ரூபாய் இல்லாது இவர்கள் துயருறும்படி செய்த அக்காவல் கண்காணிப்பாளர்களுக்கு, அக்காலத்திலேயே பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் அதற்காகச் செலவிடப் பட்டிருக்கின்றன. அதன் பலன், அவர்கள் நோக்கில் அரவிந்தர், பாரதியார் முதலானவர்கள் பற்றிய குறிப்புகள் கிடைத்திருக் கின்றன. அவை உரிய தமிழ்மொழிபெயர்ப்புடன் பின்வருமாறு தரப்பெறுகின்றன. அவற்றின் ஆங்கில மூலங்கள் பின்னிணைப்பில் இடம்பெறுகின்றன.

இந்திய அரசு,உள்துறை,சிம்லா ஆவணங்கள் -2,பிப்ரவரி 1911, பக்கம்-3, என்ற குறிப்போடு, மெட்ராஸ் என்ற தலைப்பின் கீழ் இடம் பெறும் குறிப்பாவது.

"பாண்டிச்சேரி- நமக்கு உறுதியாகக் கிடைத்துள்ள தகவல் களின்படி அரவிந்தகோஷுடன் இருக்கிறவர்களுள் ஒருவர் ஏ.பி. கோல்ஹாட்கார் .பி.ஏ., இவர் நாக்பூரைச் சார்ந்தவர்.தேசசேவக் என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்து அரசுக்கு எதிரான பிரச்சாரங்கள் செய்த அவதூறு வழக்கில் தண்டனை பெற்றவர். அவர் மேடம் காமாவுடன் தொடர்பு கொண்டு இந்தியாவைவிட்டு வெளியேறிவிடவேண்டும் என்ற எண்ணமுடையவர். இங்கிலாந்து வழியாகச் செல்வதற்காக ரூ.300/- செலுத்த வேண்டுமென்று கடிதம் அவருக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. அல்லது ஈராயிரம் அல்லது மூவாயிரம் இந்தியத் தொழிலாளர்களின் குடியேற்ற நாடாக விளங்குகின்ற மேற்கு இந்தியாவுக்குச் செல்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசுக்கு எதிரான பிரச்சார இலக்கியங்கள் இன்னும் ஏராளமாக வந்துகொண்டிருக்கின்றன. சுப்பிரமணிய பாரதியாரின் மைத்துன ராகிய நாகசாமி ஐயருக்கு அண்மையில் அனுப்பப்பட்ட பார்சலைத் தபால் துறையினர் பிரித்துப் பார்த்தபோது அதில் சிப்பாய்க்கலகம் பற்றி சாவர்க்கார் எழுதிய நூலின் 5 பிரதிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது, மேலும், விடுதலை இந்துஸ்தானம் (Free Hindustan), தல்வார் மற்றும் வந்தேமாதரம் (Talwar and Bande Mataram) ஆகிய நூல்களும் இருந்தன. இப்படியெல்லாம் தபால்களைப் பிரித்துத் தடைகள் உண்டாக்கினாலும் ஸ்ரீநிவாசாச்சாரி வீட்டில் இது போன்ற இலக்கியங்கள் ஏராளமாக இருப்பதாக அறிகிறோம். (காண்க- பின்னிணைப்பு- 7)

எப்படியேனும் பாரதியாரையும், அரவிந்தரையும், வ.வே.சு.ஐயரையும் கைது செய்துவிடவேண்டும் என்று துடியாய்த் துடித்த ஆங்கில அரசின் ஒற்றர்கள் பலவித முயற்சிகளைச் செய்து பார்த்தனர். ஒருமுறை வ.வே.சு.ஐயரின் கிணற்றுக்குள் பழைய கைத்துப்பாக்கி, அவதூறுப் பிரச்சார இலக்கியத் தாள்கள் முதலியன அடங்கிய ஒரு பெட்டியைப் போட்டுவிட்டு அதனைத் தேடுவதுபோல் பாசாங்கு செய்து அவர்களைக் கைது செய்ய முயன்றதை முன்கூட்டியே அறிந்த அவர்கள் முறைப்படி மாஜிஸ்திரேட் டிடம் முன்கூட்டியே இதுட ற்றி விளக்கம் தர, ஒற்றர்களின் முயற்சி செயலிழந்து போயிற்று. அந்த அனுபவத்தைப் பதிவாக்கிய ஒற்றர் குறிப்பு இது.

பாண்டிச்சேரி- மார்ச் 8ஆம்தேதி அரவிந்தகோஷ், வி.வி.எஸ்.ஐயர் மற்றும் சி.சுப்பிரமணிய பாரதி ஆகிய இங்கு குடியிருக்கும் இந்தியக் குடிமக்களின் வீடுகளை பிரெஞ்சு ஆட்சியாளர்கள் சோதனையிட்ட போது, இங்கு அரசுக்கு எதிரான அவதூறு பிரச்சார இலக்கியங்களை விநியோகித்திருந்ததும் ஆயுதங்களைக் குவித்து வைத்திருந்ததும் தெரிய வந்தது.

ஆனால் வி.வி.எஸ்.ஐயர் வீட்டில் மட்டுமே ஒரு பழைய கைத் துப்பாக்கியும், அவதூறு விளக்கப்படமும் அவர்வீட்டிற்கு அருகில் உள்ள கிணற்றுக்குள் கிடந்ததைக் கண்டுபிடித்திருக்கிறார்களாம். சோதனை தொடங்குமுன்னரே, அவதூறுப் பிரச்சார இலக்கியத் தாள்களின் கட்டுகளை எடுத்துக்கொண்டு போய்த்தங்கள்வீட்டில்யாரோகொணர்ந்து போட்டிருக்கிறார்கள் என்று மாஜிஸ்திரேட் முன்னிலையில் பிராது கொடுத்து நம்மீது குற்றம் சாட்டியிருக்கிறார்கள்.

இதிலிருந்து என்னதெரிகிறதென்றால், சோதனை தொடங்கு முன்பே இச் செய்தி அவர்களுக்கு எட்டியிருக்கிறது.கடைசியில் அந்த சதிக்கும்பலை விட்டுவிட வேண்டியதாயிற்று. அந்தச் செய்திகளைக் கொண்டு வந்த ஒற்றர்கள் மீதே தங்களுக்குப் பாதகமாக நடந்து கொண்டதாகக் குற்றம் சாட்டக் கூடியதாக ஆயிற்று.

இதில் மேலும் தெரியக்கூடிய செய்தி என்னவென்றால் பிரெஞ்சு ஆட்சியாளர்கள் பாண்டிச்சேரியிலுள்ள பிரிட்டிஷ் போலீசாரை அங்கிருந்து நீக்கி விடுவது தொடர்பாகக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். (காண்க - பின்னிணைப்பு-8)

கிட்டத்தட்ட இதே காலக்கட்டங்களில், (1911-1912) பிரெஞ்சு இந்திய சட்டசபையில், அந்நியர் சட்டம் என்று ஒரு புதிய சட்டம் செய்யுமாறு, பிரெஞ்சு அரசை, ஆங்கில அரசு தூண்டிவிட்டது. எப்படியாயினும், அரவிந்தர்,பாரதியார் முதலான சுதேசிகளைப் புதுவையில் இருந்து வெளியேற்றிவிடவேண்டும் என்பது நோக்கம். ஆனால், இதற்கு முழுமையாக ஒத்துழைக்கப் புதுச்சேரி சட்டசபை உறுப்பினர்கள் விரும்பாததனால், இச்சட்டத்தினிடையில் சிறு மாற்றம் கொண்டு வந்தனர். "இச்சட்டம் அமலுக்கு வந்த தேதிக்கு முன்னர், ஓராண்டுக் காலம் புதுவையில் வசிக்கும் அந்நியர்கள் ஐந்து ஆனரரி மாஜிஸ்திரேட்டுகளிடம் கையெழுத்து வாங்கி, பிரெஞ்சுப்போலீசாரிடம் பதிவு செய்துகொண்டால் அவர்கள் குடியிருக்கலாம் என்ற ஷரத்தை அந்தச் சட்டத்தில் புகுத்தினர்.

"புதுச்சேரிச் சட்டசபையில் இந்தச் சட்டம் விவாதத்துக்கு வரும் என்று கேள்விப்பட்ட நாள் முதல், சட்டம் பூர்த்தியான தேதி வரையில், சுதேசிகளுக்குக் கவலைதான். ஸ்ரீஅரவிந்தர் கூட இந்தக் கவலையை அடிக்கடி முகத்தில் காண்பித்துக் கொண்டார் என்றால், வேறு என்ன சொல்ல வேண்டும்? சுதேசிகளுள் நிரம்பவும் கவலைப்பட்டவர் வ.வே.சு.அய்யர்தான்... ஆனால், பாரதியாரோ, வசந்தகாலக் குயிலைப்போலப் பாடிக்கொண்டு தான் இருந்தார். சிரிப்புக்கு ஒன்றும் குறைவில்லை". [25]

இதன்பின்னர், "அரவிந்தர், (வ.வே.சு)அய்யர், பாரதியார், சீனிவாஸாசாச்சாரியார் முதலிய பெரியவர்கள் அரவிந்தரின் பங்களாவில் இதைப்பற்றிக் கூடிப்பேசினார்கள். யோசனை புலப்படவில்லை. எல்லோருக்கும் சிறிது மனக்கலக்கம் என்று சொல்லத் தேவையில்லை. "சரி. நாளைக்குச் சாயங்காலம் பேசிக்

கொள்வோம்!" என்றார் பாரதியார். இரவு ஒன்பது மணியிருக்கும். பாரதியார் வீட்டுக்குத் திரும்பிப்போனார். அப்பொழுது அரவிந்தர் பங்களாவில் எனக்கு ஜாகை. "ஓய்!" என்று என் பெயரைச் சொல்லிக்கூப்பிட்டு, " நாளைக்குக் காலமே எட்டு மணிக்கு என் வீட்டுக்கு வாரும்!" என்று சொல்லிவிட்டுப் பாரதியார் போய்விட்டார். மறுநாள் காலையில் குறித்த நேரத்துக்கு, நான் பாரதியாரின் வீட்டுக்குப் போனதும், "புறப்படுவோமா?" என்றார் பாரதியார். முதல்நாளிரவு பாரதியார் முகத்தில் காணப்பட்ட அதைரியம் அப்போது இருந்தவிடம் தெரியவில்லை. "எங்கே போகிறது?" என்றேன். "கேள்வி கேட்காமல் கூட வரணும்" என்றார் பாரதியார்... இரண்டு பேரும் கலவை சங்கர செட்டியாரின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தோம். செட்டியார் நடுக்கூடத்தில் ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டிருந்தார். "சுவாமி!" என்று எழுந்து நின்று கும்பிட்டார், செட்டியார். "நீங்கள் எல்லாம் இருந்தும், நாங்கள் புதுச்சேரியை விட்டுப் போக வேண்டுமா? புதுச்சட்டம் செய்திருப்பது உங்களுக்குத் தெரியுமோ, இல்லையோ?" என்றார் பாரதியார்.

சட்டம் செய்யும் காலத்தில் செட்டியார் புதுச்சேரியில் இல்லை. அவர் சென்னைக்குச் சென்றிருந்தார். "இவ்வளவுதானே?" என்றார் செட்டியார். நான் சின்னப்பிள்ளை. இதைக் கேட்டதும் எனக்கு ஆறுதல் உண்டாயிற்று. "என்ன செய்யலாம்?" என்றார் பாரதியார். "ஐந்துபேர் கையெழுத்துகளும் வாங்கித் தருகிறேன். பிரமாதமான காரியமில்லை. நானும் ஒரு கௌரவ மாஜிஸ்ட்ரேட் தான்" என்றார் செட்டியார்.

"நல்லது. இன்றைக்குள் முடியுமா?" என்றார் பாரதியார்.

"இன்னும் இரண்டு மணிநேரத்துக்குள் காரியம் முடிந்துவிடும். கையெழுத்து வாங்கவேண்டிய தஸ்தாவேஜியை எழுதி என்னிடம் கொடுங்கள். நான் இரண்டு மணிநேரத்துக்குள் உங்களை உங்கள் வீட்டில் வந்து பார்க்கிறேன்" என்றார் செட்டியார். ஞாபகம் வந்ததுபோல, "புதுப்பாட்டு எதாவது பாடுங்களேன்!" என்றார் செட்டியார். "ஜயமுண்டு பயமில்லை மனமே!" என்ற பாட்டைப் பாடினார் பாரதியார்... கையெழுத்தாகி அன்றுபிற்பகல் மூன்று மணிக்குள் அரவிந்தர், அய்யர், சீனிவாசாச்சாரியார், மற்றும் நாங்கள் எல்லோரும் பிரெஞ்சுப் போலீசாரிடம் பதிவு செய்து கொண்டோம்".[26]

இதுபோல் வந்த அனைத்து இடர்பாடுகளையும் உடனுக்குடன் போக்கி அனைவரையும் காத்த பெருமை பாரதியாருக்கு உண்டு.

இவற்றுக்கு மத்தியிலும் பாரதியார், அரவிந்தர், வ.வே.சு.ஐயர், ஸ்ரீநிவாசாச்சாரியார் போன்ற அன்பர்கள் மேற்கொண்ட இலக்கிய, பத்திரிகை முயற்சிகள் போற்றத்தக்கன. அன்னை போலத் தம்மை வருத்தித் துன்பம் தமக்காக்கி, இன்பம் உலகிற் காக்கிய அவர்களின் பணிகளால், மொழியும் வளம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

அரவிந்தர் குறிப்பில் பாரதியார்

அக்காலத்தில்,அரவிந்தரை அவரது இல்லத்தில் நாள்தோறும் மாலையில் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் பாரதியார். அந்தச் சந்திப்பின்போது ஸ்ரீநிவாசாச்சாரியாரும், வ.வே.சு.ஐயரும் பங்கேற்பது வழக்கம். அதனைப் பாரதியன்பர்கள் பலரும் ஏறத்தாழ ஒரேவண்ணம் பதிவு செய்திருக்கிறார்கள். பெரும்பாலும், புனைவுகளாகச் சொல்லப்பெறும் அரவிந்தர் - பாரதியார் சந்திப்புகள் குறித்து மேலும் அறிந்து கொள்ளவும், அரவிந்தர் பாரதியார் குறித்து எழுதிய பிற குறிப்புகளைத் தேடித்தொகுக்கவும் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் விளைவாகக் கிடைத்த செய்திகள் தகுந்த சான்றுகளுடன் பின்வருமாறு தரப்பெறுகின்றன. அவற்றின் ஆங்கில மூலங்கள் பின்னிணைப்பில் தரப்பெற்றுள்ளன.

வருவதை முன் உணர்ந்த அரவிந்தர்

ஒவ்வொரு நாளும் மாலைப்பொழுதில் பாரதியார் அரவிந்தர் சந்திப்புத் தொடர்ந்து நிகழ்ந்திருக்கின்றது. பெரும்பாலும் அச்சந்திப்புகளின்போது ஸ்ரீநிவாசாச்சாரியாரும் பங்கேற்றிருக் கின்றார். வ.வே.சு.ஐயரும் பங்கேற்றதுண்டு. யோக ஆய்வில் தம்மைப் பெரிதும் ஈடுபடுத்திக்கொண்ட அரவிந்தர், அவர்கள் வருவது குறித்துத் தொலையுணர்வின் மூலம் நடக்கவிருப்பதைப் பதிவு செய்து சரிபார்க்கும் யோகக்குறிப்புகளில் குறித்து வைத்துள்ளார்.

அக்குறிப்புகளில், Bh என்பது பாரதியாரைக்குறிப்பதாகவும், S.என்பது ஸ்ரீநிவாசாச்சாரியாரைக் குறிப்பதாகவும் A என்பது (வ.வே.சு.) ஐயரைக் குறிப்பதாகவும் அமைகின்றன.

“1.இன்று மாலையில் S. (ஸ்ரீநிவாசாச்சாரி), Bh(பாரதி) மற்றும் A ((வ.வே.சு)ஐயர்) வருவார்கள் எனும் கருத்தோட்டம் இருந்தது. ஓரளவு (ஐயர்) பற்றிய கருத்து மற்றவர்களைவிடச் சற்றுக் குறைவாகவும் பொதுவானதாகவும் இருந்தது; நிறைவேறியது.”[28]
(காண்க. பின்னிணைப்பு-9)

அரவிந்தர் தமிழ் பயின்றார்

அரவிந்தர் வங்காளத்தில் இருந்தபோதே தமிழ் கற்க முயற்சி செய்திருக்கின்றார். அதன்பின்னர் புதுவைக்கு வந்ததும் இலக்கிய, இலக்கணப்பாடங்களைப் பாரதியார் வாயிலாகக் கற்கத் தொடங்கியிருக்கின்றார். இதனை, "புகழ்பெற்ற புரட்சியாளரும், கவிஞருமான சுப்பிரமணிய பாரதியின் உதவியுடன், ஸ்ரீஅரவிந்தர் ஒரு சில வருடங்களுக்குத் தமிழ் பயின்றார்"[29] என்னும் குறிப்பு உறுதிப்படுத்துகின்றது.

பாரதியார் தமிழின் மிகச்சிறந்த கவிதைகளை, இலக்கியப் படைப்புகளை அரவிந்தருக்கு அறிமுகப்படுத்தியிருக்கின்றார். அந்த அடிப்படையில் அவர் கண்டு கற்றுணர்ந்த அருந்தமிழ்ச் சான்றோர்களைப் பற்றித் தமது எழுத்துகளில் இனிதே பதிவு செய்துள்ளார், அரவிந்தர்.

அரவிந்தர் படித்த பாஞ்சாலி சபதப் பாடல்

அவற்றுள், பாரதியார் தாம் எழுதிய படைப்புகளையும் அரவிந்தருக்குப் படித்துக் காட்டுவதோடு, அவர் படித்துப் பார்ப்பதற்கும் தமது கைப்பிரதிகளை அவரிடம் கொடுப்பதும் வழக்கம்.அந்த வரிசையில் பாரதியாரின் உன்னதப் படைப்புகளுள் ஒன்றான பாஞ்சாலி சபதத்தை எழுதிமுடித்த கையோடு அவர் அரவிந்தரிடம் அளித்திருக்கின்றார். அவற்றைப் பாரதியார் அருகில் இல்லாத சமயம் அரவிந்தர் எடுத்துப் படிக்க முயற்சி செய்திருக்கின்றார். யோகநெறியில், மகாசரஸ்வதியின் நிலையில் பாஷா சக்தியின் துணையோடு அதனைப் படிக்க முயன்ற தகவலைப் பின்வரும் குறிப்பு இனிது விளங்க வைக்கின்றது.

"பாஷா (Bhasha). Bh's (பாரதியினுடைய) பாஞ்சாலி சபதம் எடுத்துக் கொள்ளப்பட்டது. நேற்று அகராதியின் துணைகொண்டு ஒப்புநோக்காமலேயே முதல் பாடலின் சில சொற்களை மட்டும் புரிந்து கொள்ள முடிந்தது. ஒட்டுமொத்தச் சொற்களின் பொருளையும் இணைத்து உணர்ந்து கொள்ள இயலவில்லை. இன்று இரண்டாவது பாடலில், சந்தி முதலான தமிழுக்கே யுரிய வழியில் எழுதும் முறையினைப் பயிலும்போது தோன்றிய பிரச்சினைகளையும் மற்றும் இலக்கணப் பிரச்சினைகளையும் மெய்யறிவினால் வெற்றிகொள்ளமுடிந்தது. ஆனால், முன்னர் அறிந்திராத சொற்களின் பொருளைச் சரியாகப் புரிந்துகொள்ள உறுதுணையாக இருந்த பாஷாசக்தி, வழக்கமாக, மறுபடியும்

செயற்பாட்டிற்கு வந்தேகும் நிலை இன்னமும் திரும்பவில்லை"[30] (காண்க. பின்னிணைப்பு-10)

இக்குறிப்பில் சுட்டப்பெறும் பாஞ்சாலி சபதப்பாடலானது,

"ஓமெனப் பெரியோர்கள் – என்றும்
ஓதுவ தாய்வினை மோதுவதாய்த்
தீமைகள் மாய்ப்பதுவாய் – துயர்
தேய்ப்பது வாய்நலம் வாய்ப்பதுவாய்
நாமமு முருவுமற்றே – மனம்
நாடரி தாய்ப்புந்தி தேடரிதாய்
ஆமெனும் பொருளனைத்தாய் – வெறும்
அறிவுட னாநந்த வியல்புடைத்தாய்
நின்றிடும் பிரமமென்பார் – அந்த
நிர்மலப் பொருளினை நினைத்திடுவேன்
நன்று செய் தவம், யோகம் – சிவ
ஞானமும் பக்தியு நணுகிடவே
வென்றிகொள் சிவசக்தி – எனை
மேவுற வேயிருள் சாவுறவே
இன்றமிழ் நூலிதுதான் – புகழ்
ஏய்ந்தினி தாயென்று மிலகிடவே"[31]

என்பதாக அமைகின்றது. வழக்கமாகக் கடவுள் வாழ்த்தாக இடம்பெறும் விநாயகர் துதிக்குப் பதிலாக, பாரதியார் பிரமதுதி பாடியிருப்பது இங்குக் கருதத் தக்கது.

1912இல், அரவிந்தர் புதுவைக்கு வந்த சிறிதுகாலத்தில் நிகழ்வுற்ற சம்பவம் இது எனலாம். தொடர் யோகமுயற்சிகளின் விளைவால், இந்நிகழ்வின் தொடர்ச்சியேபோல், அரவிந்தர் அனுபவப் பதிவாய் எழுதும் மற்றொரு குறிப்பு-

"சமாதிநிலையின் கருத்தும் காட்சியும் நினைவிற்குக் கொண்டு வரப்படவேண்டுமென்றால் விஞ்ஞானமய நினைவு கண்டிப்பாகச் செயற்படவேண்டும். இந்த உயர்நிலை நினைவு விரிவாகிக் கொண்டு வருகிறது. ஆனால், அறிவு ஜீவன் தளத்தின் மீது விரிவாகிக்கொண்டு வருகிறது.

இதயத்திற்குக் கொண்டுசெல்லாமலேயே நிரந்தரமாக இப்போது விஷயங்கள் மனப்பாடமாய் நினைவிற்கு வருகின்றன. முன்பெல்லாம் ஒருநாள் கூட நினைவில் வைத்துக்கொள்ள முடியாதவற்றை, இப்போது கவனமாக மனப்பாடம் செய்து விட்டால் பதிவாகிவிடுகிறது.

சான்றாக, கடினமான, அகராதியைத் துணைக் கொள்ளாமல் பொருள் புரிந்து கொள்ள முடியாத பாரதியினுடைய தமிழ்க் கவிதையின் முதற்பாடல்."[32] (காண்க. பின்னிணைப்பு-11)

யோகநெறியில்...

யோகநெறிகளைக் கற்றுக்கொடுக்கும் ஆசானாய் அரவிந்தர் திகழ்ந்திருக்கின்றார். முழுமையான சரணாகதிநிலையினைத் தம் புதுவைப் படைப்புகளில் பாரதியார் எழுதுவதற்குக் காரணமாய சூழலை முன்னிறுத்தும் இக்குறிப்பு, பாரதியாருடன் பங்கேற்ற நொளினி, வ.ரா. பார்த்தசாரதி ஆகியோர் பற்றியும் குறிப்பிடுகிறது.

"P (பார்த்தசாரதி) யோகாவைச் சுதந்திரமாகக் கற்றுக் கொள்வதில் S (சௌரின்) யோகத்தின் விளைவுகளின் செயல் முறைகளில் வெற்றி. Bh. (பாரதி) அவரை மிகவும் ஆற்றல் மிகுந்த சரணாகதியில் மேலும் செலுத்துதல். N(நொளினி) மற்றும் R (ராமஸ்வாமி) வெற்றி கிடைத்துள்ளது.[33] (காண்க. பின்னிணைப்பு-12)

நோய் நீக்கும் பணியில்

"நோயைக் குணப்படுத்தும் சக்தி மேலும் வளர்ந்து வருகிறது. தனது சிரிய முயற்சியினாலும், தனி கவனிப்பினாலும் கூட பாரதியால் குணப்படுத்த முடியாதுபோன மனப்பிறழ்ச்சி யுற்றிருந்த நோயாளியைத் தொலைவிலிருந்தபடியே, ஓரளவு உறுதிப்பாட்டைச் செலுத்தி நம்மால் இரண்டு நாட்களில் குணப்படுத்த முடிந்துள்ளது."[34] (காண்க. பின்னிணைப்பு-13)

அரவிந்தர் பாரதியார் இணைவும் பிரிவும்

தேசியப்பெருநோக்கம் அரவிந்தரையும் பாரதியாரையும் இணைத்து ஒருமுகப்படுத்தியது. இவர்களோடு நாட்டுவிடுதலைப் பணியில் தலைநின்ற வ.வே.சு.ஐயர், ஸ்ரீநிவாசாச்சாரியார் போன்றோர் புதுவை மண்ணில் நிலை கொண்டு தீவிரமாக இயங்கினர். இவர்கள் அனைவரும் கூடி ஆங்கில அரசிற்கெதிராகச் சதியாலோசனைகள் செய்து வெடிகுண்டுகள் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டதாகவே ஆங்கில ஒற்றர்கள் சித்திரித்துக் காட்டிப் பிழைப்பு நடத்தி வந்தனர். இதனால் இவர்களது சாதாரணச் சந்திப்புக்கூடத் தீவிரக் கண்காணிப்புக்குள்ளாகியது. எனவே, மிகக்கடுமையான துன்பங்களை அவர்கள் சந்திக்க நேர்ந்தது.

இத்தனைக்கும் மத்தியில் கனலும் கவியுள்ளம் சோர்ந்து போகாதிருக்கப் பாரதியார், அரவிந்தரைச் சந்திப்பதையும், ஸ்ரீநிவாசாச்சாரியார் மற்றும் வ.வே.சு.ஐயரோடு உரையாடு வதையும், சுப்புரத்தினம் என்னும் பாரதிதாசன் உள்ளிட்ட புதுவை யன்பர்களோடு இலக்கிய விவாதங்கள் நடத்துவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். இதனால் உற்சாகமடைந்து தம்மைப் புதுப்பித்துக் கொள்ளவும் இயன்றது. ஆன்மிக ஈடுபாடும், வேத உபநிடதத் தேடல்களும் பாரதியாருக்குள் மிகுதற்கு, அரவிந்தர் எவ்வளவு காரணமோ, அந்த அளவிற்கு அரவிந்தருக்கு, அவர் தமிழ் கற்கவும், தமிழ்க் கலை, பக்தி இலக்கியம் போன்றவற்றில் தோய்வு ஏற்படுத்திக்கொள்ளவும் பாரதியார் காரணமாகினார்.

இப்படி ஒருவரையொருவர் நன்கு புரிந்து நட்புப் பூண்டு வந்த வேளையில் அரவிந்தர் முழுக்க யோகநெறியில் மூழ்கவும், பாரதியார் படைப்புத்துறையிலும், சமூகச்சீர்திருத்த முயற்சி களிலும் ஈடுபடவும் செய்தனர். இவர்களை ஒருமைப்படுத்திவந்த தேசியப் போராட்ட உணர்ச்சிப் பெருக்கைக் கிட்டத்தட்ட ஒன்று மில்லாமல் செய்வதற்கு எத்தனை பெரிய முயற்சிகள் எடுக்க முடியுமோ அத்தனை பெரு முயற்சிகளையும் எடுத்து ஒடுக்கித் தேசத்தைத் தமது கட்டுப்பாட்டிற்குள் ஆங்கிலஅரசு கொண்டு வந்த பிறகு தீவிரவாதப்பிரிவினர் மிகுதியும் சோர்ந்து விட்ட -தோடு, வெவ்வேறு துறைகளிலும் இறங்கிவிட்டனர்.

எனினும், பாரதியார் அடிப்படை நிலையினின்று மாறவே இல்லை. அரவிந்தர் நட்புறவில் விடுதலையின் ஆழத்தை இன்னும் தீவிரமாக உணர்ந்தார். அவருக்குள் தேசவிடுதலை, இன்னும் விரிவுற்று ஆன்ம விடுதலையாகப் பரிமாணம் பெற்றது. புதிய சிந்தனைகளும், கவியோட்டங்களும் பாரதியாருக்குள் கனன்றன. செயலற்றுப் புதுவை மண்ணில் நிலை பெற விரும்பாத அவர், விரைவில் அங்கிருந்து தமிழகம் திரும்பப் பெரிதும் விரும்பினார். அரவிந்தரோ, புதுவையையே நிரந்தர வாழ்விடமாக்கிக் கொண்டு தமது ஒடுக்கத்தில் ஐக்கியமானார்.

வி.கபாலி சாஸ்திரியார் குறிப்பில்

இந்த நிலையில், மௌனம், தவம்,யோகம் எனத் தனிமையில் தம்மை நிறைத்துக் கொண்ட அரவிந்தரைச் சந்திப்பதைப் பாரதியார்முதலானோர் பெரிதும் தவிர்க்க வேண்டிய சூழல் வந்துவிடுகின்றது. அந்த வேளையில் வ.ரா.போல், அரவிந்தரைக் காண விரும்பி வந்தவர்களைத் தாமே முன்னின்று அழைத்துச் செல்வதைத் தவிர்த்துத் தம் நண்பர்களிடம் அப்பொறுப்பினை ஒப்படைத்து விடுகிறார், பாரதியார்.

இவ்வாறான அனுபவம் ஒன்றைப் பாரதியாருடன் தாம் நடத்திய உரையாடலை முன்வைத்துப் பின்வருமாறு வி.சுபாலி சாஸ்திரி என்பார் சித்திரிக்கின்றார்.

புதுவை பாரதியார்இல்லத்தில் அவரைச் சந்தித்து சாஸ்திரியார் பேசிக் கொண்டிருந்தபோது, "பேச்சு அரவிந்த கோஷை (அப்பெயரில்தான் அவரை அப்போது எல்லாரும் அறிவர்) நோக்கித் திரும்பியது.

"அவர் எங்கே வசிக்கிறார்?" நான் கேட்டேன்.

"அதோ அங்கே" என்று என்று ஐரோப்பியர் வீடுகளிருந்த திசைப்பக்கம் சுட்டிக் காண்பித்தார்.

"எனக்கு அவரைப் பார்க்கவேண்டும்!"

"ஆனால், இப்பொழுதெல்லாம் அவர் மக்களைப் பார்ப்பதற்கு விரும்புவதே இல்லை. நானே முன்போல் அவரை அடிக்கடி பார்ப்பதில்லை. சரி, எப்படியும் நான் பார்க்கிறேன்."

நான் அவருடைய புண்ணிய தரிசனத்திற்காகவே வந்திருக்கிறேன். தயவு செய்து தெரியப்படுத்துங்கள் என்று நான் உணர்ச்சிவசப்பட்டவன்போல் அவரை வற்புறுத்தினேன்..." பாரதியார், நாகஸ்வாமி - அப்போது ஸ்ரீஅரவிந்தருக்குப் பணி விடை செய்து வந்தவர் - என்பவருக்குத் தமக்கே உரிய நகைச் சுவையுடன் ஒரு சிட்டு எழுதிக் கொடுத்தார். சக்திகுமார் என்று அதில் கையெழுத்திட்டார். பிறகு ஸ்ரீஅரவிந்தர் வசித்து வந்த இல்லத்திற்கு வழிகாட்ட ஓர் ஆளையும் என்னோடு அனுப்பி வைத்தார்."[35]

'தமக்கே உரிய நகைச்சுவையுடன் ஒரு சீட்டில் எழுதிக் கொடுத்தார்' என்று சொல்லும் சாஸ்திரியார் அக்குறிப்பு இன்ன தெனக் காட்டத் தவறி விட்டார். ஆயினும் அவர் நகைச்சுவை என்று குறிப்பிடுவதையும், வ.ரா. வந்தபோது, ஸ்ரீநிவாசாச் சாரியாரிடம் "இவர் அந்த முரடனைப் பார்க்க வேண்டுமாம்" என்று கூறுவதையும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அவர் எந்த அளவிற்கு அரவிந்தரிடம் நட்புரிமை கொண்டிருந்தார் என்பதும் புலனாகின்றது. மேலும், இக்குறிப்பின் மூலம் 'சக்தி குமார்' என்னும் ஒரு புனைபெயரும் பாரதியாருக்கு உண்டு என்பதையும், அவர் அரவிந்தரின் நெருங்கிய நட்பிற்கு உரியவராகத் திகழ்ந்ததோடு அவரைச் சந்திக்க விரும்புவோரைத் தேர்வு செய்து அனுப்பும் பொறுப்பை அவரது நலன் அடிப்படையில் பாரதியார் மேற் கொண்டதையும் அறிந்து கொள்ள முடிகின்றது. இது குறித்து இன்னும் தேட வாய்ப்பிருக்கின்றது. இதனோடு ஒத்தமையும் இன்னொருவர் கருத்தையும் இங்குக் கவனத்தில் கொள்ளலாம்.

அமிர்தா குறிப்பில்

வ.ரா.வைப்போலவே, அரவிந்தரின் தரிசனத்துக்காகக் காத்திருந்த அமுதன் (அமிர்தா) என்கிற ஆராவமுதய்யங்காரும் பாரதியிடம் தம்முடைய உள்ளத்தைப் பறிகொடுத்திருக்கின்றார். பாரதியார் மூலமாகவே அரவிந்தரின் வட்டத்திற்குள் நுழைகின்றார்.

"என் ஒவ்வொரு செயலும், என் வாழ்க்கையில் ஒவ்வொரு நிகழ்ச்சியும் நான் என்னை அறியாது செய்யும் யக்ஞத்தில் ஆஹுதி போன்றே ஆயின. ஸ்ரீ அரவிந்தரைத் தஞ்சமடைவதற்கு முன் உள்ளத்தில் நான் விரிவைப் பெறவும், பழைய ஸமஸ்காரங் களாகிய என் தளைகளை அவிழ்க்கவும், என் எண்ணங்களுக்கு ஒரு தூய்மையையும், புதுமையையும் தரவும் பாரதியார் மிகவும் உதவினார். தம்முடைய சொல்லாலும், செயலாலும், வாழும் வாழ்க்கையாலும்.... எனக்குப் பாரதியாரிடத்து இன்னதெனச் சொல்லி விளங்கிக்கொள்ள முடியாத ஓர் பெருங்கிளர்ச்சி ஏற்பட்டு விட்டது" [36] என்பது அவர்தம் குறிப்பு.

பாரதிதாசன் கவிதையில்...

இவ்வாறான சூழலில் பாரதியார் அரவிந்தரைச் சந்திப்பதைத் தவிர்த்ததற்கான காரணங்களைப் பாரதிதாசன் தமது கவிதை யொன்றில் குறிப்பிடுகின்றார். அதனை அடியொற்றிச் சில ஆய்வாளர்கள் சுட்டுவதையும் பின்வரக் காணலாம். "சமத்துவ உள்ளம்" என்னும் தலைப்பில் பாரதிதாசன் எழுதிய கவிதை வரிகளில்,

'யானும் கோஷும் பேசி யிருந்தோம்
என்றார் பாரதி யார்என் னிடத்தில்
வெளியில் சென்று வீடு வந்தவர்
மேலுடை கழற்றவும் இல்லை. மேலும்
ஐயர் கண்களில் அழகு குறைந்ததால்
அங்கு நடந்ததைக் கேட்டேன் ஐயரை.
"எல்லாரும் சமம் இல்லையா?" என்றார்
"என்ன நடந்த"தென்றேன். ஐயர்
"ஒன்றுமில்லை. உட்கார்" என்றார்.
உட்கார்ந் திட்டோம் ஐயரும் நானும்.
'யானும் கோஷும் பேசியிருக்கையில்
எவனோ கோஷின் காலில் விழுந்தான்.
நீரும் இவ்விதம் ஊரார் வணங்கச்

சீரும் சிறப்பும் தேடலாமே!
என்று சொன்னார் கோஷ் என்னிடத்தில்
மரியாதை எனல் உண்டு
பெரியார் சிறியார் இல்லை!" என்றாரே.[37]

வ.சுப்பையா தரும் தகவல்

இதேதொனியில், வ.சுப்பையா அவர்களின் பதிவும் அமைவதைக்காணலாம்.

ஒருநாள் பாரதி அவரைப் பார்க்கச் சென்றிருந்தபோது, அரவிந்தரைப் பார்க்க வந்திருந்த சிலர் அவரது காலில் வீழ்ந்து கும்பிடுவதை முதல்முறையாகப் பார்த்தார். பாரதிக்கு இந்தக் காட்சி சகிக்கவில்லை. எரிச்சல்பட்டார். அரவிந்தரைப் பார்த்து "இது என்ன உங்கள் காலில் விழுந்து கும்பிடுவதை நீங்கள் எப்படி அனுமதிக்கிறீர். நாம் அடிமை உணர்வை ஒழிக்க அல்லவா வேண்டும் என்கிறோம் இது என்ன?''என்று பாரதி வினவ, அரவிந்தர் பாரதியைப் பார்த்து, "அவர்கள் என்னை வணங்க வில்லை. அவர்கள் உள்ளத்தில் ஆண்டவனை எண்ணிச் செய்கிறார்கள்'' என்றாராம். பாரதி இந்த விளக்கத்தை ஏற்கத் தயாரில்லை. உடனே. அங்கிருந்து எழுந்து சென்றுவிட்டார். "அதுமுதல் பாரதி அரவிந்தரைச் சந்திப்பதில்லை" என்று அறிந்த நண்பர்கள் கூறினார்கள்."[38]

க.கைலாசபதியின் கருத்து

இதனை அடியொற்றி, "பாரதி அரவிந்தரோடு உரையாடிக் கொண்டிருக்கிறார். அவ்வேளை வங்கத்திலிருந்து புதுவை வந்த சில தேசபக்தர்கள் தமது மாநிலத்தின் மைந்தரான அரவிந்தரின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி எழுந்ததைப் பற்றிப் பின்னர் பாரதி, "நீங்கள் அடிமைத்தனத்தைத் துடைத்தெறியப் போராடும் தேசபக்தர். இவ்வாறு உங்கள் காலில் விழுந்து வணங்கும் பழைய அடிமைத் தனத்தை அனுமதிக்கலாமா?" என்று கேட்டாராம். அரவிந்தரோ, "அது தங்கள் பண்பாடு" என்று அதை நியாயப்படுத்தினார். இதை பாரதியால் ஏற்க முடியவில்லை. அவர் தன் வாழ்வில் பழைய பண்பாடுகளின் நல்ல அம்சங்களை ஏற்றிருந்த அதேவேளை, அடிமைத்தனத்தைப் பேணும் மிச்ச சொச்சங்களை முற்றாகவே கைவிட்டவராதலால் இதன் பின்னர், பொது இடங்களிலன்றி ஆசிரமத்தில் சென்று அரவிந்தரைச் சந்திப்பதைத் தவிர்த்துக் கொண்டார் என்று க. கைலாசபதி

குறிப்பிட்டதாக"[36] ந.இரவீந்திரன் எழுதுகின்றார்.

இந்நிகழ்வு பற்றிப் பாரதியாரிடமோ, செல்லம்மாள்பாரதி, சகுந்தலாபாரதி, தங்கம்மாள் பாரதி ஆகியோர் நூல்களில் பதிவுகள் ஏதுங்காணோம். ஆனால், பாரதியார் புதுவையிலிருந்து கிளம்பியபோது, அரவிந்தரைச் சந்தித்து விடைபெற்ற நிகழ்வைச் சகுந்தலா பாரதி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

அரவிந்தர் – பாரதியார் கடைசிச்சந்திப்பு

"ஸ்ரீஅரவிந்தரிடம் என் தந்தை விடைபெறுவதற்காகச் சென்றார். நாங்களும் போயிருந்தோம். அந்நாளில் ஸ்ரீ அரவிந்தரின் ஆச்ரமத்திற்கு இப்போதுள்ளது போன்ற கட்டுக்காவல் கிடையாது. எங்களுக்கு விருப்பமானபோதெல்லாம் ஸ்ரீஅரவிந்தரின் மாளிகைக்குச் செல்வதுண்டு. அங்கு ஸ்ரீ அரவிந்தரும், என் தந்தையும், ஸ்ரீவ.வே.சு.ஐயரும், ஸ்ரீஸ்ரீநிவாசாச்சாரியாரும் சம்ஸ்கிருதத்தில் ஏதேதோ பல விஷயங்களைப் பற்றிச் சம்பாஷிப்பார்கள். குழந்தைகளாகிய நாங்கள் சிறிதுநேரம் கேட்டிருப்போம். பின்பு அவரது மாளிகையைச் சூழ்ந்த விசாலமான தோட்டத்தில் விளையாடியும், ஸ்ரீ அரவிந்தருடன் வசித்து வந்த அவரது சிஷ்யர்களுடன் பேசியும் சில நேரம் கழிப்போம்... கடைசி முறையாக, என் தந்தை ஸ்ரீ அரவிந்தரிடம் விடைபெறப் போன போது, அவர்கள் தனியறையில் சம்பாஷணை நடத்தியதால் அதன் விவரம் எனக்குத் தெரியாது. ஆனால் விடைபெற்றுத் திரும்புகையில் ஸ்ரீஅரவிந்தரின் சாந்தி நிறைந்த ஞானவொளி வீசும் கண்கள் கண்ணீரால் மங்கியிருந்தன. என் தந்தையின் வீர விழிகளில் கண்ணீர் ததும்பி நின்றது. அது மட்டும்தான் நான் கண்டேன். ஸ்ரீ அரவிந்தரது ஆசீர்வாதத்தைப் பெற்று வீடு திரும்பினோம். அவரது சீடர்கள் எங்களுடன் வீடு மட்டும் வந்தார்கள். நண்பர்கள் யாவரையும் பிரிய மனமில்லாமல் பிரிந்து புதுவையிலிருந்து புறப்பட்டோம்."[37]

இதன் பின்னர் பாரதியார் - அரவிந்தர் சந்திப்பு நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. சென்னையில் திரும்பவும் சென்று பாரதியார் வாழ்ந்தபோதும் கூட, அரவிந்தரைச் சந்தித்ததாகவோ, அரவிந்தருடன் வாழ்ந்த பாரதிநண்பர்களுடன் தொடர்பு கொண்டதாகவோ தகவல்கள் ஏதும் கிடைத்திடவில்லை.

குறுகிய காலத்தில் பாரதியார் மறைந்த காலக்கட்டத்தில் அரவிந்தர் ஏதேனும் எழுதிய, அல்லது நண்பர்களிடம் குறிப்பிட்ட

செய்திகள் ஏதும் இருந்திருக்கக்கூடும். அவையும் தேடலுக்குரியன.

நிறைவாக...

இவ்வாறாக, அரவிந்தரைத் தொடர்ந்து தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தி வந்ததோடு, அவரைப் புதுச்சேரிக்கு வரவழைப்பதிலிருந்து அவர் இங்கு நிரந்தரமாகத் தங்கும் வரையிலும் தமது புதுவைவாசத்தின்போது உறுதுணையாக என்னென்ன செய்யமுடியுமோ அனைத்தையும் தமது சக்திக்கு மீறிச் செய்து சிறந்துநின்றவர் பாரதியார். அந்த வகையில், தம்மொத்த புதுவையன்பர்களின் ஆதரவோடு அவர் மேற்கொண்ட பணிகள் பலவாகும்.

அக்காலக்கட்டங்களில், "மெல்லத் தமிழ் இனிச் சாகும்" என்று படித்த பேதைகள் அப்போது ஆரூடம் மொழிந்ததைப் பொய்யாக்கப் பாரதியார் மேற்கொண்ட முயற்சிகள் பலவாகும். தனிமைச்சிறையில் உடனுறை தோழராய் வாய்த்த அரவிந்தர் துணைகொண்டு தமது வேத, ஞான, யோக, இலக்கியத் தேடல்களைப் பாரதியார் நிகழ்த்தியதோடு அவருக்குத் தமிழ் கற்பித்தும், அருந்தமிழ்ச் சான்றோர் பலரை அறிமுகப்படுத்தியும் வைத்திருக்கின்றார். அவற்றைச் சிறப்பாக உள்வாங்கிய அரவிந்தர் தமது யோக, இலக்கிய அனுபவங்களை இணைத்துத் தமது எழுத்துகளில் பதிவுசெய்திருப்பதைப் பின்வரும் பகுதிகளில் காணலாம்.

தற்பொழுது கிடைத்திருக்கும் செய்திகளின் அடிப்படையில் அமையும் இந்நூலை அடியொற்றிப் பின்னர் எழுத இருக்கின்ற நூலில் இன்னும் விரிவான நிலையில் அரவிந்தர் - பாரதியார் தொடர்பு பற்றிக் காணலாம்.

சான்றெண்விளக்கம்

1. சீனி. விசுவநாதன், கால வரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள்-3, பக்.143. ப.167.
2. மேலது, ப.206.
3. மேலது. ப.724.
4. மேலது.
5. சீனி. விசுவநாதன், மகாகவி பாரதி வரலாறு, ப.423.
6. சீனி. விசுவநாதன், கால வரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள்-3, பக்.143. ப.167.
7. செல்லம்மாபாரதி, பாரதி சரித்திரம், பக்.44-45.
8. ஸ்ரீ வி.எஸ்.குஞ்சிதபாதம், ஸ்வாமி தேவி வசந்தானந்தா (தொ.ஆ),புதுவையில் பாரதியார் நான் கண்டதும் கேட்டதும், பக்.34-35.
9. செல்லம்மாபாரதி, பாரதி சரித்திரம், பக்.44-45.
10. முனைவர் ச.சுப்புரத்தினம்,மே.கா. பாரதியாரும், அரவிந்தரும், ப.25.
11. வ.ரா., மகாகவி பாரதியார், பக்.60-61.
12. மேலது., ப.11.
13. மன்னர்மன்னன், பாட்டுப்பறவைகள், பக்.
14. ரா.அ. பத்மநாபன்,(தொ.ஆ)., பாரதியைப்பற்றி நண்பர்கள்,
    என். நாகசாமி, பாரதியார் -ஒருசொற்சித்திரம், பக். 144-145.
15. மேலது , ப.145.
16. சகுந்தலா பாரதி, என் தந்தை, ப.52.
17. மேலது.
18. ச.மகாலிங்கம், ஸ்ரீஅரவிந்தர்,பக்.213-216.
19. ரா.அ.பத்மநாபன்,(தொ.ஆ).,பாரதியைப்பற்றி நண்பர்கள், டி.விஜயராகவாச்சாரியார், நான் கண்ட பாரதி, ப.130.
20. Letters of Historical Interest, Pg. 175-176.
21. ரா.அ.பத்மநாபன், பாரதி புதையல் பெருந்திரட்டு, ப.565.
22. சம்பந்தம். புதுவையில் பாரதி, ப. .
24. வ.ரா., மகாகவி பாரதியார், பக்.2
25. மேலது, பக்.56-57.

26. மேலது, பக்.56-57.
27. ச.மகாலிங்கம், ஸ்ரீ அரவிந்தர், பக்.56-57.
28. Sri Aurobindo, Record of yoga, p.122
29. ஸ்ரீ அரவிந்தர், பாரதத்தின் மறுபிறப்பு, ப.116.
30. பாரதியார், பாரதியார் கவிதைகள்.பாஞ்சாலி சபதம் - பிரம துதி)
31 Sri Aurobindo, Record of yoga, p.122. 26 Nov.to 31 Dec. 1912.
32. பாரதியார் கவிதைகள், பாஞ்சாலி சபதம்
33. Sri Aurobindo, Record of yoga, ps.187-188, 1-31 Jan,1913.
34. Sri Aurobindo, Record of yoga, ps.261-262, 17 June, 1913.
35. Sri Aurobindo, Record of yoga, p.280, 6 July1913.
36. தி.வி. கபாலி சாஸ்திரியார். பாரதியாருடன் எனது முதல் சந்திப்பு, அறிஞர்கள் பார்வையில் பாரதி, பக்.52-53.
37. பாரதிதாசன், சு.பா. கவிதா மண்டலம், ஆவணி, 1935.
38. அமுதன், ஸ்ரீஅரவிந்த தரிசனம்,ப.4.
39. மன்னர்மன்னன், பாட்டுப்பறவைகள், ப.245.
40. வ.சுப்பையா,புதுவையில் பாரதி சில நினைவுகள், தாமரை பாரதி நூற்றாண்டுச் சிறப்பிதழ், ப.122.
41. ந.இரவீந்திரன், இந்துத்துவ... பாரதியின் மெய்ஞ்ஞானம், ப.183.
42. சகுந்தலாபாரதி, என் தந்தை, பக்.51-52.



அரவிந்தர் போற்றிய அருந்தமிழ்க் கலைகள்

ஒரு தேசத்தின், நாகரிகத்தின் உரைகல் எனத் தகும் இலக்கியத்திற்கு இருக்கும் சிறப்பினைப் போலவே அதன் கலை யாக்கங்களுக்கும் உண்டு. பரந்து விரிந்த பாரத தேசத்தின் கலைகளில் வட, கிழக்கு, மேற்கு இந்தியக் கலைகளில் இருந்து மாறுபட்டுத் தனித் தன்மையுடனான நிலையில் தென்னிந்திய, குறிப்பாகத் தமிழர்தம் கலைகள் திகழ்கின்றன. அவற்றின் தன்மையை நன்குணர்ந்தவராக அரவிந்தர் திகழ்ந்திருக்கின்றார்.

அதுகுறித்துத் தமது கருத்துகளை, ஸ்ரீ ஓ.ஸி. கங்கோலி என்பவர் எழுதியுள்ள தென் இந்திய செப்புப்படிமங்கள் (South Indian Bronzes) என்னும் நூல் பற்றி எழுதும்போது பின்வருமாறு அரவிந்தர் எழுதுகின்றார்.

" ...ஸ்ரீகங்கோலியின் நூல் தென் இந்தியாவின் கலைப் படைப்பின் ஒரு பகுதியான அதன் செப்புப்படிமங்களின் - பெரும்பாலும் சைவ சமயத்தெய்வங்கள், அடியார்கள் இவர்களின் வடிவங்கள் - சுமார் நூறு நிழற்படங்களை நமக்கு அளிக்கின்றது. அவற்றின் விளக்கமாக அமைந்த ஐந்து அத்தியாயங்கள் நூலின் முற்பகுதியில் உள்ளன"[1]

பக்தியின் மூர்த்தங்கள்

எந்நாட்டவர்க்கும் இறைவனைத் தென்னாட்டில் சிவன் என்று போற்றிய சமயம் சைவமாகும். பக்தியின் உன்னதவடிவங்களாக இறைவனின் திருவுருக்களைச் செம்பில் வடித்துப்போற்றி வழிபட்டவர்கள் சைவர்கள். அவை இறைவனின் திருவுருக்கள் என்பதைவிடவும், பக்தியின் மூர்த்தங்கள் என்பதாகவே அரவிந்தர் பார்க்கின்றார். வைணவர்கள் சொல்லில் செதுக்கிய பக்திப் பனுவல்களும், சைவர்கள் செம்பில் வார்த்த பக்திப் படிமங்களும் அரவிந்தர் பார்வையில் நேர்கோட்டில் நிற்கின்றன. அரவிந்தர் எழுதுகின்றார்-

"படிமங்கள் பெரும்பாலும் சைவச்சார்பாக இருக்கக் காரணம் இந்தியா முழுவதிலும் வைணவம் சிறந்த, ஆழமான, உணர்ச்சிப் பெருக்குள்ள கவிதையை வழங்கியுள்ளதுபோல, சைவம் உன்னதமான குறிப்புப்பொருள் பொதிந்த படிமங்களை ஏராளமாகப் படைத்துள்ளது... ஸ்ரீ கங்கோலி இந்நூலில் சேகரித்துத் தந்துள்ள 94 படங்களும் தென் இந்தியாவின் செப்புப் படிமங்களின் எல்லாவகைகளையும் விளக்குகின்றன. முதலில் காலசம்ஹாரரும் சைவக் கலையின் சிறப்பு அம்சமான நடராஜச் சிலைகளும் உள்ளன. நடராஜ படிமங்களில் பல வகைகள் உள்ளன. புகழ்பெற்ற சைவ அடியார்களின் அழகொழுகும் உருவங்களும் சில இருக்கின்றன. வைணவக் கலையின் எடுத்துக் காட்டுகளும் ஒரு சில தரப்பட்டுள்ளன... இவை பக்தர்களின் வடிவங் களல்ல. பக்தியின் மூர்த்தங்களேயாகும்"[2]

பக்திப் பாடல்களின் செப்புப் பிரதிபலிப்பாகவே...

பற்றற்ற அன்பின் பரவசவெளிப்பாடாகத் திகழும் பக்திக்குத் தமிழர்கள் கொடுத்த திருவுருக்கள், கற்செதுக்கல்களில், செப்புப் படிவங்களில் உள்ளார்ந்து விளங்கும் இறைக்கோலங்கள் என்பது அரவிந்தர் கருத்து. குறிப்பாக, அத்திருவுருவங்களில் துலங்கும் இசைத்தன்மை, அதன் வேர்த்தளமாக அமைந்த உயிர்ப்பு, அதன் ஈர்ப்பு, பரிபூரணப் பேரமைதி, நிலைத்த பேராற்றல் அனைத்தும் பொலியத் தோன்றும் பாங்கை நன்கு உணர்ந்திருக்கின்றார். ஆழ்வார்களும், நாயன்மார்களும் பாக்களில் உணர்த்திய பக்திமையைச் செம்பில் வார்த்த சிற்பங்களே இச்சிலா வடிவங்கள் என்பது அரவிந்தர் முடிபு.

இதன் உட்பொருள் அறியாமல் வடிவஆராய்ச்சிகளில், தொழில் மற்றும் கலைநுணுக்கங்கள் பற்றிக் காணும் மேற்கத்தியப்போக்கில் புலப்படாத ஆன்மிகத் தன்மையைப்பின்வருமாறு உணர்த்துகின்றார் -

"இந்த உயிருள்ள, வடிவெடுத்த பரவசம் இந்தியமனத்தைப் பற்றிக் கொண்டு அதன் ஜீவனின் வேர்க்கால்கள் வரை ஊடுருவிச் சென்ற போதிலும் மேல்நாட்டினர் இதுபோன்ற ஆன்மிகப் பண்பாட்டில் பயிற்சி பெறாத காரணத்தால் சிலாவடிவின் உட்பொருளை அநேகமாக முற்றிலும் தவற விட்டு விட்டு, பிரார்த்தனை செய்யும் ஒரு மனிதன் என்ற அளவிலேயே புரிந்து கொள்வார்கள்... இந்தச் செப்புப் படிமங்களுள் பெரும்பாலானவற்றை அவற்றிற்கு முந்திய காலத்தைச் சார்ந்த கம்பீரங்கொண்ட உன்னதக் கற்சிலைகளிலிருந்து பிரித்துக் காட்டும் ஒரு வேறுபாடு இருப்பதைக் காணலாம். வடிவத்திலுள்ள இசைத் தன்மை, அதன் ஆதாரசுருதியாக அமைந்த உயிர்த்துடிப்பு, வசீகரம், இவற்றிலேயே அந்த வேறுபாடு உள்ளது. இந்தியத் தத்துவ சாஸ்திர பரிபாஷையில் சொல்வதென்றால், பெரும்பாலான கலை பிரகிருதியின் ஆடலையே விளக்குகிறது. பௌத்தக்கலை, அதன் புனிதத் தன்மையைப் பிரதிபலிக்கும் சிறந்த படைப்புகளில், புருஷனின் பூரண அமைதி நிலையை விளக்குகிறது. இந்துக்கலை புருஷன் பிரகிருதி இரண்டையும் ஒரே வடிவில் இணைக்க முயல்கிறது. ஆனால், பழைய கற்சிலைகளில் உக்கிர கோலங்களில் கூட மூர்த்தியின் அற்புத சாந்தம், அமைதியான ஆற்றல், கம்பீரமான ஒருமுனைப்பாடு இவற்றையே படிமம் முழுவதும் பிரதானமாக எடுத்துக்காட்டும். இயக்கம் உள்ளடங்கி அமைதிக்குக் கீழ்பட்டுநிற்கும். இதே தன்மையை இச்செப்புப் படிமங்கள் சிலவற்றிலும் காண்கிறோம். குறிப்பாகக் கால சம்ஹாரசிவனின் அற்புதமான, கம்பீர, தன்னாட்சி கொண்ட சிந்தனா சக்தியிலும் ஆற்றலிலும் காண்கிறோம். ஆனால், பெரும்பாலும், இயக்கம் வெளிப்படையாகக் குறிக்கப்படாமலிருக்கும் போதும், உயிர்த்துடிப்பும் லயமுமே மேலோங்கி நிற்கின்றன. இக்கலையின் முதன்மை இடத்தை வகிக்கும் நடராஜ விக்கிரஹத்தின் கருப்பொருள் இதுவே. உள்ளே தன்னுள் ஆழ்ந்த ஒருமுனைப்பாடு, நிச்சலனமான சாந்தி, இன்பம். புறத்தே விஸ்வ இயக்கத்தின் ஆனந்த வெறி. உட்கார்ந்த கோலத்திலோ நின்ற கோலத்திலோ உள்ள பிற படிமங்களும் இந்த ஆனந்தநடனத்தின்

இடையே வரும் சிறு ஓய்வைக் குறிப்பவைகளாகவே தோற்று கின்றன. பொதுவாகச் சிந்தனையும், அமைதியும், தலையிலும் முகத்திலும் குவிந்துள்ளன. உடல் உள்ளாழ்ந்த இயக்கத்தின் துடிப்பை வெளியிடுகிறது. இந்தக் கலை இசை வெள்ளமாய்ப் பெருக்கெடுத்த ஆழ்வார் நாயன்மாரின் பக்திப் பாடல்களின் செப்புப் பிரதிபலிப்பாகவே தோற்றுகிறது..."[3]



மக்களின் வாழ்வுமையங்கள் – கோவில்கள்

அதேபோல, இந்தியக்கட்டடக்கலையின் சிறப்பியல்புகளை மேனாட்டமைப்பின் பின்னணியில் விளக்கும்போது. அதற்குச் சான்றாகத் தென்னிந்திய, குறிப்பாகத் திராவிட பாணியிலான கோயில் அமைப்புகளையே ஸ்ரீஅரவிந்தர் முன்வைக்கின்றார். அதன் தொன்மைக் காலம் தொடங்கிச் சமயகாலம் வரைக்கும் தன் பார்வையை விரிக்கிறார்.

"பண்டை இந்தியாவின் சமயச்சார்பற்ற கட்டிடங்களெல்லாம், அதன் அரண்மனைகள், அரசவைகள், நகரமன்றங்கள் முதலியன வெல்லாம் காலத்தால் நாசமாயின. பெரிய மலைக்கோயில்கள், குகைக்கோயில்களில் சிலவும், சமவெளிகளில் சிறந்து விளங்கிய பழைமையான கோயில்களில் ஒரு சிலவுமே எஞ்சியுள்ளன. மீதியுள்ளவையெல்லாம் பிற காலத்தைச் சேர்ந்த கோயில்கள்தாம். அவை ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் போன்ற கோயில் நகரங்கள் அல்லது யாத்திரைத் தலங்களிலும், மதுரை போன்ற பழைய காலத் தலை நகரங்களிலும் உள்ளன. இக்கோயில்கள் கட்டப்பட்ட காலத்தில் கோயிலை மையமாகக் கொண்டே மக்கள் வாழ்க்கை அமைந்திருந்தது. ஆக, சமய மரபுகளைப் பின்பற்றிய கட்டிடக் கலையே நமக்கு இப்போது மிஞ்சியுள்ளது. ஒரு பழைமையான ஆன்மிக, சமய நாகரிகத்தின் அடையாளங்களே, கட்டிடக்கலை மூலம் அது தன்னை வெளிப்படுத்திக் கொண்டதே இப்புனிதக் கட்டிடங்கள் எல்லாம். இக்கலைப் படைப்புகளைப் பார்க்கும் போது,ஆன்மிக சூசனை, சமய உட்பொருள், குறியீடுகளின் அர்த்தம் ஆகியவைகளை விட்டுவிட்டு, சமய உணர்ச்சியில்லாத, தர்க்கவாத மனத்தின் அழகுணர்ச்சியை மட்டும் கொண்டு பார்த்தால் இக்கலை உள்ளபடி உணர்ந்து அனுபவிப்பது சாத்திய மில்லை. ஓர் இந்தியக் கோயிலானது, அது எந்த தெய்வத்திற்காகக்

கட்டப்பட்டிருந்தாலும் சரி, அதன் மிக ஆழ்ந்த உண்மையில் அது சித்பொருளுக்கு எழுப்பப்பட்ட பீடமே; விஸ்வ சக்தியின் வீடே; அனந்தப்பொருளை அடைய எழுகின்ற ஆர்வமே ஆகும்.''[4]

கலைகளின் உட்பொருள்

செப்புத்திருமேனிகளில் பக்தியுணர்வைத் தரிசிப்பதுபோலக் கட்டடக் கலையில், குறிப்பாகத் திருக்கோயில்களின் பேரழகை எவ்வாறு தரிசிக்க வேண்டும் என்பதையும் அவர் விளக்குகின்றார்-

''இந்தியக் கட்டிடக்கலையின் ஆன்மிக-அழகுத்தத்துவத்தை உள்ளபடி உணர்ந்து கொள்ளவேண்டுமானால் அதன்கலை அம்சத்திற்குப் பொருந்தாத சுற்றுப்புறங்களால் சிக்கல் ஏற்படாத கட்டிடத்தைப் பார்க்கவேண்டும். பெரிய கோவில் நகரங்களின் சூழலில் பழைய ஆன்மிக உட்கருத்து இன்னும் சிறிதளவு உள்ள போதிலும் அவற்றைக்கூட ஒதுக்கிவிட்டு, முற்றிலும் சுதந்திரமான இயற்கைச் சூழலில் அமைந்த கட்டிடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நமது நோக்கித்திற்குப் பொருத்தமான இரு நிழற் படங்கள் இதோ என்முன்னே இருக்கின்றன. ஒன்று காள ஹஸ்தியில் உள்ள கோயில். மற்றது சிம்மாசலத்தில் உள்ள கோயில். இரண்டிலும் கையாளப் பட்டுள்ள கலை முறைகள் முற்றிலும் மாறுபட்டவை. இக்கோயில் களைப் பார்க்கும்போது கோயிலை அதன் சுற்றுப்புறத்திலிருந்து பிரித்துப்பார்க்காமல், வானத்துடனும், சமவெளியுடனும் அல்லது வானத்துடனும் சுற்றிலும் உள்ள குன்றுகளுடனும் ஒன்றாய்ப் பார்க்கவேண்டும். கட்டிடத்திற்கும் அதன் சுற்றுப்புறத்திற்கும் இயற்கையில் காணும் உண்மைக்கும் கலைப்படைப்பில் வெளிப்படும் உண்மைக்கும் இடையேயுள்ள ஒருமைப்பாட்டை உணரவேண்டும். எந்த ஒருமையை வேண்டி இயற்கை தனது உணர்வற்ற படைப்பின் மூலம் ஆர்வமுறுகிறதோ, எந்த ஒருமையில் வாழ்கிறதோ, அந்த ஒருமையை நோக்கியே மனிதான்மா ஆர்வ முறுகிறது. அந்த ஆர்வமே இங்கு கல்லில் உருக்கொண்டுள்ளது... இவற்றிலெல்லாம் வெளிப்படும் ஆன்ம நோக்கம் ஒன்றே.... இந்த விளக்கம் பரந்த புகழுடைய பெருங்கோயில்களுக்கு மட்டுமின்றி திராவிட பாணியில் கட்டப்பட்ட எல்லாக்கோயில்களுக்கும், சிறுபட்டினங்களில் சாலையோரம் வெளியே தெரியாமலிருக்கும் சிறு சிறு கோயில் களுக்கும் பொருந்தும்... ஒன்று சிறிய அளவில் செய்யப் பட்டுள்ளது. மற்றது பெரிய அளவில் ஒரு மகத்தான ஆர்வத்தின் நிறைவேற்றமாக உள்ளது, ஆனால், அவைகளின் உட்பொருள் ஒன்றே''[5]

இதேநோக்கில் தாஜ்மஹாலையும் பார்க்கின்றார்; அஜந்தாப் படைப்புகளையும் முன்னிறுத்துகின்றார்.

தென்னிந்திய வருகையும், பாரதியாரின் உடனிருப்பும், ஆழ்வார்கள், நாயன்மார்களின் பக்திப் பாடல்களும் கூடி அரவிந்தருக்குள் எழுப்பிய எண்ணப்பதிவுகள் இவை எனலாம்.

சான்றெண்விளக்கம்

1.ஸ்ரீஅரவிந்தர், இந்தியாவின் ஆன்மா, ப.62.

2.மேலது.,

3.மேலது., பக். 65 - 67.

4.மேலது., ப.70.



அரவிந்தரும் அருந்தமிழ்மொழியும்

"ஒவ்வொரு மொழியும், அதைத் தனதாக ஏற்றுக்கொண்டு பேசும் மக்களின் ஆன்மாவைக் குறிக்கிறது; சக்தியையே விளக்குகிறது. ஆகையில் ஒவ்வொரு மொழியும் தனக்கென்று ஒரு பிரத்யேக உணர்வை, சிந்தனை ஓட்டத்தை, வாழ்க்கை அறிவு மற்றும் அனுபவத்தை எதிர்கொள்ளும் வழியை உருவாக்குகிறது... ஒரு தேசமோ, இனமோ அல்லது மக்களோ அதன் மொழியை இழந்து விட்டால், அதன் முழுமையான அல்லது உண்மையான வாழ்க்கையை வாழ முடியாது. தேச வாழ்க்கைக்கான இந்த நற்பயன், மனித இனத்தின் பொது வாழ்க்கைக்கும் நற்பயனாக விளங்குகிறது"[1] என்பது மொழி குறித்த அரவிந்தரின் கருத்தோட்டம்.

அந்த வகையில் தாமறிந்த ஒவ்வொரு மொழியினுள்ளும் ஊடுருவி அதன் ஆற்றலை உள்வாங்க முனைந்திருக்கின்றார் அரவிந்தர். அதற்காகப் பல மொழிகளைக் கற்கவும் ஆர்வ முற்றிருக்கிறார்.

பொதுவாக, பலர் கருத்துக்கொண்டிருப்பதுபோல் அரவிந்தர் தமிழ் அறியாதவர் அல்லர். அவர் புதுச்சேரிக்கு வருமுன்பே ஓரளவு தமிழ் கற்றுக் கொண்டிருக்கிறார். இதற்காக ஒரு தமிழ்ப்

பண்டிதரைத் துணைக் கொண்டிருக்கின்றார் என்பதை, 'தமிழில் எழுத்துக்குறை' எனும் தலைப்பில் பாரதியார் பின்வருமாறு பதிவு செய்கின்றார்.

அரவிந்தர் பயின்ற தமிழ்

"கல்கத்தாவில் இருக்கும்போது ஸ்ரீமான் அரவிந்தகோஷ்(இவர் பெயரையும் தமிழில் சரியாக எழுதஇடமில்லை. 'Ghosh' என்பதை 'khosh' என்று எழுத நேரிடுகிறது) ஸ்ரீமான் அரவிந்தர் தமிழ்கற்றுக் கொள்ள விரும்பினாராம். அங்குத் தென்னாட்டு மனிதர் ஒருவர் இவருக்கு நமது அரிச்சுவடி முழுதும் கற்றுக் கொடுத்தார். முதல் பாடப் புஸ்தகமும் நடந்தது. அப்படியிருக்கும்போது ஒருநாள் ஒரு தமிழ்நாட்டுப் பத்திரிகை அகப்பட்டது. அதில் பீரேந்திரநாத் தத்த குப்தர் வழக்கு என்று மகுடமிட்டு ஒரு வியாஸம் எழுதியிருந்தது. அதைப்பார்த்துவிட்டு, அரவிந்தர் தமது தமிழ் வாத்தியாரிடம் "இதென்ன?" என்று கேட்டார்.

வாத்தியார், "இது ஒரு பெங்காளிப்பெயர்!" என்று சொன்னாராம்.

அரவிந்தர் மயங்கிப்போய், "எப்படி?" என்று கேட்டார்.

வாத்தியார்,'Birendranath Dutta Gupta' என்று அச்சொல்லை பெங்காளி ரூபத்திலே சொன்னார். இங்கிலீஷ் தெரியாத கிராமத்துத் தமிழர் இச்சொல்லை எப்படி வாசிப்பார்கள் என்று அரவிந்தர் கேட்டார். "நீர் வாசித்தது போலவே 'pirendiranataTatta Kuptar' (t- த) என்றுதான் வாசிப்பார்கள்" என்று வாத்தியார் சொன்னாராம். இன்றும் அரவிந்தர் இந்தக் கதையைச் சொல்லிச் சிரிக்கிறார்".[2]

அப்போது தொடங்கிய தமிழ்வாசிப்பைப் புதுவையில் பாரதியார் துணையோடு தொடர்ந்திருக்கின்றார் அரவிந்தர். பாரதியார், வ.வே.சு. ஐயர், ஸ்ரீநிவாசாச்சாரியார் போன்றோருடன் அவர் உரையாடிய பொழுதுகள் அவர்தம் தமிழறிவையும், தமிழர்கள் குறித்த சித்திரத்தையும் மேன்மைப்படுத்தியிருக்கலாம். இம்மூவரும் அரவிந்தருடன் இருந்து உரையாடிய தன்மையைப் பின்வரும் நடைச் சித்திரத்தில் வார்த்தளிக்கின்றார் வ.ரா.

"(வ.வே.சு)ஐயர்,பாரதியார், சீனிவாசாச்சாரியார் முதலியோர் அரவிந்தரின் வீட்டுக்குச்சென்று பேசத்தொடங்கினால், பொழுது

போகிறதே தெரியாது. மாலை நான்கு மணிக்குப் பேச ஆரம்பித்தால், இரவில் பத்து மணி வரைக்கும் வேறு எந்தச் சிந்தனையுமே இருக்காது. சாப்பாட்டைப் பற்றிக் கவலை எதற்கு? இந்தச் சம்பாஷணையின் அற்புதம் என்னவென்றால், அவர்கள் சந்நிதானத்தில் இருக்கும் வரையில், சாதாரணமாக முடியாதவை என்று தோன்றும் காரியங்களெல்லாம் சுளுவாகச் செய்து முடித்துவிடலாம் என்று தோன்றும். காரிய சித்திக்கு நடுவே கஷ்டம் இருப்பதாகவே தோன்றவே தோன்றாது. மலையை நகரச் செய்யும் தன்னம்பிக்கை இவர்களிடம், இந்தக் கூட்டத்தில் இருந்தது என்று சொல்லலாம்."[3]

கொண்டும் கொடுத்தும்

இந்தக் கூட்டுரைகளின் விளைவாக, பாரதியார்தம் கருத்தாக்கமும், அரவிந்தரின் தமிழ்க்கல்வியும் மெருகேறின. ஒருவருக்கொருவர் கொண்டும் கொடுத்தும் தம் சிந்தனைகளைக் கூர்மைப்படுத்திக் கொண்டனர். வேத நுணுக்கங்களையெல்லாம் ஐரோப்பியப் பாணியில் புரிந்து கொண்ட அரவிந்தருக்கு, அதனை ஆன்மிக அனுபவத்தில் உணர்ந்துகொள்ளும் வாய்ப்பைப் புதுவை வாழ்க்கை தான் அளித்திருக்கின்றது. இதனைத்தம், 'வேத இரகசியங்கள்' என்ற நூலில், (The secret of Veda 10, 33 - 37 - டிசம்பர் 1914) குறிப்பிடுகின்றார் அரவிந்தர்.

மொழிகளின் ஊடே அரவிந்தரின் ஆன்மிகத் தேடல்

"வேதங்களின் ஆன்மீக மற்றும் வரலாற்று மேன்மை பற்றிய ஐரோப்பிய ஆராய்ச்சி முடிவுகளை, படித்த இந்தியர்களில் பெரும்பான்மையினரைப் போலவே, நானும் வேதங்களைப் படிப்பதற்கு முன்னர் எவ்வித ஆய்வுமின்றி, தயக்கமின்றி ஏற்றுக் கொண்டேன். அதன்விளைவாக நவீன ஹிந்து கருத்தின்படியே நானும் உபநிடதங்களை இந்திய சிந்தனையின், இந்திய மதத்தின் பிறப்பிடமாக, உண்மையான வேதமாக, ஞானத்தின் முதல் நூலாகப் பாவித்தேன். இந்த மகத்தான நீதிநூலில் எனக்குத் தெளிவாகத் தெரிந்த ரிக் வேதத்தின் நவீன மொழிபெயர்ப்புகள், நமது நாட்டு வரலாற்றின் மிக முக்கிய சுவடியாகத் தெரிந்ததேயன்றி, சிந்தனை வரலாறு அல்லது வாழ்வின் ஆன்மிக அனுபவத்தில் அதன் மதிப்பை நான் உணரவில்லை..."[4] என்று அரவிந்தர் எழுதுகின்றார்.

இத்தகு ஐரோப்பியப் பின்னணியில் தம் கல்வியையும் சிந்தனையும் பெற்ற அரவிந்தர் வடஇந்தியாவை விட்டுத் தென்னகத்திற்கு வந்தபிறகே அவருக்கு வேதத்தின்மீதும் தென்னிந்திய மொழிகளின்மீதும் தீவிர கவனம் ஏற்பட்டது. திராவிட- ஆரியக் கருத்தாக்கங்கள் குறித்தும் தர்க்கரீதியாகச் சில தெரிவுகளை முன் வைத்து அவர் எழுதுகிறார்-

"தென்னிந்தியாவில் நான் தங்கியிருந்த காலமே எனது சிந்தனையை வேதத்தின்மீது தீவிரமாகத் திருப்பியது. வட ஆரியருக்கும், தென் திராவிடருக்கும் இடையே இனப்பிளவில் எனக்கிருந்த இரண்டாந்தர நம்பிக்கைக்கு, என் மனதின்மீது திணிக்கப்பட்ட இரு விஷயங்கள் பெரியதொரு அதிர்ச்சியைத் தோற்றுவித்தன.ஆரிய திராவிட உடலமைப்பின் வேறுபாட்டிலும், வட சமஸ்கிருத மொழிக்கும் தென்னிந்திய மொழிகளுக்கும் இடையே புகுத்தப்பட்ட பொருத்தமின்மையிலும் எனது கணிப்பு நின்றது. திராவிட அல்லது இந்திய ஆப்கனைச் சார்ந்த, ஒரு இனம் இந்தியத் திபகற்பத்தில் வசித்தது என்று பிற்கால இலக்கியங்கள் கூறுகின்றன. அதை நான் அறிவேன். ஆனால் அத்தகைய ஐயங்களுக்கு நான் எவ்வித முக்கியத் துவத்தையும் அளித்ததில்லை. தமிழ் இனத்தில் பொதுவாக நிலவிய வட அல்லது ஆரிய பாதிப்பால் கவரப்படாமல் என்னால் தென்னிந்தியாவில் இருக்க முடிய வில்லை. எங்கு திரும்பினாலும் ஒரு திடுக்கிடும் தெளிவோடு நான் கண்டுகொண்டேன். பிராமணர்களுள் மட்டுமல்ல, எல்லா ஜாதிகளிலும் எல்லாவகுப்பிலும், பழைய பரிச்சயமான எனது மஹாராஷ்டிர, குஜராத், ஹிந்துஸ்தான், ஏன் எனது சொந்த மாநிலமான வங்காள நண்பர்களின் முகங்களையும் உறுப்புகளையும் ஜாடைகளையும் நான் கண்டுகொண்டேன். வடக்கின் எல்லா வகுப்பினரும், ஒருமித்த ஒரு படையாக தெற்கில் குவிந்து, அதற்குமுன் இருந்திருக்கக்கூடிய எந்த மக்கள் தொகையையும் அழித்து ஆக்ரமித்துவிட்டதாகவே எனக்குத் தோன்றியது. தெற்குவகையைப் பற்றி ஒரு பொதுவான கருத்து மேலோங்கியிருந்தது. ஆனால், தனிமனித உடற் கூற்றை ஆராயும் போது, அதை ஆணித்தரமாக நிறுவ முடியவில்லை. இறுதியில் என்னென்ன கலவைகள் நிகழ்ந்திருந்தாலும், என்னென்ன பிராந்திய வேறுபாடுகள் தோன்றியிருந்தாலும், அனைத்து மாறுதலுக்கும் பின்னே, இந்தியா முழுவதிலும் ஒரு கலாச்சார ஒற்றுமை மிஞ்சியிருப்பதை என்னால் காணமுடிந்தது...

ஆரிய திராவிட நாகரிகங்கள் குறித்து...

ஆரிய திராவிட இனங்கள் இடையே உருவாக்கப்பட்ட கூரிய பிளவு என்னவாயிற்று? அது மறைந்தது. ஆரியர்களின் ஊடுருவலை நாம் ஏற்றுக்கொண்டாலும், அது இந்தியா முழுவதும் நிறைந்து, இந்திய மக்களின் உடலமைப்பை நிர்ணயித்தது என்றோ, அல்லது இந்திய மண்ணின் மக்களோடு கலந்துவிட்ட சிறு கூட்டங்களாலான நாகரிகம் குறைந்த இனத்தவர் என்றோ நாம் அர்த்தம் கொள்ளவேண்டும். மேலும், ஒரு நாகரிகமான மக்கள், பெரிய நகரங்களை உருவாக்கியவர்கள், பரந்த வர்த்தகத்தைக் கொண்ட வியாபாரிகள் மற்றும் ஆன்மிகக் கலாச்சாரம் கொண்டவர்கள் வாழ்ந்த ஒரு மாபெரும் தீபகற்பத்தில் நுழைந்த ஆரியர்களால் அவர்களது சொந்த மொழியையும், மதத்தையும், சிந்தனைகளையும், பழக்கத்தையும் அந்நாட்டு மக்களின் மீது திணிக்க முடிந்தது என்பதையும் நாம் ஏற்க வேண்டி வரும். ஊடுருவியவர்களிடம் நம்மிடம் இருந்ததைவிடவும் சீரான மொழியும், ஆக்க பூர்வமான மனமும், ஆன்மிக உணர்வும் இருந்திருந்தால் மட்டுமே அத்தகைய அற்புதம் சாத்தியமாகும்"[5] என்று எழுதுகிறார்.

தூய தமிழின் உதவியுடன்...

இப்படியான சூழலில் தமிழ்மொழி எழுத்துகள், இலக்கணம், அதன் இலக்கியச்செழுமை பற்றியெல்லாம் ஆய்வு மேற்கொள்கின்றார். என்னதான் கிரேக்க, இலத்தீன் மொழிகள் கற்றிருந்தாலும், திராவிட மொழிகள் போல், குறிப்பாகத் தூய தமிழ்போல் தமக்கு வேதத்தின் நுட்பங்களைப் புரிந்துகொள்ள அவை உதவியதில்லை என்று அனுபவ பூர்வமாக விளக்குகின்றார். அந்த அனுபவத்தில் அவர்தம் பழைய கருத்தாக்கங்கள் சரிந்தன. புதிய தெளிவு பிறந்திருக்கின்றது. அது பற்றிய விளக்கத்தை அவரது எழுத்துவழி அறியலாம்.

"பல இனங்கள் சேர்ந்த கொள்கைக்கு அனுகூலமாக மொழிகளின் வேறுபாடுகள் இருந்தன. ஆனால், இதிலும் எனது பழைய கருத்துகள் ஆட்டங்கண்டன. ஏனெனில், தமிழ்மொழியின் எழுத்துகளை ஆராய்ந்தேன். அப்போது, ஸம்ஸ்கிருதத்திற்கும் அதன் சகோதரி லத்தீன்மொழிக்கும், சமயத்தில் கிரேக்க மொழிக்கும் ஸம்ஸ்கிருதத்திற்கும் உள்ள பிணைப்பை அறிந்துகொள்ள, தூய தமிழ் வார்த்தை களும் தமிழ் வரிகளும்

உதவின. சில சமயத்தில், பிணைப்பை மட்டும் குறிக்காமல், வார்த்தைத் தொடரில் விட்டுப் போனதையும், தமிழ்மொழி எடுத்துத் தந்தது. இந்தத் திராவிட மொழியினால்தான் ஆரிய மொழிகளின் உண்மையான பிறப்பையும், அதன் நுணுக்கங் களையும் நான் அறிந்துகொண்டேன். தீர்மானமான எந்தவொரு முடிவையும் அடையுமளவு என்னால் ஆராய்ச்சியைத் தொடர முடியவில்லை. ஆனால், பொதுவான கருத்திற்கு மாறாக, திராவிட ஆரிய மொழிகளின் பிணைப்பு நெருக்கமானதாகவே இருந்துள்ளது. மேலும் தொலைந்து போன ஒரு பண்டைய மொழியிலிருந்து பிறந்த இரு கிளைகளாகக் கூட இருக்கக்கூடும். அங்ஙனமாயின்,திராவிட இந்தியாவினுள் ஆரியர் பிரவேசித்ததற்கு ஆதாரம்,வேதபாடல்களின் குறிப்புகளில்தான் கண்டு பிடிக்கப்பட வேண்டும்.

ஆகையால், வேதத்தை, அதன் மூலநூலை, நான் இரண்டு குறிக்கோளுடன் எடுத்தேன். தீவிர அல்லது ஆழமான ஆராய்ச்சிக்காக அல்லாமல், ஆரிய திராவிட இனப்பிளவைப் பற்றியும், இந்திய மண்ணில் தோன்றியவர்களுக்கும், திராவிடர் களுக்கும் உள்ள பிணைப்பைப்பற்றியும் நான் எதிர்பார்த்ததை விடவும் வெகு மேலோட்டமானதாகவே வேதம் குறித்தது. ஆனால், இந்த புராதனப் பாடல்களில் அலட்சியமாக ஒதுக்கப்பட் டிருந்த மிக உயர்ந்த மனித சிந்தனைகளும், அனுபவங்களும் என்னை மிகவும் கவர்ந்தன. வேத மந்திரங்கள் எனது உள்மன அனுபவங்களை மிகத் தெளிவாக, பளிச்சென்று ஒளியூட்டியதால், அவற்றின் மதிப்பு எனது கணிப்பில் மிகவும் உயர்ந்தது. நான் இதுவரை படித்தமட்டில், ஐரோப்பிய யோக-வேதாந்த அறிவுரைகளில் இத்தகைய விளக்கம் இல்லை. மேலும் என்னால் சரியான விளக்கம் பெறமுடியாத உபநிடத கருத்து களுக்கும் கட்டுரைகளுக்கும் வேதங்கள் அறிவொளி தந்தன. புராணங்களில் உள்ளவற்றிற்கும் ஒரு புதிய அர்த்தத்தை வேதங்கள் தந்தன"[6] என்கின்றார் அரவிந்தர்.

அவர்தம், ஆரிய-திராவிடக்கருத்தாக்கங்கள் தனி ஆய்வுக்கு உரியன. எனினும் அவர் தமிழ்மொழி குறித்துப் புதிய நம்பிக்கையும், தெளிவும் கொண்டிருந்ததோடு, அம்மொழி தொடர்பாகப் பெரிதான அளவில் ஆராய்ச்சிகளையும் மேற் கொண்டிருந்தார் என்பது தெளிவாகின்றது.

அரவிந்தர் நோக்கில் தமிழும் சமஸ்கிருதமும்

சமஸ்கிருதத்தை நினைக்கிறபோதெல்லாம் அரவிந்தருக்குத் தமிழ் நினைவுக்கு வந்துவிடுகின்றது. பல இடங்களில் சமஸ்கிருதத் தோடு தமிழை இணைத்தும் பேசுகின்றார்.

"தமிழ்மொழியின் மகோன்னதமான காலமும், சம்ஸ்கிருதத் தின் பொற்காலமும் ஒன்றே. வடக்கே தோன்றிய பேரரசுகள் அழிந்த பின்னும் தெற்கே இன்னும் முழு சுதந்திரத்துடன் அல்லது அரைகுறை சுதந்திரத்துடன் இருந்து வந்த சிற்றரசுகளின் ஆட்சியின் போது தமிழ் நூல்கள் தொடர்ந்து எழுதப்பட்டு வந்தன"[7] என்று குறிப்பிடும் அரவிந்தர் நோக்கில் தமிழ் மற்றும் சமஸ்கிருதம் பற்றிப் பின்வரக் காணலாம்.

மொழிகுறித்த தீர்க்கமான பார்வை கொண்டிருந்த அரவிந்தர், அறிவியல் நோக்கில் அதன் ஆழ, நீளங்களை ஆய்ந்து எழுதுகிறார். மொழி குறித்த பார்வையில் அரவிந்தருக்கும், பாரதியாருக்கும் ஒத்த கருத்து இருந்தமையை அறியமுடிகின்றது.இந்தியாவுக்குப் பொது மொழியாக இந்தியைக் கொணரக் காந்தியடிகள் போன்றவர்கள் கருதியபோது, சமஸ்கிருதமே இந்தியாவின் பொதுமொழியாகக் கொள்ளவேண்டும் என்று பாரதியாரும் அரவிந்தரும் கருதியிருக்கின்றார்கள்.

சமஸ்கிருதம் என்பது தனிப்பட்ட சாதிக்கோ, இனத்திற்கோ உரிய மொழியன்று. இந்தியா முழுமைக்கும் தொடர்புடைய மொழியாக, இந்திய மொழிகள் அனைத்திலும் சிறந்த படைப்புகளைத் தம்முள் கொண்டதாக அம்மொழி அமைக்கப் பட்டிருக்கிறது. ஒருகாலத்தில் அம்மொழியின் வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் பெரும்பங்களித்தவர்கள் தென்னிந்தியர்கள் என்பது வரலாறு. தம் வாழ்நாளில் பல்வேறு மொழிகளை ஆழமாகவும், அகலமாகவும் கற்றுத் தேர்ந்து, இலக்கிய நோக்கில், எந்தமொழிக்கும் உரிய் ஆளுமையை விருப்புவெறுப்பற்று நோக்கும் அறிவியல் கண்ணோட்டத்தோடு உலகளாவிய நிலையில் வைத்துப் புரிந்து கொண்டவர்கள் பாரதியாரும், அரவிந்தரும்.

இந்தியப்பண்பாட்டிற்கும், இறையாண்மைக்கும் ஊறு விளைக்குமுகமாக அந்நிய ஏகாதிபத்தியம் மேற்கொண்ட சதிகளைத் துணிந்து சத்தியத்தின் துணையோடு எதிர்கொண்ட இவர்களுக்கு மொழி என்பது கருத்துப்பரிமாற்றத்திற்கான வெறும்

கருவியாக மாத்திரம் இருக்க வில்லை. அதுவே, இத்தேசத்தின் உயிராக, ஆற்றலாக, ஆன்மாவாகக் காட்சியளித்தது. பல்வேறு மொழி, இன, கலாச்சாரப் போக்குகள் இருந்த போதிலும் அவற்றுள் ஒத்திசைவுநிறைந்த தன்மையை அதன் ஆன்மாவை உணர்ந்தவர்களால் தரிசிக்கமுடியும் என்பதை அனுபவத்தில் உணர்ந்து, அதனை உலகிற்கு உணர்த்துபவர்களாக அவர்கள் திகழ்ந்தார்கள். அவர்கள் பார்வையில் இந்தியஇலக்கியம் என்பது அனைத்து மொழி இலக்கியங்களும் உணர்த்தும் ஒருணர்வு என்பதாக அமைகின்றது. பிரபஞ்சநிலையில் மானுட உயர்வுக்குரிய ஒழுகலாறுகளைத் தந்து வழிகாட்டக்கூடியதாக இலக்கியத்தின் நோக்கம் திகழவேண்டும் என்று கருதினார்கள். அத்தன்மையை இந்திய மொழிகளின்மூலம் உணர்ந்தார்கள். அந்நோக்கில் சமஸ்கிருதம் பண்டிதர்களின், அக்கால இந்திய ஞானிகளின் கலைக் கருவியாகத் திகழ்ந்தமையை அவர்கள் அனுபவித்து மகிழ்ந்தார்கள். அவ் ஆரியத்துக்கு நிகராகத் தமிழைக் கருதிப்போற்றிய பாங்கையும் இங்கே கவனத்தில் கொள்ள வேண்டும்.

அந்தவகையில் இந்திய இலக்கியத்திற்கு ஆரியத்துக்கு நிகராய்த் தம் கொடையளித்த தமிழைப் பாரதியார் மரபிலேயே அரவிந்தரும் போற்றி மகிழ்கின்றார். அவர் நோக்கில் இலக்கியம் என்றால் என்ன? இந்திய இலக்கியம் என்று அவர் சுட்டுவது எதனை? போன்ற வினாக்களைத் துணைக்கொண்டு அரவிந்தரின் கருத்துலகத்தினுள் புகலாம்.

இலக்கியத்தின் பெருமை

"ஓர் இலக்கியத்தின் பெருமை முதலாவது அதன்பொருளின் உயர்வு, மதிப்பு, அதன் சிந்தனைச் சிறப்பு, அதன் உருவங்களின் அழகு இவற்றைப் பொருத்துள்ளது. அத்துடன், சிறந்த மொழி இலட்சணங்களெல்லாம் பொருந்தியிருப்பதோடு சிறந்த மேதைகளின் நூல்களின் மூலம் எந்த அளவிற்கு அது ஒரு மக்கள் கூட்டத்தின், ஒரு யுகத்தின், ஒரு பண்பாட்டின் ஆன்மாவை, வாழ்வை, அதன் இலட்சிய மனத்தை மலரச் செய்து அதை உயர்த்துகிறது என்பதையும் பொருத்ததாக உள்ளது."[8]

இந்திய இலக்கியத்தின் மேன்மைகள்

அதன் அடிப்படையில், "சமஸ்கிருத இலக்கியத்தின் மூலமும் பிற இலக்கியங்களின் மூலமும் நாம் பெற்றிருப்பதை வைத்துக்

கொண்டு இந்திய மனம் இவ்விரு அம்சங்களிலும் சாதித்துள்ளது என்ன என்று கேட்போமேயானால் எவ்வளவு விரோத மனப் பான்மை உள்ளவரும் இந்திய வாழ்விற்கும் இந்தியப் பண்பாட் டிற்கும் இந்திய இலக்கியத்தினால் ஏற்பட்டுள்ள நற்பயனை மறுக்கவோ, குறைத்து மதிப்பிடவோ முடியாது. அவற்றின் தன்மையாலும், அளவிலும், மிகச்சிறந்த படைப்புகளின் மிகுதி யிலும், அறிவுக்குப் பொருத்தமான அசல் தன்மையிலும் சக்தியிலும் அழகிலும், அவற்றின் பொருட்சிறப்பிலும் நெறிமுறையிலும், மொழி நயத்திலும், அவற்றின் உள்ளுயிர் செல்லக் கூடிய உயர்விலும் பரப்பிலும் சமஸ்கிருதமொழியின் பண்டைக்கால, பொற்காலப் படைப்புகள் உலகின் பேரிலக்கியங்களுள் முதல் வரிசையில் நிற்கின்றன என்பதில் ஐயமில்லை"[9] என்கின்ற அரவிந்தர் சமஸ்கிருத மொழியின் சிறப்புகளை அதன் படைப்புகளின் அடிப்படையில் பின்வருமாறு வெளிப்படுத்துகிறார்.

சமஸ்கிருதமொழிச்சிறப்பு

"சமஸ்கிருதமொழியை எடுத்துக்கொண்டால் அது மனித மனத்தால் படைக்கப்பட்டுள்ள இலக்கியக் கருவிகளுள் மிக உயர்ந்த மாட்சியும், மிக உயர்ந்த பூரணமும், அற்புதமான திறமையும் கொண்டவற்றுள் ஒன்றாகும். அது கம்பீரமும், உயிர்த் துடிப்பும், நுண்மையும் ஒருங்கே கொண்டது. அதன் தன்மையும் குணச்சிறப்புமே அது எந்த இனத்தின் பண்பாட்டைப் பிரதிபலித்ததோ அந்த இனத்தின் தன்மைக்கும் சால்பிற்கும் போதிய சான்றாகும். இந்த அற்புத மொழியினது திறனின் மாட்சிக்கு இழுக்கு உண்டாகாத வகையில் கவிகளும் சிந்தனையாளர் களும் உயர்ந்த மேன்மையான வகையில் அதைப் பயன்படுத்தி யிருக்கிறார்கள். சமஸ்கிருத மொழியிலேயே இந்திய மனம் தனது அதி முக்கியமான மகோன்னதப் படைப்புகளின் பெரும் பகுதியைத் தந்திருந்தாலும், அம்மொழியில் மட்டுமே உயர்ந்த, அழகிய, பூரணமான படைப்புகளைப் படைக்கவில்லை"[10] என்று விமர்சனப் பாங்கோடு தெளிவுபடுத்துகிறார்.

அழியாப் பெருமையுடைய இலக்கியங்கள்

சமஸ்கிருதமொழியின், "சாதனையைச் சரிவர மதிப்பிட வேண்டுமானால், பாலி மொழியிலுள்ள பௌத்த இலக்கியத் தையும், சமஸ்கிருதச் சார்புடைய மொழிகளும், திராவிட மொழிகளுமாகச் சுமார் 12 மொழிகளின் கவிதை இலக்கியங்

களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். மொத்தத்தையும் சேர்த்துப்பார்க்கும்போது ஒரு முழுக் கண்டத்தின் இலக்கியத்தைப் பார்ப்பது போலிருக்கிறது.

இவற்றில் அழியாப் பெருமையுடைய இலக்கியங்கள் என்று எடுத்துக் கொண்டால் அவை அளவில் மத்திய கால, தற்கால ஐரோப்பாவின் படைப்புகளைவிட அதிகமாகக் குறையாமலும், உன்னதச்சிறப்புடைய இலக்கியங்களைப் பார்க்கும்போது அவை அவற்றிற்குச் சமமாகவும் உள்ளன. வேதத்தையும், உபநிஷத்துக் களையும், இமாலயப் படைப்புகளாக மகாபாரதத்தையும், இராமாயணத்தையும், காளிதாசனின், பவபூதியின், பர்த்ருஹரி யின், ஜயதேவரின் படைப்புகளையும், அவற்றிற்கு இணையான வேறு பல நாடக, கவிதை, காதல் ஓவியங்களையும், தம்மபதத் தையும், ஜாதகக் கதைகளையும், பஞ்ச தந்திரக் கதைகளையும், துளசிதாசரையும், வித்யாபதியையும், சண்டிதாசையும், இராமப்பிரசாதையும், இராம தாசையும், துக்காராமையும், திருவள்ளுவரையும், கம்பனையும், நானக், கபீர், மீராபாய், தென்னிந்தியாவின் ஆழ்வார், நாயன்மார்களின் பாடல்களையும், தனித்தன்மை கொண்ட படைப்புகளையும் மட்டுமே இங்கே குறிப்பிட்டுள்ளோம். இவை தவிர, பல்வேறு மொழிகளில் எழுதப் பட்டுள்ள முதல்தர, நடுத்தர இலக்கியங்கள் எண்ணிறந்தவை - கொண்டுள்ள ஒரு மக்கள் உலகின் மிக வளர்ச்சி யடைந்த, படைப்புத் திறன் கொண்ட மக்களுள் வைத்து எண்ணத் தக்கவர் என்பதிலும் அவர்கள் நாகரிகம் மிகச் சிறந்த நாகரிகங்களுள் ஒன்றாகக் கருதப்படவேண்டும் என்பதிலும் சந்தேகத்திற்கே இடமில்லை"[11] என்று விளக்குகின்றார்.

அரவிந்தர் போற்றும் அருந்தமிழ்ச் சான்றோர்கள்

இந்திய இலக்கியங்களுள் தனித்தன்மை வாய்ந்த படைப்பு திருவள்ளுவரின் திருக்குறளாகும். அதன் சிறப்புகளை அரவிந்தர் போற்றும் பாங்கு இந்நூலுள் தனித்தலைப்பிட்டு விளக்கப் பெற்றுள்ளது. அதேபோல், ஔவையார்,கம்பர், ஆழ்வார்கள், நாயன்மார்கள் போன்றோர்களை, அவர்களது படைப்புகளை முன்வைத்து ஏறத்தாழ, பாரதியார் போலவே, பாராட்டி மகிழ்கின்றார்.

அவை வெறும் புகழ்ச்சியாக இல்லாமல் பிறமொழி இலக்கியப் படைப்புகளோடு ஒப்பிட்டுரைப்பதாகவும் அமைகின்றது. அவற்றை அடுத்து வரும் அத்தியாயங்களில் காணலாம்.

சான்றெண் விளக்கம்

1. ஸ்ரீஅரவிந்தர், பாரதத்தின் மறுபிறப்பு, ப.139.
2. ரா.அ.பத்மநாபன், (தொ.ஆ), பாரதி புதையல் பெருந்திரட்டு, ப.264.
3. வ.ரா, மகாகவி பாரதியார், ப.61.
4. ஸ்ரீஅரவிந்தர், பாரதத்தின் மறுபிறப்பு, பக். 114-115.
5. மேலது.
6. மேலது.
7. ஸ்ரீஅரவிந்தர், இந்தியாவின் ஆன்மா, ப.85.
8. மேலது, ப.77.
9. மேலது.
10. மேலது, பக். 77-78.
11. மேலது, பக்.78-79.



அரவிந்தர் போற்றிய திருவள்ளுவர்

பாரதியார் வழியே மன ஒருமையுடன் தமிழ் கற்ற அரவிந்தர் அதன் இலக்கிய, பண்பாட்டு, ஆய்வியல் கூறுகளையும் அவர் பாங்கிலேயே உள்வாங்கியிருக்கின்றார் என்று கருத இடமுண்டு. இலக்கிய, அரசியல் மற்றும் ஆன்மிக நோக்குகளில் ஒத்த கருத்துடைய இவர்களது உறவுப் பிணைப்பிற்கு இலக்கியமும் கை கொடுத்திருக்கின்றது.

பாரதியாருக்கு, வேத நுணுக்கங்களையெல்லாம் விளக்கிய பணி அரவிந்தருடையது எனில், திருவள்ளுவரையும், ஆழ்வார் களையும், நாயன்மார்களையும், கம்பரையும், ஔவையாரையும் அரவிந்தருக்கு ஆழமாக அறிமுகப்படுத்திய திருப்பணி புரிநதவர் பாரதியார் ஆவார். இதற்கு உடனுறைச் சான்றாய்த் திகழ்ந்தவர் ஶ்ரீநிவாசாச்சாரியார். அவர் குறிப்பிடுவதாவது.

“பாரதியார் அரவிந்தரைப் புதுவையில் வரவேற்று அவருடன் நெருங்கிப் பழகி வெகு சீக்கிரத்தில் அவருக்கு உற்ற நண்பரானார். அவருடைய பழக்கத்தினால் பாரதியாரின் ராஜீயக்கொள்கையில் சிற்சிலமாற்றங்கள் ஏற்படலாயின. தீவிரமான ராஜீயவாதமே அதற்குமுன் பாரதியாரது நோக்கமாக இருந்தது . பின் அது போய் ராஜீய முயற்சிக்கு இன்றியமையாத அடிப்படையான ஆத்ம சக்தியையும் கூடவே வளர்த்துவரவேண்டும் என்பதன் உண்மையை உணரலானார். அதற்காக அரவிந்தர் கூறிய யோக முறையைச் சிறிது காலம் அநுஷ்டித்துப் பார்த்தார். அவர் முந்தியே

தெய்வபக்தி உடையவர். ராஜீயச் சுதந்திரக்கிளர்ச்சியில் அவர் சேர்ந்தபோது தீவிர ராஜீயவாதியாகவே காணப்பட்டார். இப்பொழுது அவை இரண்டும் நெருங்கிய சம்பந்தம் உடையவை எனக் கண்டார். தம் ராஜீயக் கொள்கையில் இம்மிகூடப் பின் அடையாமல் தமது கவிதாவெள்ளத்தை அத்யாத்ம விஷயங்களில் ஏராளமாகப் பெருக விட்டார். அவைகளில் அவருடைய உயர்ந்த ராஜீய நோக்கம் ததும்புவதை இன்றைக்கும் காணலாம். ஸ்ரீஅரவிந்தர் ரிக் வேதத்தைப் படித்து அது சிலயோக முறைகளைக் குறிப்பதைக் கண்டு இங்கிலீஷில் அதனை மொழிபெயர்த்து வந்தார். பாரதியாரும் அவரோடு சேர்ந்து ரிக் வேதம் படித்துச் சில ஸ்தோத்திரங்களைத் தமிழில் பாட்டுக்களாகவும், இங்கிலீஷில் வசனமாகவும் இயற்றிவந்தார். ஆர்யா என்னும் மாதப் பத்திரிகையை ஸ்ரீ அரவிந்தர் ஆரம்பித்தபோது அவரும் அதற்கு விஷய தானம் செய்து வந்தார். வேத ஸ்தோத்திரங்களிலிருந்தும், திருப்பாவை முதலிய தமிழ்ப் பிரபந்தங்களிலிருந்தும் சிலவற்றை இங்கிலீஷில் மொழிபெயர்த்து அதற்கு உதவினார்"[1] என்கின்றார் ஸ்ரீநிவாசாச்சாரியார். அந்த வரிசையில் திருக்குறளும் அடங்கும்.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"[2]

என்று தமிழ்நாட்டையும், தமிழ் வேதம் என்று திருக்குறளையும் போற்றியவர் பாரதியார். தாமறிந்த புலவரிலே தலை சிறந்தவருள் ஒருவராகப் பாரதியார் போற்றிய திருவள்ளுவரை, அவர் தந்த வான்மறையைத் தமது ஐரோப்பிய, வடஇந்திய மொழிஇலக்கியக் கருத்தாக்கங்களுக்கு மத்தியில் வைத்துக் கருத்தளித்துப் பாராட்டுகின்றார், அரவிந்தர்.

உண்மைகளை வெளியிடும் தலைசிறந்த கவிதை நூல்

வழக்கமான இசை, பக்தி, காதல்-வீரச் சுவைகள் கடந்து தனித் தன்மையோடு கவிதைச் சிறப்பும், கருத்துச்செறிவும் ததும்பி நிற்கும் திருக்குறளை இந்தியமொழிகளின் வெளிச்சத்தில் கண்டு, உண்மைகளை வெளியிடும் தலைசிறந்த கவிதை நூல் என்பதாகக் கணித்துப் போற்றுகின்றார்.

"...பிரதேசமொழிகளில் எழுதப்பட்ட நூல்கள் பெரும்பாலும் இசைப்பாடல்கள், பக்திப்பாடல்கள், காதல்-வீரக் கதைப் பாடல்கள் முதலியவைகளே. ஆனால், வேறுபாடுகளும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, மகாராஷ்டிர ஞானியான இராமதாசரின்

சமய-ஒழுக்கச் சார்புடைய பாடல்களையும், அரசியல் கருத்தமைந்த பாடல்களையும் திருவள்ளுவ நாயனார் இயற்றிய திருக்குறளையும் குறிப்பிடலாம். அதன் கட்டுக் கோப்பிலும் எண்ணத்தின் திண்மையிலும் சொல்லாட்சித் திறனிலும் திருக்குறள் குறு வடிவில் பொதுவான உண்மைகளை வெளியிடும் கவிதை வகையில் தலை சிறந்துவிளங்குகிறது"[3] என்பது அரவிந்தர் தரும் விளக்கம்.

இங்கு, 'திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின் ஆழமும் விரிவும் அழகும் கருதித் தமிழச்சாதி அமரத்தன்மை உடையது'[4] என்று பாடிய பாரதியாரின் கருதுகோள் உயிர்ப்புற்றிருப்பதை ஒப்புநோக்கிக் காணலாம்.

எல்லா வகுப்பு மக்களாலும் போற்றப்பெற்ற நூல்

மேலும், அச்சுவாகனமேறும் வசதியற்ற அக்காலங்களில் திருக்குறள் எல்லா மக்களின் இதயங்களிலும், வாழ்வியல் தளங்களிலும் இருந்து வழிநடத்துகின்ற பெற்றியை நன்கு உணர்ந்திருக்கின்றார், அரவிந்தர். இதுபோலவே, தத்தம் பகுதிசார் மொழிகளில் இலக்கியம் படைத்தவர்கள் தமது ஆளுமைக்கேற்ப வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதைத் திரண்ட நோக்கில் கண்டு இவையாவும் ஒரு பண்பாட்டின் கனிகள் என்று கவித்துவம் பொலியச் சுட்டுகின்றார். எல்லா வகுப்பு மக்களாலும் போற்றப் பெற்ற நூல் என்பதில் உளமகிழ்கிறார். இந்திய இலக்கியங்களில் இடம்பெறும் நீதிநூல்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருமிடத்து, அவருக்கு இராமதாசருடைய நூலும், திருவள்ளு வருடைய புகழ் பெற்ற குறளும் நினைவுக்கு வருகின்றன. 'புகழ் பெற்ற குறள்'[5] என்பது அவரது வாக்கு.

நீதிநூலுள் ஒன்றாகத் திருக்குறள் கருதப்பெற்றாலும், அது நுவலும் பொருள் கொண்டு நோக்கும்போது, தத்துவம், பக்தி, காதல், நீதி முதலிய கூறுகளைக் கொண்டிருக்கும் பெற்றியை, அரவிந்தர் சுட்டும் பாங்கு கவனிக்கத்தக்கது. இன்னும் விரிவான நிலையில் துக்காராமின் கவிதைகளோடும் திருக்குறளை ஒப்பிட்டுக் கண்டால் அரவிந்தர் உள்ளம் இனிது புலப்படும்.

அரவிந்தர் மொழிபெயர்த்த குறட்பாக்கள்

ஆக, திருவள்ளுவரது கவித்துவத்தையும் தனித்தன்மையையும் உணர்ந்து கொண்ட அரவிந்தர், பாரதியாரின் துணையோடு திருக்குறளில் இருந்து சில குறட்பாக்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கின்றார். கடவுள் வாழ்த்தின் பத்துக் குறட்பாக்களும்

எந்த முன்னுரையுமின்றி, "ஆர்யா" இதழில் வெளி வந்துள்ளன. அவை பின்னர் அரவிந்தர்தம் தொகுப்பு நூல்களில் சேர்க்கப் பெற்றுள்ளன.

"திருக்குறளையும் பாரதியார் கூறக்கேட்ட அரவிந்தர், கடவுள் வாழ்த்தில் உள்ள பத்துக்குறள்களையும் மொழிபெயர்த்தார்" என்று மகேச்வரி என்பார் குறிப்பிட்டுள்ளதாகச் சுட்டப் பெறுகின்றது.[6]

ஆனால், அரவிந்தர், "கடவுள் வாழ்த்து" முழுமையையும், மொழி பெயர்த்ததோடு அதனை அடுத்த அதிகாரமான வான்சிறப்பில் இருந்து ஐந்து குறட்பாக்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கின்றார். அதன் அச்சேறா வடிவை ஆவணக் காப்பகத்தில் பெற்று இந்நூலாசிரியருள் ஒருவரான, இரா.மீனாட்சி, தாம் நடத்திவரும் ஆரோவில் கிராமச் செய்தி மடலில் மூலப்பாடல்களோடு, முதன்முதலில் பிரசுரித்திருக் கின்றார். பின்னர் அவர் பதிப்பித்த "மொழிவளம்பெற" என்னும் கையேட்டிலும், அதனை மீள் பிரசுரம் செய்திருக்கிறார்.

அதில். "Note:- Of the Kural couplets, translation in English is available only for five. These are published for the first time now. Our sincere thanks are due to Sri Aurobindo Ashram, Pondicherry. The editor of this book personally received them from the archives a few years ago"[7] என்னும் குறிப்பும் தரப்பெற்றிருக்கிறது.

அந்நூலுள் இடம்பெற்ற திருக்குறள்கள் மூலமும், அரவிந்தர் மொழி பெயர்த்த ஆங்கில வடிவமும் பின்வருமாறு-

THIRUKKURAL BY THIRUVALLUR

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள்

1. அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

Alpha of all letters the first
Of the worlds the original Godhead the begining.

2. கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

What fruit is by learning if thou adore not
The beautiful feet of the Master of luminous wisdom?

3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

When man has reached the majestic feet of Him whose walk is on flowers
Long upon the earth is his living.

4. வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

When man has come to the Feet of Him who has neither
wants not wanting Nowhere for him is affiction.

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு.

Night of our stumbling twixt virtue and sin not for him is
The soul in the glorious day of God's reality singing.

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்.

In the truth of his acts who hast cut the objects from the gates of the sences
Straight if thou stand, long shall be thy fullness of living.

7. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

Not to the feet arriving of the one with whom none can compare,

Hard from the heart to dislodge its sorrow.

8. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

Not to the feet of the Seer, to the sea of righteousness coming,
Hard to swim is this different ocean.

9. கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத்தலை.

Lo, in a sense unillumined no virtue is, vainly is lifted,
The head that fall not at the feet of the eightfold in Power, the Godhead.

10. பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேராதார்.

Some are who cross the giant ocean of birth; but he shall not cross it
What has touched not the feet of the Godhead.

வான்சிறப்பு (RAIN)

1. விண்நின்று பொய்ப்பின் விரிநீர் வியன்உலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

If quite the skies refuse their gift
Through this wide world

FAMINE shall do its worst these creatures.

2. விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது.

If one drop from heaven falls not,
Here
Hardly shalt thou see one head of green grass
peering.

3. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு ஈண்டு.

If the heavens remain dry,
To the gods here in Nature
How shall be given The Splendour
of worship?

4. தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்காது எனின்.

If the heavens do not their work,
In this wide world
Giving is finished, austerity ended.

5. நீர்இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

The world cannot live without its waters,
Nor conduct be at without
The rains from heavens.

சில குறிப்புகள்

அரவிந்தரின் முழுநூல் தொகுப்பினையும் வெளியிட்ட புதுவை அரவிந்தர் ஆசிரமம், முதல் 10 குறட்பாக்களை மட்டுமே வெளியிட்டிருந்தது. ஸ்ரீஅரவிந்தர் நூற்றாண்டுத் தொகுதியில் 7ஆம் தொகுப்பில் அந்தப் பத்துக்குறட்பாக்களும் திருக்குறள் வைப்புமுறையில் இல்லாமல் வரிசை மாற்றி வைக்கப்பட்டிருந்தது. பின்னர் வந்த புதிய பதிப்பில் மூல நூலில் உள்ளதுபோல, அது மாற்றியமைக்கப்பெற்றதோடு, வான்சிறப்பு அதிகாரத்தின் மொழிபெயர்ப்புப் பாடல்களும் இணைக்கப்பெற்றிருக்கின்றன.

ஆழ்வார் பாசுரங்களை மொழிபெயர்த்தவர், அரவிந்தரா, பாரதியாரா, என்று எழுந்த விவாதம் திருக்குறள் குறித்து எழவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. பாரதியாரின் மொழிபெயர்ப்புப் பகுதியில் எந்தக் குறட்பாக்களும் இணைக்கப்பெறவில்லை. ஆக, இம்மொழிபெயர்ப்பு பாரதியார் உதவியுடன் தமிழ் பயின்ற அரவிந்தரின் தனியாக்கமாகவே எடுத்தாளப்பெறுகின்றது. திருக்குறள்மீது அரவிந்தர் கொண்டிருந்த ஈடுபாடும் இதன்வழி உறுதிப்பாடடைகின்றது.

சான்றெண் விளக்கம்

1. ரா.அ.பத்மநாபன்(தொ.ஆ), பாரதியைப்பற்றி நண்பர்கள், பக்.102-106.

2. பாரதியார், பாரதியார் கவிதைகள்.செந்தமிழ்நாடு-7, ப.164.

3. ஸ்ரீஅரவிந்தர், இந்தியாவின் ஆன்மா, பக்.84-85.

4. பாரதியார் கவிதைகள்.ப.

5. ஸ்ரீஅரவிந்தர், இந்தியாவின் ஆன்மா, பக்.86-87.

6. முனைவர் ச.சுப்புரத்தினம், அரவிந்தரும், பாரதியாரும், மே.கா, ப.28.

7.இரா.மீனாட்சி, ஐ.மனு (தொ.ஆ), மொழிவளம்பெற, ப.17.



அரவிந்தர் போற்றிய ஔவையார்

வாழ்வியல் உண்மைகளைக் குறுகிய வடிவில் எளிமையாகவும், தெளிவாகவும் சொல்வதில் வல்லவர்கள் திருவள்ளுவரும், ஔவையாரும். தமிழ்மக்களின் வாழ்வியல் நிலையில் ஔவையாருக்குத் தனித்த இடமுண்டு. அவர் மக்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றவரும் கூட.

"அவ்வையார் என்னும் புலவருடைய பெயர் தமிழ்நாட்டில் படித்தவர் படிக்காதவர் எல்லோரும் அறிந்து பாராட்டும் பெயர் ஆகும். தாய் போன்ற மூத்த பெண்மணி என்னும் பொருள் உடைய அந்தச் சொல், தமிழ்ப் பெண்பாற்புலவர்களுள் சிலரைக் குறிக்க வழங்கியது"[1] என்கின்றார் மு.வரதராசனார்.

ஔவையார் ஒருவரல்லர்

தமிழ் இலக்கியத்தில் சுட்டப்பெறுகின்ற ஔவையார் ஒருவரல்லர். பல ஔவையார்கள் இருந்திருக்கின்றனர். "சங்க காலப் புலவர்களுள் பெண்புலவர்கள் முப்பதுபேர் இருந்திருக்கிறார்கள். அவர்களுள் அவ்வையாரும் ஒருவர். பாரி அதியமான் என்னும் தலைவர்களோடும் சேரசோழ பாண்டியர்களோடும் பழகியவர்... சங்ககாலத்துப் புலவராகிய அந்த அவ்வையார்க்கு அடுத்தாற்போல், நாயன்மார்களின் காலத்தில் அவ்வையார் ஒருவர் சிவ பக்தி உடையவராக வாழ்ந்ததாகக் கூறும் கதை

உண்டு...கம்பர் ஒட்டக்கூத்தர் முதலானவர்களின் காலத்தில் வாழ்ந்த அவ்வையார் ஒருவர், தமிழரின் நெஞ்சில் கிழப் பாட்டியாகப் போற்றப்படுகிறார். பெரியவர்களோடு சிறியவர் களும் பயன்கொள்ளும் வகையில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் உள்ளிட்ட நீதி நூல்களை எழுதியவர்... பாரதியாரும் இவருடைய முறையைப் பின்பற்றி, இவர் நூலின் பெயரையே போற்றி, புதிய ஆத்திசூடி இயற்றினார்”[2]

இவர்கள்போக. இன்னும் ஒரு ஔவையார் இருக்கின்றார். அவர் ஞானியாகத் திகழ்ந்தவர். “ஞானக் குறள் என்னும் நூல் ஒன்று அவ்வையார் பெயரால் வழங்குகிறது. இதுவும் நடை முதலியவற்றால் வேறாக உள்ளது. முன்னைய அவ்வையாரின் பரந்த உலகியல் அறிவும் எளிய மக்களின் வாழ்வோடு இயைந்த இரக்க உணர்வும் இந்த நூலில் புலப்படவில்லை. உயிரின் தன்மையும் யோகநெறியும் பற்றித் தெளிந்த ஞானியின் அனுபவம் இந்நூலில் புலப்படுகிறது. இதைப் பாடிய புலவர் வேறோர் அவ்வையாராக இருக்கலாம். விநாயகரகவல் என்ற நூலும் ஓர் அவ்வையார் பெயரால் வழங்குகிறது. இது விநாயகர் வழிபாட்டிற்காகச் சிலர் பயன்படுத்தும் நூல். பக்திச்சுவை கூடியது. இதுவும் அவ்வையார் பெயர் பூண்ட வேறோர் புலவர் பாடியது எனலாம்”[3]

ஆக, இத்துணை ஔவையார்களுக்கு மத்தியில் அரவிந்தர் போற்றிய ஔவையார் யார் என நோக்குமுன்பு அவரது ஔவையார் பற்றிய பதிவையும், அரவிந்தருக்குத் தமிழையும், தமிழ்ச்சான்றோர்களையும் அறிமுகப்படுத்தி வைத்த பாரதியார் காட்டும் ஔவையார் யார் என்பதையும் தெரிந்து கொள்வது நல்லது.

அரவிந்தர் போற்றிய ஔவையார்

அரவிந்தர் திருவள்ளுவரைப் போற்றியதுபோலவே, ஔவை யாரையும் போற்றுகின்றார். இந்தியக் கவிதைகள் பற்றிய தமது மதிப்பீடொன்றில் குறிப்பிடும்போது, “.....துளசிதாசரின் இராமாயணமும், இராமப்பிரசாத், தேசாந்திரிகளான வைணவ பக்தர்கள், பாலுக்கள் (Bauls). ஆகியோருடைய பாடல்களும், இராமதாசரின், துக்காராமின் கவிதைகளும், திருவள்ளுவர், பெண்பால் கவியாகிய ஔவை இருவரின் நீதி சூத்திரங்களும், தென்னிந்திய அடியார்கள், ஆழ்வார்களின் தெய்விகப்

பாசுரங்களும் எல்லா வகுப்பு மக்களாலும் போற்றப்பெற்றன. அவற்றில் அடங்கியுள்ள சிந்தனைகள், அவை வெளியிட்ட உணர்ச்சிகள் நாட்டுமக்களின் வாழ்க்கையில் ஆழப் பதிந்தன"[4] என்றும் சுட்டுகின்றார். இது அரவிந்தரின் பார்வை. இனி பாரதியார் கூறும் செய்திகளைக் காணலாம்.

பாரதியார் பார்வையில் ஔவையார்

"அதிகப்படிப்பில்லாதவர்களும், படிப்பே தெரியாதவர்களுமாகிய ஜனங்கள் ஆண் பெண் அனைவருக்கும் ஔவையாரின் நீதியே வழிகாட்டி. தமிழ் ஜனங்களில் பெரும்பான்மையோருக்குச் சுமார் சென்ற இரண்டாயிரம் வருஷங்களாக ஔவையாரின் நீதியே பிரமாணமாக நடைபெற்று வருகின்றது. ஸாமான்ய ஜனங்கள் ஔவை நீதியைக் கொண்டாடி வருகிறார்களெனில், கற்றோரும், அரசரும், அதைப்புறக்கணித்து வந்தார்களென்று கருதுதல் வேண்டா. கற்றோருக்கும் அரசர்க்கும் தமிழ்மக்கள் எல்லோருக்கும் குறள், நாலடியார் முதலிய நூல்களைக் காட்டிலும் ஔவையின் நூல்களில் அகப்பற்றுதலும், அபிமானமும் இருந்து வருகின்றன. ஆனால், இந்த நீதி நூல்கள் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னேயிருந்த முதல் ஔவையால் இயற்றப்பட்டன அல்லவென்றும் சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னேயிருந்த இரண்டாம் ஔவையால் செய்யப்பட்டன என்றும் ஒரு கட்சியார் சொல்லுகிறார்கள்"[5] என்று இந்த வாதத்தைச் சற்றே தெளிவு செய்கின்றார் பாரதியார். அவர் மேலும் எழுதுகிறபோது. சங்ககால ஔவையாரையும் ஞானக் குறள் தந்த ஔவையாரையும் ஒருங்கிணைத்தே பார்க்கின்றார் என்பது புலப்படுகிறது.

ஆத்மஞானி ஔவையார்

"ஔவையார் வெறுமே நூலாசிரியர் மட்டுமல்லர். அவர் காலத்திலேயே அவர் ராஜநீதியில் மிகவும் வல்லவரென்று தமிழ்நாட்டு மன்னர்களால் நன்கு மதிக்கப்பெற்று ராஜாங்கத் தூதில் நியமனம் பெற்றிருக்கிறார். மேலும், அவர் சிறந்த ஆத்மஞானி; யோகசித்தியால் உடம்பை, முதுமை, நோவு, சாவுகளுக்கு இரையாகாமல் நெடுங்காலம் காப்பாற்றி வந்தார்.

"மாசற்ற கொள்கை மனத்தமைந்தக்கால்
ஈசனைக் காட்டும் உடம்பு"

அதாவது, ஹிருதயத்தில் சுத்தமான, பயமற்ற, கபடமற்ற, குற்றமற்ற, பகைமையற்ற, எண்ணங்களை நிறுத்திக்கொண்டால், உடம்பில் தெய்வத்தன்மை, அதாவது சாகாத் தன்மை, (அமரத்தன்மை) விளங்கும் என்றும் பொருள்படுவது. இந்தக்குறள் பாடியவர் ஔவையார். இவர்தாமே நெடுந்தூரம் இக்கொள்கைப் படி ஒழுகியவரென்பது இவருடைய சரித்திரத்தில் விளங்குகிறது''[6]

அவர் மேலும் எழுதுகிறார்- "மகிமை பொருந்திய ஆத்ம ஞானியாகிய ஔவையார் இயற்றியிருக்கும் ஔவைகுறள் என்ற ஞானநூல் தமிழ்நாட்டு யோகிகளாலும், சித்தர்களாலும் உபநிஷத்துக்களுக்குச் சமானமாகப் போற்றப் பெற்று வந்திருக்கிறது. யோக சாஸ்திரத்துக்கும் மோக்ஷ சாஸ்திரத்துக்கும் இந்நூல் முக்கிய பாடங்களில் ஒன்றாகக் கருதத்தக்கது. மேலும், யோகாநுபூதி ஸம்பந்தமாகப் பிறர் எழுதுமிடத்தே மிகவும் கடினமும் அஸாதாரணமுமாகிய சொற்களையும் வாக்கியங் களையும் வழங்குதல் இன்றியமையாததென்ற கருத்துடன் வேலை செய்திருக்கிறார்கள். ஔவையின் நூலோ மிகத் தெளிந்த, மிக எளிய நடையில் எல்லா ஜனங்களுக்கும் பொருள் விளங்கும் படியாக எழுதப்பட்டிருக்கின்றது. 'சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல்' என்பது கவிதைத் தொழிலில் மிகவும் உயர்ந்த தொழில். இதில் ஔவை ஒப்பற்றவள். இத்துடன் மிகவும் எளிய நடையில் சொல்வதாகிய அற்புதத் தொழிலை உயர்ந்த கவியரசர்களே தெய்வீகத் தொழில் என்றும், தெய்வ சக்தி பெறாத சாதாரணக் கவிகளுக்குச் சாத்தியப்படாத ஔவை நிகரற்ற திறமை வாய்ந்தவள். புருஷார்த்தங்கள், அதாவது, மானிட ஜன்மம் எடுத்ததினின்றும் ஒருவன் அடையக்கூடிய மிக உயர்ந்த பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில் வீடு என்று சொல்லப்படும் முக்தி வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதா கையால், அதனை விரித்துக்கூற முயலாமல், அதற்குச் சாதனமாகிய தெய்வபக்தியை மாத்திரம் முதல் அத்தியாயத்தில் கூறி நிறுத்தி விட்டு, மற்ற மூன்று புருஷார்த்தங்களையும் விளக்கி, திருவள்ளுவ நாயனார் முப்பால் (மூன்று பகுதிகளையுடையது) என்ற பெயருக்கு திருக்குறள் செய்தருளினார். ஆயிரத்து முன்னூற்று முப்பது சிறிய குறட்பாக்களில் நாயனார், அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலையும் அடக்கிப் பாடியது மிகவும் அபூர்வமான செய்கை என்று கருதப்பட்டது. இது கண்ட ஔவைப்பிராட்டி வீட்டுப் பாலையும் கூட்டி நான்கு புருஷார்த்தங்களையும் ஒரே சிறிய வெண்பாவுக்குள் அடக்கிப் பாடினார். இந்த ஆச்சரியமான

வெண்பா பின்வருமாறு-

"ஈதலறம் தீவினைவிட்டீட்டல் பொருள் எஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித் - தாதரவு
பட்டதே இன்பம் பரனை நினைந்திம் மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"[7]

என்று குறிப்பிடும் பாரதியார் அப்பாடலுக்கான நெடிய விளக்கவுரையும் கொடுத்து மேலும் எழுதிச்செல்கிறார். ஆக,இந்த விளக்கங்களைக் கொண்டு நோக்கும்போது, இங்கு அரவிந்தரால் சுட்டப்பெறும் ஔவையார், சங்ககால ஔவையார் அல்லர். காரணம் சங்க இலக்கியம் குறித்த பதிவுகள் ஏதும் அரவிந்தரின் எழுத்துகளில் இருப்பதாக அறிய முடியவில்லை. மேலும், தமிழ் தொடர்பான செய்திகளை அரவிந்தருக்கு வழங்கி வந்த பாரதியாருக்கும், சங்க இலக்கியத்தைப் பொறுத்த அளவில் புறநானூற்று வீரமும், நாட்டுப்பற்று ஆவேசமும் கொண்ட இலக்கியம் என்கின்ற நிலையிலேயே அறிமுகம். உ.வே.சா.வின் பெருமுயற்சியால் அவ் இலக்கியங்கள் அச்சேறும் முழுமையைப் பாரதியார் தம் காலத்தில் தரிசிக்க முடியாது போயிற்று. எனினும், தமிழ்ப்புலவர்களின் உரைகளில், மேற்கோள்களில் இடம்பெறும் சங்கப்பாடல் கருத்துகளைப் பாரதியார் பதிவு செய்திருக்கின்றார். (இது குறித்து இந்நூலாசிரியருள் ஒருவரான சேதுபதி எழுதிய 'பாரதியாரின் சங்க இலக்கியப் பதிவுகள்' கட்டுரையில் விரிவாகக் காணலாம்)

ஆனாலும், அரவிந்தருடன் வேத, உபநிடத ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த பாரதியாருக்கு அதனோடு தொடர்புடைய ஞானக் குறள் தந்த ஔவையாரே கவனத்திற்கு வந்திருக்க வேண்டும். அவர் திருவள்ளுவரோடு இணைத்துப் பேசக் கூடியவராகவும், திருவள்ளுவர் தனித்தருளாதுவிடுத்த நான்காம் கருத்தாகிய வீடு பற்றி உரைத்தவராகவும் பாரதியாரால் சுட்டப் பெறுகின்றார்.

நிறைவாக

பக்தி மரபில் கவிஞர்களை வரிசைப்படுத்தும் அரவிந்தர் திருக்குறளின் கடவுள்வாழ்த்துப் பாடலை, பாரதியாரின் துணை யோடு மொழிபெயர்த்து அறிந்து கொண்டதும் இதன் அடிப்படையில்தான். (அவர் வான்சிறப்பு மொழி பெயர்த்ததற் கான காரணம் இன்னும் ஆராயப்படவேண்டியது) எனவே, உபநிஷத்துக்களுக்குச் சமானமான ஞானக்குறள் தந்த ஔவையார்

யோகி ஔவையார்தான். யோக நெறியில் தலைநின்ற அரவிந்தர் போற்றும் ஔவையார் பாரதியாரால் சுட்டிக் காட்டப்பெற்றவர் என்பதையும் இங்கு முடிவாகக் கொள்ளலாம்.

சான்றெண்விளக்கம்

1. மு.வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, ப.180.
2. மேலது, பக்.180-181.
3. மேலது. ப.182.
4. ஸ்ரீஅரவிந்தரும், அன்னையும், இந்தியாவின் ஆன்மா, ப.87.
5. பாரதியார், பாரதியார் கட்டுரைகள், ப.124.
6. மேலது, பக்.124-125.
7. மேலது, பக்.126-127.



அரவிந்தர் போற்றிய ஆழ்வார்கள்

இந்திய சமயங்கள் பலவாகும். எனினும் அவை உணர்த்தும் உண்மை ஒன்றேயாகும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது தமிழ்மந்திரம். இதனை அடியொற்றி அமையும் சமயஞ்சார்ந்த ஆன்மிகம் இந்திய ஆன்மிகமாக விளங்குகின்றது. இதன் அடிப்படையில் அரவிந்தர் நோக்கில் ஆழ்வார்கள் பற்றிக் காண்பது பொருத்தம்.

இந்திய ஆன்மிகம்

இந்திய ஆன்மிகம் என்பது பற்றி அரவிந்தர் கூறுகின்றார்

"இந்தியச் சிந்தனையின் சிறப்புவாய்ந்த அம்சம் யாதெனில் எங்கும் பொருள்களின் புறத்தோற்றங்களையும். சக்திகளையும் தாண்டி அவற்றின் ஆன்மாவை அது தேடுகிறது. அதன் வாழ்க்கைச் சக்தி (will in life)யின் தனிப்பண்பு என்னவென்றால், ஆன்ம உண்மையைக் கண்டு அவ்வுண்மையில் வாழாதவரை தனது இலட்சியம் நிறைவேறியதாக அது கருதுவதில்லை. பூரணத்தைப் பிடித்துவிட்டதாக எண்ணுவதில்லை. இடைநிலைகளில் கிடைக்கக்கூடிய திருப்திகளை நிரந்தரமாக ஏற்றுக் கொள்வ தில்லை. உலகையும் இயற்கையையும் இருக்கையை (existence) யும் பற்றிய இந்தியக் கருத்து சடப்பான்மை கொண்டதன்று. அது உளவியல்பான்மை, ஆன்மிகப்பான்மை கொண்டது. பரமான்மா, தனியான்மா, உணர்வு இவை செயலற்ற சடத்தையும், உணர்வற்ற சக்தியையும்விட மேலானவை மட்டுமல்ல. அவற்றிலிருந்தே கீழ்படியிலுள்ளவையெல்லாம் தோன்றியுள்ளன. எல்லா சக்தியுமே மறைவாயுள்ள ஒரு சித்பொருளின் (spirit) ஆற்றலும் சாதனங் களுமே ஆகும். உலகத்தைத்தாங்கி நிற்கும் சக்தி உணர்வுள்ள ஓர்

இச்சாசக்தி ஆகும்(conscious will); இயற்கை அதன் செயற் கருவியே. சடமானது தன்னுள் மறைந்து நிற்கும் உணர்விற்கு உடல் அல்லது களம் போன்றது. இத்தூலப் பிரபஞ்சம் சித்பொருளின் ஒரு வடிவம், ஓர் இயக்கம். மனிதனும் சடத்தில் தோன்றிய ஓர் உயிரும் மனமுமாய் சட இயற்கைக்கு நித்திய அடிமையாய் இருப்போன் அல்லன்; உயிரையும் உடலையும் ஆளும் ஆன்மா அவன். இருக்கை (existence) பற்றிய இந்தத்தெளிந்த நம்பிக்கை, அதை வாழ்வில் அமைக்கும் முயற்சி. இந்த உயர்ந்த முயற்சியின் சாதனை, அதுபற்றிய சாஸ்திரம், முடிவில் சடத்திலும் உயிரிலும் கட்டுண்ட மனச்சிறையைத் தகர்த்து உயர்ந்ததோர் ஆன்மிக உணர்வில் சிறகு விரிக்க ஆர்வமுறுதல் இவையே இந்தியப் பண்பாட்டின் ஆழ்ந்த உட்கருத்து. இந்திய ஆன்மிகம் எனப் பலராலும் பேசப்படுவது இதுவே".[1]

இந்திய ஆன்மிகமும் இந்திய மதங்களும்

இந்திய ஆன்மிகம் போலவே, இந்திய மதங்களும் தனித்தன்மை யானவை. அவற்றை மேலைநாட்டு அறிவினைக் கொண்டு அளக்கவியலாது என்பதை அனுபவவாயிலாய் உணர்ந்த அரவிந்தர், வேத, உடநிடதச் சாரங்களை உள்வாங்கி, இந்தியாவின் பெருமதங்களுள் முக்கியமானவையான சைவ, வைணவக் கோட்பாடுகளை மனக் கொண்டு எழுதுகின்றார்.

"கடவுளின் திவ்ய மூர்த்தமும், மனிதனுடன் அவன் கொள்ளும் மனித உறவுகளும் மிகச் சக்திவாய்ந்த உண்மையான சைவ வைணவ மதங்களால் மிக அழுத்தமாக வலியுறுத்தப்படுகின்றன. ஆனால், இக்கருத்து மட்டுமே அம்மதங்களிலுள்ள எல்லாம் ஆகிவிடாது. மேலும், அவை போற்றும் திவ்ய மூர்த்தம் மேலை நாட்டினரின் குறுகிய, மனிதனை மிகைப்படுத்திய தனிப்பட்ட கடவுளன்று. இந்திய மதத்தை மேலை நாட்டு அறிவுக்கு எட்டிய எந்த இலக்கணம் கொண்டும் விளக்க முடியாது. அதன் முழு வடிவில் அது எல்லாவிதமான ஆன்மிக அனுபவங்கள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றின் சுதந்திரமான, தாராளனமான ஒன்றிப்பாகும். உண்மையை அதன் பல பக்கங்களிலிருந்தும் அது நோக்குகிறது. எந்த ஒரு பக்கத்தையும் அது விலக்குவதில்லை. தனக்கென்று குறிப்பிட்ட எந்தப் பெயரையும் அது சூட்டிக் கொள்வதில்லை. குறுக்கும் எந்த வேறுபாட்டாலும் அது தன்னைத் தளையிட்டுக் கொள்ளவில்லை. அதில் அடங்கியுள்ள பல சம்பிரதாயங்களுக்கும் உட்பிரிவுகளுக்கும் தனித்தனிப்

பெயர்களை அனுமதித்தாலும், யுகம் யுகமாக அது தேடிய பிரம்மனைப்போலவே, அதுவும் பெயரும் வடிவும் அற்றதாய், உலகளாவியதாய், அனந்தமாய் உள்ளது. அதன் வழிவழி வந்த மறைநூல்களாலும், சம்பிரதாயங்களாலும், குறியீடுகளாலும் பிற சமயங்களிலிருந்து பளிச்சென்று வேறுபிரித்து அறியும்படியாக இருந்த போதிலும் அதன் சாராம்சத்தில் அது ஏதோ ஒரு கோட்பாட்டைப் பின்பற்றும் சமயமாக அல்லாமல், விரிந்த, பல முகங்கொண்ட, எப்பொழுதும் ஒற்றுமைப்படுத்துகிற, எப்பொழுதும் முன்னேறிக் கொண்டும் தன்னை விரிவுபடுத்திக் கொண்டும் இருக்கிற ஓர் ஆன்மிகப் பயிற்சி முறையாகவே உள்ளது".[2]

எல்லையற்ற பேராற்றல் கொண்ட பரம்பொருளைச் சிவன் எனக் கொண்டாடும் சைவர்களும், திருமால் எனப்போற்றும் வைணவர்களும் அதனை வரையறுக்கும் நிலை பெரும்பாலும் ஒன்றாகவே அமைகின்றது.

"**உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன்**" என்று தொடங்கும் நம்மாழ்வார் பாசுரமும், அப்பர்தேவாரப் பாடல்கள் மற்றும் மாணிக்கவாசகர்தம் வாசகங்களும் இறைவனின் இத்தன்மையை இனிது விளக்குவன. இப்போக்கில் சாக்த வழிபாட்டையும் இணைத்துக் கொள்ள முடியும். சாக்த வழிபாடு உடைய வங்க யோகியான அரவிந்தர், இந்த அடிப்படையிலேயே ஒப்புமை கண்டுபின்வருமாறு எழுதுகின்றார். "வைணவர்கள் வணங்கும் அன்பின் மூர்த்தியும், சாக்தர்கள் வணங்கும் சக்தித் தெய்வமும், இருவேறு தெய்வங்களாகத் தோற்றினாலும், உண்மையில் அவை ஒரே அனந்த மூர்த்தியின் இரு வடிவங்களே".[3]

அரவிந்தர் நோக்கில் ஆழ்வார்களும் நாயன்மார்களும்

மேனாட்டுப்படிப்பின்போது மேற்கத்திய மொழிகளில் புலமையும், அதன் சமய ஒழுகலாறுகளில் ஞானமும் பெற்றவர் அரவிந்தர். அவரது இந்திய வருகைக்குப் பின்னர் கிடைத்த இந்திய தத்துவ தரிசனமும், சிறையில் வாசு தேவனைத் தரிசித்த அனுபவமும் கூடி, அவரை ஒரு யோகியாக மலர்விக்கத் தொடங்கியது. அதன்பின்னர் தொடங்கிநிலை கொண்ட, புதுவை வாழ்வில், பாரதியார் நட்பில் வேத உபநிடத ஆராய்ச்சிப் போக்கோடு தமிழ்மொழிப் பயிற்சியும் சேர்ந்து கொண்டது. தீவிரத்தேடலுடன் இந்தியமொழிகளுக் கிடையே உள்ள பக்திப் பாடல்களை ஒருங்கிணைத்து நோக்குகின்ற அரவிந்தர், "... உருது

மொழியிலும், அதைவிடக் குறைந்த அளவில் தமிழிலும், பிற தென்னிந்திய மொழிகளிலும் மட்டுமே புலமை மனப்பாங்கும் அல்லது இடைக்காலச் சமஸ்கிருதப் பேரிலக்கியங்களின் பாங்கும் வழக்கும் அதிகச் செல்வாக்கும் பெற்றுள்ளன. ஆனால், இங்கும் நாயன்மார்கள், ஆழ்வார்களின் பாடல்களில் காணப்படுவது போல் பொதுமக்கள் விரும்பும்படியான அம்சங்கள் கணிசமான அளவில் உள்ளன"[4] என்று எழுதுகின்றார்.

இவற்றிற்கிடையில் தமிழின் பக்தி இலக்கியச் செழுமையை, அதன் சிறப்பை நன்குணர்ந்த அரவிந்தர், "தென்னிந்திய இலக்கியத்தில், குறிப்பாக, சைவ நாயன்மார்களின் பாடல்களில், பெரும்பாலும் ஆழ்ந்த தத்துவக் கருத்துகள் பக்தியுடன் கலந்துள்ளன. அதோடு, அவை பழமையான சமஸ்கிருதக் கவிதை போல் வீறு கொண்ட சொற்றொடர் களாலும் உருவங்களாலும் உயிரூட்டப்படுகின்றன"[5] என்று குறிப்பிடுகின்றார். எனினும், பாரதியார் துணைக்கொண்டு இவர் ஆழ்வார்கள் பாசுரங்களை மொழிபெயர்த்துத் தந்ததுபோல் சைவசமய நாயன்மார்களான சைவசமயக் குரவர்களின் தேவார, திருவாசகப் பாடல்களை மொழிபெயர்க்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. ஆனால், அவற்றின் சாரங்களை உள்வாங்கியிருக்கின்றனர். அவை தமிழர்தம் கோயில்கலைகள் குறித்து அரவிந்தர் எழுதும்போது சிறப்பான நிலையில் இடம்பெறுகின்றது என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். பாரதியார் அரவிந்தரின் வாசிப்புகளைப் பற்றி வ.ரா. குறிப்பிடுவதாவது-

"சில நாட்களில் ஸ்ரீஅரவிந்தர் ரிக்வேதப் பாடல்களுக்கு விளக்கம் சொல்வார். பாரதியார் அவற்றை மிகுந்த ஆவலுடன் கேட்பார். வேதங்களின் உண்மையான பெருமையை பாரதியார் ஸ்ரீஅரவிந்தரிடமிருந்தே தெரிந்து கொண்டார் என்று சொல்லலாம். வேதரிஷிகளின் கவிதைகளைப் பற்றி அவர் அருமையான கட்டுரைகள் சில எழுதியுள்ளார். அவருடைய தத்துவப் பாடல்களில் ஆங்காங்கே ஆழ்ந்த வேதக் கருத்துகளை வைத்திருக்கிறார். வேத தர்மத்தைப் பற்றிப் பாடுவதற்கான ஆவேசம் அவருக்கு ஸ்ரீஅரவிந்தரின் பழக்கத்தால் கிடைத்தது என்று ஊகிப்பது தவறாகாது"[6] இக்குறிப்பிடுப்பினை மெய்ம்மையாக்குகின்றது நொளினி காந்த குப்தாவின் குறிப்பு.

நொளினி என்பவர், பாரதியாருடன் அரவிந்தர் நடத்தும் வேத வகுப்புகளில்பங்கேற்றவர். அந்த அனுபவத்தைப் பின்வருமாறு



பதிவு செய்கின்றார். "ஸ்ரீஅரவிந்தர் வந்து மேசை முன் அவருடைய ஆசனத்தில் அமர் வார். தமிழ்க்கவி சுப்பிரமணிய பாரதியும் நானும்தான் இப்பாடல்களில் அதிக ஆர்வம் கொண்டிருந்தோம். ஸ்ரீஅரவிந்தர் ரிக் வேதத்தி லிருந்து ஒரு பாடலை எடுத்துக் கொண்டு முதலில் உரக்கப் படிப்பார். பிறகு ஒவ்வொரு சொற்றொடருக்கும், ஒவ்வொரு வரிக்கும் பொருள் சொல்லுவார். முடிவில் முழுப் பாடலையும் மொழிபெயர்த்துச் சொல்வார். நான் குறிப்புகள் எடுத்துக் கொள்வேன். ரிக் வேதத்திலுள்ள பல சொற்கள் விஷயத்தில் அவற்றின் மூலப் பொருள் சந்தேகமாக இருக்கின்றன. அவற்றில் கருத்து வேறுபாட்டிற்கு இடமுண்டு. அப்படிப்பட்ட சொற்களுக்குப் பொருள் தாம் சொல்லும்போது தாம் தரும் பொருள் தற்காலிகமானது. இந்தச் சொல் வரும் இடங்களை யெல்லாம் பார்த்துத்தான் அதன் பொருள் நிச்சயிக்கமுடியும் என்று ஸ்ரீஅரவிந்தர் சொல்வார். வேதத்திற்கு விளக்கம் கொடுக்கும் போது அவர் பின்பற்றும் முறை இது. மூலபாடத்தைப் படித்த வுடனே, அக ஒருமுனைப்பின்மூலம் அதன் உண்மையான பொருளை 'அந்தர் ஞான' த்தால் (Intution) அறிந்து கொள்வார். பிறகு அதற்கு அறிவு ஏற்கக்கூடிய முறையில், தேவையான மாற்றங்களுடன் விளக்கம் கொடுப்பார்"[7].

இத்தகு சூழல்களில் வேத, உபநிடதங்களோடு தொடர்புடைய தமிழ்ப்பாடல்களைப் பாரதியார் அரவிந்தருடன் பகிர்ந்து கொள்ள நேர்ந்திருக்கும். அதன் அடிப்படையில் அரவிந்தர் தமது அந்தர்ஞானத்தால் அப்பாடல் செய்திகளை, அவற்றுள் ஆழ்ந்திருக்கும் கவியுளத்தை அடையாளம் கண்டு தம் எழுத்துகளில் நிலைப்படுத்தியிருக்க வேண்டும்.

அந்த வகையில், வேதம் தமிழ் செய்த ஆழ்வார்களைப் பற்றிய அறிமுகமும் அவர்களது பாசுரங்களும் பாரதியார் வழி பெற்ற அரவிந்தர் அப்பாடல்களை ஆங்கிலமொழி வாயிலாக உலகறியச்

காரணம், "ஆழ்வார்களும் நாயன்மார்களும் பழைய அகத்திணை மரபைத் தழுவி நாயகி பாவனையில் தெய்வத்தின்பால் கொண்ட மானுடக் காதலைப் பாடியுள்ளனர். வேதங்களையும், உபநிடதங்களையும் கொண்ட வடமொழிக்கு இணையாகத் தமிழைத் தெய்வமொழியாக உயர்த்தி உணர்ச்சிப்பெருக்குடன் ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடியுள்ளனர்"[8].

ஆழ்வார்கள் பெயர்க்காரணம்

"திருமாலையே பரம்பொருளாக ஏத்தி வழிபடும் வைணவ சமயப் பெரியோர், ஆழ்வார், ஆசார்யார் என இருவகைப்படுவர். இவர்களுள் ஆழ்வார்கள் எனப்படுவோர் உள்ளடங்காது. கசிந்த - தம் இறையன் பையும் அனுபவத்தையும் (Mystical experience of God) உலகை உய்விப்பதே நோக்கமாக ஈரத்தமிழிற் பாசுரங் களாகப் பாடி வெளிப்படுத்தியவர்கள் ஆவர். ஆசாரியர்களோ, ஆழ்வார்களின் அடிச்சுவட்டில் நடந்து வைணவ சித்தாந்தத்தை நடைமுறையாக்கி வளர்த்த மெய்யன்பர்கள் ஆவர்... ஆழ்வார் என்னும் சொல்லுக்கு, இறைவனுடைய கல்யாண குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுவோர் என்பது பொருளாகும். வேறொன்றில் கண்வையாதே பகவத் குணங்களில் ஆழங்காற்பட்டிருந் தமையால் இவர்களுக்கு ஆழ்வார்கள் என்று பெயராயிற்று என்பர். இவ்வாறன்றி, இறைவனுடைய வடிவழகில் ஈடுபட்டு அழுந்தினவர்களாதலின், ஆழ்வார்கள் எனப்பட்டனர் என்றும், மக்கள் படும் துக்கத்தைக் கண்டு பொறாமல் அத்துக்கத்தில் அழுந்தினவர்களாதலின் ஆழ்வார்கள் எனப்பட்டனர் என்றும் இச்சொல்லுக்குப் பலவகையான பொருள் கூறுவதுமுண்டு"[9]

இவ்வாழ்வார்கள் பன்னிருவர் ஆவர். அவர்கள், பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேக ராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள்நாச்சியார், தொண்டரடிப் பொடியாழ் வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் எனப் பெறுவர். இவர்களுள் பதினொருவரே இறைவனைப் பாடியுள்ளனர். மதுர கவியாழ்வார் திருமாலைப்பாடவில்லை. நம்மாழ்வாரையே அவர் தம்முடைய ஞானாசிரியராக ஏற்றுக் கொண்டு போற்றிப் பாடியிருக்கின்றார்.

இவர்களுள் நம்மாழ்வார், குலசேகராழ்வார், ஆண்டாள் ஆகியோரது பாசுரங்கள் தமிழினின்று மொழிபெயர்க்கப்பெற்று ஆங்கிலத்தில் ஆர்யா இதழில் வெளிவந்துள்ளன. இது பாரதியார்

பெயரிலோ, அரவிந்தர் பெயரிலோ இல்லாமல் நாம் மொழி பெயர்த்தோம் என்பதான குறிப்புடன் பிரசுரமாகியுள்ளன. இம்மொழிபெயர்ப்புப் படைப்புகள் பாரதியார் மொழி பெயர்ப்புப் படைப்புகள் வரிசையிலும், அரவிந்தர் நூல் தொகுப்புகளிலும் இடம் பெறுகின்றன. யாருடைய மொழி பெயர்ப்பு என்பதற்கான ஆய்வும் விளக்கமும் இந்நூலின் தனித்த இயலில் விளக்கப்பெறுகின்றது.

சான்றெண் விளக்கம்

1. ஸ்ரீஅரவிந்தரும்.ஸ்ரீ அன்னையும், இந்தியா ஆன்மா, பக்.24-25.
2. மேலது. பக்.29-30.
3. மேலது. ப.31.
4. மேலது. ப.85.
5. மேலது. ப.85-86.
6. வ.ரா. மகாகவி பாரதியார், ப.
7. ச.மகாலிங்கம், ஸ்ரீஅரவிந்தர், பக்.221-222.
8. ம.பெ.சீனிவாசன், குலசேகராழ்வார், ப.12
9. மேலது. பக்.13-14.



அரவிந்தர் போற்றிய நம்மாழ்வார்

"ஆழ்வார்களுள் நம்மாழ்வாரே ஞானசிகரம் என்று போற்றப் படுகின்றார். ஆகவே, ஆழ்வார்களுக்குத் தலைவராக அவரைச் சிறப்பித்துக் கூறுதல் வைணவ மரபு. அவரே ஆன்மா. ஏனைய ஆழ்வார்கள் உடல் அல்லது சரீரம் என்பர். அவர்கள் அவயவங்கள். இவர் அவயவி. முளைக்கும்போதே பரிமளத்தோடு விளங்கும் திருத்துழாய்போல, இயற்கையிலேயே ஞானபக்தியோடு விளங்கியவர் நம்மாழ்வார். ஏனைய ஆழ்வார்களோ உலக ஞானம் பெற்றவர்களாயிருந்து பிறகு தத்துவஞானம் பெற்றவர்கள். இவ்வேற்றுமை அடியாக நம்மாழ்வாருக்கு இத்தகைய உயர்வு கற்பிக்கப்படுகிறது"[1]

அரவிந்தர் தரும் நம்மாழ்வார் வரலாறு

ஆர்யா இதழில் வெளிவந்த நம்மாழ்வார் பற்றிய அறிமுகவுரை பின்வருமாறு அமைகின்றது.

"ஆகச்சிறந்த வைணவப் புனிதரும் கவியுமான நம்மாழ்வார்" என்ற தலைப்பின்கீழ் அவரது வரலாறு அவரது கவித்துவம் பற்றிய விளக்கங்கள் இடம்பெறுகின்றன.

"மாறன் என்ற இயற்பெயருடைய நம்மாழ்வார் (நமதுபுனிதர்) வைணவர்களிடையே மிகச்சிறந்த புனிதக் கவிஞர்களுள் ஒருவர். தமிழ்நாட்டின் கடைக்கோடியான திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள குருகூரில் பிறந்தவர். அவருடைய தந்தையார் மதுரை பாண்டிய மன்னனுக்குக் கப்பம் கட்டிக் கொண்டிருந்த ஒரு சிற்றரசர். பெயர் காரி. நம்மாழ்வாரின் பிறந்தகாலம் பற்றிய

குறிப்புகளைத் தெரிந்து கொள்ள இயலவில்லை. பாரம்பரிய செவிவழிச் செய்திகளும் நம்பக்கூடியதாக இல்லை. ஏனென்றால், அவை ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. ஆனால் நாம் என்ன தெரிந்துகொள்கிறோம் என்றால் பிறப்பிலிருந்து அவர் பல ஆண்டுகள் ஊமையாக வாழ்ந்து வந்திருக்கின்றார் என்பது தான். நம்மாழ்வார் மிகச்சிறு வயதிலேயே உலகியலைத் துறந்து தம்முடைய காலம் முழுவதையும் கிராமத்திலிருந்த கோயிலின் அருகமைந்த ஒரு புளிய மரத்தடியின் இருந்துகொண்டு இறைவனின் புகழை இசைப்பதிலும் அவனையே தியானிப் பதிலும் நாட்டம் செலுத்தி வந்தார்.

அவருடைய சீடராகிய மதுரகவியாழ்வார் இந்த மரத் தடியில்தான் அவரைத் தரிசித்தார். தெய்வீகக் காதலின் கடலில் மூழ்கியவர்கள் என்னும் பொருள் கொள்ளும் இந்தப் பன்னிரு பெரியவர்களில் மதுர கவியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

செவிவழிக்கதை என்ன சொல்கிறது என்றால் வடஇந்தியாவில் மனம்போன போக்கில் சென்று கொண்டிருந்தபொழுது மதுர கவியின் முன், இரவு வானத்தில் அதிசயமானதோர் ஒளி தோன்றியது. அவ்வொளி தெற்குநோக்கிப் பயணித்ததை அவர் கண்டார். முதலில் இந்தக் காட்சியினைப் பற்றித் தெளிவற்று இருந்தாலும், மூன்று இரவுகள் தொடர்ந்து அந்தக் காட்சி மறுபடியும் தோன்றிக் கொண்டிருந்ததால் அது தனக்குக் கிடைத்த இறை அழைப்பு என்று ஏற்றுக் கொண்டு அந்த ஒளி அடையாளம் அழைத்துச் சென்ற பாதையில் பயணித்தார். பல இரவுகள் தெற்கு நோக்கிச் சென்று வழிகாட்டிய அவ்வொளி குருகூரில் முடிவுற்றது. நம்மாழ்வாரின் ஆன்மீகச் சிறப்புகளைப் பற்றி அறிந்து அந்தஒளி அவரிடம் தான் தன்னை அழைத்துவந்திருக்கிறது என்பதை மதுரகவி அறிந்து கொண்டார். மதுரகவி,நம்மாழ்வார்முன் வந்தபோது அவர் ஆழ் நிலை தியானத்தில் தம்முள் மூழ்கிக் கண்களைஇறுகமூடி அமைதியில் ஆழ்ந்திருந்தார். மதுரகவி, பல மணிநேரங்கள் காத்திருந்தும் அவரது சமாதிநிலை கலைய வில்லை. அருகிலிருந்த ஒரு பெரிய பாறாங் கல்லைத் தரையில் பலமாக எறிந்து உடைத்தார். அந்தச்சப்தம் கேட்டு நம்மாழ்வார் கண்களைத் திறந்துபார்த்து, தொடர்ந்து மௌனம் சாதித்தார்.அவரிடத்தில் மதுரகவியாழ்வார், மறைபொருள் தொனிக்கும் ஒரு கேள்வியைக் கேட்டார். **“செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?”**

அதற்கு நம்மாழ்வார் அதேதொனியில், ''அத்தைத் தின்று அங்கே கிடக்கும்'' என்று பதிலிறுத்தார்.

அதைத்தொடர்ந்து நம்மாழ்வார் தம்முடைய சீடராக அவரை ஏற்று தம்முடனே வசிக்க அருளினார். நம்மாழ்வாருடைய பாசுரங்களை யெல்லாம் அவர் பாடப்பாட மதுரகவியாழ்வார் ஏட்டில் எழுதி வரலானார். நம்மாழ்வார் தம்முடைய 35ஆவது வயதில் திருநாடு எய்தினார். சிலர் திருமாலின் சங்கு, சக்கரம். திருக்கோல் முதலியனவே நம்மாழ்வாராக அவதரித்ததாக நம்பினர். ஆனால், பொதுவாக வைணவர்கள் அவரை விஷ்ணுவின் மறு அவதாரமாகவே நினைக்கும் அளவிற்குப் பெரும் புகழ் எய்தினார். தத்துவார்த்தமாகவும், ஆன்மீக ரீதியாகவும் பார்க்கிற பொழுது அவருடைய கவிதை, தமிழ் இலக்கியத்தில் மிக உயர்ந்த மதிப்பு மிக்க இடத்தைப் பெறுகின்றது. ஆனால், இலக்கியக் கொடுமுடியில் வைத்துப் பார்க்கிறபொழுது ஒரு பெரிய சமத்தன்மை அற்றநிலை காணப்படுகிறது. உலகக் கவிஞர்களின் உன்னதத் தரத்திற்குச் சில பாடல்கள் இட்டுச்செல்கின்றன என்றாலும் சில பாடல்கள் கவிச்சந்தத் திலும், வெளிப்பாடுகளிலும் உணர்வுப் பிழிவுகளிலும் மிக்க செல்வாக்குடன் இருந்தாலும் கவிஞருடைய உன்னதத்திறமை முழுவதையும் வெளிப்படுத்து வதாக இல்லை. ஆழ்ந்த அனுபவங்களைக் குறைவாகவே வெளிப்படுத்துகிறது. திருவாய்மொழி (புனிதக் கூற்று) எனும் அவருடைய மிக உயர்ந்த படைப்பு ஆயிரம் அடிகளுக்கு மேலாக அனுபவம் உள்ளடக்கி உள்ளது, அதில் தெய்விக வாழ்வின் எல்லா நிலைகளையும் அவர் தொட்டிருக்கிறார். மற்றும் ஆன்மீக அனுபவங்களின் அனைத்துக் கூறுகளையும் வெளிப்படுத்தி யிருக்கிறார். தூய்மையான, சாந்தமான இறைக் காரணம், மெய்ம்மை உயர்ந்த சூரியவட்டம், அதிலிருந்து கிடைக்கும் நேரடியான கருத்தாக்கம், சிலநேரங்களில் தன்னை மறந்த நிலையிலும், சிலநேரங்களில் செறிந்த ஆழ்ந்த இறைக்காதல் அனுபவங்களிலும் பாய்ந்து செல்லும் ஜீவனுள் கிடைக்கும் திருக்காட்சியில் பேசும் கடவுளின் திருமுக அழகு,இறுதி வெற்றி அதில் ஒன்றித்தல், இரண்டறக்கலத்தல் அனுபவம் ஆகிய யாவும் கிடைக்கின்றன.

நானும் என் தந்தையும் ஒருவரே என்று இவைபோன்ற தொடர்களை எளிமையாக, ஆனால் ஆற்றலுடன் வெள்ளமெனப் பெருக்கெடுத்து ஓடும் பாடல் வரிகளில் மென்மையையும், சத்தியத்தையும் குழைத்துச் சொல்கிறார். நமது உன்னத ஆழ்வாரின் கவிதையின் சிறந்த

எடுத்துக்காட்டாக இங்குச் சில வரிகளை நாம் மொழிபெயர்த்துத் தருகிறோம். ஆனால், மொழிபெயர்ப்பில் அதன் முழுமை சற்றே சேதாரம் ஆகியிருக்கின்றது. முற்றிலும் வேறுபட்டிருக்கிற ஆங்கில மொழியில், மேதைமைமிக்க தமிழ் மொழியிலிருந்து இம்மொழிபெயர்ப்பைச் செய்யும்பொழுது கடினமாக இருந்தது என்பது உண்மை"[2] இப்பகுதியின் ஆங்கில மூலம் இதன் பின்னிணைப்பில் இடம்பெறுகின்றது. (காண்க. பின்னிணைப்பு - 14)

பாரதியாரின் உதவியுடன் அரவிந்தர் செய்த மொழிபெயர்ப்பு என்பதாக அறியப்பெறும் இப்பாசுரங்கள் தெரிவுசெய்யப் பெற்றதற்கான காரணங்களை அறிய, பாரதியாரின் புதல்வி சகுந்தலாபாரதி எழுதிய குறிப்பொன்று இனிது உதவும்.

"என் தந்தையாருக்கு, குவளைக்கண்ணன் என்றொரு சீடன் உண்டு. அவர் அதிகாலையில் எழுந்ததும், வைஷ்ணவ கோயில் பாணியில், திருவாய்மொழி பாடுவார். "கிருஷ்ணா, நீ காலையில் திருவாய்மொழி பாடுவதில் எனக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால், ஏனடா, திருவாய்மொழி அழுகிறாய்?" என்று ஒரு நாள் என் தந்தை அவரைக் கோபித்தார். குவளைக்கிருஷ்ணன், உடனே, "ஸ்வாமி, தாங்கள் திருவாய்மொழி பாடவேண்டும். நான் கேட்டு ஆனந்திக்க வேண்டும்!" என்றார். என் தந்தைக்குத் திருவாய்மொழிப் பாடல்கள் பாடமில்லை. குவளைக்கிருஷ்ணன் எங்கோ போய் ஒரு பெரிய புஸ்தகம் கொணர்ந்து தந்தார். "பொலிக பொலிக போயிற்று வல்லுயிர் சாபம் நலிவும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை" என்ற பாடல், "மன்னு பெரும்புகழ் மாதவன் மாமணி வண்ணன் மணிமுடி மைந்தன்" என வரும் பாடலையும் அர்த்த பாவம் ததும்பும் நல்லிசையில் பாடிக்காண்பித்தார். குவளைக்கிருஷ்ணனுக்கு இதைக் கேட்டதும் உண்டான மகிழ்ச்சிக்கும் திருப்திக்கும் அளவேயில்லை"[3] என்று சகுந்தலா பாரதி எழுதுகின்றார்.

அநேகமாக அன்று மாலையோ, அல்லது அவ்வார நாட்களிலோ நம்மாழ்வார் பற்றியும், அவரது அற்புதப் பாசுரங்கள் பற்றியும் அரவிந்தரிடத்தில் பாரதியார் பேசியிருக்கக்கூடும். தமிழிலும், ஆங்கிலத்திலும் அதனை விளக்கிப் பாரதியார் சொன்னதை உள்வாங்கி அதற்கான முன்னுரையோடு அரவிந்தர் ஆர்யாவில் வெளியிட்டிருக்கும் சூழல் உருவாகியிருக்கலாம். இனி, நம்மாழ்வாரின் பாசுரங்களும் அவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்புகளையும் காணலாம்.

Nammalwar's Hymn of the Golden Age

1. பொலிக!பொலிக!பொலிக! போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த; நமனுக்கு இங்குயாதொன்றுமில்லை;
கலியும் கெடும்; கண்டு கொள்மின்; கடல் வண்ணன் பூதங்கள்மண்மேல்
மலியப்புகுந்து இசை பாடி ஆடியுழிதரக் கண்டோம்!

"Tis glory, glory, glory! For Life's hard curse has expired; swept out are Pain and Hell, and Death has nought to do here. Mark ye, the Iron Age shall end. For we have seen the hosts of Vishnu; rochly do they enter in and chant His praise and dance and thrive.

2. கண்டோம்!கண்டோம்!கண்டோம்! கண்ணுக்கினியன கண்டோம்
தொண்டீர் எல்லீரும் வாரீர்! தொழுது தொழுது நின்றார்த்தும்
வண்டுஆர் தண்ணந் துழாயான் மாதவன் பூதங்கள் மண்மேல்
பண்தான் பாடிநின் றாடிப் பரந்து திரிகின்றனவே.

We have seen, we have seen, we have seen- seen things full sweet for our eyes. Come, all ye lovers of God, let us shout and dance for joy with oft-made surrendering. Wide do they roam on earth singing songs and dancing,the hosts of Krishna who wears the cool and beautiful Tulsi, the desire of the Bees.

3. திரியும் கலியுகம் நீங்கித் தேவர்கள் தாமும் புகுந்து
பெரிய கிதயுகம் பற்றிப் பேரின்ப வெள்ளம் பெருக,
கரிய முகில் வண்ணன் எம்மான் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
இரியப் புகுந்து இசை பாடி எங்கும் இடம் கொண்டனவே.

The Iron Age shall chnage. It shall fade, it shall pass away. The gods shall be in our midst. The mighty Golden Age shall hold the earth and the flood of the highest Bliss shall swell.For the hosts of our dark-hued Lord, dark-hued like the cloud, dark-hued like the sea, widely they enter in, singing songs, and everywhere they have seized on their stations.

4. இடங்கொள் சமயத்தை யெல்லாம் எடுத்துக் களைவன போல
தடங்கடல் பள்ளிப்பெருமான் தன்னுடைப் பூதங்களேயாய்க்
கிடந்தும் இருந்தும் எழுந்தும் கீதம் பலபல பாடி,
நடந்தும் பறந்தும் குனித்தும் நாடகம் செய்கின்றனவே.

The hosts of our Lord who reclines on the sea of Vastness, behold them throunging hither. Meseems they will tear up all these weeds of grasping cults. And varied songs do they sing, our Lord's own hosts, as they dance falling, sitting, standing, marching, leaping, bending.

5. செய்கின்ற தென்கண்ணுக்கு ஒன்றே; ஒக்கின்றது. இவ்வுலகத்து
வைகுந்தன் பூதங்களேயாய் மாயத்தி னால்எங்கும் மன்னி,
ஐயமொன்றில்லை. அரக்கர் அசுரர் பிறந்தீர் உள்ளீரேல்,
உய்யும்வகையில்லை. தொண்டீர்! ஊழி பெயர்த்திடும் கொன்றே.

And many are the wondorous sights that strike mine eyes. As by magic have Vishnu's hosts come in and firmly placed themselves everywhere. Nor doubt it, ye fiends and demons, if, born such be in our midst, take heed! ye shall never escape. For the Spirit of Time will slay and fling you away.

6. கொன்றுயிர் உண்ணும் விசாதி பகைபசி தீயன எல்லாம்
நின்றிவ்வுலகில் கடிவான் நேமிப் பிரான்தமர் போந்தார்;
நன்றுஇசை பாடியும் துள்ளியாடியும் ஞாலம் பரந்தார்;
சென்றுதொழுது உய்ம்மின்,தொண்டீர்! சிந்தையைச் செந்நிறுத்தியே.

These hosts of the Lord of the Discus, they are here to free this earth of the devourers of Life, Disease and Hunger and vengeful Hate and all other things of evil. And sweet are their songs as they leap and dance extending wide over earth. Go forth, ye lovers of God and meet these hosts divine; with right minds serve them and live.

7. நிறுத்திநும் உள்ளத்துக் கொள்ளும் தெய்வங்கள் உம்மைஉய்யக் கொள்;
மறுத்தும் அவனோடே கண்டீர்.மார்க்கண்டேயனும் கரியே;
கறுத்த மனமொன்றும் வேண்டா; கண்ணன் அல்லால் தெய்வமில்லை;
இறுப்பதெல்லாம் அவன்மூர்த்தி யாயவர்க்கே இறுமினே.

The Gods that ye fix in your minds, in His name do they grant you deliverance. Even thus to immortality did the sage Markanda attain. I mean no offence to any, but there is not other God but Krishna. And let all your sacrifices be to them who are but His forms.

8. இறுக்கு மிறையிறுத்து உண்ண எவ்வுலகுக்கும் தன் மூர்த்தி
நிறுத்தினன் தெய்வங்களாக; அத்தெய்வநாயகன்தானே;
மறுத்திரு மார்வன்: அவன்தன் பூதங்கள் கீதங்கள் பாடி,
வெறுப்பின்றி ஞாலத்து மிக்கார் மேவித் தொழுதுஉய்ம்மின் நீரே.

His forms he has placed as Gods to receive and taste the offerings that are brought in sacrifices in all the various worlds. He our divine Soverign on whose mole-marked bosem the goddess Lakshmi rests - His hosts are singing sweety and deign to increase on earth. O men, approch them, serve and live.

9. மேவித் தொழுது உய்ம்மின் நீர்கள். வேதப் புனித இருக்கை
நாவில் கொண்டச்சுதன் தன்னை ஞான விதிபிழையாமே
பூவில் புகையும் விளக்கும் சாந்தமும் நீரும் மலிந்து
மேவித் தொழும்அடி யாரும் பகவரும் மிக்க துலகே.

Go forth and live by serving our Lord, the deathless One. With your tongues chant ye the hymns, the sacred Riks of the Veda, nor err in the laws of wisdom. Oh, rich has become this earth in the blessed ones and the faithful who serve them with flowers and incence and sandal and water.

10. மிக்கவுலகுகள் தோறும் மேவிக் கண்ணன்திரு மூர்த்தி
நக்கபிரானோடு அயனும் இந்திரனும் முதலாக
தொக்க அமரர் குழாங்கள் எங்கும் பரந்தன; தொண்டீர்!
ஒக்கத் தொழுகிற்றிராகில் கலியுகம் ஒன்றும் இல்லையே.

10. In all these rising worlds they have thronged and wide they spred, those beauteous forms of Krishna - the unclad Rudras, is there, Indra, Brahma, all. The Iron Age shall cease to be-do ye but unite and serve these.

Love-Mad`

The poetic image used in the following verses is characteristically Indian. The mother of a love-stricken girl (symbolising the human soul yearning to merge into the Godhead) is complaining to her friend of the sad plight of her child whom love for Krishna has rendered "mad"- the effect of the "madness" being that in all things she is able to see nothing but forms of Krishna-the ultimate Spirit of the universe.

The Realisation of God in all things by the Vision of Divine Love.

மையல்

நம்மாழ்வார் திருமொழி

பிரிவு ஆற்றாது போலிப்பொருள்களைக்கண்டு வருந்தும் தலைவியின் நிலையைத் தாய் உரைத்தல்

1. மண்ணை இருந்து துழாவி. வாமனன் மண்இது என்னும்;
விண்ணைத் தொழுதுஅவன் மேவும் வைகுந்தம் என்று கை காட்டும்;
கண்ணை உள்நீர் மல்க நின்று கடல்வண்ணன் என்னும் அன்னே என்!
பெண்ணைப்பெருமயல் செய்தாற்கு என்செய்கேன்? பெய் வளையீரே!

Seated, she caressess Earth and cries, "This Earth is Vishnu's;
Salutes, the sky and bids us "behold the Heaven He ruleth";
Or standing with tear-filled eyes cries aloud, "O sea - hued Lord!";
All helpless am I, my friends; my child He has rendered mad.

2. பெய்வளைக் கைககளைக் கூப்பிப் பிரான்கிடக்கும் கடல்என்னும்;
செய்யதுஓர் ஞாயிற்றைக் காட்டிச் சிரீதரன் மூர்த்திஈது என்னும்;
நையும் கண்ணீர்மல்க நின்று. நாரணன் என்னும்; அன்னே! என்
தெய்வஉருவில், சிறுமான் செய்கின்றதுஒன்று அறியேனே.

Or joining her hands fancies "The Sea where my Lord resposes!'
Or hailing the ruddy Sun she cries; "Yes, this is His form",
Languid, she bursts into tears and mutters Narayan's name.
I am dazed at the things she is doning, my gazelle, my child
shaped god-like.

3. அறியும் செந்தீயைத் தழுவி, அச்சுதன் என்னும்;
எறியும் தண் காற்றைத் தழுவி, என்னுடைக் கோவிந்தன் என்னும்;
வெறிகொள் துழாய்மலர்நாறும்; வினையுடை யாட்டியேன் பெற்ற
செறிவளை முன்கைச் சிறுமான் செய்கின்றது என் கண்ணுக்கு ஒன்றே!

Knowing, she embraces red Fire, is scorched and cries "O Deathless!"
And she hugs the Wind; "This my own Govinda", she tells us.
She smells of the honied Tulsi, my gazelle-like child. Ah me!
How many the pranks she plays for my sinful eyes to behold.

4. ஒன்றிய திங்களைக் காட்டி, ஒளிமணி வண்ணனே!
நின்ற குன்றத்தினை நோக்கி, நெடுமாலே!வா! என்று கூவும்;
நன்றுபெய் யும்மழை காணில் நாரணன் வந்தான் என்று ஆலும்!
என்றுஇன மையல்கள் செய்தார் என்னுடைக் கோமளத் தையே!

The rising moon she showerth, "Tis the shinking gem-hued Krishna!"
Or, eyeing the standing hill, she crises, "O come, high Vishnu!"
It rains; and she dancess and cries out "He hath come, the God of my love!"
O the mad conceits He hath given to my tender, dear one!

5. கோமள ஆன்கன்றைப் புல்கிக் கோவிந்தன் மேய்த்தன என்னும்;
போம்இள நாகத்தின் பின்போய், அவன்கிடக்கை ஈது என்னும்;
ஆம்அளவு ஒன்றும் அறியேன்; அருவினை யாட்டியேன் பெற்ற
கோமள வல்லியை மாயோன் மால் செய்து செய்கின்ற கூத்தே!

The soft-limbed calf she embraces, for "Such did Krishna tend",
And follows the gliding serpent, explaining "That is His couch".
I know not where this will end, this folly's play in my sweet one
Afflicted, ay, for my sins, by Him, the Divine Magician.

6. கூத்தர் குடம்எடுத்து ஆடில், கோவிந்தன் ஆம்எனா ஓடும்;
வாய்த்த குழல்ஓசை கேட்கில், மாயவன் என்றுமை யாக்கும்;
ஆய்ச்சியர்வெண்ணெய்கள்காணில்அவன்உண்டவெண்ணெய்ஈதுஎன்னும்
பேய்ச்சிமுலை சுவைத் தாற்குஎன் பெண்கொடி ஏறிய பித்தே!

Where tumblers dance with their pots, she runs and cries "Govinda";
At the charming notes of a flute she faints, for "Krishna, He playeth"
When cowherd dames bring butter, she is sure it was tasted by
Him,-
So mad for the Lord who sucked out the Demoness' life through
her bosom!

7. ஏறிய பித்தினோடு எல்லா உலகும் கண்ணன் படைப்பு என்னும்;
நீறு செவ்வே இடக் காணில், நெடுமால் அடியார்என்று ஓடும்;
நாறுதுழாய்மலர் காணில் நாரணன் கண்ணிஈது என்னும்;
தேறியும் தேறாதும மாயோன் திறத்தினளே, இத்திருவே.

In rising madness she raves, "All worlds are by Krishna. made"
And she runs after folk ash-smeared; forsooth, they serve high
Vishnu!
Or she looks at the fragrant Tulsi and claims Narayan's garland.
She is ever for Vishnu, my darling, or in, or out of her wits.

8. திருவுடை மன்னரைக்காணில், திருமாலைக் கண்டேனே என்னும்;
உருஉடை வண்ணங்கள் காணில் உலகுஅளந்தான் என்று துள்ளும்;
கருஉடைத் தேவுஇல்கள் எல்லாம் கடல்வண்ணன் கோயிலே என்னும்;
வெருவிலும் வீழ்விலும் ஓவாக் கண்ணன் கழல்கள் விரும்புமே.

And in all your wealthy princess she but sees the Lord of Lakshmi,
At the sight of beautiful colours, she cries, "O my Lord world-
scaning!"
And all the shrines in the land, to her, are shrines of Vishnu
In awe and in love, unceasing, she adores the feet of that Wizard.

9. விரும்பிப் பகைவரைக்காணில், வியல்இடம் உண்டானே! என்னும்;
கரும்பெரு மேகங்கள் காணில், கண்ணன் என்று ஏறப் பறக்கும்;
பெரும்புல ஆநிரை காணில், பிரான்உளன் என்றுபின் செல்லும்;
அரும்பெறல் பெண்ணினை மாயோன் அலற்றி அயர்ப்பிக்கின்றானே.

All Gods and saints are Krishna-Devourer of infinite Space!
And the huge, dark clouds are Krishna; all fain would she fly ro
rech them.

Or the kine, they graze on the meadow and thither she runs to find Him.

The Lord of Illusions, He makes my dear one pant and rave.

10. அயர்க்கும்; சுற்றும் பற்றி நோக்கும் அகலவே நீள்நோக்குக் கொள்ளும்;
வியர்க்கும்; மழைக்கண் துளும்ப வெவ்வுயிர்க் கொள்ளும்; மெய் சோரும்;
பெயர்த்தும் கண்ணா! வா! என்று பேசும்; பெருமானே!வா!என்று கூவும்;
மயல்பெருங் காதல்என் பேதைக்கு என்செய்கேன்? வல்வினை யேனே!

Languid she stares around her or gazes afar into space;
She sweats and with eyes full of tears she sighs and faints away;
Rising, she speaks but His name and cries, "Do come, O Lord".
Ah, what shall I do with my poor child o'erwhelmed by this maddest love?

<u>சான்றெண் விளக்கம்</u>

1. ம.பெ.சீனிவாசன், குலசேகராழ்வார், பக்.14-15
2. பா.கோதண்டராமன், புதுவையில் பாரதி, பக்.99-101.
3. சகுந்தலா பாரதி, என் தந்தை, ப.13.



அரவிந்தர் போற்றிய ஆண்டாள்

ஆண்டாள் குறித்து அரவிந்தர் தரும் விளக்கம் பாரதியாரின் பாணி தழுவியது. அதில், ஆழ்வார் என்னும் சொற்பொருள், பன்னிருஆழ்வார் பற்றிய குறிப்பு, ஆண்டாளின் வாழ்க்கைக் குறிப்பு ஆகியவற்றுடன் இராமாநுஜரைப் பற்றிய குறிப்பும் இடம் பெறுகின்றது.

குயில் பத்திலிருந்து பாடல்கள் மூன்றும், கனவுத்திறம் உரைக்கும் பாடல்கள் நான்கும், 12ஆம் திருமொழியிலிருந்து பாடல்கள் ஐந்தும் இம்மொழியாக்கத்தில் இடம்பெறுகின்றன.

இனி, ஆண்டாள் குறித்த முன்னுரையின் தமிழ் வடிவத்தைக் காணலாம். இதன் ஆங்கில மூலம் பின்னிணைப்பில் தரப் பெற்றுள்ளது.

ஆண்டாள்

வைணவப் பெண்கவி

“ பண்டைக்காலத்திலிருந்தே இந்திய மனமானது, தெய்வீக அறிவுடனும், சமயப் பெருவிழைவுகளுடனும், மானுட உடலில் உள்ளுறைந்திருக்கும் ஆன்மாவானது, அனைத்துமனித வாழ்வியல் கூறுகளிலும், உணர்வுகளிலும், பிரபஞ்ச மாறுதல்களிலும், பரம் பொருளைத் தேடிக் கண்டடைவதற்குரிய குறியீடுகளாகவும், வழி முறைகளாகவும் மாற்றியமைத்துக்கொண்டிருக்கிறது.

இந்திய பக்தியானது, குறிப்பாக, நெருக்கமான மனித உறவுகளை, இறுகப் பற்றிக் கொள்கிறது. ஆனால், அவற்றையே அதிமனிதமாக மாறுவதற்குரிய படிக்கட்டுகளாக மாற்றிக் கொள்கிறது.

கடவுளைக் குருவாகவும், ஆண்டானாகவும், தோழனாகவும், அன்னையாகவும், குழந்தையாகவும், தானாகவும் அமைத்துக் கொள்கிற ஒவ்வோரு மிகவுயரிய அனுபவங்களும், நமக்கு வெறும் கருத்தாக்கங்களாக அல்லாமல், அதனினும் மேம்பட்ட அனுபவத்தின் உச்சநிலைக்கு நம்மை அழைத்துச் செல்லக் கூடியவை.

இந்த நிலைகளில் அணைத்துக்கொள்ள, பாட, கடவுளைக் காதலனாக, கடவுளை அன்பனாகப் பார்த்து மிகநெருக்கமாக, ஏற்றுக்கொள்வதில் உள்ள நெகிழ்ச்சி மற்றவற்றில் வெளிப்படுத்த முடிவதில்லை. ஆன்மாவின் பக்தி ஏறுமுகத்துச் செந்தீஒளிக்கற்றை. இது மானுட அன்பின் இயற்கையான ஓர் அடையாளமாக வருவதன் தொடர்ச்சி. எங்கெல்லாம் பக்தி மிக ஆழமான இரகசிய உள் கருவறைக் கோயிலினுள் செலுத்துகிறது. இதை நாம் இசுலாமியக் கவிதைகளில் பார்க்கிறோம். சில கிறித்தவ மறையாளர்களின் அனுபவங்களிலும் இத்தகு உறவுமுறைகளிலும் சாயைகளிலும் இடம்பெறுகின்றன. கீழை நாட்டவராகிய நமக்கு இவையனைத்தும் ஆதிகாலந்தொட்டுப் பழக்கமானவையே. ஆனால் இவ்வனுபவங்கள் கீழைநாட்டாரின் மனநிலைக்கு அப்பால் உள்ள அச்ச உணர்வுடனேயே அவர்களால் இந்த உறவுமுறைகள் இறைபக்தியில் மேற்கொள்ளப்பெறுகின்றன. இத்தகு நாயக நாயகி பாவத்தில் அனுபவம் பெற்ற பக்தன் இவ்வுலகில் உன்னத மறைபொருளை அடையும் கதவைத்திறக்கும் திறவுகோலைத் தன் உள்ளத்தில் பெற்றிருக்கின்றான்.

வங்காளத்துப் பெருங்கவி ஒருவருடைய பாடல்கள் அண்மையில் ஐரோப்பியர் உள்ளத்திற்கு இக்கருத்தினை மீண்டும் அறிமுகப்படுத்தியுள்ளன. இது, பழஞ்சமயச் சார்புடைய மரபு வழிப்பட்டதே. அதனை மக்கள் முற்றாக மறந்ததனால் இறையுணர்வை ஏற்படுத்தும் புதியமுறையென மக்கள் வியந்து பார்க்கின்றனர். இயற்கைப் பொருள்களும், பிற அழிவற்ற பொருள்களும் எவ்வாறு பழைமை தழுவியதோ, அவ்வாறே இந்த நாயக- நாயகி பாவனை வடிவிலான அனுபவ பக்தியுணர்வும் அவ்வாறு பழைமை தழுவியது.

வங்காளத்தில் ஒரு காலச்சூழலில், தேசியப் பாக்கள் அனைத்திலும் இந்த பண்புக்கூறு முழு ஆதிக்கம் செலுத்திவந்தது. இதன்வழி ஒரு சமயமும் தத்துவமும் தோன்றின. இந்தியாவின்

தென்கோடியிலுள்ள தமிழகத்தில் வைணவம் பற்றிய ஆழ்வார்களின் பாசுரங்களில் இன்னொரு வடிவில் இந்த நாயக - நாயகி பாவத்தினைக் காண்கிறோம். இவை நமது பண்டைய நிலைமரபுக் கவிதைகளின் ஆற்றல் வாய்ந்த இயல்பான நிழலுக்கு நம்மைத்திருப்புகின்றன. பெண்ணொருத்தியின் உள்ளம் உலகமே வடிவான பரம்பொருளின் உள்ளத்தை நோக்கிக் காதல் கொண்ட நிலையாகவே இது பாடப்பெற்றுள்ளது.

இறைவனாகிய கடலில் ஆழ்ந்து கிடப்பவர்கள் ஆழ்வார்கள். தென்னக வைணவ ஆழ்வார்கள் பன்னிருவர். அவருள் ஒருவரான விட்டுசித்தர் கவியோகி ஆவார். இவர் பாண்டிநாட்டு வில்லி புத்தூரைச் சார்ந்தவர். இவரைப் பெரியாழ்வார் என்றும் குறிப்பிடுவர். இவர் கலியுகம் தோன்றிய 98 ஆம் ஆண்டில் பிறந்தார் என்ற செவிவழிச்செய்தி நம்பத்தகுந்ததாக இல்லை. ஆனால் நீண்ட காலமாக வளர்ந்து வரும் வைணவ மரபாகிய கொடியில் சிறந்த ஞானியும் தத்துவமேதையும் ஆகிய இராமாநுஜருடைய ஆளுமையும் உபதேசங்களும் கடைசியில் பூத்த மலர்களாக, அந்த இராமாநுஜருக்கு இவ்ஆழ்வார்கள் காலத்தால் முற்பட்டவர்கள் என்பது உறுதி ஆதலின், ஆழ்வார்களின் காலம் ஆயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது என்பது தெளிவு. இராமாநுஜர் ஒரு புதிய ஆன்மிக உயர்நிலையைப் படைத்தார் என்று கூறுவதோடு, அவர் காலத்தில் தென்னக வைணவம் ஒரு குறிப்பிட்ட சமயக் கோட்பாடாகவும், ஒழுங்குமுறையாகவும் உருப்பெற்றது எனல் தகும்.

ஆண்டாள், விட்டுணுசித்தருக்கு நந்தவனத்தில் துளசி மாடத்தின் அடியில் புனிற்றிளங்குழந்தையாகக் கிடைத்தவள். அவரால் முறையாக வளர்க்கப்பெற்றுப் பெண் கவி எனச் சிறந்தாள். ஆண்டாளைப் பற்றிப் பல செவிவழிச் செய்திகளைக் கேள்விப்படுகிறோம். அவற்றுள் சில அழகாகவும், குறியீடாக நின்று உண்மைப்பொருளைஉணர்த்துவனவாகவும் அமைகின்றன. விட்டுணு சித்தர் கண்ணனையே குழந்தையாக, சிறுவனாகத் தம்மனக்கண்கொண்டு கண்டு கற்பனை செய்து பல பாசுரங்கள் பாடியுள்ளார். அந்தச்சூழலில் வாழ்ந்த ஆண்டாளுக்கும் அந்தப் பான்மையே இயல்பாயிற்று.அந்தத் தெய்விக அகத் தூண்டலால் அவள் சில பாசுரங்களைப் பாடினாள். தான் விரும்பித் தேடிப்பெற்ற அந்தப் பேரொளியில் அவள் இளமையிலேயே கலந்துவிட்டமையால் அவள் பாசுரங்கள் நமக்குச் சிலவே கிடைத்துள்ளன. பரமாத்மாவிடம் கொண்ட தெய்விகக் காதலாகவே அவள் பாசுரங்கள் அமைந்துள்ளன. திருவரங்கப்

பெருமானோடு அவளுக்குத் திருமணம் செய்யப்பெற்றதாகக் கனவில் கண்டு அதனைப் பாசுரங்களாகப்பாடித்திருவரங்கனின் திருவுருவோடு கலந்து நிறைந்துவிட்டாள். இம்மரபுவழிச் செய்தி உண்மை நிகழ்வுகள் சிலவற்றை மறைத்துக் கூறுவதாகவும் இருக்கலாம். ஆண்டாள் திருமணம் இப்போதும் ஆண்டுதோறும் அதிவிமரிசையாகவும், சமயச் சடங்குகளோடும் கொண்டாடப் பெற்று வருகின்றது" என்று ஆண்டாள் பற்றிய முன்னுரை தரப்பெறுகின்றது. இதன் ஆங்கில வடிவத்தைப் பின்னிணைப்பில் காணலாம். (காண்க. பின்னிணைப்பு - 15)

இனி ஆண்டாள் பாசுரங்களையும் அவற்றுக்கான ஆங்கில மொழிபெயர்ப்புகளையும் காணலாம்.

To the Cuckoo

1. வெள்ளை விளிசங்கு இடங்கையிற் கொண்ட
விமலன் எனக்கு உருக் காட்டான்
உள்ளம்புகுந்து என்னை நைவித்து நாளும்
உயிர்பெய்து கூத்தாட்டுக் காணும்
கள்ளவிழ் செண்பகப் பூமலர் கோதிக்
களித்திசை பாடும் குயிலே!
மெள்ள விருந்து மிழற்றி மிழற்றாது என்
வேங்கடவன் வரக் கூவாய்!

O Cuckoo that peckest at the blossomed flower of honey-dripping Champaka and, inebriate, pipest forth the melodious notes, be seated in thy ease and with thy babblings, which are yet no babblings, call out for the coming of my Lord of the Venkata Hill. For He, the pure one, bearing in his left hand the white summoning conch shows me not form. But He has invaded my heart; and while I pine and sigh for his love, He looks on indifferent as if it were all a play.

2. என்புருகியின வேல்நெடுங்கண்கள்
இமைபொருந்தா பலநாளும்
துன்பக் கடல்புக்கு வைகுந்தன் என்பதோர்
தோணி பெறாதுஉழல்கின்றேன்.

அன்புடையாரைப் பிரிவுறு நோயாது
நீயும் அறிதி குயிலே!
பொன்புரை மேனிக்கருளக் கொடியுடைப்
புண்ணியனை வரக் கூவாய்.

I feel as if my bones had melted away and my long javelin eyes have not closed their lids for these many days. I am tossed on the waves of the sea of pain without finding the boat that is named the Lord of the highest realm. Even thou must know, O Cuckoo, the pain we feel when we are parted from those whom we love. He whose pennon bears the emblem of the golden eagle, call out for his coming, O bird.

3. அன்றுஉலகமளந்தானை உகந்து
அடிமைக்கண் அவன்வலிசெய்யத்
தென்றலும் திங்களும்ஊடறுத்து என்னை
நலியும் முறைமை அறியேன்
என்றும் இக்காவில் இருந்திருந்து
என்னைத் தகர்த்தாதே நீயும் குயிலே
இன்றுநாராயணனை வரக்கூவாயேல்
இங்குற்று நின்றும் துரப்பன்!

I am a slave of Him whose stride has measured the worlds. And now because He is harsh to me, how strange that this south-wind and these moonbeams should tear my flesh, enfeebling me. But thou, O Cuckoo, that ever livest in this garden of mine, it is not meet that thou shouldst pain me also. Indeed I shall drive thee out if He who reposes on the waters of life come not to me by thy songs today.

<u>மாயவனை மணம் செய்யக்கண்ட</u>
<u>தாய் நற்கனவைத்தோழிக்கு உரைத்தல்</u>

I Dreamed a Dream

1. நாளை வதுவை மணமென்றுநாளிட்டு,
பாளை கமுகு பரிசுடைப்பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்தன் என்பானோர்
காளைபுகுதக்கனாக்கண்டேன் தோழீநான்!

I dreamed a dream. O friend.

The wedding was fixed for the morrow. And He, the Lion, Madhava, the young Bull whom they call the master of radiance, He came into the hall of wedding decorated with luxuriant palms.

2. இந்திரன் உள்ளிட்ட தேவர்குழாமெல்லாம்
வந்திருந்து என்னை மகட்பேசி மாந்திரித்து
மந்திரக்கோடி உடுத்தி மணமாலை
அந்தரிசூட்டக் கனாக் கண்டேன் தோழீநான்!

I dreamed a dream. O friend.

And the throng of the Gods was there with Indra, the Mind Divine, at their head. And in the shrine they declared me bride and clad me in a new robe of affirmation. And Inner Force is the name of the goddess who adorned me with the garland of the wedding.

3. மத்தளங்கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத்தாமம் நிரை தாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ நான்!

I dreamed a dream. O friend.

There were beatings of the drum and blowings of the conch; and under the canopy hung heavily with strings of pearls He came, my lover and my lord, the vanquisher of the demon Madhu and grasped me by the hand.

4. வாய்நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதிவைத்து
காய்சின மாகளிறு அன்னான் என்கைப்பற்றித்
தீவலம் செய்யக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

I dreamed a dream. O friend.

Those whose voices are blest, they sang the Vedic songs. The holy grass was laid. The sun was established. And He who was puissant like a war-elephant in its rage, He seized my hand and we paced round the Flame.

Ye others

12. ஆம் திருமொழி – மற்றிருந்தீர்

தலைவி கண்ணனுள்ளவிடத்தில் தன்னைக் கொண்டுபோய் விடும்படி உற்றாரை வேண்டுதல்

1. மற்றிருந்தீர்கட்கு அறியலாகா
மாதவன் என்பதோர் அன்புதன்னை
உற்றிருந் தேனுக்கு உரைப்பதெல்லாம்
ஊமைய ரோடு செவிடர்வார்த்தை
பெற்றிருந் தாளை யொழியவே போய்ப்
பேர்த்தொரு தாயில் வளர்ந்த நம்பி
மற்பொருந் தாமல் களமடைந்த
மதுரைப் புறத்தென்னை யுய்த்திடுமின்!

Ye others cannot conceive of the love that I bear to Krishna. And your warnings to me are vain like the pleadings of the deaf and mute. The Boy who left his mother's home and was reared by a different mother.- Oh, take me forth to his city of Mathura where He won the field without fighting the battle and leave me there.

2. நாணி யினியோர் கருமமில்லை;
நாலயலாரும் அறிந்தொழிந்தார்;
பாணியா தென்னை மருந்து செய்து
பண்டுபண் டாக்க வுறுதிராகில்,
மாணி யுருவா யுலகளந்த
மாயனைக் காணில் தலைமறியும்;
ஆணையால் நீரென்னைக் காக்கவேண்டில்,
ஆய்ப்பாடிக் கேயென்னை யுய்த்திடுமின்.

Of no further avail is modesty. For all the neighbours have known of this fully. Would ye really heal me of this ailing and restore me to my pristine state? Then know ye this illness will go if I see Him, the maker of illusions, the youthful one who measured the world. Should you really wish to save me, then take me forth to his home in the hamlet of the cowherds and leave me there.

3. தந்தையும் தாயுமுற் றாரும்நிற்கத்
தனிவழி போயினா ளென்னும் சொல்லு
வந்தபின் னைப்பழி காப்பரிது:
மாயவன் வந்துருக் காட்டுகின்றான்;
கொந்தள மாக்கிப் பரக்கழித்துக்
குறும்புசெய் வானோர் மகனைப்பெற்ற
நந்தகோ பாலன் கடைத்தலைக்கே
நள்ளிருட் கண்என்னை உய்த்திடுமின்.

The rumour is already spread over the land that I fled with Him and went the lonely way, leaving all of you behind - my parents, relations and friends. The tongue of scandal ye can hardly silence now. And He, the deceiver, is haunting me with his forms. Oh, take me forth at midnight to the door of the Cowherd named Bliss who owns this son, the maker of havoc, this mocker, this pitiless player, and leave me there.

4. ஆர்க்கும்என் நோய்இத றியலாகாது:
அம்மனை மீர்!துழ திப்படாதே;
கார்க்கடல் வண்ணன்என் பானொருவன்
கைகண்ட யோகம் தடவத்தீரும்;
நீர்க்கரை நின்ற கடம்பையேறிக்
காளியன் உச்சியில் நட்டம்பாய்ந்து,
போர்க்கள மாக நிருத்தஞ்செய்த
பொய்கைக் கரைக்குஎன்னை உய்த்திடுமின்.

Oh, grieve not ye, my mothers. Others know little of this strange malady of mine. He whose hue is that of the blue sea, a certain youth called Krishna- the gentle caress of his hand can heal me, for his Yoga is sure and proved.

On the bank of the waters he ascended that Kadambatree and he leaped to his dance on the hood of the snake, the dance that killed the snake. Oh take me forth to the bank of that lake and leave me there.

5. கூட்டி லிருந்துகிளி எப்போதும்
   கோவிந்தா! கோவிந்தா! என்றழைக்கும்;
ஊட்டக்கொடாது செறுப்பானாகில்
   உலகளந்தான் என்று உயரக்கூவும்;
நாட்டில் தலைப்பழி எய்தி உங்கள்
   நன்மை இழந்து தலையிடாதே,
சூட்டுயர் மாடங்கள் சூழ்ந்து தோன்றும்
   துவரா பதிக்குஎன்னை உய்த்திடுமின்.

There is a parrot here in this age of mine that ever calls out his name, saying ‘Govinda, Govinda’. In anger I chide it and refuse to feed it. ‘O Thou’ it then cries, in its highest pitch, ‘O Thou who hast measured the worlds’. I tell you, my people, if ye really would avoid the top of scandal in all this wide country if still ye would guard your weal and your good fame, then take me forth to his city of Dwaraka of high mansions and decorated turrets; and leave me there.



அரவிந்தர் போற்றிய குலசேகராழ்வார்

இனி ஆழ்வார் வரிசையில் அரவிந்தர் பாரதியார் மொழிபெயர்த்தளித்த பாசுரங்கள் குலசேகராழ்வார் பாசுரங்கள் ஆகும். முன்னைய ஆழ்வார்களுக்கு அரவிந்தர் அளித்த முன்னுரைகள் போல் குலசேகராழ்வாருக்கு என்று எந்தவொரு முன்னுரையும் இடம்பெறக் காணோம்.

சேரமன்னராகிய திடவிரதன் என்பவரது மகனாகத் தோன்றிய குலசேகரர், கொல்லி காவலன். கூடல்நாயகன், கோழிக்கோன் குலசேகரன் என்ற சிறப்புப் பெயர்களைப் பெற்றவர். இராமாவ தாரக் கதைகளில் மிகுந்த ஈடுபாடு உடையவர். ஒருமுறை இராமாயணக் கதை கேட்டுக் கொண்டிருந்த போது.சூர்ப்பணகை செயலால் போர்எடுத்து வந்த அசுரர்களை எதிர்கொள்ளத் தம் படைகளை இராமனுக்குத் துணையாகத் தயார் செய்யச் சொன்னவர். பக்தி மேலீட்டால், தமது ஆட்சியைத் தம் மகன் திட விரதனிடம் அளித்துவிட்டுத் திருவரங்கம் சென்று அரங்கன் புகழ் பாடி ஆனந்தித்திருந்தார். பின்னர், வைணவத் திவ்விய தேசங்கள் பலவற்றிற்கும் செல்லக் கருதி, திருவேங்கடம், திருவயோத்தி, தில்லைத் திருச்சித்திரக் கூடம்(சிதம்பரம்), திருக்கண்ணபுரம், திருமாலிருஞ்சோலை (அழகர்கோயில்), திருவித்துவக்கோடு முதலிய திருப்பதிகளுக்குச் சென்று திருமாலைத் தமிழ்பாடித்

துதித்தார். அவர்தம் அருள்வாக்கென, முகுந்தமாலை என்னும் வடமொழி நூலும், பெருமாள் திருமொழி என்னும் தண்டமிழ்ப் பாசுரங்களும் முகிழ்த்தன. இவரது காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டு என்பர்.

மலைநாட்டுத்திருப்பதிகளுள் ஒன்றான வித்துவக்கோட்டுக்குச் சென்றபோது, குலசேகராழ்வார் ஆங்குப் பக்தியுணர்வில் தலைநின்று பாடிய தருதுயரம் தடாயேல் என்னும் பாசுரத்தை, அரவிந்தரும், பாரதியாரும் ஆங்கிலத்தில் (Refuge) ‘அடைக்கலம்' என்னும் தலைப்பின்கீழ் பின்வருமாறு மொழிபெயர்த் தளிக்கின்றனர். அதன்கீழ், தமிழ்ப்பாசுரங்களும் தரப்பெறுகின்றன.

குலசேகரஆழ்வார்

பெருமாள் திருமொழி –5

1. தருதுயரம் தடாயேல் உன் சரண் அல்லால் சரண் இல்லை;
விரைகுழுவும் மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட்டு அம்மானே!
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்று அவள்தன்
அருள்நினைந்தே அழும்குழவி அதுவே போன்று இருந்தேனே!

Though thou shouldst not spare me the anguish of the world, yet I have no refuge but thy feet. O Lord of the City of the wise, begirt by gardens full of sweet flowers, if, in a keen-edged wrath, the mother cast off the babe, what can it do but cry for the mother's love? I am like that babe.

2. கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை அல்லால் அறியாக் குலமகள்போல்,
விண்தோய் மதிள்புடைசூழ் வித்துவக்கோட்டு அம்மா!நீ
கொண்டாள யாகிலும் உன் குரைகழலே கூறுவனே !

If the man whom she loves subject her to contumely, the high-born wife still clings to him; for he is her chosen lord. And I, too. O Lord of the City of the wise, whose walls reach up to Heaven, I will ever praise thy victorious feet, even if thou shouldst leave me unprotected.

3. மீன் நோக்கும் நீள் வயல்சூழ் வித்துவக்கோட்டு அம்மா!என்
பால்நோக்கா யாகிலும்உன் பற்றுஅல்லால் பற்று இலேன்;
தான்நோக்காது எத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோல்நோக்கி வாழும் குடிபோன்று இருந்தேனே !

Reject me, O Lord, and I will yet hold on to thee, not knowing another prop. O Lord of the City of the wise, encircled by green fields with their glancing fish, the rightful king may cause much pain to his country's heart not looking at things with his own eyes. but still the country trusts in him. I am like that country.

4. வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன்போல், மாயத்தால்
மீளாத் துயர்தரினும், வித்துவக்கோட்டு அம்மா!நின்
ஆளா உனது அருளே பார்ப்பன் அடியே னே!

The sufferer loves the wise physician even when his flesh is cut and burnt. O Lord of the City of the wise, let thy Illusion inflict on me an endless pain. I will yet remain thy servent, I will yet look up to they feet.

5. வெங்கண்திண் களிறு அடர்த்தாய்! வித்துவக்கோட்டு அம்மானே!
எங்குப்போய் உய்கேன்? உன் இணையடியே அடையல் அல்லால்;
எங்கும்போய்க் கரை காணாது எறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்புஏறும் மாப்பறவை போன்றே !

O Lord of the City of the wise, who didst slay the strong and cruel Beast, ah, where shall I fly for reguge, If I leave they feet? On the tossing sea the bird leaves the mast of the ship, he flies to all sides but no shore is visible,and he again returns to the mast. I am like that bird.

6. செந்தழலே வந்து அழலைச்செய்திடினும் செங்கமலம்
அந்தரம்சேர் செங்கதிரோற்கு அல்லால் அலராவால்;
வெந்துயர்வீட்டாவிடினும் வித்துவக்கோட்டு அம்மா!உன்
அந்தமில் சீர்க்கு அல்லால் அகங்குழைய மாட்டே னே!

Let Fire himself assail with its heat the lotus-flower, it will blossom to none but the Sun. Even if thou shouldst refrain from healing its pain, my heart can be melted by nothing else as by they unlimited beauty.

7. எத்தனையும் வான்மறந்த காலத்தும பைங்கூழ்கள்
மைத்து எழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்; மற்று அவைபோல்.
மெய்த்துயர் வீட்டாலும். வித்துவக்கோட்டு அம்மா!என்
சித்தம்மிக உன்பாலே வைப்பன் அடியே னே!

The Rain may forget the fields, but the fields will ever be thirsting for its coming. O Lord of the City of the wise, what care I whether thou heal my wound or no, my heart shall ever by thine.

8. தொக்கு இலங்கு யாறெல்லாம் பரந்துஓடித் தொடுகடலே
புக்குஅன்றிப் புறம்நிற்க மாட்டாத:மற்று அவைபோல்.
மிக்குஇலங்கு முகில்நிறத்தாய்! வித்துவக்கோட்டு அம்மா!உன்
புக்குஇலங்கு சீர்அல்லால் புக்கிலன் காண். புண்ணியனே!

The rivers course down through many lands but must yield themselves to the Sea, they cannot flow back. O sea-hued Lord of the City of the wise, even so must I ever be drawn to thy resplendent glory.

9. நின்னையே தான்வேண்டி. நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே தான்வேண்டும் செல்வம்போல். மாயத்தால்
மின்னையே சேர்திகிரி வித்துவக்கோட்டு அம்மா!
தன்னையே தான்வேண்டி நிற்பன் அடியேனே!

Illusory Power ever seeks him who seeketh thee not [a]seeking thy lasting Might. O Lord of the City of the wise, whose discus flashes like the lighting, I must ever seek thee, who am thy servant.



அரவிந்தர் போற்றிய கம்பர்

தமிழ்க் காப்பிய உலகின் உச்சத்தைத் தொட்டவர் கம்பர். சந்தத்தமிழில் கொஞ்சப் பத்தாயிரம் பாடல்களோடு, இராம காதையைத் தமிழில் தந்தவர், கம்பர். அவரது கவிமேன்மை கருதி, வள்ளுவரோடும், இளங்கோவடிகளோடும் இணைத்துத் தம் கவிதையில்,

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவன்போல் இளங்கோவைப்போல்
பூமியிலே யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும்புகழ்ச்சியில்லை!"[1]

என்று வியந்து போற்றுகின்றார், பாரதியார். கம்பராமாயணத்தின் அருமை பெருமைகளை உச்சிமேல் வைத்து மெச்சிப் புகழ்கின்றார், வ.வே.சு.ஐயர். ஒரு கையில் துப்பாக்கி ஏந்தினாலும், இன்னொரு கையில் கம்பராமாயணம் இல்லாமல் இருக்க முடியாது, அவருக்கு. இப்படியான இருவரும் அரவிந்தரின் இனிய நண்பர்கள் ஆகிய பின்னர் புதுவையில் நிகழும் இலக்கிய, ஆன்மிக, வாழ்வியல் உரையாடல்கள் அனைத்திலும் எந்த இடத்திலேனும் கம்பர் முளைத்தெழாமல் இருக்க இயலுமா? அதிலும் இந்திய மனம் வாய்ந்த யாராலும், இராமாயண இதிகாசம் அறிந்த யாராலும் கொண்டாடாமல் இருக்க முடியுமா? தமிழின் நோக்கில் மட்டும் கம்பரைக் காண்பவர்களுக்குத் தெரியாத அவர் பிரம்மாண்டம்

இந்திய மொழிகளின் இலக்கியப் படைப்பு களையும், இன்ன பிறதேச மொழிப் படைப்புகளையும் ஒப்பிட்டுக் காண்கிறபோதுதான் இனிதுணர முடியும். அப்படியொரு வாய்ப்பைப் புதுச்சேரி வாழ்வு இம்மும்மூர்த்திகளுக்கு அருளியது சிறப்பு.

அரவிந்தரின் கவிநோக்கில்...

சங்கஇலக்கியத்தைப் பற்றி யாதொரு அறிமுகமும் கிடைக்கப் பெறாத நிலையில் அவர்களால் கண்டு கொள்ளப்பெற்ற தெய்வப் புலவர் திருவள்ளுவர், ஔவையார், அவருக்குப் பின்னால், ஆழ்வார்கள், நாயன்மார்களை அடுத்துக் கம்பரே மிக்குயர்ந்து நிற்கின்றார்.

கவிதாதேவியின் சந்நிதியில் தம்மை எப்போதும் முன்னிறுத்தி அதன் ஒளியில் ஆன்மிக தரிசனம் பெற்றவர்கள் அரவிந்தரும், பாரதியாரும் எனலாம். எப்போதும் துள்ளும் கவியுள்ளம் வாய்ந்தவர்கள் அவர்கள். பின்னர் பெருமைமிகு காவியங்களைத் தம் புகழ்நிறுவத் தந்த பேராளர்கள் அவர்கள். அதனால் உலக மொழிகளின் கவிதைகளை, அக்கவிகளின் வழியே ஆழ்ந்திருக்கும் கவியுளத்தைக்கண்டு போற்றியவர்கள் அவர்கள்.

இந்திய இலக்கியங்களை, அதன் கவிவடிவங்களை முன்னிறுத்தி அரவிந்தர் எழுதுகின்றார்.

"....இக்கவிதையெல்லாம், பெருங்காவியங்கள், காதல் ஓவியங்கள், நீதி நூல்கள் - நீதி நூல்களுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகள் இராமதாசருடைய நூல்களும், திருவள்ளுவரின் புகழ் பெற்ற குறளும் ஆகும்- தத்துவப் பாடல்கள், பக்திப் பாடல்கள் இவையெல்லாம் நல்ல கல்விப் பயிற்சியுடைய ஒரு சிறு வகுப்பினரால் எழுதப்பட்டவையோ, அவர்களுக்காக எழுதப் பட்டவையோ அல்ல. மாறாக, வெகுசில விதிவிலக்குகள் தவிர, மற்றவெல்லாம் பரவலாயிருந்த ஒரு பண்பாட்டின் கனிகளேயாம். துளசிதாசரின் இராமாயணமும், இராமப்பிரசாத், தேசாந்திரி களான வைணவ பக்தர்கள், பாலுக்கள் (Bauls), ஆகியோருடைய பாடல்களும், இராமதாசரின், துக்காராமின் கவிதைகளும், திருவள்ளுவர், பெண்பால் கவியாகிய ஔவை இருவரின் நீதி சூத்திரங்களும், தென்னிந்திய அடியார்கள், ஆழ்வார்களின் தெய்விகப்பாசுரங்களும் எல்லா வகுப்பு மக்களாலும் போற்றப் பெற்றன. அவற்றில் அடங்கியுள்ள சிந்தனைகள், அவை வெளியிட்ட உணர்ச்சிகள் நாட்டுமக்களின் வாழ்க்கையில் ஆழப் பதிந்தன"[2]

கம்பரின் கவிப்பெருமை

இந்த வரலாற்று வரிசையில் அரவிந்தரால் அடுத்துக் காணப் பெற்றவர் கம்பர். 'எல்லையொன்றின்மை எனும் பொருள தனைத் தன் கவிக்குறிகளால் காட்டிய' பெருங்கவியல்லவா அவர்.

அவரை இந்திய இதிகாச இலக்கிய வெளியில் வைத்து அடையாளம் கண்டு காட்டுகிறார் அரவிந்தர்.

ஆதிகவி எனப் போற்றப்பெறும் வால்மீகி, வடமொழியில் வகுத்த இராமாயணத்தைப் பிரதேசமொழிகளில் தகுதியுடைய பலரும் எழுதியிருக்கின்றனர். அதனை இந்தியில் துளசிதாசரும், தமிழில் கம்பரும் செம்மையுறச் செய்திருக்கின்றனர். மொழி பெயர்ப்பு, தழுவல் என்கின்ற நிலைகளைக் கடந்து மூல நூல் எனக் கொண்டாடும் அளவிற்குத் தம் கவிவளத்தால் மேன்மையுறச் செய்தவர்கள் இவர்கள். இவர்களை முன்வைத்து அரவிந்தர் எழுதுகின்றார்.

"....பின்னால் வந்த புலவர்களுள் கம்பர், துளசிதாசர் இவ்விருவர் மட்டுமே பழைய இராம கதையைப் பொலிவும் உயிர்த்துடிப்பும் கொண்ட புதிய படைப்பாக்கி மிக உன்னதமான இலக்கியங்களைத் தந்துள்ளனர். தமிழ்க் கவியாகிய கம்பர் இராம காதையைக் கொண்டு ஒரு மாபெரும் மூலகாவியமே படைத்துள்ளார். துளசிதாசரின் புகழ் பெற்ற ஹிந்தி இராமாயணம் இசைப்பாட்டின் தீவிரத்தையும், காதற் காவியத்தின் வளத்தையும். பெருங்காப்பியத்திற்குரிய கற்பனையையும் அபூர்வத் திறமையுடன் இணைக்கிறது. அது ஒரே சமயத்தில் இறைவனது அவதாரத்தின் கதையாகவும் பக்தி உணர்வின் நீண்ட இசைப்பா வாகவும் அமைந்துள்ளது.

ஹிந்தி இலக்கிய வரலாறு எழுதிய ஓர் ஆங்கிலேயர் துளசி தாசரின் இராமாயணம் வால்மீகியின் ஆதிகாவியத்தை விடவும் உயர்ந்தது என்கிறார்.ஆனால், இது மிகைப்படக் கூறுவதாகும். துளசிதாசரின் நூலின் சிறப்பு எப்படியிருப்பினும், வால்மீகியின் காவியம் கவிதையின் உச்ச பூரணத்தை எட்டிவிட்ட படியால் அதனினும் உயர்வானது என ஒன்று இருக்க முடியாது. ஆனால், துளசிதாசர் விஷயமாகவும், கம்பர் விஷயமாகவும் இவ்வாறு பெருமை கொண்டாடப்படுவதிலிருந்து அவர்களின் கவிப் பெருமை விளங்குகிறது. அத்துடன் இந்தியப் பண்பாட்டி னுடைய, ஞானத்தினுடைய எல்லைகள் குறுகிவிட்ட காலத்திலும் இந்திய மனத்தின் படைப்பாற்றல் கொண்ட மேதாவிலாசம் குன்றிவிட

வில்லை என்பதையும் இது காட்டுகிறது. உண்மையில் இப் பிற்காலக் கவிதையில் தீவிரம் அதிகரித்துள்ளது. இழந்துவிட்ட பழைய உயரத்தையும் வீச்சையும் இது ஓரளவிற்கு ஈடு செய்கிறது"[3] என்று கொண்டாடுகின்றார்.

இந்தியா தம்முழுமையான ஆற்றலையும் இழந்து எழமுடியா மரணப்படுக்கையில் இருந்த காலத்தில் தமது அதிதீவிரப் பேரியக் கத்தால் திலகர் தலைமையில் அரசியல் புரட்சிக்கு அடிகோலி யவர்கள் அரவிந்தர், பாரதியார், வ.வே.சு.ஐயர் ஆகிய மூவரும். இவர்களின் வேகத்திற்கும் முயற்சிக்கும் ஏற்ப, அரசியல் தீவிரத் தன்மையில் தனித்தனிப் போக்குகள் கொண்டிருப்பினும் இலக்கிய நோக்கம் பொதுவாகவே, இருந்தன.

இழந்த நாட்டுப் பெருமைகளை மீட்டெடுக்க இந்த நாட்டின் ஆன்மாவான இலக்கியங்களைத் தட்டி எழுப்புவதன்மூலமே இனி எழுச்சி காணமுடியும் என்று உணர்கிறார்கள். சுரணையற்றுக் கிடக்கும் இந்தியர்களை மட்டுமன்றி, உலக மக்களையும் விடுதலைப் பேருணர்வு கொண்டெழச் செய்வதற்குத் துணை செய்வது இலக்கியங்களே என்று கண்டனர். மொழி எல்லைகள் கருதி அவற்றை அடக்கிவிடாமல் உலகு தழீஇய நிலையில் உண்மை உணர்த்தும் தன்மைகளை எடுத்துக் கொண்டு தத்தம் மொழிகளில் அவற்றைப் பெயர்த்தமைத்துக் கொண்டதோடு ஆங்கில மொழியிலும் அவற்றை வாரிவழங்கியிருக்கின்றனர். அதற்குத் தத்தம் பத்திரிகைகளைச் சிறப்புறப் பயன்படுத்திக் கொண்டனர்.

சமய வழிப்பட்ட, ஆனால் சமயங்கடந்த, சமயப் பொதுப் பார்வையுடைய பெற்றி தமிழ் இலக்கியத்திற்கு உண்டு. அதனைத் திருவள்ளுவர் வழியில் விரித்துணர்ந்தால், பாரதியார் பாடிய யாமறிந்த புலவரிலே எனத்தொடங்கும் பாடலின் நுட்பம் புலப்படும்.

அந்த நட்பின் ஒளியிலேயே இலக்கியப்பார்வையில் ஒத்த கருத்துடைய அரவிந்தரும், கம்பரை, வள்ளுவரை, இன்னபிற தமிழ்ச் சான்றோர்களைப் போற்றி மகிழ்கின்றார் எனலாம்.

<u>**சான்றெண் விளக்கம்**</u>

1. கிருங்கை சேதுபதி. மாணவர்களுக்குப் பாரதியார் கவிதைகள். பக்.132-133
2. ஸ்ரீஅரவிந்தரும். ஸ்ரீ அன்னையும். இந்தியா ஆன்மா. பக்.24-25.
3. மேலது.



ஆழ்வார் பாசுரங்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு – சில சர்ச்சைகள்

ஆழ்வார் பாசுரங்கள் மொழிபெயர்ப்பு யாருடையது? என்ற கேள்வி தொடர்ந்து எழுப்பப்பெறுகின்றது. பொதுவாக,அரவிந்தர், பாரதியாருடைய உதவியினால் செய்தார் என்று சொல்லப் பெற்றாலும், அது முழுக்கப் பாரதியாரால் செய்யப்பெற்றது என்றும் ஒரு வாதம் வைக்கப்பெறுகின்றது. இதுதொடர்பான தேடலில் இறங்கியபோது கிடைத்த தகவல்களை இங்கு பதிவு செய்வது மேலும் ஆய்வு மேற்கொள்பவர்களுக்கு உதவியாக இருக்கும்.

ப .கோதண்டராமன் கருத்து

பாரதியாரை நன்கு அறிந்தவரும், பல வருடங்கள் ஸ்ரீஅரவிந்த ஆசிரமத்தில் வாழ்ந்திருந்தவரும் ஆன, பா.கோதண்டராமன் எழுதுகிறார்.

"புதுவையில் ஸ்ரீஅரவிந்தர், 1914-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம், ஆரியா என்னும் மாதச் சஞ்சிகையை ஆரம்பித்தார். அக்காலத்தில் பாரதியார் ஸ்ரீஅரவிந்தர் இல்லத்திற்குச் சென்று. வேதாந்த விஷயங்களைப் பற்றி அடிக்கடி உரையாடி வந்தார். ஓய்விருந்த

போதெல்லாம் ஸ்ரீஅரவிந்தர் பாரதியாருடன் தமிழ் படித்தார். வங்காளத்தில் இருந்தபோதே அவர் ஒரு தமிழ்ப்புலவரை வைத்துக் கொண்டு தமிழ் பயின்று வந்தார். மகாகவியான பாரதியாருடன் தமிழ் நீடித்துப் பயின்றும், தமிழ் மகாகவிகளைப் பற்றி அறிந்தும், அவர்களுடைய பாடல்களைக் கேட்டுச் சுவைத்தும் வந்தார். அக்காலத்தில் பாரதியார் ஆழ்வாருடைய பாடல்களை அடிக்கடி பாடியும் சுவைத்தும் வந்தார் என்பது, யதுகிரி அம்மாள் எழுதிய பாரதி நினைவு நூலிலிருந்து தெரிய வருகிறது. ஆழ்வார்களின் பாடல்களையும், ஸ்ரீஅரவிந்தரிடம் பாடிவந்தார். திவ்வியப் பிரபந்தத்தில் ஆண்டாள், நம்மாழ்வார், குலசேகராழ்வார் ஆகிய வைணவ பக்தர்கள் அருளிய பாடல்களைச் சுவைக்கும் அளவுக்கு ஸ்ரீஅரவிந்தர் தமிழ் மொழியறிவில் முன்னேறியிருந்தார்.

ஆரியா சஞ்சிகையில், முதல் தொகுதியில், ஆண்டாள் அருளிய குயில் பத்திலிருந்து மூன்று பாடல்களும், திருமணக்கனவை உரைத்தல் என்னும் தலைப்புடைய பாடல்களிலிருந்து நான்கு பாடல்களும், கண்ணன் இருக்குமிடத்துக் கொண்டு செல்க என்னும் தலைப்பின்கீழ் வரும் பாடல்களில் ஐந்து பாடல்களும் வசன கவிதைகளாகமொழிபெயர்க்கப்பட்டுள்ளன. முன்னுரையில் ஆண்டவனைக் காதலனாகவோ, காதலியாகவோ பாவித்து அனுபவிக்கும் மரபு, ஆழ்வார்கள் இம்மரபில் பாடிய ஆத்மானுபவப் பாடல்கள், ஆண்டாளின் வரலாறு ஆகிய யாவும் ரத்தினச் சுருக்கமாகக் கூறப்படுகின்றன. இதேதொகுதியில், நம்மாழ்வார் அடியார் திருக்கூட்டத்தைக் கண்டு வாழ்த்தல் என்னும் தலைப்பின்கீழ்ப் பாடிய பத்துப் பாடல்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. பரம வைணவ பாகவதரும், கவியுமான நம்மாழ்வார் என்னும் தலைப்பின்கீழ் நம்மாழ்வாரின் வாழ்க்கையைப் பற்றியும், அவரது கவிதையைப்பற்றியும் சில குறிப்புகள் முன்னுரையாகத் தரப்பட்டுள்ளன. இரண்டாம் தொகுதியில் காதற்பித்து என்னும் தலைப்பின்கீழ் நம்மாழ்வார் பாடிய பத்துப்பாடல்கள் அழகிய கவிதை வடிவில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அன்றியும், குலசேகராழ்வார், வித்துவக் கோட்டு அம்மானையே வேண்டிநிற்றல் என்னும் தலைப்பில் வரும் 9 பாடல்கள் அழகிய கவிதை வடிவில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. பாடல்களை மொழிபெயர்த்தவர் பெயர் காணப்பட வில்லை. பத்திரிகாசிரியர் வழக்கமாகக் கூறுவதுபோல, 'நாங்கள் மொழிபெயர்த்துத்தருகிறோம்' என்று முன்னுரையில் கூறப்

பட்டுள்ளது. ஸ்ரீஅரவிந்தர் எழுதிய சில உரைகளும் இங்ஙனமாகப் பெயரின்றி எழுதப்பட்ட விஷயங்களும் ஆரியாவில் பல காணப்படுகின்றன. இம்மொழிபெயர்ப்புகள் இன்னார் செய்தவை என்று அறிவிக்கப்படாததால் இவை ஸ்ரீஅரவிந்தர் எழுதியவையே என்று நியாயமாகக் கொள்ளலாம். இவற்றைப் பாரதியாரின் உதவி கொண்டே ஸ்ரீ அரவிந்தர் மொழி பெயர்த்துள்ளார். பாரதியாரின் மூலமாகவே பாட்டின் முழுப் பொருளையும், கிரகித்திருக்கிறார். மகாமேதையான ஸ்ரீ அரவிந்தர் அவற்றைத் தம்மயமாக்கியே மொழிபெயர்த்திருக்கிறார்.[1]

மேலும், "புதுவையில் ஆதியிலிருந்து ஸ்ரீ அரவிந்தருடன் இருந்து வந்தவரும், பாரதியாரை நன்கறிந்தவருமாகிய நளினி காந்த குப்தா அவர்கள் இப்பாடல்களை ஆர்யாவில் ஆங்கிலக் கவிதையில் மொழிபெயர்த்தவர் ஸ்ரீஅரவிந்தரே என்றும், ஆயினும், மொழி பெயர்ப்பில் பாரதியார் பெரிதும் உதவினார் என்றும் இந்நூலாசிரியர் (பா.கோதண்டராமன், நூல்- புதுவையில் பாரதி) கூறியிருக்கிறார். ஆனால், பாரதி பிரசுராலயம் இவற்றை பாரதியார் எழுதியவை எனப் பாரதியார் இறந்துபோன, சற்றேறக் குறைய இருபது ஆண்டுகளுக்குப்பின், அக்நி முதலிய கவிதைகள், கட்டுரைகளும் துண்டுகளும் என்னும் ஆங்கில நூல்களில் வெளியிட்டிருக்கிறார்கள். ஆண்டாள் பாடல்களிலும், நம்மாழ்வார் பாடல்களிலும், சில சொற்கள் ஆர்யாவில் காணப் படுவதினின்று மாறுபட்டிருக்கின்றன. பாரதியாரின் இந்த ஆங்கில நூல்களைப் பதிப்பித்தவர்கள் செய்த திருத்தங்களோ என்னவோ, இவை தெரியவில்லை. ஆர்யாவில் நீண்ட கட்டுரைகள் எழுதியவர் களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பாரதியாரே இப் பாடல்களை முற்றும் மொழிபெயர்த்திருந்தால் அவர் பெயரிலேயே இவை வெளிவந்திருக்க வேண்டுமல்லவா? பாரதியார் இவற்றை ஆங்கிலத்தில் பெயர்த்து எழுத ஸ்ரீ அரவிந்தருக்குப் பெரிதும் உதவியிருக்கிறார். ஆதலால், நாம் மேலும் ஒன்றும் சொல்லுவதற்கில்லை. மொழிபெயர்ப்பு எவருடையதாயினும் சரி, பாரதியாரும் ஸ்ரீஅரவிந்தரும் இக்கலைப் பணியில் ஒத்துழைத்தனர் என்பதே முக்கியமான விஷயம்"[2] என்கின்றார் பா.கோதண்டராமன்.

அத்தோடு, அரவிந்தருடைய நூற்றாண்டுவிழாவையொட்டி அவரது அனைத்து நூல்களையும் திரட்டி 30 தொகுதிகளில் வெளியிட்டிருக்கிறார்கள். இவற்றுள் ஒரு தொகுதியில் ஸ்ரீ

அரவிந்தர் செய்த மொழிபெயர்ப்புகளுக்கு இடையே ஆண்டாள் பாடல்களையும், நம்மாழ்வார் பாடலையும் வெளியிட்டிருக்கிறார்கள். பாரதி பிரசுராலயத்தார் வெளியிட்டுள்ள ஆங்கில நூல்களில் ஆரியாவில் வெளிவந்த குலசேகராழ்வார் பாட்டுகள் காணவில்லை. இந்த ஆங்கில மொழிபெயர்ப்பு யாருடையது? இதுவும் ஸ்ரீ அரவிந்தரே பாரதியாரின் துணை கொண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார் என்று எண்ணுகிறோம்.... ஸ்ரீ அரவிந்தருடைய நூற்றாண்டு விழா நினைவு மலர்களில் ஒரு தனித்தொகுதியில் மொழிபெயர்ப்புகள் என்ற தலைப்பின்கீழ், திருக்குறளின் முதல் 10 பாட்டுகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. ஸ்ரீ நளினிகாந்த குப்தாவைக் கேட்டதில், இம்மொழிபெயர்ப்பும் பாரதியாரின் துணைகொண்டு செய்யப்பட்டன"[3] என்கிறார். இதன் பின்னர் இந்நூலாசிரியருள் ஒருவரான இரா.மீனாட்சியால் கண்டு தரப்பெற்ற வான்சிறப்பு அதிகாரக் குறட்பாக்கள் பின்வந்த ஸ்ரீஅரவிந்தர் தொகுப்பில் சேர்க்கப் பெற்றதையும் இங்கு நினைவுகூர்வது பொருத்தம்.

இக்குறட்பாக்கள் பாரதியார் தொகுப்பில் இல்லை. அதேபோல, பாரதியார் மொழிபெயர்ப்பில் உள்ள அருணகிரி பாடல்கள் அரவிந்தர் தொடர்பான தொகுப்புகளில் இல்லை என்பதும் குறிக்கத்தக்கது.

பெ.சு.மணியின் ஆய்வில்

இந்த மொழிபெயர்ப்புகளில் திருக்குறள் நீங்கலாகப் பிற யாவும், பாரதியாரின் அக்னி முதலிய கவிதைகள் மற்றும் மொழி பெயர்ப்புகள், (பாரதிபிரசுராலயம், *1937*), கட்டுரைகள் மற்றும் பிற உரைநடைப் பகுதிகள் (*1937*) என்னும் ஆங்கில நூல்களில் வெளியிடப்பெற்றுள்ளன. எனில் இம் மொழிபெயர்ப்பு களை உண்மையில் செய்தவர் யார் என்பது ஆய்வுக்குரியதாக அமைகின்றது. இதற்கான விடை காணமுயன்ற பாரதியன்பர், பெ.சு.மணி பின்வரும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றார்.

"பாரதியார் இளவல் சி.விசுவநாதய்யர் தொகுத்த பாரதியார் ஆங்கில மொழிபெயர்ப்புக்களைப் பற்றிய விவரம் பின்வருமாறு அறியப்படுகின்றது.

1. The Gospel of Spiritual Freedom. (From Nammalwar's Tiruvaymoli, (The Sacred Utterance)-July, 1915, ARYA.

2. Hymn of the Golden Age (From Nammalwar's Tiruvaymoli)- August, 1917, ARYA.

3. Love-Mad (From Nammalvar's Tiruvaymoli) - July, 1915, ARYA.

4. To the cuckoo (From Nachiar, the Tamil Poetess)

5. I Dreamed A Dream (From Nachiar, the Tamil poetess)

6. Ye Others! (From Nachiar, the Tamil poetess)

பாரதி - ஒருமொழிபெயர்ப்பாளர் (1982) எனும் ஆங்கில மொழிநூலில் அமரர் விசுவநாதய்யர் மேற்காணும் மொழி பெயர்ப்புகளுக்குரிய தமிழ் மூலங்களையும் வழங்கியுள்ளார். இந்நூலில், பாரதியார் ஆங்கிலமொழிபெயர்ப்புத் திறனைப் பாராட்டி, ஆய்வாளர்கள் பிரேமாநந்தகுமாரும், பேராசிரியர் பி.மகாதேவனும் எழுதியதையும் முன்னுரையில் குறிப்பிட் டுள்ளார். ஆனால், பாரதியாரின் மொழிபெயர்ப்புகள் அரவிந்தர் பெயரில், அரவிந்தர் தொகுப்புகளில் வெளிவந்ததைப் பற்றி ஏதும் விசுவநாதய்யர் குறிப்பிடவில்லை. இவ்விஷயத்தில் இறுதியாகச் சொல்லக்கூடிய வாய்ப்பும், தகுதியும் பெற்ற அவர் மௌனம் சாதித்தது ஆய்வாளர்களுக்குக் குழப்பத்தை ஏற்படுத்தியது."[4]

பாரதியார் பதிப்பில்...

அண்மையில், சென்னை, ஸ்ரீசெண்பகா பதிப்பகம் வெளியிட்ட மகாகவி பாரதியார் கவிதைகள் தொகுப்பிலும் இப் பாடல்கள் பாரதியாருடையதாகவே வெளியிடப் பெற்றுள்ளன. அரவிந்தர் நூல் தொகுப்புகளிலும் இப்பாடல்கள் இடம் பெற்றுள்ளன. எனவே, இதுதொடர்பாக, ஆர்யா மூல இதழ்களைப் பார்க்க நேரிட்டது. அதில் இம்மொழிபெயர்ப்புகளுக்குக் கீழ் மொழிபெயர்த்தவர் பெயர் குறிப்பிடப் பெறவில்லை. என்றாலும், அரவிந்தர் தொகுப்பில் இடம்பெறும் திருக்குறள் மொழிபெயர்ப்பு பாரதியார் தொகுப்பில் இல்லை. அதேபோல், பாரதியார் மொழி பெயர்த்த அருணகிரிநாதர் பாடல்களின் மொழிபெயர்ப்பு எதில் வெளியானது என்பது தெரியவில்லை. ஆனால் விவாதத்திற் குரியதாக அமைவது ஆழ்வார் பாசுரங்களேயாம்.

டாக்டர் பிரேமாநந்தகுமார் தரும் விளக்கம்

இத்தகு விவாதங்களுக்கு விடைகாணமுயன்ற பாரதி

ஆய்வாளர் பெ.சு.மணி அரவிந்தர் - பாரதியார் ஆய்வில் தோய்ந்த பிரேமா நந்தகுமார் கருத்தை அறிந்து பெற்ற தகவல்களைப் பின்வருமாறு தருகின்றார்

"மொழிபெயர்ப்பில் மொழிநடை இனங்காட்டும் செய்தி முக்கியமானதாகும். ஆர்ய இதழில் அந்த மொழிபெயர்ப்புகள் பிரசுரத்திற்கு வந்தபொழுது இதழாசிரியர் எனும் பொறுப்பில் அரவிந்தர் சில திருத்தங்கள் செய்திருக்கக்கூடும். அந்தத் திருத்தங்களில் அரவிந்தர் சொற்றொடர் அமைப்பு காணப் படுகிறது. அந்த - மொழிபெயர்ப்புகளில் அரவிந்தர் சொற்றொடர் அமைப்பு தனியாகத் தெரிகின்றது. பிரசுரத்திற்கு யார் அனுப்பி வைத்திருப்பார்கள் என்பதை அக்காலச் சூழலில் அரவிந்தர் - பாரதியார் இடையே வேரூன்றி இருந்த மகத்தான இலக்கிய - ஆன்மிக உறவைக் கருத்தில் கொள்ளும்பொழுது, அனுப்பி வைத்தவர் பாரதியார் என்பதை அறியமுடிகிறது"[7] என்ற முடிவுக்கு வருகிறார்.

ஸ்ரீநிவாசாச்சாரியார் தரும் செய்தி

இதற்கு மேலும் வலுச்சேர்ப்பதுபோல், அரவிந்தர், பாரதியார், வ.வே.சு.ஐயர் ஆகிய கூட்டணியின் நேரடிச் சான்றாளரான ஸ்ரீநிவாசாச்சாரியார், "ஸ்ரீஅரவிந்தர் ரிக் வேதத்தைப் படித்து அது சில யோக முறைகளைக் குறிப்பதைக் கண்டு இங்கிலிஷில் அதனை மொழிபெயர்த்து வந்தார். பாரதியாரும் அவரோடு சேர்ந்து ரிக் வேதம் படித்துச் சில ஸ்தோத்திரங்களைத் தமிழில் பாட்டுக் களாகவும், இங்கிலிஷில் வசனமாகவும் இயற்றிவந்தார். ஆர்யா என்னும் மாதப்பத்திரிகையை ஸ்ரீ அரவிந்தர் ஆரம்பித்தபோது அவரும் அதற்கு விஷயதானம் செய்து வந்தார். வேத ஸ்தோத்திரங் களிலிருந்தும், திருப்பாவை முதலிய தமிழ்ப் பிரபந்தங்களி லிருந்தும் சிலவற்றை இங்கிலீஷில் மொழி பெயர்த்து அதற்கு உதவினார்"[8] என்று குறிப்பிடுகின்றார். ஆகவே, பாரதியார் மொழி பெயர்த்துத் தந்ததை அரவிந்தர் மெருகேற்றித் தம் இதழில் வெளியிட்டிருக்கிறார் எனத் தெளியமுடிகிறது. ஆனால், இப் பாசுரங்களுக்கு முன்னுரை வழங்கியவர் அரவிந்தரே என்பது உறுதி. காரணம், வங்கக் கவிதைகளோடு ஒப்பிட்டும், ஐரோப்பிய மனநிலையை முன்வைத்தும் ஆண்டாள் பாசுரங்கள் ஆராயப் பெறுகின்றன. "The work of a great Bengali poet has recently re-introduced this idea to the European mind, which has so much lost

the memory of its old religious traditions as to welcome and wonder at it as a novel form of mystic self- expression. On the contrary it is ancient enough, like all things natural and eternal poetry has been dominated by this single strain and it has inspired a religion and a philosophy. And in the Vaishnavam of the far South, in the songs of the Tamil Alwars we find it again in another form, giving a powerful and original turn to the images of our old classic poetry; for there it has been sung out by the rapt heart of a woman to the Heart of the Universe." என்ற தொடர்களின் அமைப்பையும் நுவல் முறையையும் பார்க்கின்றபோது ஆழ்வார்களின் வரலாறுகள் பாரதியார் வழியாக உள்வாங்கப்பெற்று அரவிந்தர் மொழியில் ஆங்கிலப் பதிவாக்கம் பெற்றிருப்பதைக் காண முடிகிறது.

எனினும் இப்பாடல்கள் அரவிந்தர், பாரதியார் தொகுப்பு நூல்களில் இடம் பெறுவதற்கான பின்னணி என்பது குறித்து தேடும் போது கிடைத்த தகவலானது இங்கு தரப்பெறுகின்றது.

பாரதியாரை நன்கு அறிந்தவரும், பல வருடங்கள் ஸ்ரீஅரவிந்த ஆசிரமத்தில் வாழ்ந்திருந்தவரும் ஆன, பி.கோதண்டராமன் பாரதியார் குறித்த விமர்சனம் ஒன்றை அன்னை இந்தியா (Mother India - 1964) இதழில் எழுதும்போது இம்மொழியாக்கம் அவர்களது இருவரது கூட்டு படைப்பு இருக்கவேண்டும் என்று கருதலாம். பாரதியாருடைய பெயரால் இந்த மொழியாக்கத்தை வெளியிடக்கேட்டுக் கொண்ட பொழுது அனுமதி வழங்கப் பெற்றது என்று குறிப்பிடுகின்றார். இதன் ஆங்கிலப் பகுதி பின்னிணைப்பில் தரப்பெற்றுள்ளது. (காண்க. பின்னிணைப்பு -16)

எப்படியாயினும் முற்றமுழுக்க அரவிந்தர்தம் மொழிபெயர்ப்பு என்றோ, பாரதியாரின் மொழிபெயர்ப்பு என்றோ சொல்ல முடியாதபடிக்கு நாம் மொழிபெயர்த்திருக்கிறோம் என்று பொதுவாக, யார் பெயரும் தராது வெளிவந்திருக்கும் இம்மொழி பெயர்ப்பாக்கங்கள் பாரதியார் அரவிந்தர் நட்பைப் போலவே உறுதியாக, பேதமின்றித் திகழ்கின்றது எனலாம்.

விடுதலைப்போராட்டச்சூழலில், தலைமறைவுக்காலத்தில் இருந்த வண்ணம், உலகத்திற்குத் தமிழின் பெருமையை இப் பாடல்களின் வழி எடுத்துக்காட்டிய இம்மகாகவிகளின் செயலுக்கு நமது வந்தனங்கள்.

சான்றெண் விளக்கம்

1. ப.கோதண்டராமன், புதுவையில் பாரதி, பக்.86-87
2. மேலது.
3. பா.கோதண்டராமன், புதுவையில் பாரதி, பக்.88-89.
4. பெ.சு.மணி, பாரதி இலக்கியத்தில் வேதஇலக்கியத்தின் தாக்கம், பக்.178-179
5. மேலது.
6. பா.கோதண்டராமன், புதுவையில் பாரதி, ப.90.
7. ரா.அ.பத்மநாபன்(தொ.ஆ), பாரதியைப்பற்றி நண்பர்கள், பக்.102-106.



அரவிந்தரும் வ.உ.சிதம்பரனாரும்

பாரதியாரின் உற்ற தோழரும், துடிப்புமிக்க இளைஞருமாகிய தென் பாண்டிச் சிங்கம் வ.உ.சிதம்பரனார் ஆவார். கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் என்றெல்லாம் பெயர் பெற்ற சிதம்பரனாரின் அரசியல் இலக்கிய, ஆன்மிகப் பணிகள் வெகுவாகக் கவனிக்கப்பட வேண்டியவை. அரசியல் துறையில் ஆவேசமிக்க தளபதிகளாகத் திலகர் தலைமையில் முன்னின் றவர்கள் அரவிந்தரும், சிதம்பரனாரும். சிதம்பரனாரை அரசியலில் ஈடுபடுத்திய பெருமை பாரதியாருக்கு உண்டு.

இந்திய வரலாற்றில் விடுதலையைத் தம்வசமாக்கும் அளவிற்குத் தீவிரம் கொண்டிருந்த போராட்டக்காலத்தில் அதற்கான தளத்தை விரித்திருந்த திலகர் தலைமையின்கீழ் பாரதியாரும், அரவிந்தரும், வ.உ.சி.யும், ஸ்ரீநிவாசாச்சாரியார் உள்ளிட்ட அன்பர்களும் மேற்கொண்டிருந்த முயற்சிகளும், செயல்பாடுகளும் அற்புதம்.

முழுதுமாக அதனை இரும்புக்கரம் கொண்டு அடித்து நொறுக்கித் தம் சர்வாதிகாரத்தை நிலைநிறுத்திய ஆங்கில அரசின் அடக்குமுறைக்கு ஆட்பட்டு வங்காளத்தில் சிறைவாசம் புரிந்த அரவிந்தர் போன்று தமிழகத்தில் சிறைத் தண்டனை பெற்றவர் வ.உ.சிதம்பரனார். அதிலும் இரட்டை ஆயுள் தண்டனை பெற்றவர் அவர். பாரதியாருடன் இணைந்து பாரதியார் போலவே

அரவிந்தருடன் நட்புப்பூண்டவராகச் சிதம்பரனார் திகழ்ந்திருக்கின்றார். சூரத் காங்கிரஸ் மாநாடு அதற்கான வாய்ப்பைப் பெரிதும் தந்துதவியிருக்கின்றது என்றே சொல்ல வேண்டும். அதற்குப் பின்னும் அவர் அரவிந்தருடனான நட்புணர்வில் தம்மை ஆட்படுத்திக் கொண்டவராகவே திகழ்ந்திருக்கின்றார் என்பது அவர்தம் எழுத்துவாயிலாக இனிது புலப்படுகின்றது.

அதனால், பாரதியார்போல், அதிகம் அருகிருக்க முடியா விட்டாலும் அரவிந்தர் - பாரதியார் நட்பிற்குரிய ஆழமும் விரிவும் அரவிந்தர் - வ.உ.சி. இருவருக்குமிடையிலான நட்பிலும் அமைந்திருந்தது என்றே சொல்ல வேண்டும்.

அரசியல் பிணைத்த உறவு

அரவிந்தரோடும், பாரதியாரோடும், திலகர் தலைமையின்கீழ் இந்திய விடுதலை வேள்வியில் தம்மை முழுமையாய் இணைத்துக் கொண்டிருந்த பாங்கைத் தமது வ.உ.சி. தமது பாரதியார் பற்றிய கட்டுரை நூலில் குறிப்பிடுகிறார்.

1907ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சூரத்தில் நடக்கவிருந்த இந்தியன் நேஷனல் காங்கிரஸ் மகாசபையின் அக்கிராசனராக (தலைவராக) ராஷ் பிகாரி கோஷை நியமிக்க எடுக்கப்பெறும் முயற்சிக்கு மாறாக, லாலா லஜபதி ராய் அவர்களை நியமிக்க வேண்டும் என்ற நோக்கில் பாரதியார் வ.உ.சி.க்குப் பாரதியார் தந்தி கொடுத்து அவரைச் சென்னைக்கு வரவழைக்கின்றார். அதன் பின்னர் நடந்ததுபற்றி வ.உ.சி எழுதுகிறார்.

"நான் சென்னைக்குச் சென்றேன். பாரதியார் முதலிய தேசாபிமானிகளெல்லாம் ஒன்றுகூடி ஆலோசித்தோம். ஸ்ரீலாலா லஜபதிராயையே காங்கிரஸ் மகாசபைக்குத் தலைவராக்க வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானித்தோம். அதற்குரிய வேலைகளைச் செய்யும்படியான பொறுப்புப் பாரதிக்கும் எனக்கும் ஒப்படைக்கப்பட்டது. பாரதி மந்திரியும், நான் அரசனும் ஆயினோம். முதலில் ஸ்ரீபாலகங்காதர திலகரையும், ஸ்ரீஅரவிந்த கோஷையும் எங்கள் கொள்கைக்கு இணங்கும்படி செய்ய வேண்டுமென்று நினைத்தோம். இருவருக்கும் கடிதங்கள் போல நெடுந்தந்திகள் பல அனுப்பினேன். காங்கிரஸ் மகாசபை மாநாட்டில் ஸ்ரீலாலா லஜபதி ராய்க்கு மெஜாரிட்டி கிடைக்கும் படி செய்வதற்காகச் சென்னை மாகாணத்திலிருந்தும் அனேக பிரதிநிதி களைக் கூட்டிக் கொண்டு வரமுடியுமாவென்று எனக்குத்

தந்திகள் கொடுத்துக் கொண்டு, காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்திற்கு ஸ்ரீலாலாலஜபதிராயைத் தலைவராக்க வேண்டுவன செய்கிறோம் என்று அவ்விருவரும் எனக்கு முடிவான தந்திகள் கொடுத்தார்கள். அது விஷயமாகத் திலகர், கேசரி பத்திரிகையிலும், பம்பாய் மாகாணத்தின் பிற தேசீயப் பத்திரிகை களிலும் ஸ்ரீ அரவிந்தரின் வந்தேமாதரப் பத்திரிகையிலும் வங்காள மாகாணத்தின் பிற தேசீயப் பத்திரிகையிலும், மற்றைய மாகாணங்களின் தேசீயப் பத்திரிகைகளிலும் பலமான கிளர்ச்சி செய்யப்பட்டது. ஒரு சில மிதவாதிகள் தவிர மற்றைய மிதவாதிகளும், அமித வாதிகளும், தேசாபிமானிகளும் ஸ்ரீலாலா லஜபதிராயையே காங்கிரஸ் தலைவராக்க வேண்டுமென்று பத்திரிகைகளில் எழுதித் தங்கள் அபிப்ராயத்தை வெளியிட்டார்கள். காங்கிரஸ் மகாசபைக்கூட்டத்தின் ஆரம்பத் தேதி நெருங்கிற்று. அனேக பிரதிநிதிகளுடன் நான் அத்தேதிக்குச் சில தினங்களுக்கு முன்னரே சூரத் நகரம் வந்து சேர வேண்டு மென்று ஸ்ரீதிலகரிடமிருந்து எனக்குத் தந்தி வந்தது"[1]

அதன்பின்னர் தூத்துக்குடியிலிருந்து சில நண்பர்களோடு சென்னை வந்த வ.உ.சி. மண்டையம் ஸ்ரீநிவாசாச்சாரியார், பாரதியார் உள்ளிட்ட நண்பர்களோடு கலந்தாலோசிக்கின்றார். 100 பிரநிதிகளுக்குக் குறையாமல் அழைத்துச் செல்லவேண்டும் என்று பாரதியார் கருத்தளிக்கின்றார். அவர்களுள் பணம் இல்லாதவர்களுக்கு, வ.உ.சி.யும், மண்டையம் ஸ்ரீநிவாசாச் சாரியாரும் பொறுப்பேற்று அவர்களைச் சூரத்மாநாட்டிற்குக் கூட்டிச் சென்று திரும்ப அழைத்துவரும் செலவுகளை இருவரும் பகிர்ந்து கொள்வது என்றும் உறுதிசெய்யப் பெற்றது.

சூரத் மாநாட்டுப்பயணம்

அவ்வண்ணமே, சூரத் மாநாட்டிற்குக் கிளம்பிச்சென்ற அனுபவங்களைப் பாரதியார் போலவே வ.உ.சி.யும் விரிவாக எழுதுகிறார். அவை பின்வருமாறு.


"பாரதியார் முதலிய சென்னைத் தேசீயப் பிரதிநிதிகள் சூரத்து நகருக்கு வெளியே காங்கிரஸ் கொட்டகையைச் சுற்றி அமைக்கப் பட்டிருந்த கூடாரங்களில் தங்கியிருந்தோம். சூரத்து நகருள் சில பங்களாக்களில் திலகர் முதலிய பம்பாய்த் தேசீயப் பிரதிநிதிகளும் வேறு சில பங்களாக்களில் அரவிந்தர் முதலிய வங்காளத் தேசீயப் பிரதிநிதி களும் தங்கியிருந்தார்கள். காங்கிரஸ் பிரசிடெண்டாக வந்திருந்த ஸ்ரீராஷ்பிகாரி கோஸ் எழுதி அச்சிட்டுக் கொண்டு வந்திருந்த தமது தலைவர்- பிரசங்கப்பிரசுரத்தில் அமிதவாதிகள்

என்று அப்போது சொல்லப்பட்ட தேசீயவாதிகளாகிய திலகர், அரவிந்தர், பாரதியார் குழாத்தினர்களைப் பற்றி இழிவாகச் சில வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்தன. அவற்றை அப்பிரசுரத் திலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று ஸ்ரீராஷ்பிகாரிக்குத் திலகரும் அரவிந்தரும் சிலரிடம் சொல்லியனுப்பினர். அவ்வாக்கியங்களை நீக்குவதற்கு அவர் இணங்கவில்லை. அவ்வாக்கியங்களை அப்பிரசுரத்திலிருந்து நீக்காவிட்டால், காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் ராஷ்பிகாரி தலைமை வகிக்கவேண்டுமென்ற பிரேரேபணையைத்தாம் எதிர்க்கப்போவதாகத் திலகர், ஸர்.பிரோஷிஷா மேத்தா, ஸ்ரீகோக்கலே, வி.கிருஷ்ணசாமி ஐயர் முதலிய மிதவாதத் தலைவர்களுக்குச் சொல்லி அனுப்பினார். மிதவாதத் தலைவர்கள் பலரும் கூடியாலோசித்து அவ்வாக்கியங்களை அப்பிரசுரத்திலிருந்து நீக்க முடியாதென்று சொல்லி விட்டார்கள். பின்னர் காங்கிரஸ் மகா சபைக்காகப் பல மாகாணங்களிலிருந்தும் வந்திருந்த தேசீயக் கட்சிப் பிரதிநிதிகளை யெல்லாம் சேர்த்து ஒரு கூட்டம் கூட்டி விஷயத்தை எடுத்துச் சொல்லி ஆலோசனை செய்தனர். அரவிந்தர், பாரதியார் முதலியோர் ராஷ்பிகாரி அவ்வாக்கியங்களை அப்பிரசுரத் திலிருந்து நீக்காவிட்டால் அவர் தலைவராகியிருக்க வேண்டு மென்ற பிரேரேபணையை எதிர்த்து ஸ்ரீலாலா லஜபதிராய் தலைவராயிருக்க வேண்டுமென்று ஒரு பிரேரேபணை செய்ய வேண்டுமென்று சொல்லினர். அவ்வாறே செய்வதென்றும், அதனைத் திலகரே முன்னின்று செய்யவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது”[2] என்று விவரிக்கின்றார்.

இக்குறிப்புகளால், பாரதிக்கு காங்கிரஸ் சபையிலிருந்த மதிப்பும், திலகர், அரவிந்தர், தொடர்பும் உயர்வாகப் பதிவாகி யுள்ளன எனலாம்.

தொடர்ந்து காங்கிரஸ் சபையில் அடிதடி, கூச்சல், குழப்பம் நிலவியபோது சூரத் போலீசார் வரவழைக்கப்பட்டனர். கட்டுப் பாட்டுக்குள் கூட்டம் கொண்டு வரப்பட்டது.

“பிற்பாடு எங்கள் தலைவர்களும், நாங்களும் காங்கிரஸ் பந்தரை விட்டு வெளியேறி அரவிந்தர் தங்கியிருந்த பங்களாவுக்குப் போய்ச் சேர்ந்தோம். திலகர், கப்பர்தே முதலிய பம்பாய்த் தேசீயத் தலைவர்களும், பிரதிநிதிகளும் பஞ்சாப் தேசீயத்தலைவர்களும் பிரதிநிதிகளும், பாரதியார், துரைச்சாமி அய்யர், சக்கரைச் செட்டியார், ஸ்ரீநிவாசாச்சாரி முதலிய சென்னை தேசீயத் தலைவர்களும், பிரதிநிதிகளும் கூடி ஆலோசித்தோம்”[3]



அரவிந்தரும் திலகரும் (சூரத் மாநாட்டில்)

அதன்வழி, மறுநாள் ஒரு பெரியகட்டடத்தில், தேசிய வாதிகளின் கூட்டம் நடத்துவ தென்று முடிவு செய்யப் பெற்றது. அதற்கு அரவிந்தர் தலைமை தாங்கினார். மிதவாதிகளை விட்டுப் பிரிந்து தனித்து இயங்குவது என்றும், ஆண்டுதோறும் தனி மாநாடுகள் நடத்தி ஆலோசனைகள் செய்து ஆண்டு முழுவதும் சுயஆட்சி பெறுதற்குரிய பணிகளைத் தொடர்ந்து செய்வது என்றும் தீர்மானங்கள் கொண்டுவரப் பெற்றன.

அதன்பின்னர் இப்பணிகளை மேற்கொள்ள ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு செயலர்கள் (காரியதரிசிகள்) தேர்ந்தெடுக்கப்பெற்றனர். பம்பாய் மாகாணத்திற்குத் திலகரும், வங்காள மாகாணத்திற்கு அரவிந்தரும், சென்னை மாகாணத்திற்கு வ.உ.சிதம்பரனாரும் காரியதரிசிகளாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அவர்களுக்கான வேலைகளும் குறிக்கப்பெற்றன.

திலகரின் சமத்துவச் செயல்பாடு

இம்மாநாட்டுக்காலத்தில் பிராமணரான திலகர் சாதிசமய வேறுபாடு கருதாது சமத்துவநிலை பேணியமை பற்றி

வ.உ.சிதம்பரனார் எழுதுகிறார்.

"தேசியத் தலைவர்களும், பிரதிநிதிகளும் அரவிந்தர் பங்களா மாடியில் கூடி ஆலோசித்துக்கொண்டிருந்தபோது திலகருக்கு ஒருவன் சாப்பாடு கொண்டுவந்தான். அவன் திலகரைப்பார்த்து "வலப்பக்கத்திலுள்ள தனித்ததோர் அறையைச் சுட்டிக்காட்டி அங்கே கொண்டுபோய் வைக்கட்டுமா?" என்று கேட்டான். அதற்குத் திலகர், "தேசபக்தருள்ளும் ஜாதி, வேற்றுமையுண்டா? இங்கேதானே வை!" என்றார். திலகர், கப்பர்தே, அரவிந்தர், பாரதியார், நான் முதலிய பல ஜாதிக்காரர்கள் ஒரே வரிசையாக உட்கார்ந்து சாப்பிட்டோம்"[6] என்று எழுதுகின்றார்.

மாநாட்டிற்குப் பின்னர்

இவ்வாறாக முடிவுற்ற சூரத் காங்கிரஸ் மாநாட்டிற்குப் பின்னர் தமிழகம் திரும்பிய வ.உ.சிதம்பரனாரும், பாரதியாரும், இன்னோரன்ன தொண்டர்களும், தீவிரமான அரசியல் பணிகளில் ஈடுபட்டனர். ஊரெங்கும் பொழிவுகள், விளக்கக்கூட்டங்கள் நடத்தப் பெற்றன.

வ..உசி.யின் வீரமுழக்கங்கள்

தீவிர அரசியல் முயற்சிகளில் இறங்கிய சிதம்பரனாருக்கு உற்ற தோழராய் வாய்த்தவர் சுப்பிரமணிய சிவா. இருவரும் மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு ஏற்படும் வண்ணம் மேடைகள் ஏறி முழங்கினர். 'வங்கநாட்டுப்பிரசங்கியான விபின் சந்திர பாலரைப்போல அவ்வளவு திறமையாக வ.உ.சியும், அவரது தோழரான சுப்பிரமணிய சிவமும் பேசுவார்கள்' என்று பி.ஸ்ரீ.ஆசார்யா குறிப்பிடுகின்றார்.[4] இனி வ.உ.சி மற்றும் சிவம் இணைப்புப்பற்றிக் காணலாம்.

இணைந்த முரசுகள் – வ.உ.சி.யும், சிவமும்

வ.உ.சி., சுப்பிரமணிய சிவா சந்திப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது. 9.1.1098ஆம் ஆண்டு மதுரை மாவட்டம் வத்தலக் குண்டைச் சார்ந்த சுப்பிரமணிய சிவா என்பவர் திருநெல்வேலியில் சுதேசிய முயற்சியை ஆதரித்துக் காரசாரமாகப் பேசினார். 13.1.1908 ஆம் தேதியிலும் சுயராஜ்யத்தின் பயன்களைப் பற்றி விளக்கிப் பேசி விட்டு இளைஞர்களுக்குத் தேகப்பயிற்சியில் ஈடுபடுமாறு ஆலோசனை கூறினார். அம்பாசமுத்திரம், கல்லிடைக்

குறிச்சி, சிவகாசி, ஸ்ரீவில்லி புத்தூர், தென்காசி முதலிய ஊர்களுக்கு சிவா சென்று சுதேசி சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். 3.2.1908இல் தூத்துக்குடி வந்தார். சிதம்பரம் பிள்ளையைச் சந்தித்தார். அன்றுமுதல் இருவரும் சுயராச்சியம் பெறுவதற்காக இணைந்து செயலாற்றத் தொடங்கினார் என்று வ.உ.சி, சிவா ஆகியோர்மீது தொடரப்பட்ட வழக்குத் தொடர்பான அரசாணையில் குறிக்கப்பெற்றிருக்கின்றது. (G.O.No. 1542, Judical... Dated 13.10.1911)

அதனைத் தொடர்ந்து அனைத்துக்கூட்டங்களிலும் இருவரும் இணைந்து சொற்பொழிவுகளை நிகழ்த்திவந்தனர். இதற்கு, 'பிரேக்கன்' என்னும் சப் கலெக்டர் தூத்துக்குடியில் பொதுக் கூட்டங்களுக்குத் தடை விதித்தான். அதனைமீறி இருவரும் சொற்பொழிவாற்றிய திறத்தினை வ.உ.சி. பாடுகிறார்.

"சந்தித்தெருவிலும் ஜனங்கள் கூடும்
பொதுவிடங் களிலும் புகறலா காது
சிதம்பரம் பிள்ளையும், சிவமும் என்றனர்
அந்த எழுத்தினை அழித்திட மறுதினம்
சந்தித் தெருவும் ஜனங்கள் கூடும்
பொதுவி முந்தினம் புகன்றவிடமும்
எதுவோ, அதனில் என்றும் போலப்
பத்மநாபன் பகர்வான் பிரசங்கம்
சிதம்பரமும் சிவமும் பின்னர்த்
தரும சங்க நெசவுச் சாலையில்
பெருமைச் சுதேசியம் பேசுவர்"[6]

என்றும் குறிக்கப்பெறும் இத்தொடர்களில் இடம்பெறும் இன்னொருவர் பத்மநாபன் என்னும் பத்மநாபங்கய்யார் பற்றியும், அவர்தம் பணிகள் பற்றியும் அரவிந்தர் தம் கட்டுரையில் குறிப்பிட்டுப் பாராட்டியிருக்கின்றார்.

தூத்துக்குடித் தொழிலாளர்களை உறிஞ்சிக் கொழுத்த அந்நிய அரசின் கொடுமைகளைக் கடுமையாகச் சாடித் தம் பொழிவுகளைச் சிவமும், வ.உ.சி.யும் தொடர்ந்து நிகழ்த்தி வந்தனர்.

இதுகுறித்து "தூத்துக்குடியில் கோரல்மில் பஞ்சாலையில் வேலைக்காரர்களுக்குப் போதுமான கூலி கொடுக்காமல் ஆங்கில

முதலாளிகள் ஏராளமான லாபங்கள் பெறுவதைப் பார்த்துத் தேசபக்தரான ஸ்ரீமான் சிதம்பரம்பிள்ளை வேலை ஆட்களின் பக்கமாய் முயற்சிசெய்யவே அந்த ஜில்லா ஆங்கிலேயரெல்லாரும் பொறுப்புள்ள டிஸ்ட்டிரிக் மாஜிஸ்ட்ரேட் உள்பட மனங்கலங்கி பிள்ளையவர்களையும், அவர்களுடைய சகாக்களாயிருப்பவர்களான ஸ்ரீமான் சுப்பிரமணிய சிவா, பத்மநாபய்யங்கார் முதலியவர்களையும் இம்சிக்கிறார்கள்"[7] என்று சுதேசமித்திரன் 10.3.198ஆம் நாள் இதழில் தலையங்கத்தில் எழுதிற்று.

இப்போராட்டத்தால் பெரிதும் பாதிப்புக்காளான தொழிலாளர் நலனுக்காக வ.உ.சி. அரும்பாடுபட்டார். தொழிலாளிகள் தங்கள் கோரிக்கைகட்காக, வேலை நிறுத்தம் செய்தபோது பட்டினி கிடந்த அவர்தம் மனைவிமக்கட்குப் பொதுமக்களிடம் பொருள்திரட்டியும் தம் கைப்பொருள் ஈந்தும் அவர்களைக் காப்பாற்றும் பணியில், வ.உ.சி. முன்னின்றார்.

சாதி,சமய வேறுபாடில்லாமல் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கெதிராகத் தம் நாவன்மையால் மக்களை ஒன்றுதிரட்டிச் செயற்பட வைப்பதில் சிவம் சிறந்து விளங்கினார்.

பாமர மக்களின் தெய்வவழிபாட்டு உணர்ச்சியை விடுதலைப் போராட்ட உணர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும் எனத்திலகர், அரவிந்தர் முதலானோர் காட்டிய வழியில் சிவா தமது பேச்சாற்றலை அமைத்துக்கொண்டார். தேசியம் கடவுளால் அனுப்பப்பெற்ற சமயம் என அரவிந்தர் வலியுறுத்திய வழியில் வழிபாட்டுணர்ச்சியைத் தம் விடுதலைப்போர்ப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தினார் சிவம்.

நம்பிக்கையின்மை, அறிவின் மகத்தான வளர்ச்சியாக உள்ளது என்று அரவிந்தகோஷ் கூறுகிறார். இந்தியர்களின் நம்பிக்கையின்மை, அவர்களுக்கு நவசக்தியைத் தந்துள்ளது. அவர்கள் தங்களுக்கென்று ஓர் ஆட்சியைக் கோருகிறார்கள். அரசாங்கத்திற்கு எதிராக அல்ல... என்று முழங்கிய சிவம், இக் குறிக்கோளை அடைய இரு வழிகள் உள்ளன. ஒன்று, இயந்திரங்களைச் சேதப்படுத்தி நஷ்டமேற்படுத்துவது. மற்றொன்று, வேலை நிறுத்தம் செய்வது. இரண்டாவது வழி முறையை நாம் பின்பற்ற வேண்டும் என்று தொழிலாளிகளை நெறிப்படுத்தினார்.[8]

இவர்களது நெறிகாட்டலில் இயங்கிய தொழிலாளர்புரட்சி

வெற்றி பெற்றது. ஊதிய உயர்வு, வேலைநேரக்குறைப்பு, ஞாயிறு விடுமுறை போன்ற கோரிக்கைகள் ஏற்கப்பெற்றன. ஆஷ்துரையும், விஞ்ச் துரையும் இந்த வேலைநிறுத்தத்தை முறியடிக்கச் செய்த சூழ்ச்சிகள் தோற்றன. இது இந்திய விடுதலை மற்றும் தொழிலாளர் இயக்க வரலாற்றில் ஓர் அரிய சாதனையாக அமைகின்றது.

இவ்வாறு தூத்துக்குடியில் நிகழ்ந்த போராட்டச் செய்திகளை ஊன்றிக் கவனித்து அதுகுறித்துத் தமது 'வந்தேமாதரம்' இதழில் பதிவு செய்திருக்கின்றார் அரவிந்தர்.

ஈடு இணையற்ற திறனாளர்கள்

தொழிலாளர் வென்ற வரலாற்றுச் சிறப்பைப் பாராட்டித் தமது வந்தேமாதரம் 13.02.1908 இதழில் அரவிந்தர் எழுதுகின்றார்.

"தூத்துக்குடி கோரல்மில் தொழிலாளர் போராட்டம் வெற்றி பெற்றது. மகத்தான மாபெரும் மக்கள் பெற்ற வெற்றியாகும். வேலைநிறுத்தம் செய்தோரின் ஒவ்வொரு கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் முதலாளித்துவம் பரிதாபத்திற் குரிய, நிபந்தனையற்ற சரணாகதியை அடைந்துள்ளது. தேசியக் கட்சியின் கொள்கைகளுக்கு அற்புதமான வெற்றியைத் தேடித்தந்த அஞ்சாநெஞ்சத் தலைவர்களைப் பற்றி, சிதம்பரம், பத்மநாப ஐயங்கார், சிவா ஆகியோர் ஒரு சில மில் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்திற்காகவும்,நியாயத்திற்காகவும் சிறைசெல்லவும், நாடு கடத்தப்படவும் முன்வந்தனர். படித்த வருக்கத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையே ஒரு பிணைப்பை ஏற்படுத்தி யுள்ளனர். இந்தப் பிணைப்புதான், சுயராஜ்யம் பெறுவதற்கான வழிமுறைகளில் மகத்தான முதல் வழிமுறையாகும்.

வங்காளத்திலும் பல தொழிலாளர் போராட்டங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால் அச்சகத்தார் வேலை நிறுத்தத்தைத் தவிர, வேறு எந்த வேலை நிறுத்தமும் வெற்றி பெறவில்லை.

தனித்து நிகழ்ந்த ஒரு தொழிலாளர்புரட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதற்குத் தூத்துக்குடி வேலை நிறுத்தம் ஒரு முழுமையான எடுத்துக்காட்டாகும்.

ஈடுஇணையற்ற திறமையுடனும், தைரியத்துடனும், போராடிய தூத்துக்குடித் தலைவர்களையே அனைத்துப் பெருமையும் சாரும்.

கோரல்மில் தொழிலாளர்களின் குறைகள், அவர்களுக்கு உற்ற

துன்பங்கள் முதலானவற்றோடு அனைத்து இந்தியாவின் நலன்களும் இணைந்துள்ளன என்பதை விளக்கும் தேசியக் கட்சியின் புனிதச் செய்தியின் உட்பொருளை முழுமையாக உணர்த்திவிட்டார்கள் தூத்துக்குடித் தலைவர்கள்.”[9]

இதன் ஆங்கில வடிவம் பின்னிணைப்பில் முழுமையாகத் தரப்பெற்றுள்ளது.(காண்க-பின்னிணைப்பு - 17)

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறை

இப்போராட்டக்காலத்தையொட்டி, ஆங்கிலஅரசின் சிறைத் தண்டனை பெற்று விடுதலையான விபின் சந்திரபாலருக்கான விழாவினை எடுக்கும் பணி தமிழகத்திலும் நடைபெற்றது.

இதுசமயம் அரவிந்தர் வ.உ. சிதம்பரனார், மற்றும் தூத்துக்குடி இராமசாமி அய்யர் ஆகியோருக்கு, தமிழகத்தில் 1908 பிப்ரவரி மாதத்தில் விபின் சந்திரர் பற்றிய கூட்டங்கள் நடத்தச் சொல்லியும் பணம் அனுப்பச்சொல்லியும் பின்வருமாறு தந்தி அனுப்பி -யிருக்கின்றார். அரவிந்தரின் தொகுப்பு நூல்களுள் பின்வருமாறு அத் தந்தி வாசகம் இடம்பெற்றுள்ளது.

“Telegrams from Ghose, Harrison Road, Calcutta to Chidambaram Pillai, Tuticorin and Ramaswami Iyer) CELEBRATE DEMONSTRATION NINTH, HELP PURSE, WIRE AMOUNT.[4]

இதற்கெனச் சிவாவின் துணைக்கொண்டு சிதம்பரனார் தீட்டிய திட்டங்களும் செயற்பாடுகளும் அவர்தம் கவிதைவரிகளிலேயே காட்சியாகின்றது.

“.... இயம்பிய சிவம்தான்
வங்கதே சத்து மாணிறை பாலர்
தங்கடும் சிறையின் தவத்தினை முடித்து .
வெளிவரும் தினத்தில் விமரிசை சிற்சில
கனிவொடு செய்யக் கருதி என்னோடு
பாலர் படத்தைப் பட்டணப் பிரவேசம்
சீலர் பலரோடு செய்யவும். அன்று
தரும வைத்திய சாலை யொன்றும்
தருமப் புத்தக சாலை யொன்றும்
பண்போடு பேசிப் பழகும் நமது
நண்பர் சேர்ந்து நவிலும் முறைகளைப்
பயிலத் தக்க பள்ளி யொன்றும்

சுயராச்சியம் எனச் சொலும்பத் திரிகையும்
தோன்றிடச் செய்யவும் துணிந்துபத்திரிகை
தோன்றிடும் தினந்தான் தொடுத்துநின்றதால்,
நகருளா ரிடத்ததை நவின்றவர் ஒப்பம்
தகவொடு வாங்கல் சரிப்படா தாதலால்
பத்திரிகை வேண்டுவோர் பரிந்தவர் மனைமுன்
பத்திரிகைப் பெயரைப் பருக்க எழுதிடின்
கொடுத்தல் எளிதெனக் குறித்த இவற்றை
எடுத்துச் செல்ல எண்ணி இனிமையா
பாலர்மீள்தினம் பாரும்மீள்தினம்
சீலர் யாவரும் சேர்வோம் அத்தினம்
சுயராச்சியமுந் தோன்றும் அத்தினம்
சுயராச்சியக்கொடி தூக்குவோம் என்றனன்''[10]

என்ற வரிகளில் சுட்டப்பெறும் 'சுயராச்சியம்' என்பது ஒரு பத்திரிகை. பாலர்தம் விடுதலையை ஒட்டி, வ.உ.சி, சிவா சந்திப்புக்கு உதவிய பரலி.சு.ஷண்முகசுந்தரம்பிள்ளை என்பாரை ஆசிரியராகக் கொண்டு வெளியிட முனைந்த பத்திரிகை. ஆங்கில அரசு அனுமதி மறுத்ததால் இம்முயற்சி நின்றுபோனது. ஆனபோதும், விழா முயற்சிகள் தொடர்ந்தன. தொடர்ந்து இவர்களால் தோல்வியைத் தழுவிய ஆங்கில அரசு எப்படியேனும் இவர்களை மடக்கிச் சிறை தள்ள முயன்றது. வ.உ.சி, சிவா, பத்மநாபன் ஆகியோர்மீது விசாரணைகள் தொடர்ந்து நடத்தப் பட்டன. விசாரணைக்கிடையிலும் கூட்டங்கள் நடத்தப் பட்டன. 15.02.1908இல் மூவரையும் கைது செய்து சிறையில் அடைத்தது ஆங்கில அரசு. இதனை எதிர்த்து திருநெல்வேலி மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். கடையடைப்பு நடந்தது. தொழிலாளர், மாணவர் திரண்டனர். ஆங்கில அரசு அலுவலங்களைத் தீயிட்டுக் கொளுத்தினர். துப்பாக்கிப் பிரயோகத்தால் ஐவர் உயிரிழந்தனர். தடையை மீறிக் கூட்டம் நடத்தியதாக மேலதிகாரிக்குத் தகவல் கொடுத்தான் விஞ்ச்துரை.

“ ....எமனெனும்
தந்திமூலமாகச் சாற்றி பற்பல
மதராஸ் கவர்னரின் மனத்தைத் திருப்பிச்
சதுரமாக ஜனங்களைக் கூட்டியாம்
தூற்றுக்குடியினும் சொல்லிய நெல்லையினும்
சாற்றிய பிரசங்கம் தம்மிற் பற்பல

இராஜநிந்தனை இருப்பதாகப்
பிராது கொடுக்கப் பெற்றார் அனுமதி"[11]

என்று வ.உ.சி.குறிக்கின்றார்.

*1908*இல் பிப்ரவரி *19, 23, 26*ஆகிய நாட்களிலும், மார்ச் 5ஆம் நாள் நடந்த கூட்டங்களில் பேசிய பேச்சுகளுக்காக ராஜத்துரோக வழக்குகள் தொடரப்பட்டன. பத்நாபன் பொழிவுகளில் வழக்குத் தொடுப்பதற்கான சான்றுகள் இல்லையென்பதாகச் சொல்லி அவர் விடுவிக்கப்பட்டார்.

சிறைப்பட்டிருந்த இருவரில் வ.உ.சி.யை ஜாமீனில் விடுவிக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இங்கு சற்றுச் சிந்திக்க வேண்டும் என்று குறிப்பிட்டு பெ.சு.மணி எழுதுகிறார்.

"குடும்பச் செல்வாக்கும், சமூக அந்தஸ்தும், அரசியல் தலைமைச் சிறப்பும் கொண்ட வ.உ.சி.யின் நெருங்கிய தோழமையைப் பெற்ற சிவா எவ்விதப் பெருமையும் பெறாதவர் என்பதைக் குத்திக்காட்டச் சிறுமதியாளர் முன்வந்தனர். வ.உ.சி.யை மட்டும் ஜாமீனில் கொண்டு வர முயற்சி செய்யப் பட்டபொழுது, சிவாவையும் மற்றவரையும் சேர்த்து ஜாமீனில் விடுவிக்க வேண்டும் என வ.உ.சி. கூறி ஜாமீனில் வெளிவர மறுத்து விட்டார். சிவாவின் கௌரவத்திற்கு, வ.உ.சி. உறுதுணையாக விளங்கியதைப்போல பாரதியும் விளங்கினார்"[12] (பெ.சு.மணி, வீரமுரசு சுப்பிரமணிய சிவா, ப.72)

இதே நிலையில் பாரதியாரின் உற்ற தோழரான அரவிந்தரும் திகழ்ந்திருக்கின்றார் என்பதற்கு அவர்தம் மதிப்புரை சான்றாக அமைகின்றது. சபாஷ் சிதம்பரம் என்று பாராட்டும்முறையில் தமது வந்தே மாதரம் இதழில் அவர் ஒரு தலையங்கமே, வ.உ.சி.குறித்து எழுதியிருக்கின்றார். அது பின்வருமாறு.

"சபாஷ் சிதம்பரம்"

"அரசியல் வாழ்வில் உண்மையான தோழமை உணர்வு என்பதுதான் அடிப்படையானது. அது மக்களை இணைக்கிறது. அனைத்து ஒத்திசைந்த செயல்களை இறுகிப்பற்றிக்கொள்ள வைக்கிறது. என்றைக்கு ஓர் அரசியல் தலைவர் தன்னுடைய அணுக்கத்தொண்டர்களுக்காகவும், என்றைக்குப் பொது மக்களிடையே பெரிதும் புகழ்மிக்க ஒரு மனிதர் தன்னுடைய நண்பர்களையும், தோழமைத்தொழிலாளர்களையும் விட்டுவிட்டு

வெஞ்சிறையில் இருப்பதற்குத் தயாராகிவிட்டாரோ அப்பொழுதிலிருந்தே இந்திய அரசியல் வாழ்க்கை என்பது யதார்த்த நிலைக்கு வந்துவிட்டது என்பதற்கான நல்ல அறிகுறியாகும்.

மதிப்பிற்குரிய சிதம்பரம்பிள்ளை அவர்கள் தூத்துக்குடி நிகழ்வு முழுதும் ஆகச்சிறந்த நல்லியல்புகளுடனும், உயர்ந்த அறநெறிகளுடன் கூடிய இலட்சியங்களுடனும், நடைமுறை ஆற்றலையும் இணைக்கும் வகையில் அமைந்திருந்தது. இது எதைக் காட்டுகிறதென்றால் அவர் ஒரு மெய்யான தேசியவாதி என்பதையே ஆகும்.

தன்னுடைய தோழமை ஊழியர்களை உள்ளேயே விட்டுவிட்டு இவர் மட்டும் ஜாமீனில் வெளியே வரச் சம்மதித்திருந்தால் என்னவாகியிருக்கும், அவர் ஜாமீனில் வர மறுத்தது மற்றுமொரு சிறப்பு அல்லவா?

தேசியப் பண்பு என்பது வெறும் அரசியல் வாதம் அல்ல. அது ஒருவகை சமயப் பேரார்வம். அறநெறிக்கூறு. அதனுடைய நோக்கம் இந்தியசீலத்தைக் கல்வி மூலமாக வளர்த்து சுயதியாகம் செய்து கொள்ளும் ஆண்மையையும், உன்னதமான குறிக்கோள் களையும், சான்றாண்மையின் நிலையை மீட்டுயர்த்துத் தருதலும் ஆகும்.

தொலைந்து போய்விட்ட (முன்னைய) தொன்மையான ஆரியச் சான்றோனின் இலட்சியங்களை மீட்டுக்கொணர்தலும் ஆகும்.

ஒரு தேசியவாதி என்பவர் துணிவுடைமை, நேர்படப்பேசல், அன்பு மற்றும் நீதிக்குரிய அனைத்து உயர்ந்த இயல்புகளாலும் உருவாக்கப் பட்டிருக்க வேண்டும்.

இத்தகைய முழுமையான எடுத்துக்காட்டாக, ஆர்யனின் மறுபிறப்பாகத் தோன்றியுள்ள சிதம்பரம்பிள்ளைக்கு அனைத்துப் பெருமைகளும் சேரவேண்டும். இத்தகைய சான்றோனைப் பெற்றெடுத்த தமிழ்நாட்டிற்கு (மதராஸ்) அனைத்துப் பெருமைகளும் உரித்தாகின்றன."[13]

இதன் ஆங்கில மூலம் பின்னிணைப்பில் தரப்பெற்றுள்ளது. *(காண்க. பின்னிணைப்பு -18)*

அரவிந்தர் போற்றிய வ.உ.சிதம்பரனாரின் சான்றாண்மை

இதேபோல், கப்பலோட்டிய தமிழனாய் மிளிர்ந்த வ.உ.சி. யின் பெருமுயற்சியைச் சிறப்புறப்பாராட்டி மகிழ்கின்றார் அரவிந்தர்.

"இந்தியாவின் ஏகபோக வாணிப உரிமைகளை அனுபவித்துக் கொண்டிருந்த பிரிட்டிஷ் நிறுவனங்களுக்கு ஒரு முடிவு கட்டும்விதமாக திரு.சிதம்பரம்பிள்ளை தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையில் சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியைத் தொடங்கியிருக்கிறார். சுதேசியத்திற்கு மூன்று தளங்கள் இருக்கின்றன. இந்தியாவில், வணிகத்துறையில் சுதந்திரம் அடைவதற்கு அம்மூன்று தளங்களை வளர்த்தெடுக்க வேண்டும். 1. உற்பத்தியாளர்களை உருவாக்குதல். 2.அனைவருக்கும் கிடைக்கும் வகையில் விநியோகித்தல், 3. உற்பத்தியாகிற இடத்திலிருந்து விநியோகிக்கிற இடத்துக்குச் செல்லும்வரை பாதுகாப்பாகக் கொண்டு செல்லுதல். இத்தளங்களில் மூன்றாவது தளம் சுதேசிகளின் எதிராளிகளது கரங்களில் இருக்குமானால் ஏனைய இரண்டு தளங்களும் ஆட்டங்கண்டுவிடும். எனவே, மூன்றாவது தளம் மிகவும் முக்கியமானது.

கிழக்கு வங்கத்தில் சுதேசியப் பொருள்களைக் கல்கத்தா விலிருந்து ஏற்றுமதி செய்ய முயற்சி செய்தபோது இரயில்வேயால் பல துன்பங்களை அனுபவித்திருக்கிறார்கள். இவ்வாறு கிழக்கு வங்கத்தில் நிறைய இடர்பாடுகளை எதிர்கொள்ள வேண்டி யிருந்தது. ஏனென்றால், இரயில்வே மற்றும் நீராவிக் கப்பல் போக்குவரத்துச் சேவைகளைச் சுதேசியத்திற்கு எதிரிகளுடைய தாக இருந்தது.இந்த இயக்கத்தில் சுதேசியம் தமது உயர்வினை அடைவதற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டி யிருந்தது. இந்த நிலையில் நமக்குத் தெரிந்த ஒரே தீர்வு நதி, மற்றும் கடல்வழி, நீராவிக்கப்பல்களின் சேவையே இந்திய மக்கள் தொடங்குவது ஒன்றுதான்.அதனால் குறைந்தபட்ச நீர்வழிப் போக்குகள் மக்களின் கைகளில் இருக்கும். மாபெரும் அரசியல் புரட்சி ஏற்படாமல் தரைவழிப் போக்குவரத்து நமது கைகளுக்கு வராது. ஆனால் நாம் நீர்வழியை நம்முடையதாக வைத்துக் கொண்டால் அது நமது மிகமுக்கியமான தொடர்பு நமது கையில் இருக்கிறது என்பது மட்டுமல்லாமல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இரயில்வே வசதியை நமக்கு எதிராகத்திருப்பிவிட்டாலும் இந்தத் துறையாவது நம் கைவசம் வைத்துக் கொள்ளலாம். இந்தத் தேசத்தின் இயல்பூக்கங்களுக்கு இந்தச் சத்தியத்தை இறுகப்பற்றிக் கொண்டு விட்டது. நமது புதிய இயக்கத்துக்கு இந்தச் சேவை

அமைப்புத்தான் தலையாயதும், மிகவும் பரிபூரண வெற்றியைத் தரக்கூடியதாகவும் அமைந்திருக்கிறது.

சிட்டகாங் கம்பெனி, தூத்துக்குடிக் கம்பெனி ஆகிய இரண்டுமே திட்டமிடப்பெற்ற இலக்கை வெற்றிகரமாக அடைந்திருக்கின்றன. ஏனென்றால், தம்மையே அர்ப்பணித்துக் கொள்ளும் தேசப்பற்றானது மக்களின் இதயத்தை எழுப்பி விட்டிருக்கிறது. அதேநேரத்தில், அந்நிய (பிரிட்டிஷ்) எதிராளிகளை அவர்களுடைய விலைப்பட்டியலுக்குள் நுழையாமலேயே வெற்றி கொண்டது. ஏனென்றால், பிரிட்டிஷ் கம்பெனிகள் கூடுதலான விலைக்குறைப்பைச் செய்து, அப்படிச் செய்தாலும்கூடச் சுதேசிசார்புடைய சேவை உயர்ந்ததாக இருந்ததனால் அவர்களால் உள்ளே நுழைய முடியவில்லை. நீர்வழிப்போக்குவரத்து நிர்வாகக்கம்பெனிகளுக்கிடையேயான ஒரு பிணைப்பு ஏற்படுத்தப்பட்டுவிட்டது. ரங்கூனிலிருந்து கராச்சிக்கும், பெர்சிய வளைகுடாவுக்கும் மிகவிரைவில் புதிய தளங்கள் ஏற்பட்டிருக்கும்.சுதேசிக் கப்பல் உரிமையுடன் கிழக்கு வங்க நீர்வழிகள் நிறையப் படகுகளை ஒவ்வொரு ஊருக்கும் அனுப்பி நிறைவு பெற்றிருக்கும்.சுதேசிக்கப்பல் கம்பெனி நசுக்கப்பட்டிருந்தால், இந்த நாணயமானவணிக ஒப்பந்தம் சீரழிக்கப்பட்டிருக்கும். வணிகத் துறை சுதந்திரம் தலைநிமிர முடியாதபடி அதன் நம்பிக்கை சீரழிக்கப்பட்டிருக்கும். அரசு எந்திரம் இதனுடையமுக்கியத்துவத்தை உணர்ந்து இதனை வெற்றி கொண்டாகவேண்டும் என்பதற்காக - மதிப்பு, நீதி, அடிப்படை நாகரிகம் என எல்லாவற்றையும் இழக்கத் துணிந்துவிட்டது.

அபாயகரமான இந்தக் காலக்கட்டத்தில் சுதேசியத்தைக் காப்பாற்ற வேண்டிய தேவை நமக்கு இருப்பதால் நாம் எல்லோரும் விழித்தெழ வேண்டும். இது ஒரு இக்கட்டான சூழல். அதாவது, இறைவன் தம்முடைய உதவியைக் கொடுப்பதற்கு நம்மக்களைச் சோதிப்பதான நேரம் இது.

பிரிட்டிஷ் எதிராளிகளைச் சுதேசிக் கப்பல் கம்பெனி நசுக்குதவற்குத் தயாராக இருந்த நேரம் அரசு எந்திரம் தலையிட்டுவிட்டது. இந்த நேரத்தில் மக்கள் தலையிடவில்லை என்றால் முற்றிலுமாக நமது முயற்சிகள் நசுக்கப்பட்டுவிடும். எதிராளிகளை முற்றிலுமாக அடக்கிக் காப்பாற்றும் சக்தி முழுக்கவும் மக்களிடம் இருக்கிறது.

நமது வியாபாரிகள் எதிராளியினுடைய சேவைகளை

ஒட்டுமொத்தமாகத் தங்களது பொருள்களை ஏற்றி யனுப்புவ தில்லை என்று மறுத்தால், நமது மக்கள் அந்தக் கப்பல்தளங்களில் ஏறுவதில்லை என்று மறுத்தால், அரசு எந்திரங்களின் உதவி எத்தனை கிடைத்தாலும், நீதித்துறை எத்துணை அநீதி இழைத்தாலும், காவல்துறை எத்துணை கொடூரங்கள் புரிந்தாலும் அவற்றைப் புரியும் எதிராளியினுடைய அழிவு சர்வநிச்சயம்.

மெட்ராஸ் தேசியவாதிகள் இதைச் சிறப்பாகச் செய்வார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம். பிரிட்டிஷாரின் சிறைச்சாலைகள் திருநெல்வேலி ஜில்லாவின் ஒட்டுமொத்தமான மக்கள் தொகையை அடைக்கும் அளவிற்குப் பெரிதானவை அல்ல. ஒவ்வொரு மனிதரும் சிதம்பரம்பிள்ளையின் மாண்புமிகு சான்றாண்மையைப் பின்பற்றுவார்களாகுக. மீதி விஷயங்களை இறைவன் தீர்மானிக்கட்டும்" என்று 'வந்தேமாதர (30.03.1908) இதழில்' தலையங்கம் எழுதுகின்றார் அரவிந்தர். இதன் முழு ஆங்கில வடிவமும் பின்னிணைப்பில் உள்ளது. (காண்க. பின்னிணைப்பு- 19)

இவ்வாறு, திட்டமிட்டு, மிகுந்த தீவிரத்தோடு இயங்கிய இப்பெருந் தலைவர்களின் முயற்சியால் திக்குமுக்காடிய ஆங்கில அரசு இரும்புக்கரங் கொண்டு ஒடுக்க முனைந்தது.

வ.உ.சிதம்பரனார் வாக்கில்

"வங்காளத்தில் அரவிந்தர் முதலியோர்மீதும், சென்னை மாகாணத்தில் என் வகையறாக்கள் மீதும், பம்பாய் மாகாணத்தில் திலகர் மீதும் இராஜத் துரோகக் கேஸ்கள் ஏற்பட்டன. என் வகையார்கள்மீது கேஸ் ஏற்பட்டவுடன் பாரதியார், ஸ்ரீநிவாசாச்சாரி முதலிய சென்னை நண்பர்கள் திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்தனர். பாளையங்கோட்டை சென்ரல் ஜயிலுள் விஜாரணைக் கைதிகளாயிருந்த என்னையும் எனது நண்பர் சுப்பிரமணிய சிவாவையும் பத்மநாபய்யங்காரையும் கண்டு உரையாடிக் களித்தனர்...."

"திருநெல்வேலியிலிருந்து பாரதியார் முதலியோர் சென்னை போய்ச் சேர்ந்ததும் சென்னையில் ஸ்ரீ சுரேந்திரநாத் ஆரியாபேரில் இராஜத் துரோகக் கேஸ் தொடங்கப்பட்டது. பாரதியார் பேரிலும், ஸ்ரீநிவாசாச் சாரியார் பேரிலும் கவர்ண்மெண்டார் இராஜத்துரோகக் கேஸ் தொடங்கப் போவதாகவும், அவர்கள் ஜயில் செல்ல விரும்பவில்லையானால் புதுச்சேரிக்குச் சென்று

விடும்படியும் பாரதியார் தேசீய கீதங்களில் மயங்கிக்கிடந்த கவர்ண்மெண்டு எக்ஸிக்கூட்டிவ் உத்தியோகஸ்தர் ஒருவர் பாரதியாருக்குத் தகவல் சொல்லி அனுப்பினர். சில காரணங் களால் அவர் பெயரை நான் இங்கு சொல்ல விரும்பவில்லை. சிறையுள் கிடந்து தேச சேவை செய்யாதிருப்பதினும், வேறு தேசம் சென்று தேச சேவை செய்து கொண்டிருப்பதே நலமென்று துணிந்து பாரதியார், ஸ்ரீனிவாசாச்சாரி முதலியோர் புதுச்சேரி போய்ச் சேர்ந்தனர். அங்கு அரவிந்தர் (வ.வே.சு.ஐயருக்கு) முன்னரே வந்திருந்தனர். வி.வி.சுப்பிரமணிய அய்யரும் (வ.வே.சு.ஐயரும்) அங்கு வந்து சேர்ந்தனர்... இந்திய தேசாபிமானிகள் கூட்டமொன்று புதுச்சேரியில் நிலையாகத் தங்கிப் பத்திரிகைகள் வாயிலாகவும், வேறு வழிகளிலும் நமது தேச அரசாட்சியை மீட்டுவதற்குரிய வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர்"[14] என்று வ.உ.சி.எழுதுகிறார்.

புதுச்சேரியில் அரவிந்தர் – வ.உ.சிதம்பரனார் சந்திப்பு

1912ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கண்ணனூர் மத்தியச் சிறையிலிருந்து விடுதலை பெற்ற சிதம்பரனார், தமது குடும்பத்தாரோடு சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் தங்கி யிருந்தபோது, புதுவைக்கு வருகின்றார். அது குறித்துப் பின்வருமாறு எழுதுகிறார்.

"பாரதியார், ஸ்ரீனிவாசாச்சாரி முதலிய சென்னைத் தேசபக்தர் களைப் பார்க்கவேண்டுமென்ற அவாவின் மேலீட்டால் புதுச்சேரிக்குச் சென்றேன். பாரதியார் வீட்டைக்கண்டுபிடித்து அங்குபோய்ச் சேர்ந்தேன். பாரதியாரையும் அவர் மனைவி மக்களையும் கண்டு களித்தேன். பாரதியாரின் பாடல்களைக் கேட்டும், ஆடல்களைக் கண்டும், அவருடன் அடிசில் உண்டும் ஆவிநீர் குடித்துக் களித்தும் சில நாள் கழித்தேன். பாரதியாரும் நானும் எங்கள் நண்பர் அரவிந்தர் மாளிகைக்குச் சென்றோம். பலர் என்னிடம் சொன்னது போல அரவிந்தர் ஒரு ரிஷியா யிருக்கவில்லை. தேசபக்தராயும், தலைவராயுமே விளங்கினார். தேச அரசாட்சியை மீட்பதற்குரிய வழிகளைப் பற்றிப் பேசினோம். பழைய ஒரு வழியைத் தவிர வேறு வழியே இல்லை யென்றுதான் அவரும் கூறினார்"[15]

நண்பர் அரவிந்தர்

மேற்சுட்டிய தொடரில் எங்கள் நண்பர் அரவிந்தர் என்று குறிப்பிட்டது போலவே, தமது சுயசரிதை நூலிலும் அரவிந்தரை

நண்பர் என்றே வ.உ.சிதம்பரனார் குறிக்கின்றார்.

வ.உ.சி. சிறையிலிருந்தபோது, பரலி.சு. நெல்லையப்பர் வேண்டுகோளுக்கிணங்க, முழுவதும் அகவற்பாவினால் ஆன சுயசரிதை நூலை, 1912ஆம் ஆண்டிற்கு முன்பு வ.உ.சி. எழுதுகின்றார். வ.உ.சி.யின் மறைவுக்குப் பின்னர், அதனை நினைவுகூரும் வண்ணம் பரலி சு.நெல்லையப்பர் நடத்திய லோகோபகாரி என்னும் வார இதழில் இப் படைப்பு தொடராக வெளிவந்தது. பின்னர் வ.உ.சி.யின் புதல்வர் சுப்பிரமணியம் இதனை நூலாக்கி மாண்பு நிறைந்த நண்பர்கள் என்னும் தலைப்பிட்டு வெளியிட்டார்.அந் நூலுள், தம் நண்பர்கள் குறித்து வ.உ.சி. எழுதிய கவிதை வரிகள் இவை.

"அஞ்சாமை, கல்வி, அடக்கம், கருணை,
எஞ்சாமல் நிரம்பிய என் வள்ளிநாயகம்
இலகுநம் தேயம் இன்புற வுழைக்குந்
திலகன், அரவிந்தன், கப்பர்டே, மூஞ்சி,
சீனிவாசன், பாரதி, செப்பரும் பிறசிலர்
நானிவண் உணர்ச்சியால் நட்ட நண்பினர்..."[16]

என்பதாகும்.இக்கவிதைவரிகளில் நாடு இன்பம் எய்த உழைக்கும் நண்பர்கள் பட்டியலில் தலைவர் திலகருக்கு அடுத்து அரவிந்தரை வைக்கும் வ.உ.சிதம்பரனார், சீனிவாசன் என்று குறிப்பிடுவது, மண்டையம் ஸ்ரீநிவாசாச்சாரியாவார். இவர்கள் நண்பர்கள் என்று பொதுவாகக் குறிக்காமல், உணர்ச்சியால் நட்ட நண்பினர் என்று சுட்டுவது அவர்தம் நட்புணர்ச்சியைக் குறிப்பதாகும்.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்"

என்று திருவள்ளுவர் சொன்னதுபோல, உரிமை தரும் உறவாக இந்நட்பு உருப்பெற்றதற்குக் காரணம் இது புணர்ச்சி கருதி ஏற்பட்ட நட்பன்று, உணர்ச்சிநிலையில் உயிர்பெற்ற நட்பு என்பதுதான். அதனால்தான், வ.உ.சி, பாரதியாரை மாமா என்று அழைத்தார். இந்நட்பு தொன்று தொட்டு வந்த உறவாய்ப் பொலிவு பெறக் காணமுடிகிறது.அது கருதியே சிறைவாசம் முடித்த சிதம்பரனார் தம் நண்பர்கள் கூடி வாழும் புதுச்சேரிக்கு வருகின்றார். பாரதியார், அரவிந்தர்போல், சிறைவயப்படாது சிதம்பரனாரும் புதுவை வந்திருந்தால், அல்லது சிறை மீண்டு புதுச்சேரிக்கு வந்த பின்னர் இங்கேயே தங்கமுடிவுசெய்திருந்தால் வரலாற்றில் இன்னும் பல

அரிய நிகழ்வுகள் அரங்கேறியிருக்கக் கூடும்.

உம்பர் உறையும் பதி

புதுவையில் பாரதியார் உடனான நண்பர்களைக் கண்டு மகிழ்ந்த வ.உ.சிதம்பரனாருக்கு வேதபுரியான புதுச்சேரி, தேவலோகம் போலக் காட்சியளித்தது. உம்பர் உறையும் பதி என்னும் செய்யுள் தொடரை நினைவுகூர்ந்ததோடு,திருக்குறள் சிந்தனையையும் கூட நினைக்கிறார் வ.உ.சிதம்பரனார். உம்பர்-தேவர். உறையும் பதி- வாழும் ஊர் எனும் பொருள் கொண்டு புதுச்சேரியைக் குறிக்கின்றார். தகவல் அரும் தொன்மைத் தன்மை வாய்ந்த கல்விகேள்விகளில் வல்லவர்களான, இகல் இல்லாதவர்களும், எஃகுடையாருமாகத் தம்முள் கூடிச் சிரித்து மகிழ்ந்து செயல் ஆற்றிவரும் அவர்களைக் காணும்போது அகன்று பரந்த வானத்தில் உள்ள தேவர்கள் வாழும் ஊர் எனப் புதுச்சேரி திகழ்ந்திருக்கிறது. அந்த அனுபவத்தைப் பின்வருமாறு எழுதுகிறார், அவர்.

"புதுச்சேரியில் பாரதியார் முதலியோர்களுடன் நான் தங்கியிருந்த நாள்கள்,

> தகவலரும் தொல்கேள்வித் தன்மை உடையர்
> இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
> நகலின் இனிதாயிற் காண்போம் அகல்வானத்(து)
> உம்பர் உறையும் பதி.

என்னும் பாவை அடிக்கடி நினைக்கவும், உவப்பத்தலைக்கூடி உள்ளப்பிரிதல் அனைத்தே புலவர் தொழில் என்னும் பாவின் உண்மைப் பொருளைக் காணவும் செய்தன".[17]

இதே அனுபவத்தைப் பாரதியாரும் பதிவு செய்கின்றார். 'வானகம் இங்கு தென்பட வேண்டும்' என்பதும், 'மண்ணில் தெரியுது வானம்' என்பதும், 'இங்கு அமரர் சங்கம் தோன்றும்' என்பதும் அவ்வழி வெளிப்படும் கூற்றுகள்.

அதனால்தான் குறுமுனி அகத்தியரும், பெருமுனி விவேகாநந்தரும் தவமிருந்து உறைந்திருந்த இத்திருப்பதியை விட்டு வேறெங்கிலும் செல்ல விருப்பமின்றி அரவிந்தரும், இங்கேயே தங்கித் தவமியற்றினார்போலும்.

வ.உ.சிதம்பரனார் குறிப்பிடுவதுபோல், அரசியல் போராட்டப் பணிகளைத் தொடரும் ஒரு தலைவராக அரவிந்தர் இருந்தாரே யன்றி, ஒரு ரிஷிபோல் இல்லை என்பது அவர்தம் தோற்றம்

கண்டும், அவருடன் கலந்துரையாடிப் பெற்ற கருத்துகள் வழியாகவும் உணர்ந்திருக்கக்கூடும். தேசப்பணியே தெய்வப் பணியாகத் தொடர்ந்த பாரதியாரும், தேசப்பணி வழியே தெய்வத்தைக் கண்டு அதில் உள்ளாழ்ந்த அரவிந்தர் செயற்பாடும் வ.உ.சிதம்பரனார் மொழி வழியே இவ்வாறெல்லாம் பதிவாகக் காண்கிறோம்.

அரவிந்தர்–பாரதியார்– வ.உ.சிதம்பரனார்–தமிழ்

"தமிழ் எழுத்துக்களில் உள்ள குறை" என்னும் தலைப்பில் பிற மொழியினர் பெயர்களைத் தமிழில் தரும்போது, அவர்களது பெயர்களை உச்சரிப்புக்கேற்பச் சுட்டமுடியாத குறையைப் பாரதியார் எழுதினார். அதில், அரவிந்தர் வங்காளத்தில் இருக்கும்போதே தமிழ் படித்த செய்தியைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஞானபாநு (சூலை1915) இதழில் வெளிவந்த பாரதியாரின் அந்தக் கட்டுரைக்கு மறுப்புக் கட்டுரையினை, அதே ஞானபாநு (செப்டம்பர் 1915) இதழில், "தமிழ் எழுத்துக்கள்" என்று தலைப்பிட்டு எழுதியிருக்கின்றார், வ.உ.சி. அதில், "சுதேசமித்திரனைச் சென்ற 15 வருஷங்களாகப் படித்து வருகின்ற ஓர் அய்யங்கார் நமது நிதானக் கட்சித் தலைவருடைய "Gokhale" என்ற பெயரை 'கோக்களே' என்று உச்சரித்தது நமது நண்பரவர்களுக்குத் தப்பாகத் தோன்றியதும், நமது ஸ்ரீஅரவிந்தரவர்களின் தமிழ் உபாத்தியாயர் ஒரு வங்காளியின் "Birendranath Datta Gupta" என்ற பெயரைத் தமிழர், 'பிரேந்திரநாத தத்த குப்தர்' என்றுதான் வாசிப்பார் என்று கூறியது நமது அரவிந்தரவர்களுக்குச் சிரிப்பை உண்டு பண்ணியதும் நமது சமஸ்கிருத பண்டிதர்களும், வங்காளிப்பண்டிதர்களும், 'பழனி', 'கிழவி' என்னும் தமிழ்ச்சொற்களை, 'பளனி', 'கிளவி' எனவும், 'அறம்', 'மறம்' என்னும் தமிழ்ச் சொற்களை, 'அரம்', 'மரம்' எனவும், 'மன்றம்', 'கன்று' என்னும் தமிழ்ச் சொற்களை, 'மந்ரம்', 'கந்ரு' எனவும், 'Forbes', 'Fourth' என்னும் ஆங்கிலச் சொற்களை 'போர்ப்ஸ்' 'போர்த்' எனவும், 'Zeal', 'Zenith' என்னும் ஆங்கிலச் சொற்களை 'ஜீல்', 'ஜெனித்' எனவும் உச்சரிக்குங்கால் நாம் தப்பென்று கூறுவதையும் நமது ஆங்கில நண்பர்கள் சிரிப்பதையும் போன்றனவேயன்றி, வேறல்ல. தெய்வ பாஷையென்றும், பூரண பாஷை யென்றும், பல பாஷைகளுக்குத் தாய் பாஷையென்றும் சொல்லப்படுகிற சமஸ்கிருதபாஷை எழுத்துக்களோடும், பல புதுமைகளையும் திருத்தங்களையும் கொண்டுள்ள பாஷையென்று சொல்லப்படுகிற வங்காளிப் பாஷை எழுத்துக் களோடும், ழ,ற,ன,

F, Z என்னும் எழுத்துக்களையாவது அவற்றின் ஒலிகளையாவது அவற்றின் ஒலிகளைக் குறிக்குங் குறிகளையாவது சேர்ப்பதற்கு நமது நண்பரவர்களும் அரவிந்த ரவர்களும் முயற்சித்து வெற்றிபெறச் செய்வார்களாயின் அவர்கள் நமது தமிழ் மக்களுக்கு ஒப்பற்ற வழிகாட்டிகளா வார்கள். பின்னர் நமது தமிழ்மக்கள் அவர்களைப் பின்பற்றத் துணிவார்கள். இதுகாறும் தமிழ்ப்பாஷை எழுத்துக்களில் குறையுளது அல்லது தமிழ்ப் பாஷையில் குறையுளது என்று கூறியவர்களில் ஒருவரும் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பூரணமாகக் கற்றுணர்ந்தவராக வாவது சமஸ்கிருத சம்பந்தமில்லாதவராகவாவது சமஸ்கிருத பாஷையில் மேற்சொல்லிய திருத்தங்களையோ வேறு திருத்தங்களையோ செய்யவேண்டுமென்று கூறியவராக வாவது காணப்படவில்லை யென்றும், அவர்கள் நம் தமிழ்ப் பாஷை யதைத் திருத்த முற்படுகின்றார்களோ வருத்த முற்படுகின் றார்களோ என்றும் நம் தமிழ் மக்களிற் சிலர் ஐயமுறுகின்றனர். அவருடைய அவ்வையத்தை நிவிர்த்திப் பதற்காகவாவது நம் தமிழ்ப் பாஷையில் திருத்தம் செய்யவேண்டுமென்று கூற முன் வருபவர்கள் தமிழ் இலக்கணங்களுக்கெல்லாம் மூலமென்று சொல்லப்படத்தக்கதாயுள்ள தொல்காப்பியம் ஒன்றையும், தமிழ் இலக்கியங்களுளெல்லாம் சிறந்தவை யென்று சொல்லப்படத் தக்கவாயுள்ள 'சீவகசிந்தாமணி', 'சிலப்பதிகாரம்', 'மணிமேகலை', 'திருக்குறள்', 'கலிங்கத்துப்பரணி', 'கலித்தொகை', 'திருக்கோவையார்' முதலியவற்றில் ஒரு சிலவற்றையுமாவது பூரணமாகக் கற்க வேண்டுவது இன்றியமையாதது'' என்று எழுதுகின்றார்.[10]

இதனைத் தொடர்ந்து, அடுத்த இதழிலேயே (அக்டோபர் 1915) தமிழில் எழுத்துக்குறை என்னும் தலைப்பில் பாரதியார் மறுப்புரை எழுதுகின்றார்.

"ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்ற எழுத்துக்களைத் தமிழ் அரிச்சுவடியில் நமது பூர்வீகர் சேர்த்திருக்கிறார்கள். இவற்றைச் சேர்க்காவிட்டால், தமிழ் நேரே பேசமுடியாமலும், எழுத முடியாமலும் போய் விடுமென்று அவர்களுக்கு அச்சமுண்டாயிற்று. தொல்காப்பியர் கட்டின அரிச்சுவடி போதாவண்ணமாக நமது பாஷை வளர்ச்சி பெற்றவுடனே நமது முன்னோர்கள் மேற்காட்டிய எழுத்துக்களையும் சேர்த்தார்கள்...''[20] என்றெல்லாம் எழுதுகிறார்.[11]

இதனையடுத்து வ.உ.சிதம்பரனார் வேறுமறுப்பேதும் எழுத

வில்லை.

அதேசமயம், இம்மறுப்புமுயற்சிகளைத் தமிழின் வளர்ச்சிக்கும், தமது வளர்ச்சிக்கும் உரிய முறையில் இருவரும் ஏற்றுக் கொண்டனர் என்பதும் புலனாகின்றது.

இதனோடு தொடர்புபடுத்தப்பெற்ற அரவிந்தரும் இந்த இலக்கிய விவாதத்தில், ஒரு பாத்திரமாக ஆகிவிட்டார். இயல்பாகவே, தமிழ் கற்கும் ஆர்வம் கொண்டிருந்த அரவிந்தருக்கும், அவருக்குத் தமிழுணர்த்திய பாரதியாருக்கும், இவ்விவாதங்கள் மறைமுகமாக உதவி செய்திருக்கக் கூடும்.

பக்தியிலக்கியங்களோடு, கம்பராமாயணத்தைப் பற்றிய அறிமுகமும் பெற்ற அரவிந்தர், திருக்குறள் வரையில் தமது தமிழ்ப் படிப்பை மேற்கொண்டிருந்தார் என்பதை அவர்தம் திருக்குறள் மொழி பெயர்ப்பு மற்றும் கருத்தாக்கங்கள் சுட்டுகின்றன. சிறையிருந்த செல்வியின் ஏற்றமும் அறச்செயல்களும் கூறும் மணிமேகலையையோ, பழந்தமிழ்க் காதல் வாழ்வைக் கதைபோல் சித்திரிக்கும் கலித்தொகையையோ அவர் கற்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்குமேயானால், சமஸ்கிருதமொழி மற்றும் தமிழ் மொழி பற்றிய அவர்தம் கருத்தாக்கங்கள் வேறு மாதிரியாக வெளிப்பட்டிருக்கக்கூடும். அதேபோல், பாரதியாருக்கும் கூடுதலான சங்கஇலக்கியவாசிப்புக் கிட்டியிருக்குமே யெனில் இன்னும் பல அற்புதக் கவிதைகளும், கருத்துக்களும் அவர்வச மிருந்து தோன்றியிருக்கவும் கூடும்.

வரலாற்றில் நிகழ்ந்தது நிகழ்ந்ததுதான். என்ன செய்யமுடியும்? ஆனபோதும், வ.உ.சிதம்பரனாரின் இந்த மறுப்புக்கட்டுரை பாரதியார், அரவிந்தர் இடையேயான தமிழ்மொழி மற்றும் இலக்கிய உறவிற்கு நல்லதொரு பாலமாகியிருந்திருக்கும் என்று நம்பலாம்.

சான்றெண் விளக்கம்

1. ஆ.இரா.வேங்கடாசலபதி (தொ.ஆ), வ.உ.சி.யும், பாரதியும்,ப.28
2. மேலது, பக்.29-30.
3. மேலது, ப.32.
4. மேலது.
5. பெ.சு.மணி,வீரமுரசு சுப்பிரமணியசிவா,ப.43.
6. ஆ.இரா.வேங்கடாசலபதி (தொ.ஆ), வ.உ.சி.யும், பாரதியும்,ப.
7. மேலது.
8. மேலது, ப.53.
9. Sri Aurobindo, Letters of Historical Interest, P.169.
10. ஆ.இரா.வேங்கடாசலபதி (தொ.ஆ), வ.உ.சி.யும், பாரதியும், பக்.34-35.
11. மேலது, ப.35.
12. பெ.சு.மணி, வீரமுரசு சுப்பிரமணிய சிவா, ப.72.
13. Sri Aurobindo, Letters of Historical Interest, P.170.
14. ஆ.இரா.வேங்கடாசலபதி (தொ.ஆ), வ.உ.சி.யும், பாரதியும், பக்.34-35.ப.39.
15. மேலது, ப.36.
16. மேலது.ப.67.
17. மேலது.
18. மேலது, பக்.128-129.
19. மேலது, ப.128-129
20. மேலது,ப.133.

அரவிந்தர் போற்றிய அன்பர்கள்

அரவிந்தர், தென்னிந்தியத் தத்துவவாதிகளுள் இராமானுஜரையும், ஆதி சங்கரரையும், மத்துவரையும் தென்னிந்தியச் சிந்தனைச் சுடர்கள் என்று போற்றுகின்றார். மேலும், அவர் புதுவைவாழ்வில் பாரதியாருடனான நாட்களில் பழகிய நண்பர்கள் பற்றியும், பதிவு செய்துள்ளார். அதுகுறித்து இங்குக் காணலாம்.

தென்னிந்தியாவின் சிந்தனைச் சுடர்கள்

"இப்பிரபஞ்சத்தின் ஆழ்ந்த அடிப்படையான உண்மைகளை அறிவுக்கு உகந்த முறையில் சொல்ல இந்திய மனம் பழங்காலத்திலிருந்தே முயன்று வந்துள்ளது. அதன்விளைவாகத் தோன்றியவையே பௌத்த, சமண சமயங்களும் பல தரிசனங்களும் (தத்துவக் கொள்கைகள்). இவ்வாறு ஆன்மிக அநுபவத்தில் உயர் ஒளியால் கண்ட பேருண்மைகளைப் பகுத்தறிவு புரிந்துகொள்ளும் வகையில் தர்க்க ரீதியாக, முறைப்படுத்திச் சொல்லும் இம்முயற்சி, கி.பி. 6வது நூற்றாண்டு முதல் 13ஆவது நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியில் அதன் உச்சநிலையை அடைந்தது. விரிவாக அணுப் பிசகாது காரிய காரணமுறையில் ஆராய்தல், நுட்பமாகப் பகுத்து ஆராய்தல், கண்ட உண்மைகளைத் தர்க்கரீதியில் அழுத்தமாக முறைப்படுத்துதல் ஆகிய வேலைகள் மிகத் திறமையுடனும் ஆற்றலுடனும் செய்யப்பட்டன. இக்காலத்தில் ஆக்கப்பட்ட தத்துவ நூல்களின் சிகரமாகத் திகழ்பவை தென்னிந்தியாவில் தோன்றிய சிந்தனைச் சுடர்களாகிய சங்கரர், இராமானுஜர், மத்துவர் ஆகிய மூவரது நூல்களேயாகும்"[1] என்று எழுதுகின்றார் அரவிந்தர்.



அரவிந்தர் புதுவை வந்ததிலிருந்து பழகிப் பயன்கொண்ட, பயன் தந்த நிலையில் உடனின்ற நண்பர்கள் பலராவர். விரிவஞ்சிச் சுருக்கமாக அவர்களை அரவிந்தர் போற்றிய திறம் குறித்து இக்கட்டுரையில் தொகுத்துக் காணலாம்.

அரவிந்தரும் வ.வே.சு.ஐயரும்

வரகனேரி வேங்கடேச ஐயரின் மகன் ஸுப்பிரமணியன் ஐயர் என்பதன் சுருக்கமே, வ.வே.ஸு.ஐயர். இதனை வ.வே.சு.அய்யர் என்றும் எழுத்தில் குறிப்பது வழக்கம். 2.4.1881இல் பிறந்த இவர்.1895இல் மெட்ரிகுலேசன் தேறி, திருச்சி தூய வளனார் கல்லூரியில் பி.ஏ பட்டம் பெற்ற பின்னர். வழக்கறிஞர் தேர்விலும் முன்னின்றார். அரசியலில் ஈடுபாடு கொண்ட இவர் வ.உ.சி, சுப்பிரமணியசிவம் ஆகியோருடன் தொடர்பு கொண்டு, ஒரு சுதேசிப் பஞ்சாலை நிறுவ முயன்றார். அது கைகூடாத நிலையில், ரங்கூனுக்குக் கிளம்பினார். பின்னர் பாரிஸ்டர் பட்டம் பெறுதற்காக இலண்டன் சென்றார். அங்கிருந்த லண்டன் ஹவுஸ் என்னும் இடத்தில் தங்கிய ஐயர், சாவர்க்கார், ராஜன் உள்ளிட்ட சகதோழர்களுடன் இணைந்து புரட்சியாளராக மாறினார். பல்வேறு புரட்சிகரப் பணிகளுக்கிடையில் பாரதியாரின் இந்தியா இதழுக்கு நிருபராக இருந்து பல செய்திகளைத் தமிழுக்குத் தந்தார்.திலகர் தலைமையிலான தீவிர அரசியலில் ஈடுபட்ட இவர் ஆங்கில அரசால் கைது செய்யப்படுவதற்குமுன்னர் இலண்டனிலிருந்து தப்பி வந்த இவரைப் புதுவைக்கு அழைத்துக் கொண்டவர்பாரதியார்.



“பாண்டிச்சேரியிலிருந்த இந்திய தேசபக்தர்களுக்குச் சுதேசிகள் என்று பொதுப்பெயர் இருந்தது. 1910 அக்டோபர் மாதம் ஐயர் பாண்டிச்சேரிக்கு வந்தபோது, பாண்டிச்சேரியில் இருந்த சுதேசி களில் பாரதி, ஸ்ரீநிவாசாச்சாரி, பாபு அரவிந்த கோஷ், அவரது வங்கச் சீடர்கள் சிலர், நீலகண்ட பிரம்மச்சாரி, ஹரிஹரசர்மா, என். நாகசாமி, வ.ராமசாமி, பரலி சு.நெல்லையப்பபிள்ளை முதலியவர்கள் இருந்தனர். இவர்களில் அரவிந்தரே வயதில்

மூத்தவர்; 38 வயது. ஸ்ரீநிவாசாச்சாரிக்கு 30 வயது. ஐயருக்கு வயது 29. பாரதிக்கு வயது 28. நீலகண்ட பிரம்மச்சாரிக்கு வயது 21. மற்றவர்கள் இன்னும் இளையவர்கள்... இவர்களுடைய அரசியல் கொள்கை என்ன? பாரதிக்கு வெடிகுண்டு மார்க்கத்தில் நம்பிக்கை இல்லை. வெறுப்பு. சட்டபூர்வமான முயற்சிகளில் பரிபூர்ண நம்பிக்கை கொண்டவர் அவர். அரவிந்தர் அரசியலைத் துறந்துவிட்டவர். ஸ்ரீநிவாசாச்சாரியாருக்கு அரசியல் கொலைகள் உட்படப் பலாத்கார முயற்சிகளில் வலுவான நம்பிக்கை இருந்தது. தனிநபர் கொலைகளை அவர் ஆதரிக்கவில்லை. இவர்கள் நடுவே, திரமிக்க புரட்சியாளர் என்ற புகழுடன் வந்துசேர்ந்தார் ஐயர். ஐயருக்கு வெடிகுண்டு, கைத்துப்பாக்கி, தனிநபர் அரசியல் கொலை எல்லாம் சம்மதமே”[2].

“புதுச்சேரியில் பாரதியும் தாமும் வசித்துவந்த ஈசுவரன் தர்மராஜா கோவில் தெருவிலேயே ஐயருக்கும் ஒரு வீடு ஏற்பாடு செய்தார் ஸ்ரீநிவாசாச்சாரியார்... அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்து, குசலம் விசாரித்துப் பொழுதுபோக்காத நாளே இல்லை. ஐயரும், பாரதியும், ஸ்ரீநிவாசாச்சாரியாரின் வீட்டில் குறைந்தது மூன்று மணிநேரமாவது அரசியல் பேசுவதிலும், சீட்டாடுவதிலும், சதுரங்கம் ஆடுவதிலும் கழிப்பார்கள். அல்லது இலக்கிய விவாதத்திலோ, கையிலுள்ள அல்லது எழுதிவரும் நூலைப் பற்றியோ விவாதிப்பார்கள். பல நாட்கள் மூவருமே அரவிந்தர் வீட்டுக்குச் செல்வார்கள். அங்கே வேதம், யோகம் முதலிய ஆத்மிக விஷயங்கள் விவாதத்தில் அடிபடும். அவர்களுடைய மனைவியரும், குழந்தைகளும் கூட அச்சமயம் வருவதுண்டு”[3] என்று குறிப்பிடுகிறார் ரா.அ.பத்மநாபன்.

பாரதியார், அரவிந்தர், வ.வே.சு.ஐயர் ஆகிய முக்கூட்டுப் புரட்சியாளர்களோடு ஸ்ரீநிவாசாச்சாரியாரும் உடனின்றவர். இவர்களிடையே நிகழ்ந்த உரையாடல்கள், விவாதங்கள் முயற்சிகள் பற்றிப் பாரதியன்பர்கள் பலரும் சிறப்பான நிலைகளில் பதிவுசெய்திருக்கின்றனர்.

அதேபோல், அரவிந்தரும், தமது யோகக்குறிப்புகளில் A என்னும் எழுத்தினை அடுத்து ஐயர் பற்றிய பதிவுகளை அமைத்திருக்கின்றார். ஓரிரு தொடர்களில் அமையும் அக் குறிப்புகள் பொதுவான நிலையிலேயே அமைகின்றன எனலாம்.

ஐயர், புரட்சியாளராக மட்டுமன்றிச் சிறந்த இலக்கியவாதியாகவும் திகழ்ந்திருக்கிறார்.பாரதியார் புதுவையில் இதழ்கள் நடத்தியதுபோல, வ.வே.சு.ஐயர், கம்ப நிலையம் என்ற நிறுவனத்தைத் தொடங்கி, கம்பராமாயணம் - பால காண்டம் பகுதியை வெளியிட்டார். மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள் என்னும் தமிழின் முதல் சிறுகதைத் தொகுப்பை வழங்கியிருக்கின்றார். தாகூரின் காபூவாலிகா என்னும் கதையை மொழிபெயர்த்திருக்கிறார். சந்திரகுப்த சக்கரவர்த்தி சரித்திரம் இரு பதிப்புகள் கண்ட நூல். இன்னபிற இலக்கியப் பங்களிப்புகளைத் தமிழுக்குத் தந்த இவர் புரட்சியாளன் வாஞ்சிநாதனுக்குத் துப்பாக்கிசுடும் பயிற்சி அளித்த ஆசான்.


அவரவர் நிலைப்பாடு அவரவர்க்கு என்றாலும் பொதுமையாக, இந்திய விடுதலை, மக்கள்நலன், இலக்கியநோக்கம் முதலியவற்றால் பிணைப்புண்டிருந்த நட்பு இவர்களுடையது எனலாம்.

அரவிந்தரும் ஸ்ரீநிவாசாச்சாரியாரும்

மண்டயம் குடும்பத்தைச் சார்ந்த ஸ்ரீநிவாசாச்சாரியார். பாரதியாரின் உற்ற தோழர். அவரது இலக்கிய, அரசியல் முயற்சிகளுக்கெல்லாம் உறுதுணையாக நின்ற அன்பர். பாரதியாருக்காக, இந்தியா இதழைத் தொடங்கியவர். சூரத் மாநாட்டிற்குத் தமிழகத்தில் இருந்து அதிக உறுப்பினர்கள் பங்கேற்கச் செல்வதற்கான பயணச் செலவுகளை வ.உ.சிதம்பரனாருடன் பகிர்ந்து கொண்டவர். பாரதியார் புதுவையில் தங்குவதற்கு ஏற்பாடு செய்ததோடு, இந்தியா இதழ் இங்கிருந்து வெளிவரவும் துணைசெய்தவர். பாரதியாரைத் தொடர்ந்து புதுவைக்கு வந்து தங்கித் தம் பணி செய்தவர். அரவிந்தரின் அன்பிற்குப் பாத்திரமானவர். அவர்களுக்குத் தம்மாலான உதவிகள் பல புரிந்தவர். இவரைப்பற்றியும் பாரதியார் தமது யோகக்குறிப்புகளில் நினைவுகூர்கிறார்.



அரவிந்தரும் வ.ரா.வும்



பாரதியார் மூலம் அரவிந்தருக்கு அறிமுகம் ஆனவர் வ.ரா. தஞ்சை மாவட்டம் திருவையாற்றுக்கு அருகில் உள்ள திருப்பழனம் கிராமத்தைச் சார்ந்த வ.ரா என்னும் வ.ராமஸ்வாமி ஐயங்கார், 1889 செப்டம்பர் 17இல் பிறந்தவர்.

"1905இல் மெட்ரிகுலேஷனில் முதல் வகுப்பில் தேர்ச்சிபெற்ற இவர் கல்லூரியில் நுழைந்தவுடன் தேசவிடுதலை இயக்கத்தால் ஈர்க்கப் பெற்றார். வந்தே மாதர கோஷம், அவரது வாழ்வின் தாரக மந்திரம் ஆயிற்று. எனவே, கல்லூரிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு, சுயராஜ்யப் போராட்டத்தில் குதித்தார். கொடியாலம் ரங்கசாமி ஐயங்கார் என்ற பிரபல தேசபக்தரின் தொடர்பு காரணமாக, 1910இல் தமது 21ஆவது வயதில் முதன் முதலாகப் பாண்டிச்சேரி சென்று, அரவிந்தர், பாரதி ஆகியோரைச் சந்தித்தார். 1911ஜூன் முதல், 1914 ஜனவரி வரை, தொடக்கத்தில் பாரதியார் வீட்டிலும், பின்னர் அரவிந்த ஆசிரமத்திலும் தங்கினார். பாரதி, வ.வே.சு.ஐயர், அரவிந்தர் ஆகியோருடன் மிக நெருக்கமாகப் பழகினார். அவர்களது வாழ்க்கைத் தத்துவத்தையும் பணிகளையும் நன்கு அறிந்து கொண்டார்"[4].

பின்னர் தமது கிராமத்துக்குத் திரும்பிய அவர், சிறந்த உரைநடை ஆசிரியராகவும், நாவலாசிரியராகவும் திகழ்ந்தார். பாரதியார், அரவிந்தர், வ.வே.சு.ஐயர் வரலாறுகளைத் தமது மகாகவி பாரதியார் என்னும் நூல் மூலமாக உலகறியச் செய்தவர். கொடியாலம் ரங்கசாமி ஐயங்கார் மூலமாக அரவிந்தரின் புதுவை வரவை உறுதி செய்ய வந்த, இவர் பாரதியார், அரவிந்தர் ஆகியோரது சீடராகத் திகழ்ந்தார். இவரது எழுத்துகளின் வாயிலாக அரவிந்தர், பாரதியார் தொடர்புகளைச் சரியாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. இவரையும் அரவிந்தர் தமது அன்பிற்குரிய நண்பர்களின் பட்டியலில் வைத்திருக்கின்றார்.

பாரதியாருடன் இவர் வந்து அரவிந்தரைச் சந்தித்த அனுபவத்தைத் தமது மகாகவி பாரதியார் என்னும் நூலில் பதிவு

செய்திருக்கின்றார். அக்குறிப்பு, அரவிந்தரும் பாரதியாரும் என்ற இயலில் சுட்டப்பெற்றுள்ளது.

"வ.ரா, ஸ்ரீ அரவிந்தரைச் சந்திக்குமுன்பே, அவரை ஸ்ரீ அரவிந்தர்சூக்கும திருஷ்டியில் பார்த்துவிட்டார்.ஆனால், அதில் ஒரு முக்கிய வேறுபாடு இருந்தது. அந்த நிகழ்ச்சி பற்றி ஸ்ரீ அரவிந்தர் இவ்வாறு கூறியுள்ளார். "நான், வ.ராமஸ்வாமி என்பவரைச் சந்திக்க வேண்டியிருந்தது. சந்திப்பு ஏற்படுமுன் நான் அவரைப் பார்த்தேன். ஆனால், அவர் என்னைப் பார்க்க வந்தபோது, இருந்த வடிவத்தில் அல்ல, என் வீட்டில் ஓராண்டு தங்கியபின் எப்படி மாறினாரோ, அப்படி எனது காட்சியில் கண்ட மனிதராகவே - குட்டையாக வெட்டிய சிகை, முரட்டுத்தனமும் துடிப்பும் உள்ள முகம் - இப்படி, மாறிவிட்டார். என்னைக் காணவந்தபோது அதற்கு நேர்மாறான தோற்றமுடையவராகவே இருந்தார் - கனவுகாணும் மென்மையான முகமும் உற்சாகமும் கொண்ட வைணவராக இருந்தார்" என்று அரவிந்தர் குறிப்பிடுகின்றார்"[5].

இது தவிர, அரவிந்தரது யோகக்குறிப்புகளில் பாரதியார், வ.வே.சு.ஐயர் குறிக்கப்பெற்றதுபோலவே, தொலைவில் உணர்தல் அடிப்படையில் வ.ரா. வருதல் மற்றும் அவரது சின்னச்சின்ன அசைவுகளையும் பதிவுசெய்துள்ளார். அவை அவரது யோக அனுபவ ஆய்வுக்கான நிலையில் அமைகின்றன. அப்பதிவுகளில் வ.ரா. R என்ற எழுத்தால் குறிக்கப்பெறுகின்றார்.

இவரது வரலாற்றுக்குப் பின்புலமான கொடியாலம் ரங்கசாமி ஐயங்கார் பற்றியும் இங்கு அறிந்து கொள்வது சிறப்பு.

அரவிந்தரும் கொடியாலம் ரங்கசாமி ஐயங்காரும்

அரவிந்தரின் தென்னக வருகையை முன்னுணர்ந்து சுட்டிய நாகப்பட்டினம் ஜபதா யோகியாரின் சீடர் கொடியாலம் ரங்கசாமி ஐயங்கார் ஆவார். இவரைப் பற்றி ப.கோதண்டராமன் பின்வருமாறு அறிமுகப்படுத்துகின்றார்.

"ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்து வந்தவரும், 1906 முதல் தென்னிந்திய நிலச்சுவான்தார் தொகுதிக்குப் பிரதிநிதியாக டில்லிச் சட்டசபையில் அங்கம் வகித்து வந்தவருமான கொடியாலம் ரங்கசாமி ஐயங்கார், தம் குருநாதரான நாகை ஜபதா என்னும் யோகியார் மகாசமாதி அடையவிருந்த சமயம், அவருக்குப் பின்



லாலா லஜபதிராய், மதன்மோகன் மாளவியா, கொடியாலம் வி. ரங்கசாமி ஐயங்கார் (வலது)

யாரைக் குருவாகக் கொள்ளலாம் என்று கேட்டாராம். தமிழ்நாட்டுக்கு அண்மையில் வரப்போகும் உத்தரயோகி ஒருவரைக் குருவாகக் கொள்ளலாம் என்று ஜபதா கூறினார். அந்த உத்தரயோகியை அறிந்து கொள்வதற்காகச் சில குறிப்புகளையும் சொன்னார். பாரதியார் புதுவையிலே நடத்திவந்த இந்தியா பத்திரிகையில் அவ்வப்போது அரவிந்தரைப்பற்றி எழுதி வந்த கட்டுரைகளிலிருந்து அரவிந்தரே அந்த உத்தரயோகி என்று ஐயங்கார்உணர்ந்து கொண்டார். தஞ்சையில் இலக்கியப் பணிபுரிந்து வந்தவரும், புதுவையில் பாரதியாரின் பத்திரிகைகளில் கொஞ்சகாலம் பணிபுரிந்து வந்தவருமான வ.ராமஸ்வாமி ஐயங்காரை (பின்னாளில் வ.ரா. என்று புகழ்பெற்ற எழுத்தாளர் தலைவர்) முதலில் தூதுவராகக் கொடியாலம் அனுப்பினார். பின்பு அவருடன் தாமும் ரகசியமாகப் புதுவை வந்து, சில தடவை கண்டு பேசினர். அரவிந்தர் நடத்தி வந்த கடின வாழ்க்கையைக் கண்டு அவருக்குச் சிறிது காலம் பொருளுதவி செய்துவந்தார். அரவிந்தரின் தேவையை அறிந்துகொள்ளும்பொருட்டு, வ.ரா.வைப் புதுவையிலேயே அரவிந்தர் வீட்டில் தங்கச் செய்தார். அரவிந்தருக்கு மேலும் உதவி செய்யும் பொருட்டு, அவருடைய சிறு நூல் ஒன்றை ஸ்ரீரங்கம் வாணிவிலாஸ் அச்சுக்கூடத்தில் அச்சடித்து வெளியிட்டார். பின்பு என்ன காரணத்தினாலோ அவருடைய பொருளுதவி நின்று விட்டது. வ.ரா.வும் 1913இல்

புதுவையை விட்டுத் தஞ்சைக்குச் சென்றுவிட்டார்"[6].

அரவிந்தரும் பாரதிதாசனும்

மகாகவி பாரதியார் கவிதைகள் தொகுப்பில். 'அரவிந்தப்பாம்பு' என்னும் தலைப்பில், 'உண்மை நிலை கண்டு உறங்கும் பாம்பே' எனத் தொடங்கிவரும் நான்கு அடிகளும், 'ஆதிசிவன் மேலிருந்த நாகப்பாம்பே' எனத் தொடங்கிவரும் நான்கு அடிகளும் இடம் பெறுகின்றன. ஐயத்துக்கு இடம் வைத்து இப்பாடல் அடிகளைத் தந்த நிலைபோய், தெளிவாய் பாரதியார் பாடல் என்றே பல தொகுப்புகளில் இப்பாடல் இடம்பெற்றுள்ளது. உண்மையில் இப்பாடல் பாரதியாரின் சீடர் பாரதிதாசனால் எழுதப்பெற்றது.



பாரதிதாசனால் எழுதப்பெற்ற அப்பாடல் பாரதியார் பாடலாக அறியப் பெற்றமைக்கான பின்புலம் பற்றி பாரதி தாசனாரின் புதல்வர் விளக்குகின்றார்.

'இப்பாடல் சி.சுப்பிரமணிய பாரதி எழுதியது: இது வரை வெளிவராத பாடல்: பெ.தூரன் தேடி உதவியது' என்ற குறிப்புகளுடன் **'கலைமகள்'** 1942ஆம் ஆண்டு பொங்கல் இதழில் வெளிவந்த பாடல் இது.

"இதைப்படித்துவிட்டு, ஆனந்தவிகடன் இதழின் புதுவை வட்டார விற்பனையாளரும், பாரதிதாசன் நூல்களை முற் காலத்தில் வெளியிட்டவருமான காசி ஈ.லட்சுமணப்பிரசாத் என்பவர், பாரதிதாசனிடம் ஓடி வந்து, "இதைப் பாருங்க வாத்தியாரே, உங்கப் பாட்டை பாரதி எழுதினதாகப் போட்டிருக் காங்களே" என்று கூறிக் கலைமகள் இதழைக் காட்டிவிட்டுத் தம் கையில் வைத்திருந்த ஒரு பத்திரிகைத் தொகுப்பையும் பிரித்து வைத்தார்.புதுவையில் மிகப் பழைய நாளில் வெளிவந்த கற்பகம் என்ற இலக்கிய இதழின் தொகுதி அது. அதிலே பாரதிதாசன் எழுதியிருந்த பாடல் வெளியிடப்பட்டிருக்கிறது. அதே பாடல் தான் கலைமகள் இதழில் பாரதியார் எழுதி இது வரை வெளி வராதது என்ற குறிப்புடன் வெளியாகியிருந்தது. இதைப் பற்றிக் கலைமகள் நிறுவனத்தார்க்குத் திரு. லட்சுமணப் பிரசாத் மடலும் எழுதினார். கலைமகள் எதுவும் மறுமொழி எழுதவில்லை" என்று

குறிப்பிடும் மன்னர்மன்னன் அப்பாடல் முழுவதையும் தருகின்றார். அப்பாடல் பின்வருமாறு.

"ஆடு பாம்பே எழுந்தாடு பாம்பே
அன்னை துயில் நீங்க நலம் துன்னப்பாம்பே! (ஆடு)

உண்மைநிலை கண்டுறங்கும் யோகப்பாம்பே! - உன்
உலகத்தைச் சமன் செய்ய எண்ணு பாம்பே!
திண்மைநிலை கொண்டிருக்கும் தெய்வப்பாம்பே! உன்
தெய்வீகத்தைக் காட்டுதற்குத் தீவிரம் கொள்வாய் - . (ஆடு)

பாரதத்திலே பிறந்த பன்னகப் பிள்ளாய் - இந்தப்
பாரதத்தில் அன்பு வைத்த நல்ல பாம்பே!
பாரதத்தை விடுவிக்கும் வழி நினைந்தே - நல்ல
பக்குவமிகுந்திருக்கும் படப்பாம்பே! - (ஆடு)

ஆடிவரும் விதந் தெரிந்தூதி வருவேன் - இங்
கனைவரும் தகத்தகத் தாளமிடுவார்
மோடியிசை பாடுதற்குக் காந்தியொருவன் - இங்கு
மொய்த்திருக்கும் தொண்டரிடை ஆடு பாம்பே! (ஆடு)

செம்மை, அறம், ஞானமிவை செகத்திலெல்லாம் -இனித்
திகழ்ந்திடச் செய்வதுன்றன் மணித்தலையே
பொய்ம்மை கொண்ட பகைவர்கள் புலையமக்கள்
பொசுங்கிட விஷஞ் சொரிந்தாடு பாம்பே! - (ஆடு)

பாரதர்க்குப் பாரதத்தில் உரிமையில்லை - இந்தப்
பாவனையைத் தீர்க்க நல்ல காலமுமில்லை
சீர்கெடுக்க நினைந்திருக்கும் பகைக்குலத்தை - நீ
சீறிப் படத்தை விரித்தாடு பாம்பே! - (ஆடு)

ஆதிசிவன் மேலிருந்த நாகப் பாம்பே! - எங்கள்
அரவிந்தப் பேர் புனைந்த அன்புப் பாம்பே!
ஜோதிப் படந்தூக்கி நடமாடி வருவாய் - அந்தச்
சோலை நிழ லால் எமது துன்ப மொழிவோம்! - (ஆடு)"

இப்பாடலே பாரதிதாசன் எழுதிய பாடல்.

மேலும் "இதுதொடர்பான ஒரு கருத்து. பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியின் (ஈரோடு குடியரசுப்பதிப்பான - 1944ஆம் ஆண்டு) மூன்றாம் பதிப்பின் ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பில், கூறப்பட்டுள்ளது. இவரது பாட்டுக்கள் நமது பாரதியாரின் பாடல்கள் போலவே இருக்கும். பாரதிதாசன் அவர்கள் எழுதிய பாம்புப்பாட்டை பாரதியாரின் நண்பரான ஓர் ஆசிரியரே பாரதியார் பேரால் தம் பத்திரிகையில் வெளியிட்டது சிலருக்கேனும் ஞாபகமிருக்கலாம் என்கிறது அந்தக்குறிப்பு"[7].

ஆக, இனிவரும் பதிப்புகளில் பாரதியார் கவிதைகளில் இப்பாடல் இடம்பெறாமல் பார்த்துக் கொள்வதோடு, பாரதி தாசனின் கவிதைகளில் இப்பாடலை மேற்காணும் குறிப்புகளோடு வெளிவரச் செய்வது ஆய்வாளர்களுக்கும், பாரதி, பாரதிதாசன் அன்பர்களுக்கும் உதவியாக இருக்கும்.

பாரதியார் உறவில் வாய்த்த அரவிந்தர் தொடர்பில் பாரதி தாசன் எழுதியது இப்பாடல் எனலாம். இத்தொடர்புக்கான பின்புலத்தையும் காணலாம்.

புதுவையைத் தாக்கிய கடும்புயல்

பாரதியார் உள்ளிட்ட அன்பர்கள் புதுவையில் தங்கியிருந்த காலக்கட்டத்தில், (1910 ஆம் ஆண்டுவாக்கில்) புதுவையைக் கடும் புயல் தாக்கியது.அதுபோது தமது இல்லத்தில் நடந்த நிகழ்வை, பாரதியாரின் புதல்வி தங்கம்மாள் பாரதி எழுதுகிறார்.

"புதுச்சேரியில், நள வருஷம், கார்த்திகை மாதம் 8ஆம் தேதி புதன் கிழமை இரவில் அபாரமான புயல் காற்றடித்தது. பெரிய கிழவர்கள் தங்கள் வாழ்நாளிலே அதைப்போன்ற புயலை எங்கும் பார்த்ததில்லை என்று கூறுகிறார்கள். சாயங்காலத்திலிருந்தே காற்றுத் தேவன் ஊத ஆரம்பித்துவிட்டான். எப்படிப்பட்ட காற்று? கூக்கூ வென்று விண்ணைக் குடைந்திடும் காற்று. கும்மிருட்டு. என் தந்தையார் இரவுகளில் அரவிந்தர் வீடு சென்று வேத ஆராய்ச்சி செய்வார். அங்குதான் இராப்போஜனத்தை அனுப்புவோம். இரவு ஒன்பது மணிக்குமேல் தான் அவ்விருவரும் ஆராய்ச்சியிலீடுபடு வார்கள். பின்பு விடியற்காலம் ஐந்து மணிவரைக்கும் அவ்விதமே உட்கார்ந்திருப்பார்கள். இருவருக்கும் களைப்போ, சோர்வோ உண்டாவதில்லை. வழக்கம்போல் அன்றும் மாலை ஆறுமணிக்குத் தந்தையார் புறப்பட்டார்.

என்தாயார் : இன்று போகாவிட்டால் என்ன? மழையும் காற்றுமா இருக்கிறதே?

தந்தையார் : ஒன்றுக்கும் அஞ்சாத நீ, இந்த இடிக்கும் மழைக்கும் பயப்படப்போகிறாயா?

தாயார் : இல்லை. என் மனம் எதனாலோ இன்று அதைரியமடைகிறது.

தந்தைய : ஒரு நல்ல காரியம் செய்யப்போனால் அதற்கு எத்தனை தடை.

இதற்குள், நான், என் தங்கைப்பாப்பா எல்லோருமாகச் சேர்ந்து கொண்டு அப்பா போவதை நிறுத்திவிட்டோம். தந்தையும் இதைக் கேட்டு மனம் சலனமடைந்தார். சமாதானமின்றி, அப்படியும், இப்படியும் உலாவினார். சரியாகப் போஜனமும் அருந்தவில்லை. ஒன்பது மணியிருக்கும். வாயுதேவன் சீறி எழுந்தான், கோபமூட்டப்பெற்ற புலியைப்போல. பிரளயத்தில் ஏற்படும் என்பார்களே, அதுபோல் மழையும், வெள்ளமும் தெருக்களில் தண்ணீர் ஒரு ஆள் ஆழம் ஓடுகிறது. புதுவையில் தென்னை மரம் அதிகம். காற்று ஆரம்பித்ததும், சடசடவென்று மரங்கள் சாய்ந்தன. வீடுகள் இடிந்துவிழுந்தன. மரங்கள் விழுந்ததால் மின்சாரக்கம்பிகள் அறுந்து, விளக்குகள் எல்லாம் அணைந்து ஊர் பூராவும் ஒரே அல்லோகல்லோலம். நாங்கள் அன்றுதான் வேறு வீட்டிற்குக் குடிவந்திருந்தோம். அதாவது, முன்பிருந்த வீட்டிற்கு எதிர்வீடு. எங்கள் வீட்டு மாடியிலும் நாலைந்து தென்னை மரங்கள் சாய்ந்தன. தந்தையார் தாயாரிடம் சொன்னார்: பெண்கள் தெய்விகத்தன்மை பொருந்தியவர்கள் என்பதை இன்றுதான் பிரத்யட்சமாகக் கண்டேன். அதனால்தான் நான் இன்று ஆராய்ச்சியைக்கூட நிறுத்தினேன். உன் மனத்தில், ஏதோ, சம்பவிக்கப்போகிறது என்று தோன்றிவிட்டது. கஷ்டப் படும்போது எல்லோரும் ஒன்றாயிருந்து அதை அனுபவிப்பதே நல்லது என்பதற்காகத்தான் நான் போகாம லிருந்தேன்.

தாயார் : காரணம் தெரியாமல் என் மனம் இன்று கலங்கிற்று. ஏதாவது உற்பாதம் ஏற்படாதிருக்க வேண்டுமே என்றுதான் உங்களை வழி மறித்தேன்.

தந்தை : வானம் உறுமுகிறது. உலகம் நடுங்கிறது. நாம்

இப்போது ஏதாவது செய்யமுடியுமா? பராசக்தியைத் துதித்து, துன்பம் வராமல் காக்கச் சொல்வதைத் தவிர வேறு வழியில்லை.

தாயார் : ஐயோ, நேற்று நாமிருந்த வீட்டில் தென்னை மரங்கள் சாய்ந்து மாடியின் ஒரு பாகம் இடிந்து விழுகிறதே. எல்லோரும் அலறும் சத்தமும், அதற்குமேல் வாயுவின் உறுமலும் என்னைத் திக்பிரமையடையச் செய்கிறதே. இது என்ன காற்று. இது என்ன இன்று யுகமுடிவா, தெரிய வில்லையே.

தந்தை : செல்லம்மா, இவ்வளவு தூரம் மனதைக் கலங்க விடாதே. இதோ ருக் வேதம். படித்துப் பொருளுரைக்கிறேன். அரவிந்தர் வீட்டில் வாயுவின் ஸ்தோத்திரம்தான் படிப்பதென்று நினைத்திருந்தேன். இதோ, பிரத்யட்சமாகவே அவனை தரிசித்தேன். ஒரு கெடுதலும் வராது, தேவியின் அருளால். அவன் சக்தி குமாரன்”[8].

இந்தப் பின்னணியில் தான் பாரதியார் ருக்வேதத்தைத் தமிழில் செல்லம்மாள் பாரதிக்குச்சொல்லியதோடு, ‘காற்றடிக்குது கடல் குமுறுது’ என்ற பாடலையும், ‘திக்குகளெட்டும் சிதறிடத் தக்கத் தீம்தரிகிட’ என்ற பாடலையும் பாடியிருக்கின்றார்.

மறுநாட்காலை ஐந்துமணி புயற்காற்றடித்தனால், போக்கு வரத்து அசௌகரியமாக, மரங்களும் இடிந்த வீடுகளும் தெருக்களை அடைத்துக் கொண்டு கிடந்தன. தந்தையாரும், காலையுணவுகூடக் கொள்ளாமல் புறப்பட்டார், நண்பர் களையும், அன்பர்களையும் பார்ப்பதற்கு. நானும் உடன் சென்றேன். மரங்கள் சாய்ந்ததால் அவற்றில் வசித்த காக்கைகள், குருவிகள் மற்றும் அனேகவித பட்சிகள் யாவும் கூடுகளுடன் சிதறிக் கிடந்தன. தெருவில் முழங்கால் வரை தண்ணீர். மரங்களையும், மட்டைகளையும் தாண்டித்தாண்டிச் சென்றோம்... ஒவ்வொரு நண்பர்களாகப் பார்த்துக் கொண்டு. வ.வெ.சு.ஐயர் வீடு சென்றோம். ஐயர் மிகவும் களைப்புற்றிருந்தார். ஏனெனில் இரவு முழுவதும் மழைத்தண்ணீர் அவர்கள் வீட்டு உள்ளெலாம் பெருகிவிட்டதாயும், இரைத்துக் கொட்டும் வேலை ஏற்பட்டதாயும் சொன்னார். அங்கிருந்து

முத்தியால்பேட்டைவரை சென்றோம். உடனே, நண்பர் ஒருவர் ஓடிவந்து, சுப்புரத்னம் சமாசாரம் கேள்விப்பட்டீர்களா? என்றார் தந்தை. அவர் சொல்லுமுன்பாகவே, சுப்புரத்னம் (இப்போது பாரதிதாசன் என்னும் பெயரில் இருக்கிறார்)வந்துவிட்டார். சுப்புரத்னம் என்னப்பா நடந்தது? என்று தந்தை கேட்டார். அவர் பின்வருமாறு கூறினார். 'நான் என் கிராமத்தில் தெருத் திண்ணையில் படுத்துக் கொண்டிருந்தேன். காற்றடிக்க ஆரம்பித்தது. உடனே, மழையும் கொட்ட ஆரம்பித்தது. நான் உள்ளே போவதற்காக எழுந்திருந்தேன். பத்துப்பேர் சேர்ந்து என்னைப் பிடித்திழுப்பதுபோல் தோன்றிற்று. அவ்வளவுதான். நான் திமிறிக்கொண்டு கதவைத்திறந்து உ ள்ளே போவதற்காக எழுந்தேன். எனக்கு என்ன நடக்கிறதென்றே தெரியாதபடி என்னைப்பந்தைப்போல் தூக்கி வீசிற்று காற்று. ஒரு தடவை வயல்வெளியில் போட்டது. அங்கிருந்து தூக்கி களிமண்ணில் போட்டுப் புரட்டி எடுத்தது. என்னால் முடிந்தவரை, சிரமப்பட்டுக் காற்றில் பறக்கக்கூடாதென்றுநினைத்துப் பெரிய மரம் ஒன்றைக் கட்டிக்கொண்டேன். அது முட்டாள்தனம் என்றுபின்னால் தெரிந்தது. க்ஷணத்திற்கெல்லாம் மரம் படபடவென்னும் ஓசையோடு முறிந்து விழுந்தது. இன்ன சத்தம் என்று உரைக்க முடியாதபடி ஒரே இரைச்சல். வாயுதேவன்தான் அவ்விதம் உறுமினானோ, அல்லது பேய்கள்தான் அவ்விதம் கூக்குர லிட்டனவோ தெரியாது. என் மனதில் இவ்விதம் தீர்மானித்து விட்டேன்.

நாம் மறுபடி உலகத்தைப் பார்க்கப்போவதில்லை. மின்னல் கண்ணைப் பறிக்கிறது. இடிச் சத்தம் காதைத் தொளைக்கிறது. என் உடம்பில் லங்கோட்டைத் தவிர, வேறொன்றுமில்லை. குளிர் நடுக்குகிறது. பல் கிட்டுகிறது. பராசக்தியைத் தியானித்துக் கொண்டு கண்ணை மூடிக்கொண்டேன். கண்ணை விழித்தால் பயங்கரமான இருளில் கொட்டுமழையில் காற்று எங்கேனும் மரங்களில் மோதிவிடுமோ என்று பயமாயிருக்கிறது. காதையும் கையினால் பொத்திக்கொண்டேன். ஒவ்வொரு நிமிஷத்திலும் மரணத்தை எதிர்பார்த்தேன். காற்று என்னைப் புரட்டிக் கொண்டும், உருட்டிக்கொண்டும், தூக்கித் தூக்கி வீசி, கடைசியில் ஒரு தண்ணீரில் கொண்டு அமுக்கிற்று. அமுக்கிய அமுக்கலில் மூச்சுத் திணறிவிட்டது. இருந்தாலும், நான் தைரியத்தைக் கைவிடாமல், தம் மூச்சு அடக்கிக் கொண்டு மேலே வருவதற்கு

